www.padippakam.com

# புது விசை

கலாச்சார காலாண்டிதழ்



## ஃபிரைடா காலோ : கலையும் காதலும்

படிப்பகம்

www.padippakam.com





கொல்லப்பட்டவர்களின்
புகைப்பட வரிசையில்
தன் செல்லமான அக்கா
"ஜோஸபின்" உடலைக்
கண்டு கரையும் ஹெலன்
மற்றும் ஜோஸபின்னுடைய
மகன்கள்

## நதி தீரத்தில் நீண்ட அதிகாரத்தின் கோரப் பற்கள்...



படிப்பகம்

www.padippakam.com

# ரெட் சல்யூட்

1. விக்னேஷ் (1½), மாஞ்சோலை.
2. ரத்தினமேரி (22), மாஞ்சோலை.
3. ஜோஸ்பின் (32), தாழையூத்து.
4. ஷாநவாஸ்(21) ,திருநெல்வேலி.
5. ஆறுமுகம், மேலவட்டம்.
6. ரத்தினம், கடையநல்லூர்.
7. ஜெயசீலன் (35), நடுநாலுமூலைகிணறு
8. குட்டி என்கிற குமார் (21), வி.எம்.சத்திரம்
9. ஜான் பூபாலராயர் (25), பாளையங்கோட்டை
10. இன்னாசி மாணிக்கம், சீவலப்பேரி.
11. ஆன்டனி,சீதக்குறிச்சி
12. சஞ்சீவி (58), ராஜகுலராமன்புதூர்.
13. ராஜு, ராஜபாளையம்.
14. முருகன், சங்கரன்கோவில்.
15. வேலாயுதம் (40), செங்கோட்டை.
16. கெய்சர் (27), ராமநாதபுரம்
17. அப்துல் ரஹ்மான் (25), திருநெல்வேலி.

**மாஞ்சோலை தேயிலைத் தோட்ட<br>தொழிலாளர்களின் உரிமைப் போராட்டத்தில்<br>கொல்லப்பட்ட தியாகிகளுக்கு<br>வீர வணக்கம்!**

## ல ா ல் ச ல ா ம்





## தாமிரபரணி

பாகம் கெடாமல்
முந்நூறு மைல் ஓம்னி பஸ்ஸில்
வந்திறங்கும்
ஒரிஜினல் திருநெல்வேலி அல்வா
ஒரு கோப்பை தேநீர்
ஒரு விசாரணை
ஒரு அறிக்கை

நெல்லையப்பன் பாடையில் தெரியும்
காந்திமதியின் முலைப்பால்

பிரேதக் கிடங்கை முறைக்கும்
மோவாய் தூக்கிய லத்தி
திக்கிப் பேசுவாள் தாமிரபரணி

சலனமற்ற குழந்தை
மரணம்
நிர்ப்பந்த மரணம்
உண்மை மரணத்துடன்
எல்லாம்
முற்றுப் பெறும்.

- மனோண்மணி



படிப்பகம்

www.padippakam.com


*With Best Compliments from*

U.S.P

**U.Santhanam Pillai**

Engineering Contractor


**Jeeva Nagar,**
**Madurai - 625 011.**
**Phone : 672329**

**2nd Cross, NGGO Colony**
**HOSUR - 635 109.**
**✆ : (04344) (O) 42515 (R) 43477**




படிப்பகம்

www.padippakam.com



புது
விசை
கலாச்சாரக் காலாண்டிதழ்

நவம்பர் 1999

(3)

தனி இதழ் ரூ.30

ஆண்டு சந்தா ரூ.100

வெளிநாடு : இந்திய ரூபாயில் 350.

அஞ்சல் பெட்டி : 50, டெலிகாம் குடியிருப்பு, சிப்காட், ஒசூர் - 635 126.
தொலைபேசி: 78078
தொலைநகல் : 20500.

*இணையத்தில் புது விசை காண :*
http://www.aaraamthinai.com

பதிப்பாசிரியர் : எஸ். மீனாவதி

ஆசிரியர் : ஆதவன்

அச்சிடுபவர் : ஏ.எம்.சுந்தரமூர்த்தி

விசை பதிப்பகம் சார்பாக பிரிண்ட்டெக் பிரிண்டர்ஸ், ஒசூரில் அச்சிட்டு, அஞ்சல் பெட்டி 50 டெலிகாம் குடியிருப்பு, சிப்காட், ஒசூர் - ல் வெளியிடப்படுகிறது.

வணக்கம்.

நம் பன்முக கலாச்சாரத்தின் ஆணிவேர்களை அறுப்பவருக்கு சிவப்புக் கம்பளம் விரித்தாயிற்று.

அவர்தம் வெற்றிச் சிரிப்பொலியில் தேசத்தின் தூண்கள் அதிர்கின்றன.

நம் பணி கடுமையாகி விட்டது.

மஞ்சள் துண்டுகளின் மறைப்புக்குள் சிக்குண்ட வெண்தாடியும்
காவிக் கயிறுகளின் சுருக்கில் மாட்டிக் கொண்ட நம்தெய்வங்களும்
விடுதலை வேண்டித் துடிக்கின்றன.

நம் பணி இன்னும் கடுமையாகிறது.

■ ■ ■

நதியில் வீழ்த்தப்பட்ட உயிர்களின் துடிப்பை பதிவு செய்த
'ஒரு நதியின் மரணம்' ( வீடியோ டாக்குமெண்டரி)
தடை செய்யப்பட்டுள்ளது. கைதுகள், மிரட்டல்கள் தொடர்கின்றன.

இறந்த பிறகும் தலித்களின் குரல்வளை நெரிக்கப்படுகிறது.

வெளியே கோஷமிட்டால் படுகொலை.
வீடியோவில் பேசி விட்டால் அடக்குமுறை.

தமிழினத் தாக்கரேக்களின் தாக்குதல் துவங்கி விட்டது.

கண்டன முழக்கங்கள் இயக்கங்களாக வேண்டும்.
தயக்கத்தில் கட்டுண்ட கைகள் தளையறுக்க வேண்டும்.
விடுபட்ட கைகளின் வீச்சில் பறை முழக்கம் ஓங்க வேண்டும்.

■ ■ ■

விசை வெளியீடான ' பிள்ளையார் அரசியல்' சிறு நூல்
விற்றுத் தீர்ந்து விட்டது. பிரதிகள் கைவசம் இல்லை. சென்ற இதழில்
அறிவித்திருந்த 'முதுகுளத்தூர் கலவரம்', ' அறிவாளியா? முட்டாளா?'
இரு சிறுநூல்களும் அச்சில் உள்ளன.

■ ■ ■

அரசு பதிவு பெற்ற இதழாக- விசை - 'புதுவிசை' யாகிறது.

அடுத்த இதழ் ' விடைபெறும் நூற்றாண்டு' குறித்த விரிவான
பார்வைகளுடன் வெளி வருகிறது.

படைப்புகள் அனுப்பி பங்கேற்க வேண்டுகிறோம்.

நம்பிக்கையுடன்.....

புது விசை
ஆசிரியர் குழு



படிப்பகம்

www.padippakam.com

# செம்பகக்கா

முத்துலெட்சுமி

செம்பகக்கா புருசன் பண்ணாத அட்டூழியம் கிடையாது. ஆடாத ஆட்டம் கிடையாது. ஆனா செம்பகக்கா யார்கிட்டேயும் தம் புருசன விட்டுக் கொடுத்து பேசுனதே கிடையாது. கள்ளிப்பட்டி கிராமத்தில் வசதியான வீட்டுல பொறந்த ஒரே பொம்பளப் பிள்ளயாக்கும். அந்தக்கா கூடா பிறந்தவுங்க இரண்டு தம்பி. முப்பது பவுன் நகையும் முப்பது ஆயிரம் ரொக்கமும் கொடுத்து கல்யாணத்தை ஜாம்ஜாம்ன்னு முடிச்சாங்க. வாக்கப்பட்டப் போறோம்னு ஏகப்பட்ட கெனாக் கண்டுருப்பாவோ.

செம்பகக்கா புருசன் முதல்ல ஒரு சிட்பண்டுல வேலை பாத்தான். அந்தக் கடை முதலாளி அவன நம்பி அத்தனப் பொறுப்புகளையும் அவங்கிட்ட கொடுத்தாரு. கொஞ்ச கொஞ்சமா அதுல மோசடி பண்ணி நட்டக் கணக்கு காமிச்சான். அப்புறம் ஒரு தவணைக்கடையிலே வேலைக்குப் போனான். அங்கேயும் அதே கதைதான். அப்புறம் அந்தக் கடையும் இழுத்து மூடிட்டாக. அந்தக் கடை முதலாளி எல்லா விசயமும் தெரிஞ்சும் செம்பகக்கா புருசன ஒண்ணும் செய்யல. ஏன்னா அவன் அவரு சாதியாம்.போறாம் அவ அதோடு போட்டுன்னு விட்டுட்டாரு. குடும்பத்த ஓட்டதுக்கு இந்தக்கா நகைக, ஒண்ணொண்ணா அடகு கடைக்கு பாட்டுப்படிக்கப் போகும். வரும். சிலது அப்படியே போயிரும்.

சும்மா இருந்த செம்பகக்கா புருசன் லோக்கல்ல உள்ள அரசியல்வாதிகளுக்க கூஜா தூக்க ஆரம்பிச்சான். அவனுக்கு ஏத்த தொழில் இதுதான்னு எப்படித்தான் கண்டுபிடிச்சானோ. லோக்கல் புள்ளியக் கட்டிப் பிடிச்சதில இருந்து முதலமைச்சர் காலுல விழுகிறது வரைக்கும் விதவிதமான போட்டோ அந்தக்கா வீட்டுப் பட்டாலையிலே சுத்திவர மாட்டிருக்கும். அந்தப் போட்டாக்களுக்கு இடையிலே போனாப் போவுதுன்னு இந்தக் காவோட கல்யாணப்போட்டாவும் மாட்டியிருக்கும். அந்தப் போட்டாவுல அந்தக்கா எப்படி இருப்பாவ தெரியுமா. தலையவலிச்சு சீவி நிறைய பூவச்சி, சிமிக்கி, கல்லு மூக்குத்தி, அட்டியலு, காசுமால செவப்பு கலருல சரசரன்னு பட்டு, வெக்கப்பட்ட சிரிப்போட புருசங் கிட்ட நிப்பாவோ. அந்தப் போட்டாவுல இருக்கவோ தான் இந்த செம்பகக்கான்னா யாரும் உடனே நம்ப மாட்டாவோ. பச்சப் புள்ள கணக்கா அப்படி ஒரு கள்ளமில்லாத முகம். இப்ப செம்பகக்கா மாமியாரைப்பத்தி சொல்லுதேன். அவ இருக்காளே ஒன்ன ஒண்பதுன்பா, ஒன்பத ஒன்னுமே இல்லேன்னுருவோ. அவ்வளவு பேச்சு சாமர்த்தியம். செம்பகக்காவ பொண்ணு பாக்கப் போனப்ப அந்தக்கா முடியப் பாத்துதான் கல்யாணத்துக்கு சம்மதிச்சாளாம். அவ்வளவு அழகா இருக்குமா அந்தக்கா முடி. ஆத்துக்கு வந்து தலைதேச்சுக் குளிக்கும்போதெல்லாம் செம்பகக்கா சொல்லும், எம் முடியப் பாத்துதான எங்க அத்த கல்யாணத்துக்கு சம்மதிச்சதுன்னு. இப்படி அடிக்கடி சொல்லும். இப்ப என்னவோ அந்த முடி பார்க்கவெல்லாம் நல்ல இருக்காது. குட்டையும் நெட்டையுமா ஒரு ரெண்டு சாண் இருக்கும்.

அந்தக்கா பிள்ளையல அவ மாமிய அந்தக்கா கூட ஒட்டவே விடமாட்டா. தன் கைக்குள்ளேயே வச்சுக்குவா. அந்தக்கா பிள்ளை யலுக்கும் ஆச்சி போதும். அம்ம வேண்டாம். எல்லச் செய்யது பூரா அம்மன்னாலும் ஒட்டது பூரா ஆச்சிகிட்டதான்.

ஆத்துக்குப்போற இறக்கத்துல இவுகளுக்கு ஒரு சின்ன சொந்த வீடு இருக்கு. அந்தக்கா புருசனுக்கு கட்சியில உள்ள புள்ளிகள் வீட்டுக்கு வந்துபோக வசதியா இருக்கட் டுன்னு மீனாட்சிபுரத்தில் நல்ல ஒரு விடாபாத்து வந்துட்டாவோ. கடை கண்ணிக்கெல்லாம் வசதியான இடந்தான். வாங்கத்தான் கையில துட்டு வேணும்.


செம்பகக்கா புருசன் ஒரு பெரிய புல்லட் வண்டி வெச்சுருக் கான். அதுலதான் எல்லா இடத்துக் கும் போவா.வருவா. ஆத்துக்கு குளிக்க மொதக்கொண்டு அதுலதான் போவான். தடிச்ச உருவத்தில அந்தப் பெரிய வண்டியில படபடன்னு போவான். ஆத்துக்குப் போறப்ப ஒரு கைலியும் தோள்ல ஒரு தேங்காப்பூத்துண்டும் போட்டுருப்பான்.தலையில இருக்க வேண்டிய முடி பூரா அவனுக்கு உடம்புலதா இருக்கும். ஆத்துல அவெ உடம்பூரா சோப்பு தேய்ச்சிட்டு நுரையோடு நின்னாலும் எங்கிட்டு இருந்தும் கண்டுபிடிச்சிடலாம் குளிக்கது அவந்தாம்ன்னு.

குளிச்சிட்டு வந்ததும் விளக்கு முன்னாடி நின்னு இரண்டு மூணு நிமிச கண்ண மூடிகிட்டு நிப்பா.



படிப்பகம்

www.padippakam.com



ஓவியம்: தனசேகர்

என்னத்த வேண்டுவானோ, நா செய்ய அநியாயத்துக்கெல்லா துணையாயிரு சாமின்னு வேண்டு னாலும் ஆச்சரியப்படுததுகில்ல. அப்புற ஒவ்வொரு சாமி படத்தையா தொட்டுத் தொட்டுக் கும்புடுவா. அந்தக்கா வந்து எடுத்து வைக்க திம்பா. திங்கும்போதே அது சூத்த இது சொள்ளன்னுதான் திம்பா. என்னத்த அவ சொன்னாலும் இந்தக்கா வாயே திறக்காது. ஏன்னா அனுபவந்தான். அப்புற யார் படுவா அடியும் மிதியும்.

தின்னுட்டு வந்து கண்ணாடி முன்ன நின்னு அவெந் தலையில இருக்க அந்த நாலு மயித்த இங்கிட்டும் அங்கிட்டும் மாத்தி மாத்தி சீவி ஒரு கால்வாசி வழுக்கைய மறைப்பான். பீரோவத் திறந்து நல்லா வெள்ளையுஞ்சுள்ளையுமா வெளுத்து வச்ச சட்டையும், கட்சிக்கரை வேட்டியும் கட்டுவான். தங்க கலர் வாட்சு, நவ ரத்தினக் கல்லு பதிச்ச மோதிரம், நெத்தியில செக்கச் செவேன்னு குங்குமப்பட்டை. அந்த லேசான சட்டப் பைக்குள்ள தலைவர் படம் அடிச்ச அவனோட பேரு போட்ட அட்டைய அவனப் பார்க்கவுகளுக்குத் தெரிய மாறி வைப்பான். இந்த அலங்கார சகிதமாத்தான் எங்கையும் புறப்படுவான். பாத்ததும் கண்டு பிடிச்சுடலாம் அரசியல்வாதின்னு.

புல்லட்ல நகர்வலம் போயிருவான். போனா எங்க போறாம், எதுக்குப் போறாம், எப்ப வருவான்னும் ஒன்னும் தெரியாது செம்பகக்காவுக்கு.

பெரிசா அவ எங்கப் போயிருவான்னு நெனக்கிய. அங்கிட்டு ஒரு பொய்யும், இங்கிட்டு ஒரு பொய்யும் சொல்லி இரண்டு தரப்புலயும் பணம் வாங்குற கட்டப்பஞ்சாயத்துக்குப் போவான். இல்லைன்னா யார்கிட்ட யாவது நெறைய பணம் வாங்கிட்டு முக்கிய புள்ளிகள்ட்ட சிபாரிசுக்கு நிக்கது. அதுவும் இல்லன்னா கட்சி கூட்டம்னா ஆள் சேக்கது. இப்படி எதுக்காவது போவான். இந்த அரசியல் தொழில்ல நிரந்தர வருமானம் இல்லாதது இவனப் போல உள்ள அடிமட்ட கட்சிக் காரங்க குடும்பத்துக்கு ரெம்ப சங்கடம்.

ஒரு நா செம்பகக்கா ஆத்துக்கு வந்தப்ப பொங்கிப் பொங்கி அழுதாவோ. தாமிரபரணி தண்ணியும், அவ கண்ணீரும் போட்டி போடும்.

'நான் என்னத்த சொல்ல.... உங்கண்ணே பண்ணுத அநியாயம் இருக்கே. நான் என்ன கொறை வச்சே. இரண்டு பிள்ளைய ஆச்சு. இப்பப்போய் கூத்தியா கூட்டிட்டு அலையிதாவளேன்னா'. இந்தக்கா புருசனப்பத்தி ஊர்ல தெரியாததா? இன்னிக்குத்தான் இந்த அக்கா வாயாலே தம் புருசமேல இப்படி ஒரு குத்தத்த முதல். முறையா சொல்லுதாவோ.

'நா எப்படி வளந்த புள்ள தெரியுமா? எங்க வூட்டுல என்ன ஒரு துரும்பு கூட தூக்கிப் போட விடமாட்டா எங்கம்மா. இப்ப அதுக்கு மிச்சமா ஒரு வீட்டு வேலையும் இங்க பாக்கே. அங்க அத்த கட்டுல விட்டு இறங்க மாட்டாவோ. சிரிச்சு சிரிச்சு பொழுதண்ணிக்கும் டி.வி தான். நா அவுகள பெத்த தாயகெனக்கா பாக்கேன்'. இன்னிக்கு காலையில அவுககிட்ட சொல்லுதே.

அத்தே உங்க புள்ள போற போக்கே சரியில்ல. எவளையோ கூட்டி வெச்சுருக்காராம். நீங்களா வது கொஞ்சங்கண்டிசனா சொல்லக் கூடாதான்னுதான்' கேட்டேன்.

உனக்கு யாருடி சொன்னா வோன்னு கேட்டாவே.

யாரு சொன்னா என்ன. அதுதான் ஊரே சொல்லுதே

ஊரே சொல்லுதோ அப்போ நீயும் ஊம்பப்போ

எத்தே. இப்ப உங்ககிட்ட என்ன கேட்டேன்னு இப்படி யெல்லாம் பேசுதீயோ. உங்ககிட்ட சொன்னா நியாயத்த சொல்லு வியன்னுதானே சொன்னே.



படிப்பகம்

இப்படிச் சொல்லுதீயலே. நா கும்புடுத தெய்வந்தான் உங்கள கேக்கனும்னு திரும்பினேன்.

'குடிச்சிட்டு இருந்த தண்ணித் தம்பளரத் தூக்கி ஒங்கி தண்ணி யோட என் தோள்பட்டையில விட்டெரிஞ்சிட்டாவோ. வலி தாங்க முடியுமா? அழுதேன். சாப்பிட்டு கிட்டு இருந்த தட்டையும் தூக்கி ஏம்மேல எறிதாவோ'.

'ஓ வகுசி தெரியாதோ. எம்புள்ள எங்கிட்ட எல்லாத்தையும் சொல்லிட்டான். உனக்கு வலிப்பு வருதுன்னு ஓ வீட்டுல கல்யாணத் துக்கு முந்தி சொன்னாவளா'.

'அத்தே சத்தியமா எனக்கு கல்யாணத்துக்கு முந்தி வந்ததில்ல. ரெண்டு பிள்ளையும் நல்லபடியாத் தானே பெத்தேன். போன மாசந்தான் ராத்திரி என்னமோ மாதிரியா கையும் காலும் வெரிச்சுக்கிட்டு வந்தது. மொத தடவையா அப்பதா வந்துதுத்தே.'

'வந்ததுல்ல? ஒரு மாசம் ஆவுதே. நீ எங்கிட்ட ஒரு வார்த்தை சொன்னயாட்டீ'

'அத்தெ இது ராத்திரி எப்படி நடந்ததுன்னா'..

'எப்படி நடந்தா என்னாட்டி. அதுதான் எம்மகெ சொல்லிட்டானே.இனி உங்கூட படுக்க முடியாதுன்னு. இப்படி ஒரு கொறைய மறைச்சி உங்கப்பன் எம்மகன் தலையில கெட்டிட்டானே...'

'எங்கப்பாவ அவ இவம்ன்னு பேசாதீய அத்த.'.

'வாய மூடுட்டி... எனக்கே உபதேசம் பண்ணுதயோ... செத்த பய போய்ச் சேந்துட்டா.... அவம்மட்டும் இருந்தாமுன்னா நேருக்கு நேர கேட்டுருப்பேன்....'

'நல்லவேள அவரு போய்ச் சேந்திட்டாரு புண்ணியவா....'

'ஆமா...உங்கப்பே புண்ணிய வா..... நாங்கெல்லாம் பாவியளா.... போட்டீ.. ஒஞ் சோலி மயிரப் பாத்துக்கிட்டு.... ன்னு நாய விரட்டி அடிச்ச மாதிரி அடிக்காவோன்னு அழுது புலம்புனாவோ....'

ஏதோ அந்தக்கா மனசுல ஆத்தாமையைக் கொட்டித் தீத்துட்டாவோ... ஆத்துல குளிக்க தொவைக்க வந்த பொம்பளை களுக்கு ஒரு நாடகம் பாக்கது கெனக்கா இருந்தது.

'அவரு சம்பாதிச்ச லெச்சணத்துக்கு வேறவொருத் தின்னா இந்நேரம் நடுத்தெருவுக்கு கொண்டு விட்டுருப்பா.. நான் எவ்வளவு சிக்கனமா வண்டிய ஓட்டுதே..'. இப்படி அந்தக்கா சொல்லிகிட்டே...

பள்ளிக்கூடத்துல பிள்ளைய மத்தியானச் சாப்பாட்டுக்கு வந்துரும்ன்னு தொவச்ச துணிமணி களை வாளியில எடுத்து வச்சுக்கிட்டு, அவ புருசங் கைலிய ஈரப்பாவாடைக்கு மேல போத்திக் கிட்டு கரையேறிட்டா.... இங்க உள்ள மத்தவுகளுக்கு வெறும் வாயிக்கு அவலு கிடைச்சிட்டு.

செம்பக்கா வீட்டுல மிக்ஸி, குக்கர் எல்லா இருந்தும் பானையில சோறு வடிச்சாதான் அவ புருசனுக்குப் புடிக்கும். அம்மியில குழம்புக்கு தேங்கா அரைச்சாதான் அவ மாமியாளுக்கும் பிடிக்கும்.

பயலுக்குப் பிடிக்கது பிள்ளைக்குப் பிடிக்காது. பிள்ளைக்குப் பிடிக்கது பயலுக்குப் பிடிக்காதும்பா. புருசனுக்குப் பிடிக்கது மாமியாளுக்குப் பிடிக்காது. மாமியாளுக்குப் பிடிக்கது புருசனுக்குப் பிடிக்காது... இந்தக்கா வுக்குப் பிடிக்கது யாருக்கும் பிடிக்காது...

அந்தக்கா மாதிரி ருசியா யாராலேயும் சமைக்க முடியாது. ஆத்துல அப்பப்ப தன்னோட சமையல் ரகசியத்தைச் சொல்லும். எனக்குக்கூட நிறைய சமையல் ரகசியம் சொல்லிருக்கு. புளிக் குழம்ப இறக்கிட்டு கடைசியா தாளிக்கும்போது நாலு பூண்டத் தட்டிப்போட்டு, கொஞ்சம் வெந்தயமும் போட்டு தாளிச்சா குழம்பு நல்ல மணமா இருக்கும்ன்னு சொல்லிருக்கு. இப்படி நிறைய சொல்லுவாவோ.

அப்புறம் ஒருநா என்னா ஆயிருக்கு. கவுன்சிலர் மகெ கல்யாணத் துக்கு அம்மயும், பொண்டாட்டியும் வரச்சொல்லிட்டு, நா மொய் செய்துக்கிடுவேம்ன்னு செம்பகக்கா புருசன் போயிட்டான். மாமியாளும் மருமகளும் போறதுக்கு முன்னக்கூட்டியே அந்த கூத்தி யாவோட அந்தக்கா புருசன் வந்துட்டுப் போயிட்டானாம்.

கல்யாண வீட்டுக்கு வந்த நம்ம பொம்பளைய சும்மா இருப்பாவளா... செம்பகக்காகிட்ட சொல்ல.. அவுகளுக்கு வந்த ஆத்திரமுன்னா... இன்னமட்டும் இல்லயாம். அத்தனையும் மறைச்சி வைச்சுக்கிட்டு கல்யாண வீட்டுக்காரகிட்ட சிரிச்சு சிரிச்சு வேசம் போட்டுருக்காவோ.

ராத்திரி செம்பகக்கா புருச வந்துருக்கா. வழக்கம்போல துணியமணிய மாத்திட்டு கைய கால கழிவிட்டு திங்க ஒக்காந்தான். இந்தக்கா தட்டையும், தண்ணியும் கொண்டு வெச்சுருக்காவோ. தட்டு வச்ச வேகமும், தண்ணி வச்ச சீரும் அவன ரெண்டு கன்னத்துலயும் மாத்தி மாத்தி பளார் பளார்ன்னு அடிக்க மாறி இருந்துருக்கனும். இத்தன வருசத்துல முத தடவையா இப்பந்தான் தட்டையும் தம்பளரையும் இப்படி வைச்சுருக்காவோ. அவனுக்கு வித்தியாசந் தெரியாதா என்ன?

ஏட்டீன்னு அதட்டிருக்கான்

செம்பகக்காவுக்கு உள்ளேயே ஒரு வெளம்.கழுத என்ன வந்துட் டாலும் ரெண்டுல ஒண்ணு பாத்துப் புடது.

இங்க வாட்டீ ன்னா வந்துருக்காவோ..

ஏ... ஓ மூஞ்சியில இப்படி சீதேவிகள தாண்டவமாடு துன்னுருக்கா.

நீங்க கண்ட மூதேவி கூடயெல்லா சுத்துதியல்ல அதுதான் னுருக்காவோ..

செம்பகக்காவுக்கு எங்கிட்டு இருந்துதா அம்புட்டு தைரியம் வந்துதோ தெரியல...

இப்படி நேருக்கு நேரக் கேப்பான்னு எதிர்பார்க்காத அதுவும் அவெ ஆள மூதேவின்னு சொன்னத

www.padippakam.com

அவனால சகிக்க முடியுமா? சுதாரிச்சுட்டான். இவள முதல் லையே அடக்கிடனும்ட்டு ஓங்கி அடிச்சாம்பாரு ஒரு அடி.

அந்த அக்காவுக்கு முகமே கின்னுன்னு மரத்துப்போன மாறி ஆயிட்டு. அந்த அடி முகம், தலை பூரா பரவி ஒரு நிமிசங்கழிச்சுத்தான் நிதானத்துக்கு வந்துருக்காவோ. தொண்ட பூரா நெறி கெட்டுனது கணக்கா துக்கம் அடைச்சுருக்கு. வந்த கண்ணீருக்கு ரோசத்தால அணை போட்டுருக்காவோ.

உங்களுக்க நா என்ன கொறை வச்சேன்னு

எப்படி எப்படி ஒங்கிட்ட கொறையே இல்லையோ.

................

சொல்லுட்டி இல்லையோ

பெரிசா இரண்டு சொடக்கு போட்டிருக்கான் வழக்கம் போல. இந்தாப்பாரு இன்னிக்கு உனக்கு சொல்லுதுதான். எழுதி வெச்சுக்கோ. ஆம்பள தேவைக்குத் தான் பொம்பள. பொம்பள தேவைக்கு ஆம்பள இல்ல. கேட்டியான்னுருக்கான்.

................

'சொல்லுட்டி.. என்ன சொன்னேன்னு.. வாய்க்குள்ளேயே என்னட்டி முனக்கம்..'

................

நேருக்கு நேரா அந்தக்கா ஒரே மொறப்புதான்

என்னட்டி மொறைக்க என்ன சொன்னேன்னு திருப்பிச் சொல்லிட்டு இடத்தைக் காலி பண்ணு

................

சொல்லப்போறயா இல்லையா

சொல்லலைன்னா என்ன செய்வாரு?

அடிப்பாரு

அடிக்கட்டுமே

எவ்வளநேர அடிப்பாரு

சாகுந்தட்டியும் அடிப்பாரு

அடிக்கட்டுமே. இப்படி ஒரு சீப்பட்ட பொழப்பு பொழைக் கதுக்கு நாக்கப் புடுங்கனமாறி நாலு கேள்வி கேட்டுட்டு செத்துப் போயிடலாம்.

நா ஏ செத்துப் போகணும்

................

என்னை மிருகமாக்கப் பாக்காத... சொல்லு என்ன சொன்னே?

................

'உன்னைய எப்படிச் சொல்ல வைக்கணும்னு எனக்குத் தெரியும்ன்னு' ஆணியில தொங்குற பெல்டை எடுத்துட்டு வந்து...

இப்பச்சொல்லு என்ன சொன்னே

ஓங்கி ஓங்கி பெல்ட்டால முதுகுல அடிச்சுருக்கான்.

செம்பகக்காகிட்ட ஒரு சின்ன அசைவு கூட இல்லை. தடுக்கக்கூட இல்லையாம். மரமா நின்னுருக் காவோ. ஒரு சொட்டுக் கண்ணீரு கூட விடல. இதுக்கு முன்னாடி இந்தக்கா இப்படி அடிவாங்கினதே இல்லையாம். ஒரு அடி ரெண்டு அடி வாங்குமாம்.அதுக்கே அந்தக்கா வேண்டாவேண்டாம்ன்னு தடுத்துக்கிட்டே அடுப்படியிலே போய் பதுங்கிடுமாம். அவனுக்கு ரெம்ப ஆச்சரியமாப் போச்சாம். இருந்தாலும் அவனும் விடுத்தா இல்லையாம்.

நீயெல்லாம் பொட்டச்சியா... கண்டாரஓலி. என்னா நெஞ்சு அழுத்தம் உனக்கு.. பொட்டச்சி ஒனக்கே இவ்வளவு இருந்தா ஆம்பள எனக்கு எவ்வளவு இருக்கும். மவளே உன்னைய இன்னிக்கு... உன்ன விடுத மாறி இல்லன்னு' முதுகுல அடிச்சவே... முன்னால மார்ல அடிக்க ஆரம்பிச்சிருக்கான்.

இவ்வளவு நேரம் முதுகுல அடிச்ச அடிய தாங்கி அவுகளாலே மார்ல சுளீர் சுளீர்ன்னு அடிச்ச அடிய தாங்க முடியல.

விசுக்குன்னு பெல்ட்ட இறுத்திப் புடிச்சிட்டாவோ. அவெ மறுபக்க பெல்ட்ட விடல. இறுக்கி பிடிச்சுக்கிட்டான். எங்க நம்மளத் திருப்பி அடிச்சுருப்பாளோன்னு பயந்துருப்பான்.

அந்தக்கா மனசுல இருந்த அழுத்தமும், வெப்புராளமும் தாங்க முடியல.

கண்ணுல இருந்து தாரதாரயா கண்ணீர் வர மேமூச்சு கீமூச்சு வாங்க புருசன முறைச்சிருக்காவோ.

அவெ இறுக்கிப் புடுச்சிருந்த பெல்ட்ட பொத்துன்னு விட்டுட் டான். இந்தக்காவும் பொத்துன்னு விழுந்துட்டாவோ. வேகமா சட்டை எடுத்துப் போட்டான். கட்டுன கைலியோட படபடன்னு வண்டிய கிளப்பி போயிட்டான்.

வண்டிச்சத்தம் தூரத்தில அடங்குனதும் படுத்திருந்த மாமியாக் கிழவி வந்து

'தேவுடியா முண்ட எம்மகனையே எதுத்துட்டியே. எம்புள்ள கோவத்துல வண்டிய எடுத்துட்டுப் போறானே... அவனுக்கு ஏதாவது ஒன்னு ஆச்சுன்னா நா என்ன செய்வேன்'னு ஒப்பாரி வெச்சா.

'அப்பன்னா இவ்வளவு நேரமும் நீ முழுச்சுக்கிட்டுதான் படுத்திருந்தியான்'னுகேட்டு ஒரு முறைப்பு முறைச்சிருக்காவ.

'அடி இது என்னடி இழவாப்போச்சு'ன்னு பதறிப்போயி திரும்பவும் போய் படுத்துக்கிட்டு புலம்பிக்கிட்டே இருந்துருக்கா.

அவ புருசன் வண்டி வருத சத்தங்கேட்டது. கிழவி புலம்பல் அடங்கிட்டு. வண்டிய நிறுத்திட்டு உள்ளேவந்து அந்தக்கா மயித்தப் பிடிச்சுத் தூக்கி,

'ரெடியா இருந்துக்கோ.. ஒந்தம்பிக்குத் தந்தி கொடுத்திருக்கேன். காலையில வருவான். ஊரப்பாக்கப் போயிச்சேரு.. இனி நீ இந்த வீட்ல இருக்கப்படாது'

'எந்தம்பி கூட என்ன போறது? இப்பவே நான் போறேன்'னு அவன் கைய வேகமாத் தட்டிவிட்டுட்டு அந்த ராத்திரியோட ராத்திரியா எங்கிட்டோ போயிட்டா

அந்த பெல்ட்டு இன்னும் அங்கனயே சுருண்டு கெடக்கு.

●



படிப்பகம்

www.padippakam.com



ஓவியம் : செல்வம்

# ஆனால் நான் பெண்ணியவாதி அல்ல

## பெண்ணியம் - சில கேள்விகள்

ச.மாடக்கண்ணு

'நம் நாட்டில் பெண்களாகிய நாம் நூறு நூறு ஆண்டுகளாக சித்திரவதைகளை அனுபவித்து வருகிறோம். நம் சமூகத்தின் உண்மையான அரிசனங்களாக பெண்களே வைக்கப்பட்டுள்ளனர்'. இப்படி ஆவேசமாக பெண்களின் மீதான ஒடுக்குமுறைக்கு எதிரான கருத்தரங்கில் பெண் ஒருவர் பேசிக்கொண்டிருந்தார். தொடர்ந்து பெண்களின் போராட்டத்தை ஒற்றுமையை வலியுறுத்திப் பேசிய அவர் ஒரு கணம் பேச்சை நிறுத்தி 'அதற்காக என்னை பெண்ணியவாதி என்ற நினைத்து விடாதீர்கள்' என்றார்.

பெண்ணுரிமைக்காக குரல் கொடுக்கிற - போராடுகிற - அக்கறையுள்ள பலரும் தம்மை 'பெண்ணியவாதி' என்ற அடையாளப்படுத்திக் கொள்ள விரும்புவதில்லை. இது ஏன்?

பெரும்பாலும் ஆண்களின் கட்டுப்பாட்டில் உள்ள அல்லது ஆணாதிக்க சிந்தனையின் பிடியில் உள்ள தொடர்பு சாதனங்கள் பெண்ணியவாதி என்றால் மேலைநாடுகளில் 'பிரா'க்களை தீயிட்டுக் கொளுத்துபவர்களையும் ஆண்எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களையும் குடும்பங்களைத் தகர்த்தெறிய வேண்டும் என்ற பேசுபவர்களையுமே படம் பிடித்துக் காட்டுகின்றன.

இந்த வலுவான பிரச்சாரத்தினால் இந்தியாவில் பெண் நிலை வாதம் பேசுகிறவர்களையெல்லாம் உயர் மத்திய தர வர்க்க பேஷன்வாதிகள் மேலை நாடுகளைக் காப்பியடிக்கிறவர்கள். இந்தியப் பாரம்பரியத்தின் வேர்களை புரிந்து கொள்ளாதவர்கள் என முத்திரை குத்திப் புறந்தள்ளி விடுகிறார்கள்.

ஆனால் உண்மை என்ன? இந்தியப் பெண்ணிய வாதிகள் ஒருபோதும் 'சிம்பாலிக்'காகக் கூட பிரா எரிப்புப் போராட்டம் நடத்தியதில்லை. எல்லாரையும் போல திருமணம் செய்து குழந்தைகள் பெற்று பிறரைப்போல குப்பை கொட்டிக்கொண்டு - அதோடு கூடவே பெண் உரிமைகளுக்காக குரல் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

பெண்ணியம் என்று அவர்கள் பேசுவது என்ன என்று முழுக்க செவி

(Based on "Some questions on Feminism and its relevance in South Asia" by Kamla Bhasin and Nighat Said Khan)



படிப்பகம்

www.padippakam.com

மடுக்காமலேயே பெண்ணியவாதிகள் மீது அசூயையும் வெறுப்பும் கொண்டுவிடுகிறார்கள்.

1. சரி பெண்ணியம் என்பதுதான் என்ன?

கி.பி 17ஆம் நூற்றாண்டில் தான் இந்த வார்த்தை (Feminism) முதன்முறையாக புழக்கத்தில் வந்தது. மற்ற இசங்களைப் போல இதற்கு எந்த ஒரு குறிப்பிட்ட தத்துவத்தின் பின்புலமும் இல்லை. எனவே பெண்ணியம் என்பதற்கான வரையறை மாறக்கூடிய தன்மை உடையது. ஏனெனில் சரித்திர ரீதியான கலாச்சார ரீதியான திட்டவட்டமான யதார்த்த நிலைமைகளின் மீதும் அந்த யதார்த்தங்கள் குறித்த தன்னுணர்வு, கருத்தாக்கம் மற்றும் நடவடிக்கைகள் மீதும் தான் பெண்ணியம் காலூன்றி நிற்கிறது. எனவே 17ஆம் நூற்றாண்டின் பெண்ணியம் வேறு. இன்றைய பெண்ணியம் வேறு. ஐரோப்பாவின் பெண்ணியம் வேறு. இந்தியாவின் பெண்ணியம் வேறு. ஒரு நாட்டுக்குள்ளேயும் கால வேறுபாடுகள் கலாச்சார மாற்றங்கள் பெண்ணியத்தின் பொருளை மாற்றுகின்றன.

எனினும் ஒரு பொதுவான வரையறைக்கு வரவேண்டுமல்லவா? சமீபத்தில் நடைபெற்ற ஒரு தென் கிழக்காசிய பெண்கள் சட்டறையில் கீழ்க்கண்ட வரையறை பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்டது.

'சமூகத்திலும் வேலைத்தளங்களிலும் குடும்பங்களுக்கு உள்ளேயும் பெண்கள் ஒடுக்குமுறைக்கும் சுரண்டலுக்கும் (பாலியல் காரணங்களுக்காக) ஆளாகிறார்கள் என்கிற பிரக்ஞையும் அதை மாற்றுவதற்காக பெண்களும் ஆண்களும் எடுக்கும் பிரக்ஞைபூர்வமான நடவடிக்கைகளுமே பெண்ணியம் ஆகும்'.

எனவே வெறும் உணர்ந்து கொள்ளல் மட்டும் போதாது. நடவடிக்கையிலும் ஈடுபட வேண்டும். பெண்கள் வெளியே வரக்கூடாது என்று சொல்கிற ஒரு சமூகத்தில் துணிந்து வெளியே வருவது பள்ளிக்குப் போவது வேலைக்குப் போவது - பெண்ணியம். பர்தா போட்டே ஆக வேண்டும் என்று கட்டாயப்படுத்துகிற இடத்தில் பர்தா போடாமல் இருப்பது பெண்ணியம். எனவே ஏதாவது ஒரு பெண்நிலை வாதக்குழுவில் நீங்கள் உறுப்பினராக சேர வேண்டும் என்பது கட்டாயமல்ல (சேர்வது நலமே என்றாலும்) பெண் விடுதலைக்கான ஏதாவது நடவடிக்கையில் (பிரக்ஞைபூர்வமாக) ஈடுபட்டாலே நீங்கள் (Feminist) பெண்ணியவாதிதான்.

'பெண்மை' என்பதை முற்றுமுழுசாக பெண்களுக்குரியதாகவும் 'ஆண்மை' என்பதை ஆண்களுக்கே உரிய தன்மையாகவும் சித்தரிப்பதை பெண்ணியம் எதிர்க்கிறது.ஆணாதிக்கத்துக்கு எதிராக மட்டுமின்றி சமகூலிக்காகவும் சமூக மாற்றத்துக்காகவும் ஒட்டு மொத்த மனித குல விடுதலைக்காகவும் போராடுவதே பெண்ணியம்.

ஏற்கனவே வறுமையில் வாடும் ஒரு விவசாய வீட்டுப் பெண் கொடும்சுரண்டலுக்கும் ஏமாற்றுக்கும் ஆட்பட்டுள்ள தன் சக ஆண் விவசாயிகளுக்கு சமமான அந்தஸ்தை மட்டும் கோரிப் போராடுவதில் என்ன பயன் இருக்க முடியும்? எனவே மனித குல விடுதலை என்பது பெண்ணியத்தின் பிரிக்க முடியாத உள்ளுறையாகும்.

ஆனால் துவக்கத்தில் பெண்களின் சமத்துவத்துக்காகவும் கௌரவத்திற்காகவும் பெண் தன் வாழ்வின் மீதும் தன் சொந்த உடம்பின் மீதும் முழு உரிமை உடையவளாகவும் தேர்வு செய்யும் உரிமை பெற்றவளாகவும் (வீட்டுக்கு உள்ளேயும் வெளியேயும்) உயரப் போராடுவதே இன்றைய பெண்ணியத்தின் சாரமாக இருக்க முடியும்.

பெண்ணியம் மேற்கத்திய சிந்தனை தானே

Feminism என்ற வார்த்தை - கருத்தாக்கம் - மேற்கிலிருந்து வந்ததாக இருக்கலாம். ஆனால் பெண் கல்வி குறித்து பெண்ணின் இடம், உரிமை குறித்து எல்லா நாடுகளிலும் பல நூற்றாண்டு காலமாகவே பேசப்பட்டுத்தான் வந்துள்ளது.

புத்த மடத்தில் பெண்களுக்கு இடம் அளிப்பது குறித்து கி.மு. 6ஆம் ஆண்டிலேயே புத்தராலும் அவரது சீடர்களாலும் விவாதிக்கப்பட்டுள்ளது. பெண்களின் கால்கள் சிறியவையாக அழகாக இருக்க வேண்டும் என்பதற்காக சீனப்பெண் குழந்தைகள் பிறந்தது முதல் சில ஆண்டுகளுக்கு கால்களை துணியால் இறுகக் கட்டும் பழக்கம் இருந்தது. அதை எதிர்த்து சீன அறிஞர் காங் யூ வெய் (Kang Yu - Wei) அன்றே போர்க்குரல் எழுப்பினார். சென் ஹங் மௌ (Chen Hung Mou) 18ஆம் நூற்றாண்டிலேயே சீனப் பெண்களில் கல்விக்காக குரல் எழுப்பினார். எகிப்து நாட்டின் அஹ்மத் பார்ஸ் எல் ஷித்யாக் (Ahmed Faras El Shidyak) 18ஆம் நூற்றாண்டிலேயே பெண் விடுதலைக்கு குரல் கொடுத்து 'ஒரு காலின் மேல் இன்னொரு கால்' (The leg crossed over the other) என்ற நூலை எழுதினார். ஈரானில் பலதார மணமுறைக்கு எதிராக 1880-90களில் அறிஞர்கள் போராடியுள்ளனர். இந்தியாவில் ராஜாராம் மோகன்ராய் காலத்து சதிக்கொடுமையை எதிர்த்த போராட்டம் துவங்கி வித்யாசாகர், ராமகிருஷ்ணர், தாகூர்,காந்தி,நேரு, சையத் அஹமத் என எத்தனைபேர் பெண் விடுதலைக்காக குரல் கொடுத்துள்ளனர். இதெல்லாம் பெண்ணியம் அல்லாமல் வேறென்ன? இவர்கள் யாரும் மேற்குலகைச் சார்ந்தவர்கள் இல்லையே. எனவே பெண்ணியம் மேற்கத்திய சிந்தனை மட்டுமல்ல.

பெண் விடுதலை என்பதே அலர்ஜியாகி விட்ட சிலரின் வெற்றுப்பிதற்றல்தான் மேற்கத்திய சிந்தனை என்பதெல்லாம். நாம் போடுகிற சட்டை பேண்ட் மேற்கத்தியதாக இருக்கலாம்.

விஞ்ஞான கண்டுபிடிப்புகள் மேற்கிலிருந்து வரலாம். சிந்தனை மட்டும் வரக்கூடாதா? ( அது ஒன்றும் மேற்கத்திய கண்டுபிடிப்பு அல்ல என்பதுதான் உண்மை என்பது வேறு விஷயம்)



படிப்பகம்

www.padippakam.com

காங்கிரசின் தேசியம் (Nationalism) மேற்கத்திய இஸம்தான்

கம்யூனிஸ்டுகளின் மார்க்சிசம் (Marxism)"

பிஜேபியின் வகுப்பு வாதம் (Fundamentalism)

ஆர்எஸ்எஸ்ஸின் கலாச்சார தேசியம் (Cultural Nationalism)

இதையெல்லாம் ஏற்கிறவர்கள் பெண்ணியத்தை மேற்கத்திய கண்டுபிடிப்பு என்று கூறக்கூடாது.

அன்று பெண்கள் ஒடுக்கப்பட்டதால் பெண்ணியம் தேவைப்பட்டது. இன்று தேவையா?

யாரோ ஒரு இந்திராகாந்தி, ஒரு ஜெயலலிதா ஒரு சந்திரிகா என்று சில பெண்கள் அரசியல் அரங்கில் முன்வந்திருப்பதும் பெண்கள் ஒரு குறிப்பிட்ட சதவீதம் படித்து வேலைக்கு வந்திருப்பதும் வரவேற்கத்தக்க வளர்ச்சி தான். ஆனால் இதனால் எல்லாம் பெண்களின் மீதான ஒடுக்குமுறை இன்று ஒழிந்துவிட்டது என்ற முடிவுக்கு வரமுடியுமா? தினசரி பத்திரிகைள் அன்றாடம் பெண்களின் மீதான வன்முறையைச் சொல்லிக்கொண்டே இருக்கின்றன. எப்போதுமே வெளிவராதவை தானே அதிகம்.

எனவே பெண்களின் வாக்குரிமைக்காகவும், கல்விக்காகவும் போராடிய பெண்ணியம் இன்று பெற்ற உரிமைகளைப் பேணவும் மேலும் விஸ்தரிக்கவும் இன்னும் அழுத்துகிற ஆணாதிக்க நுகத்தடிகளை கழற்றி எறியவும் நாளும் போராடியே தீர வேண்டும்.

வெறும் வீட்டுப்பெண்கள் (House Wifes) பெண்ணியவாதி ஆகமுடியுமா?

இந்த 'வெறும்' என்ற வார்த்தையை முதலில் கண்டிக்கிறோம். வீட்டுப்பெண் என்றால் எவ்வளவு பணிகள்? எவ்வளவு சுமைகள்? வீட்டு வேலையை ஒரு வேலையாக அங்கீகரித்து அதை மதிப்பிட வேண்டும் என்றுதானே தொடர்ந்து கோருகிறோம். வீட்டு வேலைகளான சமையல், வீடு பெருக்குவது, சாணி கரைத்து வாசல் தெளிப்பது, வீடு மெழுகி கோலம் போடுவது, சாக்கடை, கக்கூஸ் சுத்தம் செய்வது, துணி துவைப்பது, மாவாட்டுவது போன்றவற்றுக்கு எந்த மரியாதையும் இன்று சமூகத்தில் இல்லை. இந்த வேலைகளுக்கெல்லாம் ஒரு மரியாதையும் மற்ற உத்தியோகம் போல ஒரு கணக்கீடும் தேவை. மதிப்பும் அங்கீகாரமும் சமூகத்தில் வந்தால் தான் ஆண்கள் இந்த வேலைகளை செய்யத் துவங்குவார்கள்.

பெண்ணியம் வீட்டு வேலையை மதிக்கிறது. பெண்ணியவாதி என்றாலே வீட்டுக்கு வெளியில் வேலை செய்ய வேண்டும் என்று ஒரு போதும் பெண்ணியம் கூறுவதில்லை.

வீட்டு வேலையைத் தன் வாழ்வாக தேர்வு செய்த பெண்ணும் தன்னுடைய தனித் தன்மைகளும் திறன்களும் அதில் முழுமையாக காக்கப்பட்டு பயன்படும்போது - பெண்ணிய வாதியாக திகழ முடியும்.

ஆனால் வீட்டு வேலைகள் என்பது இன்று பெண் விரும்பித் தேர்வு செய்யும் விஷயமாக இல்லையே. அதுதானே அவளுக்கு விதிக்கப்பட்டிருக்கிறது. 10 வயது ஆனது முதல் பெண் குழந்தைகள் நல்ல சமையல்காரிகளாகவும் தூப்புக்காரிகளாகவும் தானே பயிற்சியளித்து தயார் செய்யப் படுகிறார்கள்?

பெண்கள் படித்தாலும் அவர்களது கல்வி பெரும்பாலும் +2 முடித்து டைப்ரைட்டிங் அல்லது இன்று DTPயுடன் முடிகிறது.

பெண்களுக்கு லாயக்கான வேலைகள் என்று சில வேலைகள் (ரிசப்ஷனிஸ்ட், டெலிபோன் ஆபரேட்டர், டைப்பிஸ்ட், ஆரம்பப்பள்ளி ஆசிரியை போல) எழுதப்படாத சட்டமாக ஒதுக்கப்பட்டுள்ளன.

பெண்கள் இப்படித்தான் வாழ வேண்டும் என்று பெண்ணியம் கூறவில்லை. எப்படி வாழ வேண்டும் என்ற தேர்வு செய்யும் உரிமை பெண்களுக்கு வேண்டும். நிர்ப்பந்தம் இருக்கக்கூடாது என்றுதான் பெண்ணியம் கூறுகிறது.

நல்ல குடும்பங்களின் அமைதியை பெண்ணியம் புகுந்து சீர்குலைத்து விடுகிறதே?

கூலி போதாது என்று குரல் எழுப்பி வேலை நிறுத்தம் செய்யும் தொழிலாளி 'தொழில் அமைதி'யை சீர்குலைப்பதாகத்தான் முதலாளியால் கூறப்படு கின்றாள். இதற்கு மேலும் என்னால் மலம் சுமக்க முடியாது என்ற மறுக்கிற தாழ்த்தப்பட்ட சகோதரன் நிலவும் சமூக அமைதியை சீர்குலைப்பதாகத்தான் உயர் ஜாதியினரால் கூறப்படுகிறான்.

'தொழில் அமைதி', 'சமூக அமைதி', போலத் தான் இந்த 'குடும்ப அமைதி'யும் குலைக்கப்பட வேண்டிய ஒன்றாக இருக்கிறது.

அதிகாலை வாசல் தெளிக்க சாணியைக் கரைக்கும் பெண் இரவு பாலுக்கு உரை ஊற்றி மூடி விட்டு விளக்கணைப்பது வரை எத்தனை வேலை செய்கிறாள். எத்தனையோ ஆண்டுகளாக அவளுடைய தினசரி வாழ்க்கையில் எந்த விதமான மாற்றமும் இல்லை. தேதி, கிழமை, மாதம், வருடம் என்கிற எந்த வித்தியாசமும் இன்றி அதே வேலைகள் அதே அடுப்படி. அதே குப்பைகள். அதே விளக்குமாறுகள். இடுப்பொடிக்கும் இந்த சலிப்பூட்டும் வேலை யிலிருந்து எனக்கு விடுதலை வேண்டும் என்று அவள் கேட்டால் அது அமைதியை சீர்குலைக்கும் செயல் தானே?

பெண் சிசுக்கொலையில் துவங்கி வரதட்சிணைக் கொலைகள் வரை கொலைகள் நடக்கும் நமது குடும்பங்கள் அமைதிப்பூங்காக்கள் என்று சொன்னால் நாம் ஏற்க முடியுமா?

வெளியே ஜனநாயகம் தழைக்க வேண்டும். ஆனால் வீட்டுக்குள் மட்டும் ஆண் ஆதிக்கம் கொடிகட்டிப்பறக்க வேண்டும். ஜனநாயகம் உண்மையிலேயே மலர வேண்டுமானால் அது முதலில் குடும்பங்களில் மலர வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

பெண்ணியம் பெண்கள் தாய்மை அடைவதை எதிர்க்கிறதா?

இல்லை. நிச்சயமாக இல்லை. ஆனால் தன் வயிற்றில் ஒரு கரு எப்போது உருவாக அனுமதிக்கலாம் என்கிற முடிவை எடுக்கிற உரிமை அந்த பெண்ணிடம்தான் இருக்க வேண்டும் என்கிறோம். ஏனெனில் அந்த உடம்பு அவளுடைய தாச்சே. இன்று தன் உடம்பு தன் புருஷனுக்கு உரியது என்ற கருத்தாக்கம் அல்லவா நிலவுகிறது. இது எவ்வளவு கேவலமான அராஜகம்?

இன்னொரு விஷயம் - குழந்தை வளர்ப்பு. தாய்மை என்பது கணவன் - மனைவி இருவரும் கூட்டாக செயல்படுத்த வேண்டிய ஒன்று. அப்போது தான் அது பெண்ணின் சுமையாக இல்லாமல் குடும்பத்தின் சந்தோஷமாக - குழந்தையின் வளர்ச்சிக்கு உதவியாக அமையும்.

ஆகவே

பெண்ணியம் என்பது ஆண்களுக்கு எதிரானதோ தாய்மைக்கு எதிரானதோ குடும்ப அமைதிக்கு எதிரானதோ உழைப்பாளி வர்க்கத்துக்க எதிரானதோ அல்ல. மாறாக மேலோட்டமாக பிரச்சினைகளைப் பார்க்காமல் புறவய யதார்த்தத்தை மட்டும் விரிவாகப் பார்த்துவிட்டு அகவய மற்றும் தனிப்பட்ட விஷயங்களை பார்க்க மறந்து விட்டுவிடாமல் எல்லாவற்றையும் சேர்த்துப்பார்க்க வேண்டும் என்று கோருகிறது. கொஞ்சம் வேலைப்பளுவை தாமும் ஏற்க வேண்டும் என்பதாலும் தங்கள் அந்தஸ்தை பங்கிட்டுத்தரவேண்டுமே என்பதாலும் தான் ஆண்கள் இன்ற பெண்ணியத்தை எதிர்க்கிறார்கள்.

ஆனால் ஆணாதிக்கத்தை ஒழித்துவிட்டு அந்த இடத்தில் பெண் ஆதிக்கத்தை நிறுவுவது அல்ல எங்கள் நோக்கம். மாறாக சமூகத்தின் சகல பகுதியையும் சகல ஏற்பாடுகளையும் கேள்விக்குள்ளாக்கி மறு சீரமைப்புக்கு உட்படுத்த வேண்டுமென்கிறோம். சமூகத்தின் சாரத்தையே மாற்ற வேண்டுமென்கிறோம்.

எனவே பெண்ணியம் குறித்து அசூயையும் அச்சமும்கொள்ள வேண்டாம். உடன் சேருங்கள். சேர்ந்து போராட வாருங்கள்.

●

All Leading Mills with Wholesale Rate in Retailshop

Step in

INDICA TEXTILE

Nanjundeswara Temple Street,
Opp : Bose Bazaar,
HOSUR - 635 109.

Prop : R.Shyamsingh & Bros | © 42856 (R)
25631 (R)
K.R. Nataraj & Bros | 24535 (R)

படிப்பகம்

www.padippakam.com



## தாலியின் சரித்திரம்

தாலி கட்டுதல், திருப்பூட்டுதல் , மாங்கல்ய தாரணம் ஆகிய சொற்கள் பெண்ணின் கழுத்தில் ஆண் தாலி அணிவதை குறிக்கின்றன. தாலிகட்டும் நிகழ்ச்சி நடக்கும்போது மணமக்களுக்குப் பின்னால் மணமகனின் சகோதரி அல்லது சகோதரி முறை உள்ளவர்கள் கட்டாயம் நிற்க வேண்டும். மணமகனுக்கு தாலி முடிக்கப் போட அவள் உதவி செய்யவேண்டும். தமிழ்நாட்டில் பெருவாரியாக நிலவி வரும் வழக்கம் இதுவே.

மணவறையில் அல்லாமல் ஊர் மந்தையில் நின்று கொண்டு தாலிகட்டும் வழக்கமுடைய சாதியாரிடத்திலும் சகோதரி மணமகனுக்கு தாலி கட்ட துணை செய்கிறாள். தமிழ்நாட்டில் குறிப்பிட்ட ஒன்றிரண்டு சாதியாரிடத்தில் இரண்டு வீடுகளுக்கு இடையில் உள்ள சந்து அல்லது முடுக்குக்குள் சென்று மணமகன் மணமகளுக்கு தாலிகட்டுவது சில ஆண்டுகளுக்கு முன்வரை வழக்கமாக இருந்தது. இது வன்முறையாகப் பெண்ணை வழிமறித்துத் தாலிகட்டிய காலத்தின் எச்சப்பாடாகும்.

ஒரு நூற்றாண்டு முன் வரை சில சாதியாரிடத்தில் மணமகன் திருமண நிகழ்ச்சிக்கு வரமுடியாத போது மணமகனை அடையாளப் படுத்த அவன் வைத்திருக்கும் பொருள்களில் ஒன்றை கொண்டு வந்து மணமகளின் பக்கத்தில் வைத்து மணமகனின் சகோதரி தாலிகட்டுகிற வழக்கம் இருந்திருக்கிறது.

மதுரை மாவட்டம் மேலூர் வட்டத்தில் வாழும் அம்பலகாரர் களிடத்தில் மணமகனுக்கு பதிலாக அவனுடைய வலதடியை (வளரியை) கொண்டு போய் அவனுடைய சகோதரி மணப்பெண்ணுக்கு தாலிகட்டுகிற வழக்கம் இருந்துள்ளது.

மணமகன் இல்லாமலேயே மணமகளுக்கு தாலிகட்டும் வழக்கம் தமிழகத்தில் இருந்துள்ளது என்பதற்கு இவையெல்லாம் சான்றுகளாகும்.

தாலி என்ற சொல்லின் வேர்ச்சொல்லை இனங்காண முடியவில்லை. ஆனால் தாலி தாலாட்டு ஆகிய சொற்களை கொண்டு தால் என்பது தொங்கவிடப்படும் அணி (காதணி, மூக்கணி, விரலணி போல) என்று கொள்ளலாம்.

நமக்குக் கிடைக்கும் தொல்லிலக்கியச் சான்றுகளிலிருந்து (சங்க இலக்கியங்கள் சிலப்பதிகாரம்) அக்காலத்தில் ஆண் பெண்ணுக்கு தாலிகட்டும் பழக்கம் இருந்ததில்லை என்றே தோன்றுகிறது.

தமிழர் திருமணத்தில் தாலிஉண்டா இல்லையா என்று தமிழறிஞர்களுக்கு மத்தியில் 1954ல் ஒரு பெரிய விவாதமே நடந்தது. இந்த விவாதத்தை தொடங்கி வைத்தவர் கவிஞர் கண்ணதாசன். தாலி தமிழர்களின் தொல் அடையாளந்தான் என வாதிட்ட ஒரே ஒருவர் சிலம்புச் செல்வர் ம. பொ. சி. மட்டுமே.

முனைவர் தொ.பரமசிவன்,
ம.சு.பல்கலைக்கழகம்



படிப்பகம்

www.padippakam.com




கி.பி 10ம் நூற்றாண்டு வரை தமிழ்நாட்டில் தாலிபேச்சே கிடையாது என்கிறார் கா.அப்பாத் துரையார். பெரும்புலவர் மதுரை முதலியாரும் தமிழ் ஆய்வறிஞர் மா. இராசமாணிக்கனாரும் பழந்தமிழர் களிடத்தில் மங்கலத்தாலி வழக்கு கிடையாது என உறுதியுடன் எடுத்துக் கூறினர்.

தொல்பழங்குடி மக்கள் பிள்ளைகளை தீயவை அணுகாமல் காப்பதற்கு பிள்ளைகளின் இடுப்பில் அரைஞாண் கயிற்றில் சில பொருட்களை கட்டும் வழக்கம் இருந்தது. அவ்வழக்கம் மிக அண்மைக்காலம் வரை கூட நீடித்தது. இவ்வாறு ஐந்து பொருள்களை பிள்ளைகளின் அரை ஞாண் கயிற்றில் கட்டுவதை சங்கஇலக்கியங்கள் ஐம்படைத் தாலி என்று குறிப்பிடுகின்றன. மிக அண்மைக் காலம் வரையிலும் கூட கிராமப்புறங்களில் குழந்தைகளின் அரைஞாண் கயிற்றில் நாய், சாவி, தாயத்து ஆகிய உருவங்களை செய்து கட்டுவது வழக்கமாயிருந்தது.

நந்தனின் சேரிக் குழந்தைகள் அரைஞாண் கயிற்றில் இரும்பு மணி கட்டியிருந்ததாக குறிப்பு உள்ளது.

எனவே தாலி என்னும் சொல் கழுத்துத்தாலியை தொடக்க காலத்தில் குறிப்பிடவில்லை என்பது தெளிவாகிறது.

கி.பி. 7ஆம் நூற்றாண்டில் திருமணச் சடங்குகளை ஒவ்வொன்றாகப் பாடுகின்ற ஆண்டாளின் பாடல்களில் தாலி பற்றிய பேச்சே கிடையாது. மாறாக தான் கொன்ற புலியின் பல்லை எடுத்து வீரத்தின் சின்னமாக ஆண் தன் கழுத்தில் கோர்த்துக் கட்டிக்கொண்டால் அதை புலிப்பல் தாலி என்று குறிப்பிட்டுள்ளனர்.

'புலிப்பல் கோத்த புலம்பி மணித்தாலி (அகநானூறு)'

'புலிப்பல் தாலிப் புன்தலைச் சிறார் (புறநானூறு)'

'இரும்புலி எயிற்றுத் தாலி குடையிடை மனவுகோத்து' (திருத்தொண்டர் புராணம்)

தமிழ்நாட்டில் ஆதிச்சநல்லூர் உட்பட பல்வேறு இடங்களில் தோண்டி எடுக்கப்பட்ட புதை பொருட்களில் இதுவரை தாலி எதுவும் கிடைக்கவில்லை.

தமிழ்நாட்டில் இப்போது பயன்படுத்தப் பட்டுவரும் தாலிகளில் சிறு தாலி, பெருந்தாலி, பஞ்சார(கூடு)த்தாலி, மண்டைத் தாலி, நாணல் தாலி(ஞாழல் தாலி) பார்ப்பாரத் தாலி,பொட்டுத்தாலி ஆகியவை பெருவாரியான மக்களால் பயன்படுத்தப் படுபவை ஆகும்.

ஒரு சாதிக்குள்ளேயே அதன் உட்பிரிவுகள் சிறுதாலி பெருந்தாலி வேறுபாட்டால் அடையாளப் படுத்தப்பட்டன. ஒரு காலத்தில் உணவு சேகரிப்பு நிலையில் வாழ்ந்த சில சாதியார் இன்றுவரை கழுத்தில்தாலிக்குப் பதிலாக 'காரைக்கயிறு' எனும் கருப்புக்கயிறு கட்டிக் கொள்கின்றனர். கழுத்தில் காரை எலும்பை ஒட்டிக் கட்டப்படுவதால் அது காரைக்கயிறு எனப்பெயர் பெற்றது. பார்ப்பாரத் தாலியில் ஒருவகை பெண்ணின் மார்புகள் போன்ற இரண்டு உருவத்திற்கு நடுவில் ஒரு உலோகப் பொட்டினை வைத்துக் கொள்வதாகும். இது மனிதகுல வரலாற்றில் ஏதோ ஒரு தொல்பழங் குடியினரின் கண்டுபிடிப்பாக இருக்க வேண்டும்.

கி.பி. 10ஆம் நூற்றாண்டு முதலே தமிழகத்தில் பெண்ணின் கழுத்துத்தாலி புனிதப் பொருளாகக் கருதப்பட்டு வந்துள்ளதாகக் கொள்ளலாம். அதன் பின்னரே கோவில்களிலும் பெண் தெய்வங்களுக்குத் தாலி அணிவிக்கப்பட்டது. திருக்கல்யாண விழாக்களும் நடத்தப்பட்டன. நாளடைவில் தாலி மறுப்பு அலலது நிராகரிப்பு என்பது கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாத ஒன்றாக மாறிவிட்டது. தம் குலப் பெண்களுக்கு மேலாடை அணியும் உரிமை கோரி குமரிப்பகுதி நாடார்கள் நடத்திய தோள்சீலைப் போராட்டத்தை ஒடுக்க அன்று நாயர்கள் நாடார் பெண்களின் தாலிகளை அறுத்தனர். அந்த இடம் இன்றும் தாலியறுத்தான் சந்தை என்று வழங்கப்படுகிறது.

இந்தியச் சிந்தனையாளர்களில் தந்தை பெரியார்தான் முதன்முதலில் தாலியை நிராகரித்துப் பேசவும் எழுதவும் துவங்கினார். அவரது தலைமையில் தாலி இல்லாத் திருமணங்கள் நடைபெறத்தொடங்கின. ஆணுக்குப் பெண் தாலி



படிப்பகம்

www.padippakam.com

கட்டும் அதிர்ச்சி மதிப்பீட்டு நிகழ்ச்சிகளும் சில இடங்களில் நடந்தன. பின்னர் 1968ல் அண்ணா காலத்தில் நிறைவேற்றப்பட்ட சுயமரியாதைத் திருமணச்சட்டம் தாலி இல்லாத் திருமணத்தை சட்டபூர்வமாக அங்கீகரித்தது.

கடைசியாக ஒரு செய்தி - சங்க இலக்கியங்களில் தாலி மட்டுமல்ல. பெண்ணுக்குரிய மங்கலப் பொருட்களாக இன்று கருதப்படும் மஞ்சள், குங்குமம் ஆகியவையும் கூட பேசப்படவே இல்லை.

## பெண்பூசாரிகளும் தாய்த் தெய்வ வழிபாடுகளும்

இன்று பூசாரித் தொழில் பெருந்தெய்வக் கோவில்களிலும் நாட்டார் தெய்வக் கோவில்களிலும் ஆண்களுடையதாகவே இருக்கிறது. பெருந்தெய்வ (அரச ஆதரவு) கோவில்களில் ஒரு காலத்தில் நெல் குற்றுதல், பெருக்குதல், மெழுகுதல் ஆகிய தொழில்களுக்கு மட்டுமே பெண் பணியாளர்கள் நியமிக்கப்பட்டனர்.

இவையன்றி தேவரடியார் எனப்படும் பெண்கள் கோயில்களில் குடவிளக்கு ஏந்தி சுற்றி வரவும் நடனமாடவும் நியமிக்கப்பட்டிருந்தனர். நாட்டார் தெய்வக் கோவில்களிலும் பெண்களைப் பூசாரிகளாக அனுமதிப்பதில்லை. ஆனால் சாமியாட மட்டும் அனுமதிக்கப்படுகின்றனர்.பழங்குடி மக்கள் இயற்கைத் தீட்டாக கண்ட பெண்ணின் உடலியல் மாற்றங்களை பார்ப்பனீயமும் ஆணாதிக்கத்துக்கான முதற்படியாக ஆக்கிக்கொண்டது, கிறிஸ்தவத்திலும் இஸ்லாத்திலும் கூட பெ ண்கள் பூசாரிகளாக மௌல்விகளாக அனுமதிக்கப்படுவதில்லை.

ஆனால் கடவுள் வழிபாட்டின் தொடக்க காலத்தில் பெண்களே பூசாரிகளாக இருந்துள்ளானர். இந்த மறைந்த வரலாற்று நிகழ்வைக் காட்டும் விதிவிலக்குகள் உலகில் அங்கங்கே இன்றும் காணப்படுகின்றன.

தமிழ்நாட்டிலும் 'காமக்கோட்டம்' என அழைக்கப்பட்ட பெண் தெய்வக்கோயில்களில் பெண் பூசாரிகளே இருந்திருக்க வேண்டும். இன்றும் திருச்சிக்கு அருகே திருவானைக்கா அகிலேண்டஸ்வரி கோவிலில் ஒவ்வொரு நாளும் ஒருமுறை ஆண் பூசாரி புடவையைத் தன் மீது சுற்றிக் கொண்டு பெண் போல நின்று பூசனை செய்யும் வழக்கம் உள்ளது.

நெல்லை காந்திமதி, காஞ்சி காமாட்சி, மதுரை மீனாட்சி திருக்கருகாவூர் கர்ப்ப ரட்சாம்பிகை, கரூர் ஆநிரை நாயகி போன்ற கோவில்கள் ஒரு காலத்தில் காரைக் கோட்டங்களாகவே இருந்திருக்க வேண்டும். பின்னர் அரசுகள் நிலைபெற்ற பின்னர் இவை ஆண் துணையோடு சேர்க்கப்பட்டு இவற்றின் கோவில்கள் சாமி கோவில்களாக மாற்றப்பட்டன.

தமிழ்நாட்டின் பழைய தாய்த்தெய்வங்களில் ஒன்றான மதுரை மீனாட்சி இன்றும் திருமணத்துக்கு முன்பே அரசியாக முடி சூட்டி செங்கோல்தாங்கி அரசியல் கடமைகளை நிறைவேற்றுவதைப் பார்க்கிறோம். அவள் கணவன் அரசன் ஆகாமல் கோமகனாகவே (Duke) அமைகின்றான். இந்தத் திருவிழாவின் பொருளைச் சகிக்க முடியாத ஆணாதிக்கம் கொண்ட பார்ப்பனீயம் மீனாட்சி யிடமிருந்து அரசையும் செங்கோலையும் பறித்து சுந்தரேஸ்வரருக்கு பட்டாபிஷேகம் செய்வதாக ஒரு திருவிழாவை ஆவணி மாதத்தில் நடத்துகிறது. ஆனால் அந்த திருவிழாவை மீனாட்சி பட்டாபிஷேகத் திருவிழாவைப் போல மக்கள் பெரிதாக கருதுவதும் இல்லை. ஏற்றுக் கொள்வதுமில்லை.

இன்றும் தமிழ்நாட்டில் தாய்த்தெய்வ வழிபாட்டின் மிகப்பெரிய தொல் எச்சமாகக் காணப்படுவது மதுரை மீனாட்சியம்மனின் பட்டாபிஷேகத் திருவிழா ஆகும்.

## மஞ்சள் மகிமை

மஞ்சள் பூசிக் குளிப்பதும் மஞ்சள் கயிறு அணிவதும் பெண்ணுக்குரிய முக்கியமான விஷயங் களாக ஆகியுள்ளன. மஞ்சள் என்பது பெண்ணோடும் 'மங்களகரம்' என்பதோடும் இணைத்துப் பேசப் படுகிறது.

ஆனால் மஞ்சள் ஆரோக்கியம் தொடர்பான ஒரு பொருளாகவே தமிழர் வாழ்வில் முன்பு இருந்துள்ளது. கிருமி எதிர்ப்பு சக்தி மஞ்சளில் உள்ளதாக கூறப் படுகிறது.

'நோக்கி யசோதை நுணுக்கிய மஞ்சளால்' கண்ணனை நீராட்டுவது பற்றி பெரியாழ்வார் பாசுரம் பேசுகிறது.

பூசுமஞ்சளில் புகழ் பெற்றது 'விறலி மஞ்சள்' ஆகும். விறல் என்றால் முகம். விறலி என்றால் முகபாவங்கள் மாற்றி நடிக்கிற நடனமாடுகிற பெண்ணைக் குறிக்கும். அன்று கூத்தாடிய பெண்கள் அன்றைய விளக்கொளியில் நாட்டியமாடினர். அவர்களது முகம் துணிப்பாகத் தெரிய மஞ்சள் அரைத்து முகத்தில் பூசிக்கொண்டனர்.விறலியர் மட்டும் பூசிய மஞ்சளை காலப்போக்கில் குடும்பப் பெண்களும் பூசத் தொடங்கினர். விறலியரை மதியாத நம் சமூகம் விறலி மஞ்சளை மட்டும் கொண்டாடத் துவங்கியது. இன்றும் கொண்டாடி வருகிறது. விறலி மலை என்பது தான் இன்று விராலிமலை என்று ஆனது என்பது கூடுதல் செய்தியாகும்.



படிப்பகம்

www.padippakam.com



# பாஞ்சாலி

கிரேஸி

தமிழில் : உதயசங்கர்



ஓவியம் : தனசேகர்

முதலிரவில் நாழியளவு கொள்கிற ஒரு சொம்பில் பால் நிறைத்து மாமியார் மருமகளை அனுப்பி வைத்தார். மணப்பெண்ணின் முகத்தில் உண்டான திகைப்பைக் கண்டு குறுஞ்சிரிப்போடு அவர் சொன்னார்.

பல்குவினுடைய கட்டளை அது.

கிருஷ்ணா உள்ளே நுழையும்போது அவன் படுக்கையில் சாய்ந்து படுத்துக்கொண்டு சிகரெட் புகைத்துக் கொண்டிருந்தான். இதற்குள்ளே அவன் நிறைய சிகரெட்டுகளை சாம்பலாக்கியிருக்கிறானென்று அறைக்குள்ளே நிறைந்திருக்கிற புகைநாற்றமே காட்டிக் கொடுத்தது.

பால் சொம்பை மேஜையின் மேல் வைக்கிற சத்தம் கேட்டு அவன் திரும்பிப் பார்த்தான். அப்போது அவனுடைய முகம் ஒருவனுடைய முகமாயிருக்கவில்லை. நாலைந்து பேர் அவனுக்கு நெருங்கி, அக்கம்பக்கமாய் இருப்பதைக் கண்டு திகைத்துப்போன கிருஷ்ணாவின் இருதயத் துடிப்பு அதிகமாகியது.

பல்குணனுடைய சிரிப்பென்று சொல்ல முடியாத ஒரு சிரிப்போடு அவன் எழுந்துவந்து கிருஷ்ணாவைச் சேர்த்தணைத்தான். அவளுக்குக் கொஞ்சமும் பரிச்சயமில்லாத குரலில் அவன் சொன்னான்.

எனக்கு நினைவிருக்கிறது கிருஷ்ணா. நீ எப்படிப்பட்ட ரசிகையாய் இருந்தாய் என்று. எங்கள் ஐந்து பேரையும் பாண்டவரென்று அழைத்து நீ கொஞ்சமும் ஏற்றத் தாழ்வில்லாமல் ஒன்று போலக் காதலித்தாய்.

தன்னுடைய வாழ்வை விழுங்குவதற்காக பெரியதொரு விபத்து வாய்பிளந்து நிற்கிறதென்று அப்போது கிருஷ்ணாவுக்கு புரிந்தது. பக்கத்து



படிப்பகம்

www.padippakam.com

வீட்டில் வசிப்பதற்காக ஐந்து இளைஞர்கள் வந்து சேர்ந்த நிமிஷத்தை அவள் சபித்தாள். தொட்டால் தெறிக்கிற பதினைந்து வயசுக்காரி அன்று அவள். ஐந்து பேருக்கும் தன்னுடைய மனசில் இடமிருக்கிறது என்று தெரிந்து அவள் சந்தோஷப்பட்டாள். ஒரு கொத்தில் ஐந்து பூக்கள் மலர்வதைப்போல இயல்பாக இருந்தது அது. ஒவ்வொருத்தரின் கடிதங்களுக்கும் அவள் பதில் எழுதினாள். ஒவ்வொருவரும் சொன்ன இடங்களில் காத்திருந்தாள். அவர்களில் ஒருத்தர் கூட அவளைச் சந்தேகப்படவில்லையென்று தெரிந்து தன்னைத்தானே பாராட்டிக்கொண்டாள். ஆனால் இப்போது பல்குணன்-

அவளுடைய சிந்தனையைப் பின் தொடர்ந்த பல்குணன் ஒரு குறுக்குவழியினூடே அவளுக்கு முன்னே நின்றான்.

நான் வைராக்கியத்தோடு படித்தேன். போட்டிப்பரீட்சைகளில் ஆவேசத்தோடு பங்கெடுத்தேன். மிக நல்ல உத்தியோகத்தை தெரிந்தெடுத்த பின்பு உன்னுடைய அப்பாவின் முன்பு நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு நின்றேன். உன்னை அவர் எனக்குத் தரவும் செய்தார். ஆனாலும் நான் என்னுடைய நண்பர்களை மறக்க முடியாதே. இன்றிலிருந்து நான் உன்னை ஐந்தாக பங்கு வைக்கிறேன்.

பல்குணன் என்ன சொல்லிக்கொண்டு வருகிறான் என்று புரியாமல் கிருஷ்ணா திகைத்தாள். மீதி நாலு பேரையும் அவள் பின்பு ஒருபோதும் பார்த்ததில்லை. கல்யாணத்திற்கு அவர்கள் யாரும் வரவில்லை. திடீரென பெரியதொரு பயம் கிருஷ்ணாவைக் கவ்வியது.அவள் வெளியே இருட்டிற்குள் செவிமடுத்தாள். அவர்கள் வெளியே எங்கேயாவது தங்களது முறை வருவதற்காகக் காத்துப் பதுங்கியிருப்பார்களோ?

பல்குணன் உரக்கச் சிரித்தான். அந்தச் சிரிப்பின் வேகத்தைக் கண்டு கிருஷ்ணா நடுங்கினாள். பால் சொம்பை கையிலெடுத்த பல்குணன் சொன்னான். இதோ நம்முடைய தாம்பத்யம் ஆரம்பிக்கிறது. பாலைக் கொஞ்சம் குடித்துவிட்டு அவன் கிருஷ்ணாவிடம் கொடுத்தான்.

யுதிஷ்டிரனின் பிரியமுள்ள பத்தினியே, பாலைக்குடி. ஒரு மடக்கு மட்டும். மீதம் நாலு பேரும் காத்திருக்கிறார்கள் என்ற ஞாபகம் வேண்டும்.

இந்த நாடகம் எப்படி முடியுமென்று தெரியாமல் கவலைப்பட்ட கிருஷ்ணா ஒரு மடக்கு குடித்தாள். பீமனுக்கும் அர்ஜுனனுக்கும் நகுலனுக்கும் சகா தேவனுக்குமாக அவன் ஒவ்வொரு மடக்குப் பால் குடித்தான். அப்போதே கிருஷ்ணாவுக்கு அவர்களுடைய பிரியமுடைய பத்தினியாகித் தீர வேண்டியதாயிற்று.ஆனாலும் கிருஷ்ணா சமாதான மடைந்தாள். அவர்கள் யாரும் பக்கத்தில் எங்கேயும் இல்லையே.

பால் சொம்பு காலியானதும் நமுட்டுச் சிரிப்புடன் பல்குணன் தொடர்ந்தான்.

கிருஷ்ணாவைத் தேர்ந்தெடுத்தது பல்குணன்தான் என்றாலும் அவளோடு சயனித்தது யுதிஷ்டிரன் தானே.

அவன் கிருஷ்ணாவை கையைப் பிடித்து படுக்கைக்கு அழைத்தான்.

தெரியுமல்லவா. தர்மபுத்திரர் பெரிய கௌரவஸ்தன். அதுவும் குறிப்பாக பெண்கள் விஷயத்தில். அதனால் தேவி நீயே உடைகளைக் களைந்து விடு.

ஒருவேளை தான் பயப்படுகிற மாதிரி இது அத்தனை பயங்கரமான விளையாட்டில்லையென்று அப்போது கிருஷ்ணாவுக்குத் தோன்றியது. ஆனாலும் உடைகளைக் களைய கிருஷ்ணா தயங்கினாள். முதலிரவைப் பற்றிய கிருஷ்ணாவின் கற்பனை மற்ற பெண்களிடமிருந்தொன்றும் வித்தியாசமாக இல்லை. ரொம்ப நேரம் கழிந்த பின்பும் கணவன் பொறுமையோடு காத்திருப்பதைப் பார்த்த கிருஷ்ணா சுயமாகவே நிர்வாணமானாள்.

மெலிதான சிரிப்போடு அவன் தொடர்ந்தான். வேத உபநிஷத்துகளிலும், தர்ம சாஸ்திரங்களிலும், யுதிஷ்டிரன் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் மூழ்கித் திளைப்பான். ஆனால் ஒரு பெண் அவனை எளிதில் திருப்திப்படுத்துவாள்.

கிருஷ்ணாவின் உடலை ஒரு தடவை மென்மையாகத் தழுவி அவன் அவளுடன் கலந்தான். சீக்கிரமே சமனம் தேடவும் செய்தான்.

மறுபக்கமாய் திரும்பிப்படுத்துறங்குகிற கணவனை அதிருப்தியோடு பார்க்கிறபோதுதான் தன்னுடைய இதயம் ஐந்தாக உடைந்து விட்டதென்று கிருஷ்ணாவுக்குப் புரிந்தது. அவன் மூச்சை ஆழ்ந்து இழுத்து வெளியே விடும் வேகத்தை அனுசரித்து பீமன் வடிவில் பரிணமிப்பதை கிருஷ்ணா பயத்தோடு பார்த்தாள்.

மறுநாள் ராத்திரியில் பீமன் இறங்கிய கல்யாண சௌகண்டிகைப் பொய்கையைப் போல கிருஷ்ணா கலங்கிச் சிதறியிருந்தாள். சிதைந்த உதடுகளும், வாடிய தாமரைத் தண்டு போன்ற கழுத்தும், உடைந்த முலைகளும், ஓரஞ்சிதைந்த நாபிச்சுழியும், சதைந்த இடையும் மூழ்கடித்தது. எப்போதோ கண்களைத் திறந்தபோது கணவனின் உரத்த சிரிப்பு அவளைக் கரையில் சேர்த்தது.

பேஷ்!. ஐந்து பேரைத் தாங்குவதற்கு உன்னுடைய மனசில் மட்டுமல்ல, கிருஷ்ணா உடம்பிலும் வலுவிருக்கிறது.

அப்போதுதான். கற்பனை செய்ய முடியாததிற்கும், அப்பால் விஷயம் போய்க்



படிப்பகம்

www.padippakam.com

கொண்டிருக்கிறதென்று கிருஷ்ணாவுக்குப் புரிந்தது. அதோடு உடைந்து சிதறிய இதயம், அவளே அதிர்ச்சியடையும்படி ஒன்றாகச் சேர்ந்து சிலைபோல உறைந்து போனது.

வாடி வதங்கிய மூன்றாவது ராத்திரியில் அர்ஜுனன் கடந்து வந்தான். அவனுடைய காதல் பொங்கும் விழிகள் கிருஷ்ணாவை ரொம்ப நேரத்திற்கு உற்று நோக்கின. உடைகள் நோகாத வண்ணம் ஆடைகளைக் களைந்தான். ஒரு வீணையைப் போல அர்ஜுனன் அவளை மடியில் வைத்துக்கொண்டான். உன்னைப் பார்த்தவுடன் எப்படி நான் மோகித்தேன் தெரியுமா கிருஷ்ணா என்று இனிமையாகப் பெருமூச்சு விட்டான்.அவனுடைய விரல்கள் மன்மத ராகங்களைப் பாடின. ஆனாலும் கிருஷ்ணா உருகவில்லை.

நான்காவது நாள் விருந்துக்காக தன்னுடைய வீட்டிற்குப் போனால் திரும்பி வரக்கூடாதென்று கிருஷ்ணா உறுதியாக இருந்தாள். ஆனால் கிருஷ்ணாவின் நம்பிக்கையை அவன் மாய்த்துக் களைந்து சாய்த்து விட்டான்.

நகுலசகாதேவன்களின் முறை முடியாமல் நாம் எங்கேயும் போவதற்கில்லை.

நகுலனின் ராத்திரியில் அவன் சொன்னான். ஐந்துபேரில் அழகன் நகுலன். ஆனால் நகுலன் அவனுடைய உடலைத்தான் காதலிக்கிறான். பெண் உடலின் மீது அவனுக்குக் கொஞ்சமும் ஆசையில்லை.

அவன் அவளுடைய அழகிய உடலின் வனப்பைப் புறக்கணித்து, ஒன்றும் செய்யவில்லை. பின்பு குளியலறையில் நுழைந்து வாசனைசோப்பு தேய்த்துக் குளித்து முன்பிருந்ததை விட இன்னும் அழகனாய் உறங்குவதற்குப் போனான்.

ஐந்தாவது ராத்திரியில் அவன் கருணையுள்ளவனானான்.

கிருஷ்ணா சகாதேவன் இந்த விஷயத்தில் மிகவும் வெட்கப்படுவான். உன்னை அவன் ஒரு தடவை கூடத் தொடப்போவதில்லை. ஆனால் நீ அவனுக்கும் மனைவியல்லவா.அதனால் அவனுடைய ஆண்மையை உணரவைக்கவேண்டியது உன்னுடைய பொறுப்பு.

கிருஷ்ணாவின் விரல்கள், சுயநிந்தனையோடு சஞ்சரிக்க ஆரம்பித்தன. வெட்கம் விடுத்து சகாதேவன் சல்லாபித்தான். அவனுடைய வீரியத்தைத் தாங்க முடியாத கிருஷ்ணா பற்களை இறுகக் கடித்தாள். இந்த விளையாட்டு முறை வைத்து என்றென்றும் தொடருமென்று அவளுக்கு உறுதியாகத் தெரிந்தது.

லீவு முடிந்து ஆபிஸிற்கு போவதற்குக் கிளம்பிய கணவனின் பின்கழுத்தில் கிருஷ்ணாவின் குரோதம் நிறைந்த கண்கள் மின்னும் கத்திகளாக ஆழப்பதிந்தன. கழுத்தைத் தடவிக்கொண்டே தயங்கிய அவன் வெடுக்கெனத் திரும்பினான்.

'கிருஷ்ணா தயாராக இரு. சாயங்காலம் நாம் உன் வீட்டிற்குப் போகலாம்.'

காரை இயக்கி, அவன் வீட்டிலிருந்து போனான். அவள் எதுவும் செய்யவில்லை. பின்பு குளித்துத் தயாரானாள்.

சாயங்காலம் பல்குணன், திரும்பி வந்தபோது படுக்கையறையின் கதவு அடைத்திருந்தது. அவன் கதவைத்தட்டி கூப்பிட்டபோது, கதவுகளை முழுவதுமாகத் திறந்தாள். கிருஷ்ணாவின் கலைந்த தலைமுடியும், வியர்த்து வடிந்த முகமும் தான் அவனை எதிர்கொண்டது. நெற்றியிலிருந்த பெரிய குங்குமப்பொட்டு கலைந்து ஒரு தீப்பிழம்பைப் போல ஜொலித்தது. விபரீதமாய் ஏதோ நடந்திருக்குமோ, உள்ளே எட்டிப்பார்த்தான். வெளியே வீசிய சாயங்கால மஞ்சளொளியில் அவனுடைய கண்கள் மங்கிப் போயின. கலவரத்தோடு அவன் கேட்டான்.

"கிருஷ்ணா உள்ளே யாரு?"

கிருஷ்ணா உரக்கச் சிரித்தாள்.

பாஞ்சாலிக்கு ஐந்து கணவன்மார்கள் இருந்தனர் என்பது உண்மைதான். ஆனால் ஆபத்துக் காலத்தில் அவர்கள் யாரும் அவளுடைய துணைக்கு வரவில்லை. அதற்கு வேறு ஓராள் வேண்டியதிருந்தது. அது யாரென்று தெரியவில்லையென்றால் புராணத்தை முழுவதும் ஒரு தடவை பரிசோதித்துப் பாருங்கள்.

●



நன்றி - மாத்ருபூமி ஓணச்சிறப்புமலர் 1998



படிப்பகம்

www.padippakam.com

# சீதை தீக்குளிச்ச கதை

கழனியூரான்

சீதை தீக்குளித்தது குறித்து வாத, பிரதிவாதங்கள் இன்றும் பல்வேறு படிவங்களில் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

இராமன் சீதையை தீக்குளிக்க வைத்தது சரியா..? தவறா...? என்ற கருத்துக்களின் அடிப்படையில் தமிழில் எத்தனையோ, கதைகளும் கவிதைகளும் தோன்றிவிட்டன.

அவைகள் படித்தவர்கள் அக்கினிப்பிரவேசத்தை அடிப்படையாகக் கொண்டு படைத்த இலக்கியங்கள் சீதையின் அக்கினிப் பிரவேசத்தை மையமாகக் கொண்ட ஒரு அபூர்வமான புராண மரபுக் கதை, எனக்கு கிடைத்தது.

நெல்லை மாவட்டம், வீராணத்தைச் சேர்ந்த பார்வதி தேவி என்ற பெண் கதைசொல்லி கூறிய ஒரு புராண மரபுக்கதையை வாசகர்கள் முன் வைக்கின்றேன்.

ராமன், ராவணனோட சண்டை போட்டு, சீதையை மீட்டுக்கிட்டு வந்துட்டாரு. ராமனுக்கு பட்டாபிசேகமும் நடந்துட்டு. எல்லோரும் சந்தோசமா வாழ்ந்துகிட்டு இருக்காங்க.

ஒரு நாள் சீதையும், அவளோட அத்தைமார்களும் ஒரு இடத்தில் இருந்து பேசிக்கிட்டிருந்தாங்க.

பேச்சு பலபடியா சுத்தி வந்தது. பேச்சுவாக்கில் கைகேயி, சீதையைப் பார்த்துக் கேட்டா, மருமகளே, ராவணனை நான் நேரில் பார்த்ததே இல்லை, அவனைப்பற்றி என்னவெல்லமோ கதை கதையா சொல்லுதாங்க. அவன் அப்படி இருப்பான்... இப்படி இருப்பான்னு சொல்லுதாங்க. இங்க இருக்கிற பொம்பளைகளில் அவனை நேரில் பார்த்தவள் நீ ஒருத்திதான், அதனால அவன் எப்படி இருப்பான்னு சொல்லேன் என்று கேட்டாள்.

சீதை தன் அத்தைமார்களிடம் ராவணனின் கை அப்படி இருக்கும் கால் இப்படி இருக்கும், தலை அப்படி இருக்கும் மூஞ்சி இப்படி இருக்கும் என்று விளக்கமாகச் சொன்னாள்.

கைகேயிக்கு அதில் எல்லாம் திருப்தி வரலை. நல்ல விளக்கமா விபரமா ராவண்ணன் எப்படி இருப்பான்னு சொல்லு என்றாள் கைகேயி சீதையிடம்.

சீதைக்கு இதற்கு மேல் விளக்கம் சொல்ல முடியவில்லை. தன் அத்தைமார்களின் ஆவலைப் பூர்த்தி செய்ய வேண்டி ஒரு திரைச் சிலையை எடுத்து அதில் ராவணனோட உருவத்தை அப்படியே தத்ரூபமா வரைந்து காட்டினாள்.

அதைப்பார்த்த கைகேயி அட ராவணன் இப்படித்தான் இருப்பானா..? என்று கூறி திருப்தி பட்டாள், அந்த ஓவியம் வரைந்த திரைச்சிலையையும் எடுத்துக்கொண்டாள்.

அன்னக்கி சாயங்காலம் ராமனைப் பாத்த கைகேயி சீதை வரைந்த ராவணனின் ஓவியத்தை ராமனிடம் காட்டி இந்தப்படம் உன் மனைவி சீதை வரைந்தது. நல்லா தத்ரூபமா வரைஞ்சிருக்காளான்னு பார்த்துச் சொல்லு என்றாள்.

சீதை வரைந்த ராவணனோட அந்தப் படத்தைப் பார்த்திட்டு ராமன் அப்படியே அசந்துட்டான். அட அச்சி அசல் ராவணன் மாதிரியே அப்படியே வரைஞ்சிருக்காளே என்று நினைத்தவனின் நெஞ்சில் ஒரு தீப்பொறியும் விழுந்தது. ராவணனின் உருவத்தை இத்தனை நாட்களுக்குப் பிறகும் இந்த அளவுக்குத் தத்ரூபமா வரையணும் என்றால் எந்த அளவுக்கு சீதையின் மனதில் அவன் உருவம் பதிந்து இருக்க வேண்டும் என்று வேறு விதமாக எண்ணிப்பார்த்தான்.

அதன்பிறகுதான் சீதையை தீக்குளிக்கச் சொன்னான் என்று கதையைச் சொல்லிமுடித்தார். கதை சொல்லி.

இக்கதையில் அக்கினிப் பிரவேசத்தின் பின்புலம் வேறு மாதிரியாக அலசப்பட்டுள்ளது. கவனிக்கத்தக்கதாகும்.

சமீபத்தில் புதுச்சேரியில் கி.ராஜநாராயணன் அவர்களைச் சந்தித்தபோது வித்தியாசமான இக்கதையைக் கூறினேன்.

கதையைக் கேட்டு சிரித்த கி.ரா. இக்கதையின்மாற்று வடிவத்தை என் பாட்டி அடிக்கடி சொல்வார்கள் என்று சொல்லிவிட்டு இக்கதையின் மாற்று வடிவத்தை கூறினார்.

சீதை இலங்கையில் இருந்து திரும்பிய பின் ஒரு நாள் எண்ணைக்குடத்தில் தன் முகத்தைப் பார்த்தாள் அதில் இராவணன் முகம் தெரிந்ததாம்.

உடனே சீதை, தான் கண்ட காட்சியைத் தன் கணவனிடம் கூற, அதன்பின்தான், இராமன் அக்கினிப் பிரவேசத்திற்கு ஆணையிட்டாராம், இதுதான் அக்கதையின் மாற்று வடிவம் என்றார்.



ஓவியம் : தனசேகர்




படிப்பகம்

www.padippakam.com

# ஒரு இந்திய மரணம்

பா.செயப்பிரகாசம்



ஓவியம்: தனசேகர்

ஓரிரு ஆண்டுகளுக்குள் முன்னும் பின்னுமாய் பல கொடிய நிகழ்வுகள் அரங்கேறி விட்டன. ராகிங் கொடுமைக்கு தப்ப முடியாமல் போன அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர் நாவரசு, பருந்துகளின் கொடூர நகங்களுக்குப் பிடிபடாமல் தப்பியோடிய கோழிக்குஞ்சு போல் மாணவி சரிகா, காதல் கணவன் கைப்பிடித்தும் கருக்கப்பட்ட மலர் பாண்டிச்சேரி பார்வதி ஷா.

வாழ்க்கை - இவர்களுக்கு முடிந்து விட்டது - மீள முடியாதவாறு இவர்களின் முடிவை மரணம் என்று சொல்வதை விட வன்கொலை என்று சொல்வதே பொருத்தம்.

பார்வதி ஷாவின் கொலை பாண்டிச்சேரியை மட்டுமல்ல மாணவர்கள் நாவரசு, சரிகா கொலை போலவே தமிழ்கூறும் நல்லுலகையே உலுக்கி எடுத்திருக்கிறது. பார்வதி ஷா கொலை அம்பலப்படுத்துதலில், ஊடகங்கள், மக்கள் உரிமை அமைப்புக்கள், சமூக இயக்கங்கள் முழு ஈடுபாட்டுடன் பணியாற்றியிருக்கின்றன.

1.பியுசி.எல் உறுப்பினர்கள் மாதர் அமைப்புகள் மற்றும் சமூக அக்கறை கொண்டவர்கள் சாலை மறியலைத் தொடங்குகிறார்கள். பொதுமக்களின் விழிப்புணர்வும் சமூக அக்கறையும் ஏதோ ஒரு புள்ளியில் சமூக நடவடிக்கையாக மாறக் காத்திருக்கின்றன. அது தொடங்கி வைக்கப்படுகிறது.

2.குற்றவாளியான கமல்ஷா பொய்க் காரணங்கள் காட்டி சேர்ந்துள்ள அரசினர் பொது மருத்துவமனை முன் திரளாக மக்கள் ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். குற்றவாளியிடம் வாக்குமூலம் பெறுவதற்காக காவல்துறையிடம் ஒப்படை என்று முழக்கம் செய்கிறார்கள்.

3. ஆர்ப்பாட்டம் செய்யும் பொதுமக்களிடையே வித்தியாசமான ஒரு ஆள் தென்பட விசாரிப்பில் அவர் சென்னை வழக்கறிஞர். குற்றவாளியான கமல் ஷாவை பிணையில் (ஜாமீன்) எடுக்க வந்திருக்கிறார் என்று தெரிந்ததும் அவரைச் சுற்றி வளைத்து ஓடவைக்கிறார்கள் ஒரு கட்டத்தில் அவர் மீது தாக்குதல் நடத்துகிற அளவு பொதுமக்கள் கோபம் விரிவடைகிறது.



படிப்பகம்

www.padippakam.com

4. கடையடைப்பு, வேலை நிறுத்தத்திற்கு வீதி வீதியாகப் போய் சொல்லப்படுகிறது. எற்கனவே கொலை பற்றியும் ஆர்ப்பாட்டம் பற்றியும் செய்திகள் பரவியிருந்த பின்னணியில் கொலையை மூடி மறைக்கும் முயற்சியில் ஈடுபட்ட அரவிந்தர் ஆசிரமம் மீது சமூகக் கோபம் கனன்று கொண்டிருந்த சூழலில் கடையடைப்பு, வேலை நிறுத்தம் வெற்றிகரமாய் எளிதில் நிறைவேறியது.

5. பொது மக்களிடம் கொந்தளித்து நிற்கும் தன்னெழுச்சியை பயன்படுத்துவது இன்றைய காலகட்டத்தில் முக்கியமான போராட்டமுறை. இது போன்ற சமூகக் கொடுமைகளால் மக்கள் மனதில் எதிர்க் கருத்து தொடர்ந்து சேமித்து வைக்கப்பட்டுக் கொண்டே வருகிறது. குறிப்பிட்ட ஒரு நிகழ்வு தூண்டுகோலாக அமைய மக்கள் சுயமாகச் செயல்பட ஆரம்பிக்கிறார்கள். தட்டிவிட்டதும் படற்கிற மின்சாரம் போல.

பெண் மீதான வன்முறை அவள் பிறக்கும் போதிலிருந்தே தொடங்குகிறது. கருவில் இருப்பது ஆணா, பெண்ணா என்று பார்த்து அழிப்பதில் ஆரம்பமாகிறது. உண்டி சுருக்குதல் பெண்டிர்க்கு அழகு, உணவு, ஆரோக்கிய வாழ்வுக்கான மருத்துவ வசதிகளில் அலட்சியப்படுத்தப்படுகிறாள். கல்வி, விளையாட்டு, தனித்திறமைகளை வெளிப்படுத்தும் முயற்சிகளில் ஓரங்கட்டப்படுகிறாள். முயற்சி திருவினையாக்கும். ஆனால் பெண்ணின் முயற்சி என்ன அடக்க, ஒடுக்கமா இல்லாம என்று மட்டந் தட்டப்படுகிறது. பிறகு காத்திருக்கிறது பூப்பெய்தல். இதுவரை அவளுக்கு அளிக்கப்பட்ட கொஞ்ச நஞ்சம் சுதந்திரம்கூட அன்றிலிருந்து கத்தரிக்கப்படுகின்றது. குடும்பத்திற்கு உள்ளேயும், வெளியேயும் இருந்து பாயும் பாலியல் தாக்குதல்களில் இருந்து தன்னுடைய உடம்பைச் சதாகாலமும் காக்க வேண்டியவளாக ஆகி - அவளுடைய முழுநேர வேலையும் சிந்தனையும், உடம்பு காப்பதிலே கழிகிறது.

பிறந்தது முதல் தலை கீழே சாய்கிற வரை, முழு விகசிப்புக்கும், ஆளாகாமல், வெம்பிப் போகிற அளவு பெண் மீது பாய்ச்சப்படுகிற கருத்தியல் வன்முறைதான் பிற வன்முறைகளுக்கு அடிப்படை. அவள் சம மதிப்புள்ள, மதிக்கப்பட வேண்டிய உயிர் அல்ல. எப்போதும் கீழானவள். காமத்துய்ப்புக்கான பொருள் என்ற கருத்தயல் நிலைப்பாடுதான் பாலியல் வன்முறை. சட்ட வன்முறை, உளவியல் வன்முறை போன்ற பிற வன்முறைகளுக்கு இட்டுச் செல்கின்றன.

பெண் இந்த சமுதாயத்தின் பிரதிநிதி, ஆண்போலவே அவளும். ஆனால் கடந்த காலத்தில் நடமாட விடப்பட்ட கருத்துக்கள் இதை அங்கீகரித்ததில்லை. எழுத்து வடிவ இலக்கியங்கள் மட்டுமல்ல, எண்ணற்ற காலமாக, எண்ணமுடியாத மக்களால் வாய்மொழியாக பரிமாறப்பட்டு, கவனமாகக் கைமாற்றப்பட்ட சொலவடை, விடுகதை, பாடல்கள் கதைகள் எனப் பல வாய்மொழி இலக்கியமும் இந்தக் கருத்தையே முன்வைத்து வந்திருக்கின்றன.

பெண்டிர்க்கு அழகு எதிர்பேசாதிருத்தல்
பெண்டிர்க்கு அழகு உண்டி சுருக்குதல்,
பெண்டாட்டி ஆசை திண்டாட்டத்தில் விடும்
பொம்பிளை சிரிச்சாப் போச்சி,
புகையிலை விரிச்சாப் போச்சி

இந்தக் கருத்து, ஆன் வழிச் சமுதாயம் மேலோங்கிய போது, குடும்பம், சமூகம் போன்ற அமைப்புகளில் மட்டுமல்ல, காதல், கோபம், ஈகை,சிரிப்பு என்ற உணர்ச்சிகளை வெளிப்படுத்து வதிலும் அவன் கை மேலோங்கி நிற்பதைக் காட்டுகிறது. சிரிப்பும் அவனுக்கே உரியது. சிரிக்கவோ, கோபம் கொள்ளவோ, உணர்ச்சிகளை வெளிக் காட்டவோ, பெண்ணாகிய ஈனப் பிறவிக்கு எந்த உரிமையும் இல்லை.

இப்படி, எழுதப்படாத, நடைமுறையிலிருக்கும் வாய்ப்பூட்டுச் சட்டம்தான். பெண்டிர்க்கு அழகு எதிர் பேசாதிருத்தல்

இது ஆண்களின் கண்ணோட்டம் என்பதில் ஆச்சரியம் இல்லை. ஆனால் பெண்ணே இந்தக் கருத்தை தனக்குள் இறக்கியிருப்பவளாய், உச்சரிப்பவளாய் இருப்பதுதான் அவலம். பெண்ணடிமைக் கருத்து சமூகத்தின் பொதுக் கருத்தியலாக மாறியிருக்கிறது. இது பெண்ணுக்குள்ளும் இறங்கி, கர்ப்பப்பை முதல் சிரசு வரை இயங்குகிறது.

தான் பெண் என்ற கருத்தைத் தவிர சுயமாக வேறெந்தக் கருத்தும் பெண்ணுக்கும் உருவாகக்கூடாது. இதில் ஆண்களும், ஆண்வழிக் கருத்துக்களால் கட்டுமானம் செய்யப்பட்ட குடும்பமும், சமூகமும் தொடர்ந்து மிக எச்சரிக்கையாக செயல்படுகிறார்கள். அவள் தனக்கென கருத்தெதுவும் இல்லாத ஒரு ஜடம். பிறரின் கருத்துக் கிணற்றுக்குள்ளே உள் அடங்கி. அலைகளில் மிதக்கிற ஆமை. அப்படியே அவளுக்கென்று கருத்து உருவாகியிருந்த போதும், வெளியே ஒரு பேச்சுக்குக் கூட வைக்கக் கூடாது.

பார்வதியின் கணவனுடைய வீட்டின் சுற்றுச்சுவர் உயரம் 15 அடி, வீட்டிற்குள் நடக்கிற எதையும் இந்த உயரம் வெளியே தெரியாமல் அடித்துவிடும். என்னதான் காதல் கணவன் கைப்பிடித்தே, அவன் காரியம் யாவினும் கைகொடுத்தே வந்தாலும் ஒரு பெண் தனக்கிழைக்கப்படும் கொடுமைகளை தானாக வெளியே சொன்னால் தவிர வீதிக்குத் தெரியாது. சொந்த அண்ணனுடைய குடும்பத்திற்கே தெரியாமல் பார்வதி தனது வேதனைகளை மறைந்திருக்கிறாா்.

இழைக்கப்படுகிற ஒவ்வொரு கொடூரத்தையும் அக்கம், பக்கத்திற்கு தெரியாமல் பெண் தனக்குள்ளேயே அடைத்து வைத்துக் கொள்வது பெண்மையின் இலக்கமாக இதுவரை கருதப்பட்டு வந்தது. கடந்த கால, பொற்கால இலக்கியங்கள் இந்த



படிப்பகம்

www.padippakam.com

போதனையை அவளுக்கு அணிகலன்களாகச் சூட்டி அலங்கரித்துள்ளன. சுவாசக்காற்று தவிர வேறெதுவும் அவளுக்கு உள்புகவோ, வெளிவரவோ இயலாதபடி வழிகள் அடைக்கப்பட்டுள்ளன.

சுற்றும் முற்றும் உள்ள அயலில் இருக்கிறவர்களிடையே கூட சொல்லாமல் இருக்கிற அடக்க குணம் கொண்ட எந்தப் பெண்ணும் காவல்நிலையமோ, (அது மகளிர் காவல் நிலையமாக இருந்தாலும்) நீதிமன்றமோ செல்ல மாட்டாள். அக்கம் பக்கம் இருக்கிறவர்கள் கூட அறியவிடுவதில்லை என்ற இந்த அடக்க குணம் பெண்ணைப் பலவீனமாக ஆக்குகிற முதல் எதிரி. அதே நேரத்தில் அடக்கம் என்ற மறைப்புக்குணம் ஒரு ஆணுக்குத் தேவையில்லை.

எந்த ஆண், தன் மனைவியைப் பற்றி, பொதுவாக பெண்கள் பற்றி தன் உறவினரிடத்தில், நண்பர்களிடத்தில், பணியிடங்களில் கருத்தை வெளியில் இறக்கி வைக்காமல் இருக்கிறான்? பெண்கள் பற்றி தனது பார்வையை இயல்பாக கருத்துப் பரப்புதல் செய்கிறான். பெண் தனக்குக் கட்டுப்பட்டவள் என்ற கருத்தின் காரணமாக, அவள் பற்றிய எல்லாக் கருத்துக்களையும் பேசுவதற்கு தனக்கு முழு சுதந்திரமும் உண்டு என்று நினைக்கிறான்.

ஆண்களின் இந்த சுதந்திர மனோபாவம்தான், பார்வதியின் கொலை மறைப்பிலும் செயல்பட்டிருக்கிறது. பெண் மீது வன்முறையைப் பிரயோகிக்கிற சுதந்திரம் தங்களுக்கு உண்டு என்று கருதுகிற மாதிரியே வன்முறையை மறைப்பதற்கும் முழுச் சுதந்திரம் உண்டு என்று அவளைக் கற்பழித்த ஆண், கட்டிய ஆண், அரவிந்தர் ஆசிரமத்திலிருந்து வந்த ஆண்கள் கருதினார்கள். இந்த அடிப்படை தான் பார்வதிஷா.உயிருக்குக் கெஞ்சுகிற கடைசிக் கட்டத்திலும், வீடெங்கும் அவள் சிந்திய ரத்தவெள்ளத்தை துடைத்து, உடுத்தியிருந்த உடைகளை மாற்றி கொலை மறைப்புச் செய்வதிலும் தொடர்ந் திருக்கிறது.

அரவிந்தர் ஆசிரமச் சட்டதிட்டங்களில் ஒரு விதி இருக்கிறது. ஆசிரம அங்கத்தினராக உள்ளவரின் குடும்பத்தில் எழுகிற பிரச்சனைகள் முதலில் ஆசிரமத்துக்குத் தெரிவித்து, வழிகாட்டல் பெறப்பட வேண்டும். காவல் நிலையத்திற்கோ, நீதிமன்றத் திற்கோ, வெளியிலோ கொண்டு செல்லப்படக் கூடாது என்பது விதி. இந்த அடிப்படையில், அவள் உயிர் போகிற கட்டத்தில் ஆசிரமத்திற்கு தெரிவிக்கப் பட்டபோது இரவு 12 மணி. ஆசிரம பிரதிநிதிகள் ஆசிரமம் என்ற கம்பீரமான போர்வையில் செயல்பட்டி ருக்கிறார்கள். சுவர் ஏறிக் குதித்து அதுவும் 15அடி உயர சுவர் ஏறிக் குதித்து, களவாடிச் செல்ல வந்த திருடனால் பார்வதி தாக்கப்பட்டாள் என்ற கட்டுக்கதை ஆசிரமத்தினால் தரப்பட்டது என்ற செய்தியும் இருக்கிறது

சித்திரவதைகள் தற்செயலானவை அல்ல. தற்செயலாய் நேர்கிறவை சித்திரவதைகளும் அல்ல. பலவீனமான சக்திகள் மேல் சிறுகச் சிறுகத் திட்டமிட்டு நிகழ்த்தப்படுகின்றவைதான் சித்திர வதைகள். கணவன், மாமனார், மாமியார், நாத்தனார், அண்ணன், தம்பி போன்ற குடும்ப உறுப்பினர்களால் குடும்ப அமைப்புகுள்ளும், ஆட்சியாளர்கள், அதிகாரிகள், அரசியல்வாதிகள், ரௌடிகள் போன்றோர்களால் சமூக அமைப்புக்குள்ளும் வன்முறை பிரயோகிக்கப்படுகிறது.

இன்றைக்கு அரசியல் இயக்கங்களின் செயல்பாடுகள் இத்தகைய சமூக கலாச்சாரம் பிரச்சனைகளின் தளத்தில் இல்லை. அவர்கள் வேறொரு சுகமான தளம் நோக்கி தங்கள் அரசியல் விசைப் படகுகளைச் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். அணுமின் நிலைய எதிர்ப்பு. சாதிக் கொடுமைகள் எதிர்ப்பு. கல்லூரிகளில் ராகிங் கொடுமை, பெண்கள் மீது நடத்தப்படும் பாலியல் பலாத்காரங்கள், ஆங்கில ஆதிக்கம் என்று தகதகவென்று எரியும் எந்தப் பிரச்சினையும் அரசியல் கட்சிகளின் நிகழ்ச்சிநிரலில் வரவில்லை. அவர்களுடைய செயல்பாடுகள் அரசியல் அதிகாரத்தை வென்றெடுப்பது தக்க வைப்பது என்ற பதவிப்போட்டிகளின் திசை நோக்கி ஒதுக்கம் கொண்டுவிட்டன. சமுதாயத்தை எப்போதும் விழிப்போடு கண்காணித்து பாதுகாக்கிற ஆற்றலை, ஆளுமையை அரசியல் மையத்தை அவை இழந்து விட்டன. அப்படியே எப்போதாவது பங்கேற்றாலும் அவை வெறும் பாவனைகள் மட்டுமே.

ஆகவே அரசியல் இயக்கங்கள் கைகழுவி விட்ட எரியும் பிரச்சனைகளின் கங்கு அணையாமல் காக்கும் பொறுப்பு, இப்போது மனித உரிமை அமைப்பு, பெண்ணுரிமை இயக்கங்கள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பு, தாய்மொழிப் பாதுகாப்பு அமைப்புகள், கலை இலக்கிய கலாச்சார அமைப்புகள் போன்ற சமூக இயக்கங்களின் தலைமீது விழுந்திருக்கிறது.

எனவே பொறுப்பான இந்த இயக்கங்கள் முன், பெண்ணை விடுதலை செய்யும் சில கடமைகள் முன்னிற்கின்றன.

பாண்டிச்சேரி பார்வதியும், வடஇந்தியக் குடும்பத்தைச் சார்ந்த ரவி ஷாவும் காதல்மணம் செய்து கொண்டவர்கள். காதல்மணம் ஒன்றே பிரச்சனைகளின் வெக்கை வீசாத, அமைதி தவழும் பூஞ்சோலையில் கொண்டு நிறுத்தி விடுவதில்லை. காதல் மணம், பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான ஒரு நுழைவாயில் மட்டுமே. குடும்பத்திற்குள்ளோ, வெளிச் சமூகத்திலோ புறப்படுகிற நெருக்கடிகளை முன்னுணர்ந்து எதிர்கொள்ள வேண்டும். பார்வதியின் இந்த மரணம் இது போன்ற படிப்பினைகளையே உணர்த்துகிறது. ஒரு பெண் உயிரின் பலியிலிருந்து சில படிப்பினைகளைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதுதான் நம் காலத்தின் அவலம்.

முதலாவதாக பெண் தனக்குரிய குணங்களாக குடும்பமும், சமூகமும், வடிவமைத்திருக்கும் பொதுக்குணாம்சங்களை உடைக்க முன்வர வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

அச்சமும், நாணமும் கொண்ட அசிங்கமான சித்திரத்தை அழிப்பது அவளுக்கு முன்னுள்ள கடமை, தனக்குள் பூட்டிய சன்னல், கதவுகளை, முதலில் பெண் திறந்துவிட வேண்டும். உன்னுடன் பேச என்கிறது ஒரு கவிதை. பூட்டிய இரும்புக்கூட்டை திறக்கும் வல்லமையுடைய கைகள் கொண்ட அவள் உள்ளிலிருந்து இரும்புக் கதவுகளைத் தள்ளினால், வெளியே இழுத்துத் திறப்பதற்கு ஆயிரம் கைகள் காத்திருக்கின்றன.

போராடுகிற பெண்களில் சிலர் அலைக்கழிப்புக்கு ஆளாகலாம். தன் சொந்த வாழ்க்கையை இழக்க வேண்டியிருக்கலாம். ஆனால் வாழ்க்கையே போராட்டமாய்ப் போச்சு என்று நொந்து, வெந்து அழிவதைவிட உறுதியாகப் போராடுவது மேல் அல்லவா?

இரண்டாவது

பாண்டிச்சேரியில் பொதுமக்களின் கோபமும், ஊடகங்கள், சமூக இயக்கங்களின் கடமையும் இணை நிகழ்வுகளாகவே உச்சத்திற்கு அணிவகுத்துச் சென்றுள்ளன. கணவனோ, காதலனோ வங்கொடுமைக்குத் துணை போகிற தனிநபரோ, நிறுவனமோ, யாராக இருந்தாலும் தப்ப விடாமல் சமூகத்தின் தண்டிப்புக்கு, பழிப்புக்கு அவர்கள் இலக்காக வேண்டும் என்பதில் ஒருமைப்பட்டு செயல்பட்டுள்ளன. இந்த ஒன்றிப்பு, இணைநிகழ்வு எதிர்வரும் எப்பிரச்சினையிலும் விழிப்போடு தொடர வேண்டியுள்ளது.

மூன்றாவதாக

மாணவர் நாவரசு கொலை காரணமாக ராகிங் கொடுமைகளைத் தடுக்கும் சட்டம் கொண்டுவரப்பட்டதை போல்

சரிகா மரணத்தை முன்வைத்து பெண்களை இழிவுபடுத்தும் தடைச் சட்டம் பிறந்ததுபோல்-

கற்பழிப்பு, கொலை என்ற இரண்டு திட்டவட்டமான வடிவங்களில் அல்லாது இடைப்பட்ட நிலைகளில் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைத் தடுக்க தனியான சட்டம் உருவாக்கப்பட வேண்டும். ஒரு மனைவி இருக்கிறபோது, இன்னொரு பெண்ணுடன் குடும்பம் நடத்துகிற சின்ன வீடு கொடுமை, சீண்டலும் அவமதிப்புமாக உளவியல் வதைகள், அடித்தல், உதைத்தல் போன்ற உடலியல்வதைகள் இந்த வகையான சித்திரவதைகளைத் தடுத்து நிறுத்துவதற்கு சட்டப்பிரிவுகளில் வழி இல்லை. தெள்ளத் தெளிவான குற்றங்கள் தவிர, வெளித் தெரியாமலே குடும்பங்களுக்குள்ளே பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைத் தடுக்க தனி சட்டப்பாதுகாப்பு எழுப்பியாக வேண்டும்.


04344 40123
41123
42123
43123
43244

SHRI GOWRI SHANGAR HOTELS
BOARDING & LODGING
1 & 1-B, Old Bangalore Road, HOSUR - 635 109.

LOCATION :
Behind the Bus Stand
ACCOMADATION & AMENTITIES
■ All Rooms Bath Room attached ■ Stand by Generator
■ Channel Music ■ Laundry Service
■ Parking Facilities ■ Intercom Facilities
■ CCTV with Star T.V. Programmes
DINNING
VASANTHVIHAAR
- Vegetrian Deluxe Restaurant
- South & North Indian Dishes

TARIFF

| | |
|---|---|
| Single Room | Rs. 100 |
| Double Ropm | Rs. 170 |
| Single with T.V. | Rs. 170 |
| Deluxe Room with T.V. | Rs. 199 |
| Deluxe A/C | Rs. 300 + Tax |
| Extra Person | Rs. 40 |




படிப்பகம்

www.padippakam.com

தெலுங்குச் சிறுகதை

# ஒரு அப்பட்டமான அரசியல் கதை

வால்கா

தமிழில்:
எம்.எஸ்.ட்டி.செல்வா

நான் முதலில் இருந்தே கதையைச் சொன்னால்தான் உங்களுக்கு என் கோபத்தின் நியாயம் புரியும்.

என்னைப் பெண் பார்க்க யாராவது வருவதாக அப்பா சொன்னால் முதலில் மாப்பிள்ளையின் பெயரைத்தான் கேட்பேன். ராஜேந்திரன், மகாலிங்கம், சுரேஷ் என்று வந்த வரன்களை எல்லாம் பெயர் பிடிக்காததாலேயே எனக்குப் பிடிக்கலை என்று அப்பா அம்மாவிடம் சொல்லி விட்டேன். ஏன் பிடிக்கலை என்று அவர்கள் காரணம் கேட்ட போது 'என்னமோ தெரியலே இந்த மாப்பிளை எனக்குப் பிடிக்கலை' என்று சொல்லிவிடுவேன். சாவித்திரி என்கிற என் பெயரோடு கொஞ்சமாவது பொருந்த வேண்டாமா? என்று என் தோழிகளிடம் கண்ணடிப்பேன். நீ ரொம்பத்தான் துள்ளுறே. வசம்மா மாட்டிக்கப் போறே என்று தோழிகள் எச்சரிப்பார்கள்.

நான். பி.ஏ. (ஹோம் சயின்ஸ்) முடித்த மறுநாளே அப்பா ஜாதகங்களை தேட ஆரம்பித்து விட்டார். கடைசியில் இவருடைய ஜாதகம் வந்தது. 'சத்திய பாலன்' என்ற பெயர் உடனே எனக்குப் பிடித்து விட்டது. சத்தியபாலன் - சாவித்திரி என்று கோல நோட்டில் எழுதி சுற்றிவர கோலம் வரைந்து அழகு படுத்தினேன். அம்மா பார்த்து விட்டாள்.

அவர்கள் கேட்டது எங்கள் சக்திக்கு அதிகம் தான் என்றாலும் அப்பா சரி சொல்லி விட்டார். 30 பவுனும் அம்பதாயிரமும்மா! என்று தோழிகள் அதிர்ச்சியடைந்தார்கள். இந்தக் கல்யாணத்துக்கு ஒத்துக் காதே. இது கல்யாணமில்லை. வியாபாரம் என்று புரட்சிகரமான தோழி ஒருத்தி குதித்தாள்.

ஆனால் நான் ஏற்கனவே என் மனசை முழுசாக 'சத்தி'யிடம் கொடுத்து விட்டிருந்தேன். அதெல்லாம் 'புரட்சி'களுக்கு புரியவா செய்யும். தவிரவும் முப்பது பவுன் நகையும் அம்பதாயிரம் ரொக்கமும் என்பது எனக்கு ரொம்ப பெருமையாகவும் இருந்தது. என் ஆசையை நிறை வேற்ற அப்பா படும் கஷ்டத்துக்குப் பின்னால் அதிர்ந்து கொண்டிருக்கும் அன்பையும் பாசத்தையும் அவளால் புரிந்து கொள்ள முடியுமா? எனக்காக அப்பாவும் அம்மாவும் படும் கஷ்டம் என்னை தினமும் நெகிழ்த்திக் கண் கலங்கச் செய்து கொண்டிருந்தது. ஆனால் அதையும் மீறி என் மனோராஜ்ஜியத்தில் சத்தியுடன் வலம் வந்து கொண்டிருந்தேன்.

கல்யாணம் ரொம்ப 'கிரேண்டா'க நடந்தது. போட்டோ ஆல்பத்தை பார்த்துப் பார்த்துச் சலிக்க வில்லை எனக்கு. விருந்து முடிந்து மாமியார் வீட்டுக்குப் போக பஸ் ஏறினோம். நான் ஒருபக்கம் தூங்கி விழ அவர் ஒரு பக்கம் தூங்கி தூங்கி விழ பஸ்ஸில் கூட வந்த உறவினர்களுக்குள் ஒரே சிரிப்பும் கேலியும். எங்கள் இருவருக்கும் வெட்கத்தில் உடம்பே ஒடுங்கி விட்டது.

அப்புறம் தனியாக இருக்கும்போது பலசமயம் அதை நினைத்து நினைத்து இருவரும் சிரித்துக்கொண்டு கிடப்போம்.

அவருக்கு வேலை ஹைதராபாத்தில் ஒரு பேக்டரியில் என்பதால் உடனே வீடு பார்த்து ஹைதராபாத் வந்து சேர்ந்தோம். எனக்கு வீட்டில் ஒவ்வொரு பொருளும் அது அதற்கு உரிய இடத்தில் அழகுற அமைய வேண்டும். பொருட்கள் கண்டபடி இறைந்து கிடப்பதை என்னால் சகித்துக்கொள்ளவே முடியாது. இதனால் எனக்கும் அம்மாவுக்கும், எனக்கும் தம்பிக்கும் தினசரி சண்டை வரும். உன்னோட ஹோம் சயின்சை எல்லாம் நீ போற இடத்திலே உன் வீட்டுல வச்சுக்க. இது என் வீடு. என் இஷ்டப் படிதான் செய்வேன் என்று தம்பி கத்துவான்.

இப்போது இதோ என் வீடு. முழுக்க முழுக்க என் கட்டுப் பாட்டில் - என் ஆளுகையின் கீழ் ஒரு வீடு. என் வீடு. என் மனத் திருப்திக்கு வீட்டை ஒழுங்கு செய்ய ஒரு மாதத்துக்கு மேல் ஆகிவிட்டது. எந்நேரமும் ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் வீட்டை இப்படியும் அப்படியுமாக மாற்றிக் கொண்டே இருந்தேன். 'ஏதாவது செய்து முடி' என்று சிரித்தபடி சொல்லி விட்டு சத்தி வெளியே போய்விடுவான். அவன் திரும்பி வரும்போது வீடு வேறொரு வடிவத்தில் இருக்கும்.

இந்த ஒரு மாதத்தில் எந்நேரமும் வீட்டை அலங்கரிப் பதிலேயே என் முழுக்கவனமும் இருந்தது. 'சத்தி'யை சரியாக கவனிக்கவே இல்லை. திடீரென அது எனக்கு உறைத்தது. அவன் என் அருகாமைக்காக ஏக்கத்துடன் காத்துக்கிடந்தான். 'அடடா' என்று பதறி 'வாடா என் செல்லமே' என்று அவனை வாரி அணைத்துக் கொண்டேன். ஒருவராய்க் கரைந்து போனோம்.

ஆந்திராவின் அறியப்பட்ட பெண்ணியவாதியான பெண் எழுத்தாளர் வால்கா.



படிப்பகம்

www.padippakam.com



ஓவியம்: தனசேகர்

வாரம் தவறாமல் சினிமாவுக்கு போனோம். மாமனாரும் மாமியாரும் எங்கள் வருமானத்திலிருந்து எதையும் எதிர்பார்க்கவில்லையாதலால் கொஞ்சம் சுதந்திரமாக செலவழித்தோம். முதல்தேதி சம்பளப்பணம் அப்படியே என் கைக்கு வந்து விடும். நாள் போகப்போக சேமிக்க வேண்டும். எதிர்காலம் நம் குழந்தைகள் - என்று என் நினைப்பு ஓடியது. ரொம்ப சிக்கனமாக இருக்க ஆரம்பித்தேன். சினிமா, பிக்னிக் எல்லாம் 'கட்'. ராமன் இருக்குமிடம் அயோத்தி. நாம் இருவரும் சேர்ந்து இருக்கும் இடமே பிக்னிக் ஸ்பாட் என்று புதுமொழி சொல்வேன். அவன் அப்படியே என் மடியில் சரிவான்.

அவன் வேலைக்குப் போன பிறகு துவைத்து, சமைத்து, மாவு அரைத்து சிறிது நேரம் ஒய்வாக சாயும்போது என் வாழ்க்கை எத்தனை அழகாக நிறைவாக அமைந்துவிட்டது என்பதை நினைக்கவே சந்தோஷப் பெருமூச்சில் நெஞ்சே வலிக்கும்.

நான் கருவுற்றிருப்பதை டாக்டர் உறுதி செய்த அன்று நான் ஆனந்தத்தில் மிதந்துகொண்டே இருந்தேன். பைத்தியம் பிடித்து விடும்போல் சிரிப்பு வந்து கொண்டிருந்தது. ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டுக்கு என்னை அவன் தூக்கிக்கொண்டு தான் வரவில்லை. அப்படிக் கொஞ்ச ஆரம்பித்து விட்டான். வீட்டுக்கு வந்ததும் தாங்க முடியாமல் நான் கதறி அழுதுவிட்டேன். அவன் என் வயிற்றில் - வெறும் வயிற்றில் - அன்புமீற மாறிமாறி முத்தமிட்டான். நான் ஒன்றுமில்லாமல் அப்படியே காற்றில் கரைந்து போய் கொண்டிருந்தேன். அந்த நிமிஷமே அந்த அன்பும் பரிவும் காதலும் அப்படியே உறைந்து நிற்க உடனே செத்துவிடலாம் போல மனசு படபடத்தது.

பாதாமும் பிஸ்தாவும் குங்குமப்பூவும் என்று வாங்கி வந்து போட்டுக்கொண்டே இருந்தான். அப்பாவும் அம்மாவும் பண்டம் பலகாரம் செய்து கொண்டு வந்தார்கள். நிறைவான எங்கள் வாழ்க்கையைப் பார்த்து அப்படியே பூரிப்பில் கண்கலங்கித்தான் ஊர் திரும்பினார்கள். மாமனாரும் மாமியாரும் கூட வந்து ஒருநாள் கூட இருந்து அறிவுரைகள் சொல்லிப் போனார்கள்.

அன்று வழக்கம் போல வேலைகளை முடித்து ஓய்வாக சற்று சாய்ந்தபோது பக்கத்து வீட்டிலிருந்து 'உங்களுக்கு போன்' என்று செய்தி வந்தது. 'சாயங்காலம் ரெடியாக இரு. சினிமாவுக்குப் போகலாம் 'என்று சொல்வதற்காக அவ்வப்போது சத்தி இப்படி பேக்டரியிலிருந்து போன் செய்வது வழக்கம்.

ஆனால் போய் போனை எடுத்தால் செய்தியில் என் திரேகமே ஆடிப்போனது. அய்யோ என்று கத்திவிட்டேன். போன் வீட்டுக்கார அக்கா ஓடிவந்து கீழே விழ இருந்த என்னைத் தாங்கிக் கொண்டார்கள். பேக்டரியில் ஒரு விபத்து. சத்தியின் கை துண்டிக்கப்பட்டு விட்டது. மீதி செய்தியை அந்த அக்காதான் போனை வாங்கி விபரமாகக் கேட்டார்கள்.

அந்த அக்கா வீட்டிலேயே மயங்கி விழுந்துவிட்டேன். மயக்கம் தெளிந்தபோது அந்த அக்கா 'பயப்படாதே சாவித்திரி நீ பயப்படற அளவுக்கு ஒண்ணுமில்லை. வலது கையில் அஞ்சு விரலும் கட் ஆயிருக்கு. வேற ஒண்ணும் ஆபத்தில்லை. உடனே ஆஸ்பத்திரிக்கு கொண்டு போயாச்சாம். வா கிளம்பு. நானும் கூட வர்றேன்' என்று கிளம்பினோம். எனக்கு வயிறு கலங்கியது. நெஞ்சை வலித்தது.

சத்தியின் வலது கையில் பெரிய கட்டு - மஞ்சளும் இரத்த சிவப்புமாய். அவனுக்கு சுய நினைவு திரும்பிய சற்று நேரத்தில் அழ ஆரம்பித்து விட்டான். நான் என் அழுகையை அடக்கிக்கொண்டு அவனைத் தேற்றினேன். இடது கையால் வலதுகையைச் சுட்டிக்காட்டி 'இப்படி ஆயிடுச்சே' என்பது போல கையை விரித்து விரித்து அழுதான்.

நாலு நாள் ஆகியும் அவன் அழுகை நிற்கவில்லை. நாலாவது நாள் அவனுடைய அம்மா அப்பா வந்தார்கள். அன்றும் எல்லாரும் சேர்ந்து அழுதார்கள். எனக்கு தலை வெடித்துவிடும் போல இருந்தது. யாராவது வந்து இந்த அழுகைகளை நிறுத்த மாட்டார்களா என்று இருந்தது. அழுது அழுது சத்தியின் கண் எல்லாம் வீங்கிப்போயிருந்தது.

தெய்வம்போல பேக்டரியிலிருந்து யூனியன் ஆட்கள் வந்தார்கள். 'ச்சீ.. இதென்ன பொம்பள கணக்கா அழுதுகிட்டு....' என்று சத்தம்போட்டு ஒரே அதட்டில் அவனுடைய அழுகையை நிறுத்தினார்கள். 'இனிமே நான் வலது கை இல்லாம எப்படி பேக்டரிக்கு வேலைக்குப் போவேன்' என்று அவன் மறுபடி அழ ஆரம்பித்தபோது யூனியன் நண்பர்கள் 'நீ என்ன தனி ஆளா, நாங்கள்ளாம் இல்லே? உன்னை தனியா விட்டுருவமா?' என்று அவனுக்கு நம்பிக்கை ஊட்டினார்கள். நஷ்ட ஈட்டுத் தொகையின் முதல் தவணையாக பத்தாயிரம் ரூபாய் அவனுடைய



படிப்பகம்

www.padippakam.com

இடது கை பெருவிரல் ரேகையை வாங்கிக்கொண்டு கொடுத்து விட்டுப் போனார்கள்.

யூனியன் நண்பர்கள் இப்படியே எங்கள் கூடவே இருந்தால் நன்றாய் இருக்கமே என்று என் மனம் பதைத்தது. அவர்களிடமும் சொன்னேன். அவர்கள் தினசரி வந்தார்கள். அவனுக்கு நம்பிக்கை ஊட்டினார்கள். அவர்களில் சிலர் எனக்கு அண்ணன்களாகி விட்டார் கள். பலசரக்கு, வீட்டுச்சாமான்கள் எல்லாம் வாங்கிப் போட்டார்கள். இவ்வளவு பெரிய சொந்த பந்தம் புதுசாக உருவாகி விட்டதில் என் மனம் விம்மியது.

ரெண்டே மாதத்தில் அவனுக்கு காயம் ஆறி விட்டது. கட்டு அவிழ்த்த பிறகு ஐந்து விரலும் இல்லாத பாதியில் வெட்டுண்ட கை அகோரமாக இருந்தது. அவன் மீண்டும் கண் கலங்கினான். நான் வெட்டுண்ட கையில் முத்தமிட்டு அவனைத்தேற்றினேன்.

'எப்பவும்போல என் மேல அன்பா இருப்பியா சாவி?'

'ச்சி..... இதென்ன சின்னப்பிள்ளையாட்டம்..... ம்..?'

'நீ எப்படி இருந்தாலும் நீ தானடா என் ராஜா.'

'நீதானே என் செல்லம்' என்று அவனைச் சேர்த்துக் கட்டிக் கொண்டேன்.

ராத்திரி பாதி உறக்கத்தில் அவனது வெட்டுண்ட கை என் புடவையை விலக்கி என் வயிற்றைத் தடவியபோது ஏதோ தவளை என்று நினைத்து பயந்து அலறி எழுந்துவிட்டேன். அவன் சுக்குநூறாய் உடைந்துபோனான்.

அவனை இயல்பு நிலைக்குக் கொண்டு வர பல இரவுகள் ஆனது. நானே வலிய அவனது வலக்கரத்தை இழுத்து இழுத்து என் வயிற்றில் வைப்பேன். முகம் வாடி தயங்குவான். இரவுகள் செல்லச் செல்ல இயல்புக்கு வந்தான். என்றாலும் படுக்கையில் அவன் என்னை அணுகுவதில் முன்பு இல்லாத ஒரு முரட்டுத்தனம் அவனுக்குள் ஏறிவிட்டதை நான் உணர்ந்தேன். பகலில் சாதாரணமாக இருப்பான். மற்ற நடவடிக்கைகள் எல்லாம் இயல்பாகவே இருக்கும். இரவில் என்னுடன் கலக்கும்போது மட்டும் ஒரு இறுக்கம் வந்துவிடும்.

நான் அவனது வலது கையையும் இறுக்கத்தையும் சகிப்புடன் ஏற்றுக்கொண்டு முடிந்தவரை இயல்பாக அவனுடன் இருக்க முயன்றேன். என் பழைய சக்தியை அவனுக்குள் இருந்து மீட்டெடுக்க என்னால் இயன்றதெல்லாம் செய்தேன். யூனியன் முயற்சியால் அவனுக்கு ஆபிசில் லேசான வேலை ஒன்று கிடைத்துவிட்டது. அவன் மீண்டும் இயல்பு நிலைக்கு திரும்பிக் கொண்டிருந்தான்.

'இப்படி மெலிஞ்சு கருவாடாப் போயிட்டியேடி' என்று ஊரிலிருந்து வந்த அம்மா புலம்பினாள். அன்றைக்குத்தான் கண்ணாடியில் என் கோலத்தை முழுசாக நிதானித்துப்பார்த்தேன். நீண்ட பெருமூச்சில் என் பழைய உருவம் வந்து கரைந்து போனது.

அம்மா ஊர் திரும்பிய மூணாவது நாள் திடீரென எனக்கு ரத்தப்போக்கு ஏற்பட்டது. காலையில் துவங்கியது நிற்கவே இல்லை. நேரம் ஆக ஆக அதிகமானது. அவன் ஆபிசுக்குப் போன் செய்துவிட்டு பக்கத்து வீட்டு அக்காவுடன் ஆஸ்பத்திரிக்குப் போனேன். அபார்ஷன் ஆகி விட்டது. கருச்சிதைவை என்னால் ஒத்துக்கொள்ளவே முடியவில்லை. ஆறாவது மாதம் என்பதால் ரொம்ப சிரமப்பட்டது. சுத்தம் செய்த பிறகும் மூணாவது நாள் மறுபடி ரத்தப்போக்கு துவங்கியது. சத்தி எந்நேரமும் என் கூடவே இருந்தான்.

'அம்மாவை வரச்சொல்லி தந்தி அடிக்கணும் சத்தி' என்றாள். இரவோடு இரவாக வந்து விழுந்தாள் அம்மா. டாக்டர்களும் சத்தியும் அப்பாவும் கலந்து கலந்து பேசினார்கள். கடைசியில் என் கர்ப்பப்பையை வெட்டி எடுத்தாக வேண்டும் என்று முடிவானது. அன்று நானும் அம்மாவும் ஆஸ்பத்திரி அறைக்குள் ராத்திரி பூராவும் அழுதோம். மறுநாள் காலையில் ஆபரேஷன் சுமுகமாக நடந்து முடிந்தது.

அம்மா என் கூடவே இருந்ததால் வீட்டுக்கு வந்து பத்து நாள் ஆகியும் சத்தி என் அருகே இருக்க சந்தர்ப்பமே வாய்க்க வில்லை. மாமனார் மாமியாரும் வந்திருந்ததால் அவர்களையும் அவன் கவனிக்க வேண்டியிருந்தது.

இடையில் ரெண்டு நிமிடம் தனியாக நானும் அவனும் இருக்கும் வாய்ப்பு வந்தபோது நான் அவன் முகத்தை என் அருகே இழுத்தேன். 'போய் முதலில் ஷேவ் பண்ணு. இந்த தாடி எல்லாம் எதுக்கு? நல்லாவே இல்லை. எனக்கு ஒண்ணுமில்லை. இன்னும் ரெண்டே நாளில் நான் எழுந்து பழைய சாவித்திரி ஆயிடுவேன்.'

ஆனால் அவன் தாடி எடுக்கவேயில்லை. அம்மா ஊருக்குப் போய்விட்டாள். அப்புறம் ரெண்டு நாளில் மாமியாரும் போனார். நான் மெல்ல மெல்ல நடமாடத் துவங்கினேன். வீடெங்கும் சாமான்கள் தாறுமாறாய் இறைந்து கிடந்தன. மெல்ல மெல்ல சரி செய்ய ஆரம்பித்தேன். சாயங்காலம் மேஜையை இழுத்து அதற்கு உரிய இடத்துக்கு நகர்த்திக் கொண்டிருந்தபோது ஆபீஸ் முடிந்து சத்தி வந்துவிட்டான். 'உன்னை யாரு இதெல்லாம் செய்யச் சொன்னது' என்று காட்டுக் கத்தல் கத்தினான். பிறகு அவனே கோபத்துடன் மேஜையை இழுத்து ஒருபக்கம் தள்ளிப் போட்டான்.

ராத்திரி நான் அடுக்களை வேலைகளை முடித்துவிட்டு வருவதற்குள் அவன் நன்றாகத் தூங்கிவிட்டான். பகலெல்லாம் வீட்டை சீராக்கியதில் எனக்கு உடம்பெல்லாம் வலித்தது. அவனைக் கொஞ்சம் இதமாக பிடித்துவிடச் சொல்ல வேண்டும் என்று கை கால்கள் கெஞ்சிக் கொண்டிருந்தன. முக்கியமாக



படிப்பகம்

www.padippakam.com

வயிறும் வலித்தது. ஆனால் அவன் தூங்கி விட்டான்.

காலையில் எழுந்தபோதே எனக்கு வயிறு ரொம்ப வலித்தது. அவனை காபியுடன் எழுப்பி வலியைச் சொன்னேன். 'உன்னை யாரு அவ்வளவு வேலை செய்யச் சொன்னது? ஒரே நாளில் வீட்டை நட்டமா நிறுத்தாட்டி என்ன' என்று கேட்டுவிட்டு காபியைக் குடித்தான். குளித்தான். சாப்பிட்டான். வேலைக்குப் போய்விட்டான்.

இரவு நேரங்களில் சீக்கிரம் சீக்கிரம் தூங்கிவிடுவான். எனக்கு அவன் விலகிச் செல்வதாக பயம் வந்தது. அவன் என்னைத் தொடவே இல்லை என்பது ஒரு ராத்திரியில் உறைத்தது. அன்று இரவு முழுக்க தூக்கமே வரவில்லை. அவனுடைய ஆதரவான தழுவலுக்காக என் உடம்பும் மனதும் ஏங்கித் தவித்ததை அவன் அறியவில்லை.

மறுநாள் பக்கத்துவீட்டு அக்காவுடன் பேசிக் கொண்டிருந்தபோது அந்த அக்கா சொன்ன செய்தி என் ரத்தத்தை உறைய வைத்தது. வீட்டுக்கு வந்து படுக்கையில் விழுந்து கதறி அழுதேன்.அன்று வெகு நேரமாகியும் சத்தி வீடு திரும்பவில்லை. இரவு பதினோரு மணிக்கு மேல் வந்தான்.சாப்பாடு எடுத்து வைத்தேன். சாப்பிட்டாச்சு என்று சொல்லி விட்டு உடை மாற்றினான். நான் எடுத்து வைத்துவிட்டு வருமுன் படுத்துவிட்டான். இன்று உன்னை விடமுடியாது என்று அவனை உலுக்கி எழுப்பினேன். எனக்கு இன்று பேசியாகணும் பக்கத்து வீட்டு அக்கா சொன்னது உண்மையா என்று அழுதபடி கேட்டேன். சற்று நேரம் பேசாமல் இருந்தான். நான் 'சொல்லுடா சத்தி சொல்லு' என்று பரிதாபமாக அழுதேன்.

ரொம்ப நேர மௌனத்துக்குப் பிறகு சொன்னான். 'ஒரு பேரன் பேத்தியைப் பாக்கணும்னு அப்பா அம்மா ஆசைப்படறது தப்பா'.

'அப்பா அம்மா இருக்கட்டும். நீ என்னடா சொன்னே அதைச் சொல்லு சத்தி.'

'முதல்ல மரியாதை இல்லாம இப்படி வாடாபோடான்னு பேசறதை நிறுத்து' என்று சொல்லிட்டு போர்வையை இழுத்து மூடிப்படுத்துவிட்டான். நான் இருட்டோடு இருட்டானேன்.

மறுநாள் நான் காலையில் எழுந்து காபி போடவும் இல்லை. சமைக்கவும் இல்லை. விடிய விடிய அழுது முகம் உப்பிக் கிடந்தேன். நான் ஒப்புக்கொள்ளா விட்டால் டைவர்ஸ் செய்துவிட்டு ரெண்டாங்கல்யாணம். ஒப்புக்கொண்டு விட்டால் ரெண்டு மனைவிமாரும் ஒரே வீட்டில் இருக்கலாம்.

நான் உபயோகமற்றவளாகி விட்டேன். கல்யாணம் ஆகி ரெண்டு வருஷம் கூட ஆகவில்லை. யூஸ் அன்ட் த்ரோ (use and throw) பொருள்மாதிரி நான் ஆகிவிட்டேன். அப்புறம் அவன் ஒழுங்காக வீட்டுக்கு வருவதில்லை. வந்தாலும் தொட்டதெற்கெல்லாம் கோபப்பட்டான்.

பிறகு ஒரு நாள் என் அழுகை நின்று எனக்கும் கோபம் வந்து விட்டது.

நேராக பேக்டரிக்குப் போனேன். யூனியன் ஆபீசுக்குப் போய் யூனியன் தலைவரிடம் எல்லாவற்றையும் எடுத்துச் சொன்னேன். பொறுமையாகக் கேட்ட அவர் 'சரி நான் அவன்கிட்ட பேசறேன் நீ வீட்டுக்குப் போ' என்றார்.

ராத்திரி அவன் ஆங்காரமாய் வீடு வந்தான். 'உன் தெத்துப் பல்லைக் காமிச்சிக்கிட்டு ஏண்டி தெருத்தெருவா அலையிறே' என்று என் மேல் பாய்ந்து குதறினான்.

மறுநாளும் யூனியன் ஆபீசுக்குப் போனேன். 'அவன் செய்யிறது சரியில்லைதான். இருந்தாலும் இது உங்க குடும்ப விஷயம்.நாங்க எப்படி தலையிடறது வீட்லே பெரியவங்களுக்கு சொல்லி அனுப்புங்க' என்று கையைக் கழுவினார்.

அவனுக்கு கை துண்டித்துக் கிடந்தபோது எவ்வளவு தன்னம்பிக்கையும் ஆதரவும் கொடுத்தது யூனியன்? நாங்க இல்லையா என்று ஓடி வந்து கைகொடுத்ததே?

பக்கத்துவீட்டு அக்கா கூட இதையேதான் சொன்னார். 'உங்க மாமியார்கிட்டே நானும் சொன்னேன். சாவித்திரி ரொம்ப நல்ல பொண்ணு. ஏதோ விதி இப்பிடி ஆயிட்டுது. அவளை கைவிட்றாதீங்கண்ணு. அதுக்கு மேலே நான் உங்க குடும்ப விஷயத்திலே எப்படி தலையிட முடியும்?'

ஏன் எல்லாரும் இப்படி சொல்கிறார்கள்? குடும்பம் என்றால் எந்த நியாய அநியாயத்துக்கும் அடங்காத தனி உலகமா? யாரும் தலையிடக்கூடாதா?

தனிமையில் யோசிக்க யோசிக்க எனக்கு ஆத்திரம் அதிகமானது. சிறு வயதிலிருந்து மலடிப்பட்டத்தோடு எங்கள் வீட்டிலேயே உழைத்துக்கொண்டு கிடக்கும் கோமதி அத்தையின் நிலை என் நினைவுக்கு வந்தது.

குடும்பம் என்பதே பெண்ணுக்குச் சிறையாகவே உருவாக்கப்பட்டது போல தோன்றியது. என்வீடு என்வீடு என்று அலங்கரித்தேனே எது என்வீடு? பெண்ணுக்கு ஏது வீடு? அது என் தம்பி வீடு. இது இந்த ஆணின் வீடு.

அவனுக்கு கைகொடுக்க ஒரு யூனியன் இருப்பதுபோல குடும்பங்களில் சிக்குண்டு உழலும் பெண்களுக்கு 'நாங்க இல்லையா?' என்று கேட்க ஒரு யூனியன் இல்லையே என்று ஏங்கினேன். ஆணின் கருவைச் சுமக்க முடியாவிட்டால் பெண் ஒரு வேண்டாப்பொருளா? என்று குமுறினேன்.

உலகத்துப் பெண்களை எல்லாம் ஒவ்வொருவராய் தொட்டுப் பேசவைத்துக் கேட்க வேண்டும் போலவும் எல்லோருடனும் பேசவேண்டும் போலவும் ஆவேசம் வந்தது.

எல்லோரையும் கூவி அழைக்க மலையின் உச்சியை நோக்கி ஏறத்துவங்கினேன் – வேகமாக. ●



படிப்பகம்

www.padippakam.com



**கலைந்த கனவும்**
**கலையாத காதலும்**

# ஃபிரைடா காலோ

ஆதிலட்சுமி

## Frida Kahlo

மெக்ஸிகோ தேசத்தின் செல்ல மகள் ஃபிரைடா காலோ தன் துயர் ததும்பும் ஓவியங்களால் கலை உலகம் முழுவதையும் ஆழ்ந்த அதிர்வுகளுக்குள்ளாக்கி வந்தவர், மெக்ஸிகோ கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளராக சிலகாலம் செயல்பட்ட உலகப்புகழ்பெற்ற சுவர் ஓவியர் (Muralist) டீகோ ரிவேரா (Diego Rivera) வின் அன்புக் காதலியாக - காதல் மனைவியாக - வாழ்ந்தவர். ஃபிரைடாவுக்கும் ரிவேராவுக்கும் இடையில் நடைபெறும் உரையாடல் வார்த்தைகளைக்கூட பத்திரிகைகளின் வழியே மெக்ஸிகோ தேசமே ஆர்வத்துடன் கவனித்து வந்தது. தேசமே கொண்டாடிய தம்பதியராக அவர்கள் வாழ்ந்தனர்.



முதிர்ந்த இரு கலைமேதைகளின் பக்குவப்பட்ட காதலாக அவர்களுடைய காதல் ஒருபோதும் இருந்ததில்லை. கனவும் மயக்கமும் பிதற்றும் காதல் வார்த்தைகளும் நிரம்பிய சின்னஞ்சிறு காதலர்களின் படபடக்கும் உலகமாகவே அது எப்போதும் இருந்தது.

ஒரு இரவில் இருவரும் தெருவில் நடந்து போய்க் கொண்டிருக்கையில் திடீரென் காதல் வேகம் மீற ஒரு விளக்கின் அடியில் நின்றே இருவரும் தழுவி முத்தமிட்டுக் கொண்டனர். ஃபிரைடா இதுபற்றிப் பின்னர் குறிப்பிடும்போது

'நாங்கள் முத்தமிட்டுக் கொண்டதும் உடனே அந்த தெருவிளக்கு அணைந்தது. எங்கள் இதழ்கள் விலகியதும் மீண்டும் எரிந்தது. அன்று ஒவ்வொரு தெரு விளக்கின் கீழும் இந்த விளக்கு அணைந்து எரியும் நாடகம் அதிசயம் போல நடந்து கொண்டிருந்தது'.

ஃபிரைடா சொல்வதை அப்படியே எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. நடந்ததை நடந்தபடி இம்மி பிசகாமல் சொல்ல ஃபிரைடாவுக்கும் முடியாது. ரிவேராவுக்கும் முடியாது. நிகழ்வுகளை கனவு மயமாக்கிவிடுவதும் தன்னையே ஒரு கனவுலகின் கதாபாத்திரமாக பார்ப்பதும் ஃபிரைடா வின் தனித்த பண்பாக இருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

1907ல் காயகான் கிராமத்தில் பிறந்த ஃபிரைடா தான் பிறந்த ஆண்டை 1910 என்றுதான் எப்போதும் சொல்லியும் எழுதியும் வந்தார். ஏனெனில் 1910ல் தான் மெக்சிகோவில் ஜனநாயக புரட்சி வெடித்தது. சர்வாதிகாரி ஜெனரல் புரொபிரியோ டயஸ் துரத்தப்பட்டு தேர்தல்கள் நடந்தன. தன்னையே மெக்ஸிகோ தேசமாக உருவகித்துக்கொண்ட ஃபிரைடா தான் பிறந்தது தேசம் புதிதாய் பிறந்த 1910ல் தான் என்று சொல்லிக்கொண்டதில் தவறு ஒன்றுமில்லை. துப்பாக்கிகளின் குரைக்கும் ஒலி கேட்டுக் கொண்டே இருந்த ஒரு காலத்தில் பிறந்த ஃபிரைடாவின் வாழ்க்கை தேசத்தோடும் புரட்சியோடும் இறுதிவரை பின்னிப் பிணைந்தே இருந்தது.

லத்தீன் அமெரிக்க மக்களை நரவேட்டையாடிய கொலம்பஸ் அங்கே வருவதற்கு முன்பு செழித்திருந்த பூர்வ கலாச்சாரம் அழிபட்டு ஸ்பானிய மற்றும் அமெரிக்க கலாச்சாரம் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்த ஒரு காலத்தில் ஃபிரைடா பிறந்தார். புரொபிரியோ டயஸின் 34 ஆண்டு கால சர்வாதிகார ஆட்சியில் நவீனமயமாக்குதல் - விஞ்ஞான மயமாக்குதல் - என்ற பெயரில் தேசம் அந்நியருக்கு அகலத் திறந்து விடப்பட்டிருந்தது. மெக்ஸிக அடையாளங்கள் அரிபட்டு ஐரோப்பிய கலாச்சாரத்தை மக்கள் அண்ணாந்து பார்க்குமாறு செய்யப் பட்டிருந்தனர்.

மெக்சிகோ மீண்டும் மெக்சிகர்களின் கைவந்து சேர மேலும் பத்து ஆண்டுப்புரட்சி தேவைப்பட்டது. 1913ல் மீண்டும் கிளம்பிய புரட்சிகர எழுச்சி அலைகள் மெக்சிகோவை மெக்சிகர்களிடம் எடுத்துச் செல்லத் துவங்கின. அதே 1913ல் தான் ஆறுவயது செல்லமாக இருந்த ஃபிரைடா போலியோவால் தாக்கப்பட்டு வலது கால் பாதிக்கப்பட்டு படுக்கையிலே வீழ்ந்தாள். ஒன்பது மாதங்கள் படுக்கையிலேயே கிடந்தாள்.

அறையின் ஓரத்தில் ஜன்னலை ஒட்டிய கட்டிலில் ஜன்னல் கண்ணாடி வழியே மெக்ஸிகோவின் தூரத்துக் குன்றுகளைப் பார்த்தபடி ஒன்பது மாதங்கள்.

குளிர் காலத்தில் ஒரு நாள் அடைத்த ஜன்னல் கண்ணாடி வழியே உலகம் இயங்குவதைப் பார்த்துக் கொண்டிருந்த ஃபிரைடா திடீரென வாயால் ஆவியை ஊதி கண்ணாடியில் படரச் செய்தாள், திரைபோலப் படர்ந்த ஆவியின்மீது தன் சுட்டு விரலால் ஒரு கதவு வரைந்தாள். சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு அந்தக் கதவு வழியே தப்பி வெளியேறினாள், மலைகள் காடுகள் எல்லாம தாண்டிப் பறந்துகொண்டேயிருந்தாள். இறுதியில் PINZON எனும் பெயர் கொண்ட ஒரு பண்ணையில் வந்து நின்றாள். உடனே வந்த PINZON எனும் வார்த்தையில் உள்ள O - என்ற எழுத்தில் உள்ள துவாரத்தில் அவசரமாக நுழைந்து வேகமாக பூமியின் நடுமையத்திற்கு வந்து சேர்ந்து விட்டாள். அங்கே அவளுடைய வருகையை எதிர்பார்த்து அவளுடைய நெருக்கமான ரகசிய தோழி காத்திருக்கிறாள். தோழியின் நிறம் - அவளுடைய முகம் எதுவும் நினைவுக்கு வரா விட்டாலும் - ஃபிரைடாவுடன் தோழி வாஞ்சையுடன் பேசினாள். என்ன பேசினாள் என்கிற சத்தமும் கேட்காமல் எல்லாமே மௌனத்திலே நடந்து கொண்டிருந்தது. ஃபிரைடாவைக் கண்ட ஆனந்தத்தில் தோழி ஒயிலாக நடனமாடத் துவங்கினாள் - அவளுடைய உடம்புக்கு எடை என்பதே இல்லாததுபோல.

ஃபிரைடாவும் தோழியும் அமர்ந்து ஆதரவாகப் பேசத் துவங்கினர். வேறு யாரிடமும் சொல்லமுடியாத தன்னுடைய ஒரு ரகசியமான பிரச்னையை தோழியிடம் சொல்கிறாள் ஃபிரைடா. (அது என்ன பிரச்னை என்பது மட்டும் ஒரு போதும் நினைவுக்கு வரவே இல்லை) ஆனால் தோழிக்கு எல்லாமே முன்கூட்டியே தெரிந்திருக்கிறது. வாஞ்சையுடன் தலையை அசைத்து அசைத்து ஃபிரைடா சொல்வதைக் கேட்டு ஏதோ ஆறுதலாகக் கூறுகிறாள். என்ன கூறினாள் என்பதும் கேட்கவில்லை. ஆனால் ஃபிரைடா மனப்பாரம் குறைந்து லேசாகி லேசாகி - பறந்து மேலேறி O - என்ற எழுத்தின் வழியே மீண்டும் கண்ணாடி ஜன்னலில் வரைந்த கதவு வழியே மீண்டும் கட்டிலுக்கே வந்து சேர்ந்து அந்தக் கதவையும் அழித்துவிட்டாள்.

தன் வாழ்நாள் முழுவதும் இந்தக் கனவையும் கனவுத் தோழியையும் ஃபிரைடாவால் மறக்கவே முடியவில்லை. வாழ்க்கை நெடுகிலும் துயரங்கள் வந்து மோதிய போதெல்லாம் இந்தக் கனவுத் தோழியின் நினைவு வந்து அவளைத் தேற்றி இருக்கிறது. ஃபிரைடா 1939ல் வரைந்த 'இரண்டு ஃபிரைடாக்கள்' (The Two Fridas) என்ற புகழ்பெற்ற ஓவியத்துக்கான உந்துதல் இந்தக் கனவுத்தோழிதான்.

ஏழு வயதில் ஃபிரைடா பால்கனிக் கதவை வீட்டாருக்குத் தெரியாமல் திறந்து வைத்து தன் மூத்த சகோதரி தன் காதலனுடன் தப்பிச் செல்ல உதவி செய்தாள். ஃபிரைடாவின் தாய் பன்னிரண்டு ஆண்டு காலம் 'ஓடிப்போன' தன் மகளை வீட்டு வாசல்படி ஏற்ற மறுத்து வந்தாள். ஃபிரைடாவுக்கு அது மிகுந்த வேதனை அளித்தது. ஃபிரைடாவுக்கு பதினோரு வயது நடக்கையில் அவளுடைய அம்மாவின் காதலன் அம்மாவுக்கு எழுதிய கடிதங்கள் எல்லாம் ( ஒரு ரஷ்யப் புத்தகத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்தவை) படிக்கக் கிடைத்தன.தன் கண் முன்னாலேயே அந்த ஜெர்மானிய இளைஞன் தற்கொலை செய்து கொண்டதை கண்கலங்க அம்மா கதையாய்ச் சொன்னதைக் கேட்டு மனம் நடுங்கினாள் ஃபிரைடா.

பால்யகாலம் முழுவதும் 'நொண்டிக்கால்' என்று பள்ளித் தோழிகள் கேலி செய்ததால் மனம் உடைந்த ஃபிரைடா எப்போதும் தனிமையிலேயே இருக்க நேரிட்டது. தன் வலது கால் ஷூவுக்குள் நிறைய சாக்ஸ்களை திணித்து தனது ஊனத்தை மறைக்க தினசரி பெரும் பிரயத்தனங்கள் செய்வாள். தனக்கு ஊனம்



படிப்பகம்

www.padippakam.com

இல்லை என்பதை மற்றவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக வெறித்தனமாக மணிக்கணக்காக சைக்கிளில் சுற்றுவாள்.

1913ல் துவங்கிய மெக்சிகோ மக்களின் எழுச்சி 1920ல் ஜெனரல் ஆல்வரோ ஒப்ரகானை ஆட்சியில் அமர்த்தியது. துரிதமான நிலச் சீர்திருத்தமும் தொழிலாளர் நலச் சட்டங்களும் அமலுக்கு வந்தன, கத்தோலிக்க திருச்சபையின் ஆதிக்கம் வெகுவாக கட்டுப் படுத்தப்பட்டது. 'தேசத்தின் இயற்கை வளங்கள் யாவும் தேசத்துக்கே சொந்தம். அந்நியக் கைகள் வெளியேறுக' எனப் பிரகடனம் வெளியிடப்பட்டது. 'அறிவாளிகளே! கலைஞர்களே! ஐரோப்பாவின் மீது பதிந்து கிடக்கும் உங்கள் கண்களை மெக்சிகோவின் மீது திருப்புங்கள். நமது பழக்கங்கள் நமது நம்பிக்கைகள் நமது கனவுகள் நமது கலாச்சாரம் உண்மையில் நாம் என்னவாக இருக்கிறோமா அதன்மீது திருப்புங்கள்' என்ற முழக்கம் தேசமெங்கும் எதிரொலித்தது.

பொதுக்கல்வி அமைச்சராக நியமிக்கப்பட்ட ஜோஸ் வாஸ்கான்சலோ மிகச்சிறந்த தத்துவவாதியாகவும் சட்டவல்லுநராகவும் புரட்சியாளராகவும் இருந்தார். மெக்சிகோ ஒரு கல்வி பெற்ற தேசமாக வேண்டும் என்ற பெருங் கனவுடன் ஆயிரக்கணக்கான கிராமப்புறப் பள்ளிகளைத் திறந்து கல்லாமைக்கு எதிராக போர்ப் பிரகடனம் செய்தார். மிகப்பெரிய ஆசிரியர் பட்டாளத்தை உருவாக்கி தேசத்தின் மூலை முடுக்குகளுக்கு எல்லாம் அனுப்பி வைத்தார். உலகப்புகழ்பெற்ற புத்தகங்களை எல்லாம் மலிவு விலையில் அச்சிட்டு மக்களிடம் கொண்டு சேர்த்தார். படிப்பறிவில்லாத மக்களுக்காக மெக்சிகோவின் சரித்திரத்தையும் கலாச்சாரத்தையும் பேசும் மிகப்பிரம்மாண்டமான சுவர் ஓவியங்களை டீகோ ரிவேரா, டேவிட் ஆல்பரோ போன்ற புகழ்பெற்ற ஓவியர்களைக் கொண்டு பல்வேறு பொது இடங்களில் வரையச் செய்தார். ஒரு கொத்தனாருக்கு உரிய சம்பளத்தை மட்டும் பெற்றுக் கொண்டு இந்த ஓவியர்கள் ராப்பகலாக பொதுமக்களுக்காக சுவர் ஓவியங்கள் தீட்டினார்கள். 'சுவர் ஓவிய மறுமலர்ச்சி காலம்' என்று கலைஉலகம் குறிப்பிடும் அளவுக்கு கலை இயக்கம் பரவியது.

நமது கல்வியானது நமது ரத்தத்தை நமது மொழியை நமது மக்களை அடித்தளமாகக் கொண்டே கட்டப்பட வேண்டும் என்றார் 'கலை சமூக மாற்றத்தை தூண்டும்' என வலுவாக நம்பிய ஜோஸ்.

மெக்சிகோ சிட்டியில் அமைந்திருந்த புகழ்பெற்ற தேசிய தயாரிப்புப் பள்ளியில் தேசத்தின் உன்னதமான கலைஞர்கள், கல்வியாளர்கள், ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டனர். பொய்கள், புனை சுருட்டுகள், துரோகங்கள் பகற்கனவுகளுக்கான காலம் முடிந்து போனது. தேசமே உண்மை, நம்பிக்கை, உணர்ச்சி வெள்ளம், முன்னேற்றம், தேசியப் பெருமிதம் என்ற



"இரண்டு ஃப்ரிடாக்கள்" (1939)

பாதையில் கொந்தளிப்புடன் நடைபோடத் துவங்கியிருந்தது.

ஃப்ரிடா இந்த அற்புதமான சூழலில் தன் கிராமம் என்கிற நான்கு சுவர்களைத் தாண்டி 1922ல் தனது 14வது வயதில் புகழ் மிக்க தேசிய தயாரிப்புப் பள்ளியில் சேர மெக்சிகோ சிட்டிக்கு வந்து சேர்ந்தாள்.

மெக்சிகோவின் சகல கொந்தளிப்புகளையும் அதிர்வுகளையும் உள்வாங்கிய சின்னஞ்சிறு பெண்ணாக பள்ளியில் நுழைந்த ஃப்ரிடா அங்கு தான் முழுமையான பெண்ணாக மாறத் துவங்கினாள். அவளது முதல் காதல் அங்குதான் முகிழ்த்தது. அலஜேன்ட்ரோ கோமஸ் ஆரியஸ் - உடன் துவங்கிய நட்பு ஆழ்ந்த நேசமாக மலர்ந்தது.

வியாழன் டிசம்பர் 25, 1924

என் அலெக்ஸ்

உன்னைப் பார்த்தது முதலே உன்னை நான் நேசித்தேன். நீ என்ன சொல்கிறாய்? உன் அழகான சின்னப் பெண்ணை மறந்துவிடாதே என்று உன்னை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன். சிலசமயம் இரவு நேரங்களில் மிகவும் பயமாக இருக்கிறது. நீ அருகில் இருந்தால் பயம் குறையுமே என்று தோன்றுகிறது. அருகில் இருந்து எப்பவும் போலவே நீ இன்னும் என்னை நேசிப்பதாக என்னிடம் கூறிக்கொண்டே இருக்க வேண்டும். அந்த டிசம்பரில் என்னை நேசித்தது போலவே இப்பவும் நேசிப்பதாகக் கூற வேண்டும். நான் ரொம்ப எளிய சாதாரணமான ஒரு விஷயம் தான் என்ற போதும். நீ சாதாரண விஷயங்களை தொடர்ந்து விரும்பப் பழகிக் கொள். நான் இன்னும் கூட சாதாரணமாக சின்னதாக ரொம்பச் சின்னதாக மாறிவிட



படிப்பகம்

www.padippakam.com

ஆசைப் படுகிறேன். அப்படியானால் நீ என்னை எப்போதும் உன் சட்டைப் பாக்கட்டிலேயே வைத்திருக்கலாம அல்லவா? சீக்கிரமே எனக்கு பதில் எழுது அலெக்ஸ். உண்மையிலேயே நீ என்னை நேசிக்கா விட்டாலும் கூட நீ என்னை ரொம்பவும் நேசிப்பதாகவும் நான் இல்லாமல் உன்னால் ஒரு நிமிடம் கூட வாழமுடியாதென்றும் உன் கடிதத்தில் எழுது. அலெக்ஸ் ப்ளீஸ்

பதில் எழுது பதில் எழுது பதில் எழுது

பதில் எழுது பதில் எழுது பதில் எழுது

பதில் எழுது பதில் எழுது பதில் எழுது

பதில் எழுது பதில் எழுது பதில் எழுது

ஃபிரைடா

ஃபிரைடாவின் காதல் எப்போதும் அளவு கடந்ததாக ஆவேசமிக்கதாக ஆக்கிரமிப்புத் தன்மை கொண்டதாக இருக்கும்.

தேசிய தயாரிப்புப் பள்ளியில் சுவர் ஓவியம் தீட்டிக் கொண்டிருந்த போது தான் ரிவேராவை முதன்முதலாக ஃபிரைடா சந்தித்தாள். விஷமத்தனங்கள் செய்து ரிவேராவை அன்றைய அவரது மனைவியிடம் மாட்டி வைக்கும் பல விளையாட்டுகளில் ஃபிரைடா ஈடுபட்டாள். அடிக்கடி ரிவேரா ஓவியம் தீட்டும் இடத்துக்குச் சென்று வந்தாள். தோழிகள் ஏனென்று கேட்ட போது 'ரிவேராவின் குழந்தையை என் வயிற்றில் சுமக்க விரும்புகிறேன் அதனால்தான்' என்ற ஜோக் அடித்தாள். அது பின்னாளில் நிஜமாக நடக்கப் போவதை அறியாமல்.

விளையாட்டும் சிரிப்புமாய் போய்க் கொண்டிருந்த வாழ்க்கை ஒரு நாள் பஸ் விபத்தில் முறிந்து விழுந்தது. 17 செப்டம்பர் 1925 மாலையில் பள்ளியிலிருந்து ஃபிரைடா திரும்பிக் கொண்டிருந்த பஸ் விபத்துக்குள்ளானது. ஃபிரைடாவின் வாழ்க்கை முழுமையும் வலியிலும் தனிமையிலும் துயரத்திலும் தள்ளிய விபத்தாக அது அமைந்துவிட்டது.

மூன்று இடங்களில் முதுகுத்தண்டு முறிந்திருந்தது. இடுப்பு எலும்பும் நொறுங்கியிருந்தது. அடுத்து வந்த 11 ஆண்டுகளில் முதுகுத்தண்டில் மட்டும் 32 அறுவைச் சிகிச்சைகள் மாற்றி மாற்றி செய்யப்பட்டன. படுக்கையிலிருந்து எழுவதும் மீண்டும் விழுவதுமான துயரம் ஃபிரைடாவைத் தாக்கியவாற இருந்தது.

படுக்கையில் தனிமையை சமாளிக்க ஃபிரைடாவின் தந்தை முன்புதான் பயன்படுத்திய தூரிகைகள் தைல வண்ணங்களைக் கொடுத்து படங்கள் வரையத் தூண்டினார். சொந்த அனுபவங் களும் சொந்த மனிதர்களும் ஃபிரைடாவின் தூரிகையின் வழி வெளிப்படலாயினர். ஏற்கனவே பள்ளியில் படிக்க ஆகிற செலவை சரிக்கட்ட ஃபிரைடா மாலை நேரங்களில் ஒரு ஓவியக் கடையில் ஓவியங்களைப் பிரதி எடுக்கும் வேலை செய்து வந்ததால் தூரிகைப் பழக்கமும் அவளுக்கு இருந்தது. டாக்டராக ஆசைப்பட்ட ஃபிரைடாவை தூரிகை வேறுபக்கம் இழுக்கலானது.

இந்த சமயத்தில் இரண்டாண்டுகள் படுக்கையில் கிடந்தபோது - தன் நிலைமையை - தன் வலியை நிமிடத்துக்கு நிமிடம் தான் நேசிக்கிற அலெஜான்ட்ராவுக்கு கடிதத்தில் எழுதி தன் மீது இரக்கமும் காதலும் மேலும் பெருகும்படி செய்ய எல்லா சாகசங்களும் செய்தாள் ஃபிரைடா. இரக்கம் காதலை விட வலுவானது என்பதை ஃபிரைடா ஆழமாக அறிந்திருந்தாள்.

இந்த நாட்களில் ஃபிரைடா அலாஜாண்ட்ராவுக்கு எழுதிய கடித்ங்களில் வரைந்த படங்கள் (ஃபிரைடா எழுதும் எல்லா கடிதங்களிலும் வரிகளுக்கிடையில் படங்களும் இருக்கும்) எல்லாமே அழுகிற ஃபிரைடாவின் முகமாகவே இருந்தது.

ஆனால் இந்த அழுகிற முகத்தை ஃபிரைடா வெளி உலகுக்கு காட்டுவதில்லை. அலெஜாண்ட்ரா மட்டுமே அறிந்த முகமாக அது இருந்தது. படுக்கையிலிருந்த அவளைப் பார்க்க வரும் நண்பர்களிடம் அதிக உற்சாகத்துடன் பேசிக்கொண்டிருப்பாள். கூர்மையான விமர்சனங்கள், கிண்டல்கள், ஜோக்குகள், புத்திசாலித்தனமான அபிப்ராயங்கள் என இந்த ரணமும் வேதனையும் எல்லாம் என்னை என்ன செய்துவிடும்



"என் தாதி" (1937)

ஃபிரைடாவின் தாயார் தன் உடல்நோவின் காரணமாக ஃபிரைடாவுக்கு பாலூட்ட முடியாத நிலையில் இருந்தார். ஒரு இந்தியவம்சாவளிப் பெண்ணே தாதியாக இருந்து பாலூட்டி ஃபிரைடாவை வளர்த்தார். தாயின் வாஞ்சை மிக்க பார்வையும், ஸ்பரிசமுமில்லாத இந்தப் பாலூட்டல் ஃபிரைடாவின் மனநிலையை வெகுவாகப் பாதித்தது. எனவே தாதியின் முகத்தைக் கறுப்பாக்கி வரைந்தார். தன் ஓவியங்களிலேயே வலிமையான படைப்பாக இதைக் கருதினார் ஃபிரைடா.



படிப்பகம்

www.padippakam.com

ன்கிற மாதிரி ஒரு சாகஸ நாயகி என்கிற முகமூடியைத் தான் காட்டுவாள். ஆனால் வாழ்க்கை அந்த முகமூடியை உண்மையான முகமாகவே அவளுக்கு அணிவித்து விட்டது.

ஃபிரைடாவின் ஓவியங்களில் பெரும்பாலானவை தன்னைத்தானே வரைந்துகொண்ட (Self Portraits) படங்கள் தாம். ஆனாலும் துயரம் மிகுந்த கண்ணீர் வழியும் - அப்படங்கள் எதிலும் சுய இரக்கம் கொண்ட முக பாவத்தைக் காண முடியாது. தீர்க்கமான நேரடியாக நம்மைப் பார்க்கும் அந்தப்படங்கள் ஆழமாக பார்வையாளரை ஊடுருவித் தாக்குகின்றன.

ஃபிரைடா படுக்கையிலிருந்த நாட்களில் மெக்சிகோ அமெரிக்கக் கைக்கூலிகளின் ஊடுருவலில் மீண்டும் கொந்தளிப்புக்கு உள்ளானது. அலேக்ஜான்ட்ரோ மாணவர் எழுச்சியை வழிநடத்திய மாபெரும் மாணவர் தலைவராக உயர - ஃபிரைடாவுடனான உறவு வலுவிழந்து கொண்டே வந்தது. நாங்கள் மெக்ஸிகோவின் சமுராய்கள் என்று சுயபிரகடனம் செய்து கொண்ட மாணவர் படை தேசிய அரங்கில் மிக முக்கிய இடத்தைப் பெற்றது. கல்வி அமைச்சராக இருந்த ஜோஸ் அரசியல் எழுச்சிக்குத் தலைமை தாங்கிக் கொண்டிருந்தார். அலேஜான்ட்ராவுக்கு ஆர்டநெஸ் என்ற பெண்ணுடன் காதல் மலர்ந்தது.

ஃபிரைடாவால் அதை ஏற்றுக்கொள்ள



இளம்வயதில் ஃபிரைடாவும் ரிவேராவும் ஒரு ஆர்ப்பாட்டத்தில்.

முடியவில்லை. மனம் சிதைந்து அவனுக்கு கடிதம் எழுதினாள். *(ஜுன் 1928)*

நீ இப்போது என்னை நேசிக்கவில்லை என்பதை உணர்கிறேன். ஆனால் சத்தியமாகச் சொல்கிறேன் அலெக்ஸ் என்னால் இதை நம்ப முடியவில்லை. நான் உன் மேல் பைத்தியமாக இருக்கிறேன் என்பதை நீ அறிவாய் என்று நம்புகிறேன். நீ என்னுடையவன் என்பது அல்ல உண்மை. நீதான் நான். மாற்றிக்கொள்ள முடியாது.

ஃபிரைடாவின் காதல் முறிந்து போனது. மனமும் ஊனமுற்றது. ஆனால் அடுத்த இரண்டு மாதங்களில் ஃபிரைடா மெக்சிகோவின் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தாள் - தன் 21வது வயதில். கட்சி உணர்வு ஊனமுற்ற அவள் மனசை தூக்கி நிறுத்தி வாழ்வை முன்னோக்கிப் பார்க்க வைத்தது.

எப்போதும் மெக்சிகோவின் நாட்டுப்புற விவசாயப் பெண்மணியின் (டெகுவானா) ஆடை மற்றும் சிகை அலங்காரத்தை விரும்புகிற வளாயிருக்கிற ஃபிரைடா இப்போது ஒரு தொழிலாளியைப் போல பேண்ட்டும் சர்ட்டும் அணிந்து சட்டைப்பபை மீது அரிவாள் சுத்தியல் அல்லது ஒரு சிகப்பு நட்சத்திர பேட்ஜ் அணிந்த கொள்ளத் துவங்கினாள்.

கொஞ்சம் நடமாடும் தெம்பு வந்ததும் ஃபிரைடா தான் வரைந்த இரண்டு மூன்று ஓவியங்களை எடுத்துக் கொண்டு ரிவேரா எனும் பிரம்மாண்டமான உலகப்புகழ்பெற்ற ஓவியரைப் பார்க்கக் கிளம்பினாள். ரிவேரா அப்போது மெக்சிகோவின் கல்வி அமைச்சகக் கட்டிடத்தின் காரிடார்களில் சுவர் ஓவியம் தீட்டிக்கொண்டிருந்தார்.

டீகோரிவேரா மூன்று வயதிலேயே வீட்டுச்சுவர்களில் படம் வரையத் துவங்கிய பிறவி ஓவியன். அவனுடைய வேகத்தைக் கண்டு அவனுடைய தந்தையார் அவனை சிறுவயதிலேயே மெக்சிகோவின் புகழ்பெற்ற ஓவியப்பள்ளியில் சேர்த்துவிட்டார். அன்று ஓவியர்களுக்கெல்லாம் புகலிடமாகத் திகழ்ந்த பாரிஸ் நகருக்குச் சென்று அங்கும் ஓவியம் கற்று சாதனைகள் புரிந்து புகழ்பெற்றார் ரிவேரா, இளவயதிலேயே ரகசிய கம்யூனிஸ்ட் குழுக்களுடன் தொடர்பு கொண்டு ஓவியத்தோடு மார்க்ஸியத்தையும் ஆழமாகக் கற்றார். வாழ்வின் ஒவ்வொரு துளியிலும் புதைந்து கிடக்கும் புரட்சியின் கூறுகளை வெளிக் கொணர்வதே தனது தூரிகையின் வேலை என்கிற உறுதியான நிலைபாட்டுக்கு ரிவேரா வந்தார்.

ஓய்வு ஒழிச்சல் இன்றி இரவு பகல் பாராது படைப்பில் ஈடுபடுவது ரிவேராவின் தனிப்பண்பு. பேய் மாதிரி வேலை செய்வார். அவர் வேலை செய்வதைப் பார்ப்பதற்கு ஏதோ ஒரு அதீத சக்தி அவரை இயக்குவது போலத் தெரியும். அவ்வளவு



படிப்பகம்

www.padippakam.com

வேகமும் லாவகமுமாய் தூரிகை நகரும்.

நான் வெறும் ஓவியன் அல்ல. ஒரு மரம் மலர்களையும் பழங்களையும் உற்பத்தி செய்வது போல ஓவியங்களை வெளித்தருகிற உயிரியல் நடவடிக்கையில் ஈடுபடும் மனிதன் நான் (I am not merely an artist, but a man performing his biological function of producing paintings just as a tree produces flowers and fruits) என்பது ரிவேராவின் வார்த்தைகள்.

சுவர் ஓவிய மறுமலர்ச்சி காலத்தின் நாயகனாக உலகெங்கும் அறியப்பட்ட ரிவேராவை புதிய சோவியத் யூனியன் தனது செம்படை கழகத்தில் (Red Army Club) சுவர் ஓவியம் தீட்ட அழைத்தது. ரிவேராவின் தலைமையில் ரிவேராவின் வீட்டில் ஓவியர்கள் மற்றும் சிற்பிகளின் சிண்டிகேட் என்ற அமைப்பு உருவாக்கப் பட்டது. அது ஒரு கொள்கைப் பிரகடனத்தையும் வெளியிட்டது.

நாங்கள் இத்தேசத்தின் ஒடுக்கப்பட்ட மக்களின் பக்கம் நிற்கிறோம். கலை வெளிப் பாடுகளை சமூக வயமாக்குவதே எங்களின் சொந்த அழகியல் லட்சியமாகும். தன்னை முன்னிறுத்தும் பூர்ஷ்வா (Individualism) அழகியலை தகர்த்தெறிய விரும்புகிறோம். அதீத - அறிவொளி வட்டங்களிலிருந்து உருவாகும் மேட்டிமைத்தனமான உயர்கலைகளை நாங்கள் கேள்விக்குள்ளாக்குகிறோம். கலைகள் யாவும் பொதுச் சொத்துக்கள் எனப் பிரகடனம் செய்கிறோம். அழகைப் படைக்கிற எல்லோரும் தனிமனித மனநிறைவுக்காக அல்லாமல் எல்லோருக்குமான அழகைப் படைக்க முன்வரவேண்டும். ஏனெனில் அப்படிப்பட்ட அழகுதான் புதிய வெளிச்சத்தைப் பாய்ச்சி மக்களை கிளர்ச்சிக்குத் தூண்டும் சக்திமிக்கது.

அக்டோபர் புரட்சியின் பத்தாவது ஆண்டு விழாவுக்கு மெக்சிகோவிலிருந்து சோவியத் யூனியன் சென்ற குழுவில் ரிவேரா இருந்தார். இரண்டாண்டுகள் சோவியத்தில் தங்கி இருந்து படம் வரைந்த காலத்தில் அங்கே இரண்டு சோவியத் பெண்மணியருடன் ரிவேரா காதல் கொண்டு ஒருவரை சோவியத் சட்டப்படி மணமும் புரிந்து வாழ்ந்து பிறகு இருவரிடமும் பிரிந்து கட்சியின் அழைப்பை மெக்சிகோ திரும்பினார். ஏற்கனவே அவரது மெக்சிக மனைவியான லூப்மாரின் உடனான உறவு முறிந்து விட்டிருந்தது. எனவே சோவியத்திலிருந்து திரும்பியிருந்த ரிவேரா இணை இன்றி தனியராய் இருந்தார்.

எப்போதும் கலைத்துறை சார்ந்த இளம்பெண்கள் அவரைச்சுற்றி கூட்டமாக இருந்துகொண்டே இருந்தனர். 'ரிவேராவுடன் நெருக்கமாக இருந்தவள் நான்' என்கிற பெருமை தனக்கு வேண்டும் (அது ஒரு ஃபேஷன் ஆகி விட்டிருந்தது) என்பதற்காக அமெரிக்காவிலிருந்து ஓடிவந்து சிலகாலம் ரிவேராவுடன் சுற்றிக் கொண்டிருக்கும் அமெரிக்கப் பெண்கள் நிறையப்பேர் இருந்தனர்.

பெண்கள் பின்னால் சுற்றுகிறவராக ரிவேரா இருந்ததே இல்லை. பெண்கள் தான் அவரைச் சுற்றிக் கொண்டிருந்தார்கள். அவர் உலகப் புகழ்பெற்ற ஓவியர் என்பதைத் தவிர வேற இரண்டு முக்கியமான காரணங்கள் அதற்கு உண்டு.

ஒன்று பெண்கள் பற்றி ரிவேராவின் ஆழமான அபிப்ராயம் - அது கலை உலகில் மிகப் பிரசித்தமாகியிருந்தது.

'இயல்பாகவே ஆண்கள் காட்டுமிராண்டிகள். இன்றைக்கும் அவர்கள் காட்டு மிராண்டிகளாகவே உள்ளனர். மனித குலத்தை முன்னுக்கு நகர்த்திக் கொண்டு வந்தது பெண்கள் தான் என்று வரலாறு நமக்குச் சொல்கிறது. ஆண்கள் வேட்டையாடிக் கொண்டும் சண்டை போட்டுக்கொண்டும் காட்டுமிராண்டிகளாக வாழ்வைத் தொடரவே விரும்பினர். பெண்கள் தான் வீடுகளில் இருந்து



The Broken Column (1944)

முப்பதுக்கும் மேற்பட்ட அறுவைச் சிகிச்சைகளுக்கு ஆளான முதுகுத்தண்டுக்கு ஆதரவாக தன் உடலுக்குள் பிளாஸ்டர், இரும்புத் தகடு போன்ற பல்வேறு பொருடகளை எப்போதும் சுமந்து திரிய வேண்டிய வேதனை மிக்க வாழ்வுதான் ஃபிரைடாவினுடையது. தன் ரணங்களையும், வலிகளையும் தன்னைப் பிளந்து உலகிற்குக் காட்டுகிறார் இந்த ஓவியத்தில் - பரிவை வேண்டி....



படிப்பகம்

www.padippakam.com

விவசாயத்தை - தொழில்களை - கலைகளை - படைத்தனர். அவர்கள்தான் முதன்முதலாக நட்சத்திரங்களைப்பற்றி ஆழ்ந்து யோசித்தவர்கள். கவிதையையும் கலையையும் உலகுக்குத் தந்தவர்கள்'.

வெறும் அபிப்பிராயமாக பேச்சளவில் நின்ற போகாமல் தன் சொந்த வாழ்விலும் தன்னோடு வாழ்ந்த பல பெண்கள் சொந்தக் கால்களில் நிற்பதை - சொந்த ருசியும் கனவுகளும் அபிப்ராயங்களும் அறிவும் உள்ள பெண்களாக இருப்பதையே ஊக்குவித்தார். எவரையும் சாராது தன் விருப்பப்படி இயங்கும் பெண்ணே அவரது லட்சியப் பெண்ணாக இருந்தாள்.

*(பெண்களைப் போற்றிய ரிவேரா பெண்களின் உடல்களையும் போற்றினார். பெண்களைப் பார்ப்பதற்கும் பேசுவதற்கும் மிக பிரம்மாண்டமான பேய்ப்பசியுடன் வாழ்ந்தவர் ரிவேரா.)*

பலரும் அவரைச் சுற்றுவதற்காக இன்னொரு காரணம் கலை உலகின் மிகப்பிரபலமான கதை சொல்லியாக ரிவேரா விளங்கியதாகும். எப்போதும் தன்னைச் சுற்றியிருப்பவர்களிடம் கதை சொல்லிக்கொண்டே யிருப்பது ரிவேராவின் பழக்கம். பெரும்பாலும் புனைவுகளே. தான் சோவியத் புரட்சிக்காக பாடுபட்ட கதை அல்லது மனித உடம்பை குறிப்பாக மிருதுவான பெண்களின் உடம்பை சாப்பிடத் துவங்கியுள்ள தனது சோதனை முயற்சி பற்றிய கதை என எப்போதும் கதை விடுகிற கவர்ச்சிகரமான நபராக ரிவேரா இருந்தார். ரிவேராவின் ஆகிருதியும் அவர் பெற்றிருந்த புகழைப்போலவே மிகப்பிரம்மாண்டமானது.

அவ்வளவு பெரிய ரிவேரா கல்வி அமைச்சகத்தில் சாரம் கட்டி உயரே நின்று வரைந்து கொண்டிருக்கிறார். அவரை கீழே நின்று சின்னஞ்சிறு ஃபிரைடா கைதட்டி, ரிவேரா கீழே வாங்க ஒரு முக்கியமான விஷயம் பேசணும் என்று அழைக்கிறாள்.

தன்னுடைய ஓவியங்களைக் காட்டுகிறாள் ஃபிரைடா. 'உங்களுடைய அபிப்ராயம் தெரிந்து கொள்ளவே இப்படங்களைக் கொண்டு வந்தேன். இன்னும் நிறைய வீட்டில் வரைந்து வைத்திருக்கிறேன்'. ரிவேரா படங்களை ஆழ்ந்து நோக்கி ஏதோ சொல்ல யத்தனித்த போது அவசரமாக அவரது வாயைத் தன் கையால் பொத்தி 'நீங்கள் பெண்கள் - அதுவும் இளம்பெண்கள் என்றால் ரொம்ப தாராளமாக புகழ்ந்து கதை யளப்பீர்கள் என்று என் நண்பர்கள் மூலம் கேள்விப் பட்டிருக்கிறேன். அப்படி எதுவும் சொல்லிவிட வேண்டாம். கறாரான உங்கள் விமர்சனத்தையே எதிர்பார்க்கிறேன். நான் ஓவியத்தை எனது தொழிலாகக் கொண்டு என் குடும்பத்துக்கு உதவ விரும்புகிறேன். எனவே உண்மையில் நான் தேறுவேனா என்பதை வெளிப்படையாகக் கூறுங்கள்'.

பிரைடாவின் விரைவும் துறுதுறுப்பும் தீர்க்கமான கண்களும் திறந்த பேச்சும் ரிவேராவை உடனே தாக்கிவிட்டன. நிறைய புகழ்ந்து தள்ள அவரது மனம் துடித்தாலும் அடக்கியே வாசித்தார். மூன்று படங்களில் இரண்டு சுமார் என்றும் ஒன்று மிக அற்புதமாக வந்திருப்பதாகவும் கூறித் தொடர்ந்து வரையவேண்டும் என்றும் சொன்னார். சொன்னதோடு அடுத்த வாரமே ஃபிரைடாவின் பிற ஓவியங்களைப் பார்ப்பதற்காக வீட்டுக்கே வந்துவிட்டார்.

'கடந்த இருபது ஆண்டு கால மெக்சிக ஓவியங்களின் அணிவகுப்பில் ஃபிரைடா காலோவின் ஓவியங்கள் மாற்றுக்குறைந்த நகைகளுக்கு மத்தியில் ஓர் உறுதியான தெளிவாக பட்டை தீட்டப்பட்ட வைரக்கற்களைப் போல ஜொலிக்கின்றன. மீண்டும் மீண்டும் வருகிற சுய ரூப சித்திரங்கள் (Self Portraits) மேலும் மேலும் ஃபிரைடாவைப் போல மாறிக் கொண்டிருக்கின்றன. ஃபிரைடாவின் ஓவியங்கள் ஒரே சமயத்தில் தனித்த அனுபவமாகவும் கூட்டு அனுபவமாகவும் இருக் கின்றன. அவளுடைய யதார்த்தமானது எல்லா வற்றையும் எண்ணற்ற பரிமாணங்கள் கொண்டதாக காட்டுகிற நிரந்தர யதார்த்தமாகும் என்று 1943ல் ரிவேரா எழுதினார்.

*ரிவேரா ஃபிரைடாவின் ஓவியச் சந்திப்பு காதலாக மாற அதிகஅவகாசம் எடுத்துக் கொள்ளவில்லை.* ஒருஅதிகாலை நேரத்தில் ஒரு வண்டி நிறையப் பூக்களோடு ரிவேரா ஃபிரைடா வீட்டுக் கதவைத் தட்டிக்கொண்டிருந்தார். ஃபிரைடாவைப் போல இருமடங்கு வயதும் பருமனும் கொண்ட ரிவேரா பைத்தியமாக ஃபிரைடா வைக் காதலித்தார்.

எந்நேரமும் வைத்தியம் பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய நிலையில் உள்ள தன் செல்ல மகள் ஃபிரைடாவை ரிவேராவுக்கு மணம் செய்து தர ஃபிரைடாவின் தந்தை தயாராகவே இருந்தார்.

'நீங்கள் என் மகளை விரும்புகிறீர்கள். அது பற்றி எனக்கு ஆட்சேபமில்லை. ஆனால் அவள் ஒரு பயங்கரமான சைத்தான். அது உங்களுக்குத் தெரியுமா?'

'தெரியும். அதனால்தான் அவளை மணம் செய்துகொள்ள விரும்புகிறேன்'

*1929 ஆகஸ்ட் 21* அன்று திருமணம் எளிய முறையில் நடைபெற்றது. அதே ஆண்டில் ரிவேரா கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து நீக்கப்பட்டார். பொதுச்செயலாளரான ரிவேரா குட்டிபூர்ஷ்வா மனப்பான்மையால் அழைக்கழிகிற பூர்ஷ்வா அரசாங்கத்துக்கு ஓவியம் தீட்ட ஒப்புக்கொண்ட - ஓவியர் ரிவேராவை கட்சியிலிருந்து நீக்கும் தீர்மானத்தை முன்மொழிந்தார். கட்சி அப்போது கறாரான ஸ்டாலினிஸ்டுகளின் பிடியில் இருந்தது.

'எனக்கென்று சொந்தமாக ஒரு வீடு இல்லை. கட்சிதான் எனது வீடாக இருந்தது. இன்று நான் வீடற்றவனாக தெருவில் நிற்கிறேன்' என்று தான் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து நீக்கப்பட்டது பற்றி ரிவேரா மனம் உடைந்து கூறினார்.

ஃபிரைடா ரிவேராவுக்கு வீட்டை உருவாக்கித் தந்து தான் பெற்ற மகனைப்போல ஆதரித்து



படிப்பகம்

www.padippakam.com

அரவணைத்தாள். திருமணமான முதல் ஆண்டுகளில் ஃபிரைடா ஒரு படம் கூட தீட்டவில்லை. ரிவேராவைக் கவனித்துக் கொள்வதே அவள் வாழ்க்கையாக இருந்தது. 'ரிவேராவின் தாய் நான்' என்கிற பிம்பம் பிரைடாவுக்கு மிகவும் விருப்பமானதாயிருந்தது. உண்மையில் அப்படியே ஆகியும் வாழ்ந்தாள். ஃபிரைடா தன்னை இழந்து ரிவேராவின் மனைவியாக மட்டுமே உயிர் வாழ்ந்தாள். கட்சித் தொடர்புகளையும் கூட விட்டு விட்டாள்.

1930ன் துவக்கத்தில் ஃபிரைடா முதல் கருச்சிதைவுக்கு ஆளானாள். பள்ளிப்பருவத்தில் நடந்த பஸ் விபத்தில் நொறுங்கிப்போயிருந்த இடுப்பு எலும்பே கருச்சிதைவுக்குக் காரணமாயிற்று. மெக்சிகோவில் கம்யூனிஸ்ட்களை வேட்டையாடும் ஒரு அரசு பதவிக்கு வந்தது. சுவர் ஓவியங்கள் பல சிதைக்கப்பட்டன.

அமெரிக்காவில் சுவர் ஓவியம் தீட்டும் ஒரு அழைப்பை ஏற்ற ரிவேராவுடன் ஃபிரைடா அமெரிக்கா சென்றாள். ஏராளமான நண்பர்கள் அங்கே கிடைத்தனர். ரிவேரா தன் பகல் நேரம் முழுவதையும் ஓவியம் தீட்டுவதில் செலவிட்டார். இரவு நேரங்களை இருவருக்குமான பொழுதுகளால் முதல் கோப்பையில் சொல்ல ஆரம்பித்த கதையை வீடு வந்து சேர்ந்தும் சொல்லிக்கொண்டே இருக்கும் பொழுதுகளாக கழிந்தன. கடும் உழைப்பின் காரணமாக அவ்வப்போது காய்ச்சலில் விழும் ரிவேராவை ஒரு தாயைப் போல அக்கறையோடு பரிபாலித்து மீட்டு எழுப்பினாள் ஃபிரைடா.

அமெரிக்காவில் இருக்கும்போதே இரண்டாவது முறை கருத்தரித்த ஃபிரைடா மீண்டும் கருச்சிதைவுக்க ஆளானாள். அதே ஆண்டில் அவளது தாயும் மறைந்துபோக மிகவும் சோர்வடைந்து பலம் குன்றிப்போனாள் ஃபிரைடா.

ரிவேரா அவளை வெறும் மனைவியாக மட்டுமே அழிந்துபோக விடாமல் ஓவியங்கள் தீட்டுவதில் மனதைச் செலுத்தத் தூண்டினார். அதே சமயம் எதையும் 'கற்றுக்கொடுத்து' அவளுக்குள் உறைந் திருக்கும் சுயாதீனமான படைப்பாற்றலை அழித்து விடவும் கூடாது என்கிற உணர்வுடன் ஃபிரைடாவை வழி நடத்தினார்.

தன் துயரங்களையும் வலிகளையும் தன் ஓவியங்களில் ஃபிரைடா வெளிப்படுத்தத் துவங்கினார். ஃபிரைடா வின் புகழ்பெற்ற ஓவியங்கள் அவருடைய தூரிகையினின்று வெளிப்படத் துவங்கின.

தங்களுக்காக பிரசித்தி பெற்ற (Blue House) அந்த நீல வண்ண வீட்டை ரிவேரா மெக்ஸிகோவில் கட்டினார். அந்த வீட்டின் அமைப்போ ரிவேராவின் மனநிலையைக் காட்டுவதாக இருந்தது. இரண்டு ஆளுமைகளும் சுதந்திரமாக செழித்து வளரும் விதமாக இரண்டு தனித்தனி வீடுகள் மாடியில் இரண்டும் இடையில் இணைப்புப் பாலம். ஒவ்வொரு வீட்டிலும் தனித்தனியே இருவரும் வேலை செய்ய ஸ்டுடியோ அறைகள். ஃபிரைடா ரிவேராவின் வருமானத்தை நம்பியிராமல் சொந்தமாக வாழும்படி ரிவேரா ஏற்பாடு செய்து கொடுத்தார்.

அவர்கள் காதல் வாழ்வும் தொடர்ந்தது. ஃபிரைடாவின் செல்லப்பிள்ளையாக தன்னை மாற்றிக்கொள்வதில் மிகுந்த ஆனந்தம் ரிவேராவுக்க இருந்தது. தினசரி ரிவேராவை குளிப்பாட்டி உடை மாற்றி அனுப்புவது இருவருக்கும் பிடித்தமான வேலை. யாரும் உற்சாகப்படுத்தாமல் தானாக குளிக்கும் பழக்கம் ரிவேராவுக்கு எப்போம் கிடையாது. சிறு குழந்தைகளுக்கான விளையாட்டுப்பொருள்களை




''கத்திரிக்கப்பட்ட கூந்தலுடன் நான்'' (1940)

ரிவேராவுக்கும், தன் தங்கை கிறிஸ்டினாவுக்கும் இடையே ஏற்பட்ட நெருக்கத்தை கண்டு மனமுடைந்த ஃபிரைடா ரிவேராவுக்கு பிடித்தமான தன் கூந்தலை கத்தரித்துக் கொண்டு ஆண் உடையிலான தோற்றத்துடன் தன்னை ஓவியத்தில் சித்தரித்துக் கொண்டார்.

''உன்னை காதலித்தேன், உன் கூந்தலுக்காகவே.
கூந்தல் இல்லை இப்போது
இனி காதல் இல்லை எப்போதும்.''

ரிவேரா ஃபிரைடாவுக்குச் சொல்லுவது போன்ற இப்பாடல்வரிகளை ஓவியத்தில் இசைக்குறிப்புகளாக வரைந்துள்ளார் ஃபிரைடா.



படிப்பகம்

www.padippakam.com

நிறைய பரிசாக ஃபிரைடா வழங்குவார். அதில் ரிவேராவுக்க மிகுந்த சந்தோஷமிருந்தது. தன்னுடைய விளையாட்டுப் பொருட்களை வீட்டுக்கு வரும் ஏதாவது குழந்தைகளுக்கு ஃபிரைடா எடுத்துக் கொடுத்துவிட்டால் அதற்காக நிஜமாகவே மனம் உடைந்து கண்ணீர் விட்டு சிணுங்கும் உண்மையான குழந்தையாக ரிவேரா இருந்தார்.

ஆனால் ஃபிரைடாவின் செல்லத் தவளையான ரிவேராவுக்கும் ஃபிரைடாவின் தங்கை கிறிஸ்டினா வுக்கும் இடையே உறவு முகிழ்த்திருப்பதை கண்டு பிடித்தபோது ஃபிரைடா நொறுங்கிப்போனாள்.

துரோகம்.ரிவேராவுக்கு மிகவும் பிடித்த தனது தலைமுடியை கத்தரித்து எறிந்துவிட்டு அவருக்குப் பிரியமான மெக்சிக நாட்டுப்புற அலங்காரத்தையும் தவிர்த்த (Self Portrait with cropped Hair) 'கத்தரித்த முடியுடன் எனது உருவம்' என்ற புகழ்பெற்ற ஓவியம், 'இரண்டு ஃபிரைடாக்கள்' போன்றவை அடுத்தடுத்து வெளிவந்தன.

இருவரும் விவாகரத்து செய்துகொண்டனர்.

ஃபிரைடா தன் நண்பர்கள் குழுவுடன் ஒருமுறை அமெரிக்கா சென்று வந்தாள். அங்கே இஸாமு நொகுச்சி என்ற புகழ்பெற்ற சிற்பியுடன் நட்பும் பின்னர் காதலும் மலர்ந்தது. இது ரிவேரா செய்த துரோகத்துக்குப் பழி வாங்கும் நடவடிக்கை என்று சொல்லலாம்.

ரிவேராவை விட்டுப் பிரிந்த ஃபிரைடா மேலும் தனித்தன்மை வாய்ந்த பெண்ணாக மாற்றமடைந்து நிறைய வரைந்தார்.

என்றாலும் எல்லாவற்றுக்கும் மேலாக ஃபிரைடாவால் தன் செல்லத்தவளையை மறக்க முடியவில்லை. ரிவேராவுக்கும் இதே நிலைதான். மீண்டும் இருவரும் ஓராண்டு இடைவெளிக்குப் பிறகு மறுமணம் செய்து கொண்டு நீல வீட்டில் வாழ்ந்தனர். ரிவேரா தன்போக்கில் பயணம் மேற்கொண்டிருக்க ஃபிரைடா பெரும்பாலும் தனிமையில் தன் பயணம் தொடர்ந்தார். ஒரே சமயத்தில் புற உலக யதார்த்தங்களையும் தன் சொந்த அகவயப்பட்ட பயணத்தையும் இணைக்கிற சக்திமிக்க ஓவியங்களை இக்காலகட்டத்தில் ஃபிரைடா வரைந்தார்.

பாரிஸிலிருந்து உலகறிந்த சர்ரியலிஸ எழுத்தாளரும் ஓவியருமான ஆந்த்ரே பிரெட்டன் மெக்ஸிகோவுக்க வந்து ஃபிரைடாவின் ஓவியங்களைக் கண்டு அதிர்வுக்குள்ளானார். ஐரோப்பாவுக்கு வெளியே தான் சந்திக்கும் முதல் சர்ரியலிஸ்ட் ஓவியர் ஃபிரைடாதான் என பிரகடனம் செய்தார்.

ஃபிரைடாவை பாரிசுக்கு வரவழைத்து பிற சர்ரியலிச ஓவியர்களுக்கு அறிமுகம் செய்து வைத்து ஃபிரைடாவின் ஓவியக்காட்சிக்கும் ஏற்பாடு செய்தார். ஓவியர் பிகாசோ ஃபிரைடாவின் ஓவியங்களால் வெகுவாக தாக்குண்டு ஃபிரைடாவின் நண்பரானார். பிகாசோ அன்பளிப்பாக வழங்கிய காதணியை அணிந்துகொள்ள எப்போதும் ஃபிரைடா விருப்பப்பட்டார்.

ஆனால் தான் ஒரு சர்ரியலிஸ்ட் என்பதை ஃபிரைடா ஒப்புக்கொள்ளவில்லை.

'சில விமர்சகர்கள் என்னை சர்ரியலிஸ்ட் என வகைப்படுத்துகிறார்கள். ஆனால் நான் ஒன்றும் சர்ரியலிஸ்ட் அல்ல. என் ஓவியங்களில் சர்ரியலிசத் தன்மை இருக்கிறதா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் என் படங்களில் வந்துள்ளவை எல்லாமே அதிகபட்ச வெளிப்படைத்தன்மையுள்ள என் சுயத்தின் யதார்த்த வெளிப்பாடாகும். கனவுகளை நான் வரையவில்லை. என் யதார்த்தமே அதுதான் மேலும் சர்ரியலிசத்தை நான் மறுதலிக்கிறேன். அது அழுகி வரும் பூர்ஷ்வா கலையின் வெளிப்பாடாகும். மக்கள் கலைஞனிடம் எதிர்பார்க்கிற உண்மையான கலையை திசை திருப்புவதாகும். என்னுடைய மக்களுக்கு அர்த்தமுள்ளதாக என் படைப்புகள் அமைய வேண்டும். விடுதலைக்காகவும் அமைதிக்காகவும் நடத்தப்படுகிற மக்களின் போராட்டங்களுக்கு எனது பங்களிப்பாக எனது படைப்புகள் அமைய வேண்டும் என்றே விரும்புகிறேன்'.



ரிவேராவுடன் அமெரிக்காவில் வாழ்ந்த காலத்தில் ஃபிரைடா மனஒவ்வாமையுடனே நாட்களைக் கழிக்க நேர்ந்தது.மெக்ஸிக்கோவின் குன்றுகளும் பூர்வகுடி கலாச் சாரமும் அவரை அயைழத்துக் கொண்டே இருக்க, இயந்திரங்கள் நிறைந்த பணத்தின் கோவிலான அமெரிக்கா வின் காற்றே ஃபிரைடாவுக்கு மூச்சுத் திணறலை ஏற்படுத்தி யது. இந்த நாட்டில் நமக்கென்ன வேலை? என அவர் நினைத்தார். ஆனால் ரிவேராவோ முதலாளித்துவத்தின் மூலஸ்தானத்திலேயே லெனினையும், அரிவாள் சுத்தியலை யும் சுவர் ஓவியமாய் தீட்டுவதில் தீவிரமாய் இருந்தார். 'மெக்ஸிகோவுக்கும், யு.எஸ்.ஸுக்கும் இடையில் நான்' என்ற இந்த ஓவியத்தை ஃபிரைடா அப்போது வரைந்தார்.



படிப்பகம்

www.padippakam.com

என்று 1952ல் ஃபிரைடா எழுதினார். ஆனால் விமர்சகர்கள் விடுவதாயில்லை. பிறகு ஃபிரைடாவின் டைரிக்குறிப்புகள் சர்ரியலிசத்தன்மை கொண்டவை என்று எழுதலாயினர்.

1944 முதல் தன் இறுதி நாட்கள் வரை ஒரு சிகப்பு வண்ண தோல் அட்டை போட்ட என்று எழுத்துக்கள் பொறித்த ( இது முன்பு கவிஞர் ஜான்கீட்ஸ் பயன் படுத்திய டைரி என்றும் ஒரு நண்பர் அன்பளிப்பாக இதை ஃபிரைடாவுக்கு வழங்கியது என்றும கூறப்படுகிறது) டைரியில் தன் தனிமொழியை தன் மனம் போனபடி வார்த்தைகளாலும் நீர் வண்ண ஓவியங்களாலும் பதிவு செய்துள்ளார் ஃபிரைடா.

மீண்டும் மீண்டும் முதுகுத்தண்டில் அறுவைச் சிகிச்சைகள் - வலது காலில் முன்பகுதி விரல்கள் வெட்டி எடுக்கப்பட்டது - என எப்போதும் படுக்கையிலேயே கிடக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

மனம் உடைந்தாலும் மீண்டும் எழுகிற ஆவேசம் பிரைடாவுக்கு இருந்தது. படுத்தபடியே ஓவியங்களை வரையத்தன்னை பழக்கப்படுத்திக் கொண்டார். 1948ல் மீண்டும் தன்னை கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைத்துக்கொண்டார். சக்கரவண்டியில் அமர்ந்த படியே சில போராட்டங்களிலும் பங்குகொண்டார்.

1937ல் அரசியல் தஞ்சம் தேடி அலைவுற்ற சோவியத் புரட்சியின் நாயகர்களில் ஒருவரும் பின்னர் ஸ்டாலின் காலத்தில் மக்கள் விரோதி என முத்திரை குத்தப்பட்டு நாடுகடத்தப்பட்டவருமான ட்ராட்ஸ்கியும் அவரது மனைவி நட்டாலியாவும் ரிவேராவின் உதவியால் மெக்சிகோ வந்து அவர்களின் நீல வீட்டில் தங்கினர்.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 15வது காங்கிரசில் எடுக்கப்பட்ட முடிவின்படி வெளியேற்றப்பட்ட ட்ராட்ஸ்கி ஒன்பது ஆண்டு காலம் நாடுவிட்டு நாடு அலைந்து திரிந்து இறுதியில் மெக்ஸிகோ வந்து சேர்ந்தது அவருக்கு மிகுந்த இளைப்பாறுதல் தந்தது. அச்சமயம் ரிவேரா மெக்சிகோவின் டிராட்ஸ்கியிஸ்ட் கட்சியில் முக்கிய பொறுப்பில் இருந்தார். (ஃபிரைடாவுக்கு அதில் உடன்பாடு இல்லாதிருந்தது) நண்பகள் மத்தியில் வந்து சேர்ந்தது ட்ராட்ஸ்கியை விட அவரது மனைவி நடாலியாவுக்கு மிகுந்த மன அமைதியைத் தந்தது.

கம்யூனிஸ உலகில் பெரிதும் மதிக்கப்பட்ட அறிவு ஜீவியான ட்ராட்ஸ்கியின் துறுதுறுப்பும் தீர்க்கமும் உறுதியும் மேதமையும் ஃபிரைடாவை ஈர்த்தன. ரிவேரா ட்ராட்ஸ்கியின் மீது கொண்டிருந்த பிரமிப்பும் மரியாதையும் ஃபிரைடாவின் மீது கவிந்தது. ஏற்கனவே ட்ராஸ்கியும், பெண்களின்பால் மிகுந்த ஈடுபாடு கொண்டவராயிருந்தார். அவரும் ஃபிரைடாவை நோக்கி தன் கவனத்தைத் திருப்பினார். இருவருக்கும் இடையில் நேசம் மலர்ந்தது. ரிவேராவுக்கும் தெரியாது. நடாலியாவுக்கும் தெரியாது. ஃபிரைடா வுக்கு கண்டிப்பாக படிக்க வேண்டிய புத்தகம் இது என்ற சிபாரிசுடன் தினசரி ஒரு புத்தகத்தை ட்ராட்ஸ்கி கொடுத்துக்கொண்டிருந்தார் - உள்ளே காதல் கடிதத்துடன்.

எப்போதும் வெடித்துவிடக்கூடும் என்று அச்சமூட்டும் அளவுக்கு இருந்தாலும் அடக்கி வைக்கப்பட்டது வெளித்தெரியாமல் உறைந்து நிற்கும் உணர்ச்சி வெள்ளமான ஃபிரைடா தன் 29 வயதில் 55வயது ட்ராட்ஸ்கியை அப்படியே அடித்துச்சென்றதில்



படுக்கையுடன் ஓவியக் கண் காட்சிக்கு வந்த ஃபிரைடா (1953)



ஃபிரைடா கடைசியாக கலந்து கொண்ட ஆர்ப்பாட்டம் (1954)



ஃபிரைடாவும் ரிவேராவும் இறுதி நாட்களில் (1954)



படிப்பகம்

www.padippakam.com

வியப்பொன்றும் இல்லை. ஆனால் அவள் உண்மையில் ட்ராட்ஸ்கியிடம் மனதைக் கொடுத்தாளா? என்பது சந்தேகத்திற்குரியதே. ஏனெனில் தன் தங்கை கிறிஸ்டினாவுடன் உறவு கொண்டு தனக்குத் துரோகம் செய்த ரிவேராவை கூர்மையாகப் பழிவாங்க சரியான -துல்லியமான நடவடிக்கை மேதை என்றும் புரட்சி நாயகன் என்றும் ரிவேரா மதிக்கிற ட்ராட்ஸ்கியையே தன் காலடியில் வீழ்த்துவது தான் என்றே ஃபிரைடாவின் மனம் திட்டமிட்டது.

சில தினங்களிலேயே ட்ராட்ஸ்கி - ஃபிரைடா உறவு முறிந்துவிட்டது. ஃபிரைடா சிகரெட் பிடிப்பதைப் பற்றி ட்ராட்ஸ்கி அடிக்கடி கண்டித்துக் கொண்டிருந்தார். பத்தாம் பசலியான அபிப்ராயங் களுடன் வாழும் அந்தக் கிழவன் மிகவும் சலிப்பூட்டிவிட்டார் (I was very tired of that old man) என்று பின் நாட்களில் தன் தோழி ஒருவருக்கு ஃபிரைடா எழுதினார்.

ஃபிரைடா தனது பெயரை Frieda என்றுதான் ஜெர்மானிய உச்சரிப்பின்படி எழுதி வந்தார். ஏனெனில் ஃபிரைடாவின் தந்தை ஹங்கேரிய யூதப் பெற்றோர்களுக்கு பிறந்த ஒரு ஜெர்மானியர். அந்த நினைவுக்காக தன் பெயரை ஜெர்மானிய வாசம் வீசும்படி FRIEDA என எழுதிவந்தார். ஆனால் ஜெர்மனி ஹிட்லரின் ஜெர்மனி ஆனவுடன் தன் எதிர்ப்புணர்வை வெளிப்படுத்தும் விதமாக பாசிசத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் போராட்டங்களில் பங்கேற்றதோடு FRIDA என்று தன் பெயரை எழுதத் துவங்கினார்.



ஃபிரைடா வரைந்த ''மார்க்ஸியம் நோயுற்றவருக்கு சுகம் தரும்.'' என்ற ஓவியம்.

*1948*ல் ஃபிரைடா மீண்டும் தன்னை கம்யூனிஸ்ட் கட்சியில் இணைத்துக்கொண்டார். *1950*ல் மட்டும் முதுகுத்தண்டில் ஏழு அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டன. ஒன்பது மாதம் மருத்துவமனையில் இருந்தாள். படுத்தபடியே படம் வரையும் விதமாக கட்டிலும் வரைமேடையும் வடிவமைத்துக் கொடுத்தார் ரிவேரா.

*1953*ல் அவரது வலது கால் மிகவும் மோசமடைகிறது. உயிரைக் காப்பாற்ற முழங்காலுக்கு கீழே அவரது கால் வெட்டி எடுக்கப்படுகிறது.

டாக்டர்களின் இந்த முடிவை கேள்விப்பட்ட உடன் ரிவேரா அதிர்ந்துபோய் சொன்னது 'இனி அவள் இறந்து விடுவாள்'.

மெக்சிகோ தேசமே தங்கள் செல்ல மகளின் நிலைக்காக கண்ணீர் சிந்தியது. தேசத்தின் பிரபலமான கலைஞர்கள் ஒன்றுகூடி மெக்சிகோ சிட்டியில் பிரைடாவின் ஒருநபர் கண்காட்சிக்கு ஏற்பாடு செய்தனர். யாரும் எதிர்பாராத விதமாக படுத்த படுக்கையோடு ஃபிரைடா அக்கண்காட்சிக் கூடத்துக்கு வந்து சேர்ந்தார். நண்பர்கள் எல்லாம் அவளைச் சுற்றி வட்டமாக கை தட்டி பாடியபடி சுற்றிச் சுற்றி வந்தனர். ஃபிரைடாவின் வாழ்வில் மறக்க முடியாத நாளாக அது அமைந்தது.

அளவுக்கு அதிகமான வலிநிவாரணிகளும் வலியை மறக்க குடிப்பழக்கமும் என பெரும்பாலான நேரம் மயக்கத்திலேயே இருக்க நேரிட்டது. 'துயரங்களை மறக்க நான் மிதமிஞ்சிக் குடிக்கத் துவங்கினேன். ஆனால் அந்தச் சனியன்கள் நாளாவட்டத்தில் நீந்தி மேலேறி வந்து மிரட்டப்பழகிவிட்டன. என் வாழ்வின் மீது இரவு கவியத் தொடங்கிவிட்டது' என்று தன் டைரியில் எழுதினார்.

நீல வீடு வந்த பிறகு படுக்கையில் தூக்கமும் மயக்கமுமாக கழிந்த நாட்களில் விழிப்பு வரும்போது ரிவேரா தன் அருகில் இல்லை என்பதே ஃபிரைடாவுக்கு முதலில் உறுத்தும். ரிவேரா எப்போதுமே தன்னோடு இருக்கவில்லை என்ற ஏக்கம் அவர் நெஞ்சில் படிந்தது. ரிவேராவோ இரவு பகல் உணவு தூக்கம் எல்லாவற்றையும் தன் ஸ்டுடியோவிலேயே வைத்துக்கொண்டார். தறி கெட்டுப்போகும் மருத்துவச் செலவுகளைச் சமாளிக்க தினசரி இரண்டு படங்களாவது வரைந்து முடிக்க வேண்டிய கட்டாயம் இருந்தது.

ஃபிரைடாவை இந்தக் கோலத்தில் பார்க்கவும் அருகில் இருக்கவும் ரிவேராவுக்கு துணிவு வரவில்லை. பலசமயம் ஃபிரைடாவைக் காண ஓடி வருவார். மாடிப்படி ஏறி அறைக்குச் செல்லும் தெம்பு இழந்து



படிப்பகம்

www.padippakam.com

கீழேயே சோர்ந்து விழுந்து - பலமுறை கதறி அழுதவராக அப்படியே திரும்பி விடுவார்.

ரிவேராவைப் பற்றிய ஞாபகங்களும் உணர்வுகளும் ஃபிரைடாவுக்கு நொடிக்கு நொடி மாறிக் கொண்டிருந்தது.

என் செல்லத்தவளை எங்கே என்று ஒரு சமயமும் என்னைக் கைவிட்டுவிட்டான் என்று ஒரு சமயமுமாக கொப்பளிக்கும் அன்பும், அறுக்கும் குரோதமுமாய் ஃபிரைடாவின் நிமிடங்கள் கரைந்தன. அமைதியான மனநிலை இருக்கையில் தன்னை டெகுவானா விவசாயப் பெண்மணியைப்போல சிகை அலங்காரம் செய்துகொண்டு மோதிரங்கள் அணிகலன்கள் எல்லாம் அணியச்செய்து படுத்திருப்பார். டைரி எழுதுவார்.

மிக அமைதியான வெளியேற்றத்துக்கான நாளை ஃபிரைடா எதிர்நோக்கத் துவங்கினார். டைரியில் எதிர்வரும் தன் மரணம் பற்றி பிரம்மாண்டமான மிக அமைதியான வெளியேறும் வழி (Enormous and very silent exit) என்று எழுதினார்.

"சத்தமே இல்லாத வலி சத்தமான துயரம்
ஒன்று குவிந்துவிட்ட விஷம்
காதல் என்னை விட்டுப்போய்க் கொண்டிருந்தது
இப்போது என்னுடைய உலகம் வேறானது.
கொடூரமான அமைதியுடன் (of criminal silences)"

டாக்டர்கள் அவளுக்கு செயற்கைக்கால் கொண்டு வந்து பொருத்த முயன்ற போது 'பறக்கச் சிறகுகளுடன் இருக்கும் எனக்கு செயற்கைக் கால்கள் எதற்கு' என்று கோபத்துடன் தூக்கி எறிந்தாள்.

ஓரிருமுறைகள் தற்கொலைக்கு ஃபிரைடா மேற் கொண்ட முயற்சிகளும் பலனளிக்கவில்லை. தனது இரவு நெருங்குவதை உணர்ந்த ஃபிரைடா மிகுந்த ஆவேசத்துடன் மீண்டும் ஓவியம் தீட்டத்துவங்கினாள். 'ஸ்டாலினும் ஃபிரைடாவும்' 'நோயுற்றவர்களை மார்க்சியம் குணப்படுத்தும்' போன்ற ஓவியங்களை வரைந்தேன்.

தன் மீது அரிவாள் சுத்தியல் நட்சத்திர சின்னம் எம்பிராய்டரி செய்யப்பட்ட டவலை எப்போதும் போர்த்திக் கொண்டிருந்தார். மார்க்சியத்தை அவர் அப்போது உள் வாங்கிக் கொண்டிருந்த விதம் எவரையும் அதிரச்செய்கிற தாயிருந்தது.

'கடந்த காலங்களில் எப்போதும் இருந்திராத அளவுக்கு நான் ஒரு கம்யூனிஸ்ட் ஜீவியாக இருக்கிறேன். என் தேசத்தின் வரலாற்றை நான் கற்றிருக்கிறேன். பெரும்பாலும் எல்லா தேசங்களின் வரலாற்றையும் கற்றிருக்கிறேன். அவர்களின் பொருளாதாரங்களும் வர்க்க முரண்பாடுகளும் எனக்குத் தெரியும். மார்க்ஸ், எங்கல்ஸ், லெனின், ஸ்டாலின், மாவோ ஆகியோரின் இயக்கவியல் பொருள் முதல்வாதத்தை நான் நன்றாகப் புரிந்து கொள்கிறேன். எதிர்கால புதிய உலகத்தின் தூண்கள் இவர்கள். நுட்பங்கள் நிறைந்த கம்யூனிச அமைப்பின் ஒரு ஜீவ செல் நான். புதிய சோவியத், நவசீனம், செகோஸ்லோவேகிய - போலிஷ் மக்கள் எல்லாரும் என்னோடு ரத்தவழி சம்பந்தமுடையவர்கள் என்னோடும் என்வழியே என் சொந்த மெக்சிக மக்களோடும் விதவிதமான அடுக்கடுக்கான இந்த மக்களை இனங்களின் முகங்களுக்கு நடுவே எப்போதும் என் சொந்த முகம் என் சொந்த மெக்ஸிக முகங்கள் இருண்ட தோலும் அழகிய வடிவும் அளவற்ற மிளிர்வும் மிடுக்கும் கொண்ட எனது கறுத்த மக்கள் - என் கறுப்பு மனிதர்களும் விடுதலை பெறுவார்கள் - அவர்கள் அத்தனை அழகும் வீரமும் உடையவர்கள்'.

என்று எழுதிய ஃபிரைடா 'புரட்சி என்பது வடிவங்கள் வண்ணங்கள் மற்றும் வாழ்க்கை எனும் ஒரே விதியின் கீழ் இயங்கும் அத்தனை விஷயங்களின் ஒத்திசைவேயாகும்' என நம்பினர்.


ஸ்டாலின் மறைந்தபோது 'நான் என் நிதானத்தை இழந்துவிட்டேன். ஸ்டாலினோடு தனிப்பட்ட முறையில் நெருங்கிப் பழகி நேசம் வளர்க்க விரும்பியிருந்தேன். இனி அது சாத்தியமில்லையே. எதுவும் நிற்பதில்லை. எல்லாமே புரட்சிகரமாகிவிடுகிறது' என தனது டைரியில் எழுதினார்.

'இன்றுவரையிலும் கட்சிக்கு ஒரு பைசா பாக்கி இல்லாமல் எல்லா லெவியையும் சந்தாவையும் கட்டிவிட்டேன்' என்று தன் தோழி ரோஸாவுக்கு எழுதினார்.

சி.ஐ.ஏ வின் தலையீட்டால் குவாதிமாலா ஜனநாயகஆட்சி கவிழ்க்கப்பட்டதை எதிர்த்து கட்சியின் அறைகூவலின்படி நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் தள்ளுவண்டியில் அமர்ந்தபடி ஃபிரைடா கலந்துகொண்டார். அது ஜூலை -2ம் நாள் 1954.

ஜூலை - 13 இரவில் தூக்கத்திலேயே ஃபிரைடாவின் உயிர் பிரிந்தது.

ரிவேரா டாக்டர்கள் கூற்றை நம்ப மறுத்தார்.




ஃபிரைடாவின் டயரிப் பக்கங்கள்



படிப்பகம்

www.padippakam.com

ஃபிரைடா எப்படி சாவாள்? என்று வாதிட்டார். ஃபிரைடாவின் உடலில் நடுநரம்பை வெட்டிக் காட்டி இரத்தம் உறைந்து நிற்பதை காட்டிய பிறகே ரிவேரா ஒப்புக் கொண்டார்.

ஃபிரைடாவின் தோழிகள் அவளுக்குப் பிரியமான எல்லாவித அணிகலன்களை அணிவித்து ஃபிரைடாவை அலங்கரித்தனர். மெக்சிகோவின் தேசிய கலாச்சார மையக் கட்டிடத்தில் ஃபிரைடாவின் உடல் வைக்கப்பட்டிருந்தத. அரசியல் கோஷங்களோ உரைகளோ கூடாது என்ற நிபந்தனையின் பேரில் அரசு கட்டிடத்தை திறந்துவிட்டது.

ரிவேரா தனிமையில் தன் அறைக்கதவை பூட்டிக்கொண்டு உள்ளே கிடந்தார். கதவைத் திறந்தபோது வயதாகிக் கிழமாகிப் போன வேறு ஒரு ரிவேரா வெளியே வந்தார்.

ஃபிரைடாவின் இறுதி ஊர்வலம் துவங்கியது. முன்னாள் ஜனாதிபதியிலிருந்து பல்வேறு கலை உலக மற்றும் அரசியல் தலைவர்கள் பின்தொடர ஊர்வலம் உடலை எரியூட்டும் (Crematorium) இடத்துக்குச் சென்றது.

பாடல்கள் பாடப்பட்டன. உரைகள் அழுகையும் கதறலுமான அஞ்சலி.

தீக்கிடங்கின் வாய் திறந்தது. வெக்கை வீசியடித்தது. அறையில் கூடி நின்ற நெருங்கிய நண்பர்கள் வெக்கை தாளாமல் சுவர் பக்கமாக முகம் திருப்பி நகர்ந்தனர். ரிவேரா தீக்கதவின் வாய்க்கு நேராக அசைவற்று நின்றார். முகத்திலும் உடலிலும் எந்தச் சலனமுமில்லை. ஃபிரைடாவின் உடல் சக்கர நாற்காலியில் அமர்ந்த நிலையில் கதவருகே கொண்டுசெல்லப்பட்டது. நண்பர்கள் கதறியழுதபடி ஓடி ஆளுக்கொன்றாய் அவள் உடலிலிருந்த மோதிரம், அணிகளை எடுத்துக்கொண்டனர். ரிவேரா எந்தச் சலனமும் இன்றி அப்படியே நின்ற இடத்தி லேயே நின்றார்.தீ வாய்க்குள் சக்கர நாற்காலி நழுவி இறங்கியது.சடாரென ஃபிரைடாவின் கூந்தலில்தான் முதலில் தீப்பற்றி தேகம் விறைத்து எழுந்து சூரிய காந்திப்பூ போல ஒரு கணம் ஃபிரைடாவின் முகம் தோன்றியது. கதவு மூடியது. அப்போதும் ரிவேரா எந்தச் சலனமும் இன்றி தீக்கதவைப் பார்த்தபடியே நின்றார்.

சில நிமிடங்களில் மீண்டும் தீக்கதவு திறந்தது. சக்கர நாற்காலி வெளியே வந்தது. புனையா ஓவியம் போல் ஃபிரைடாவின் உருவம் அமர்ந்த வடிவிலேயே வெள்ளை நிறத்தில் சாம்பல் நாற்காலியில் அமர்ந்திருந்தது. அதுவரையிலும் சலனமற்ற நின்றிருந்த ரிவேரா தன் கால்சட்டைப் பையிலிருந்து தன் ஸ்கெட்ச் புத்தகத்தை எடுத்து பென்சிலால் ஃபிரைடாவின் சாம்பல் உருவை வரையத் துவங்கினார். வரைந்து முடிந்ததும் நிற்கும் சக்தி இழந்து இற்று விழுந்தார்.

அடுத்த இரண்டாவது ஆண்டில் தம் சொத்துக்களை எல்லாம் தேசத்துக்கு அர்ப்பணம் செய்து எழுதி வைத்துவிட்டு ரிவேராவும் மறைந்தார்.

தூரத்துக் கடல் என்னை அழைக்கிறது.
விடைபெறுகிறேன் என் அன்பே
என்றென்றுமாக விடைபெறுகிறேன்.
இனி எப்போதும்
நீ என்னைப் பார்க்க முடியாது
என் பாடல்களை கேட்கவும் முடியாது
ஆனால் கடல்கள் என் கண்ணீரால்
நிரம்பி நுரைபொங்கித் ததும்பி
உனைத் தேடி கரைநோக்கி ஓடிவரும்
அலையென.
அன்பே விடைகொடு.

ஃபிரைடா



ஃபிரைடா கடைசியாக வரைந்த முற்றுப்பெறாத ஓவியம்; ஸ்டாலின்



படிப்பகம்

www.padippakam.com

## தாகம்

வானையே குடித்த பின்னும்
உஷ்ணமாய் புகைகிறது பூமி
பாரம் தாங்காத காளையின்
ஊமை அழுகை
உமிழ்நீர்க் கோலமாகிறது மண்ணில்
அரைப்பாவாடைச் சிறுமி
கையேந்தி இரந்து நிற்கிறது
இதயங்களை
குழாயின் வாயில் அலகுசெருகி
அண்ணாந்து பருகுகிறது காகம்
எத்தனைப் பிரளயங்கள்
எனக்குள்
நான் வரைந்திருக்கும்
காலவரலாற்றின்
பிரபஞ்ச ஓவியம்
கண்ணுக்குப் புலனாகா.

## மோனம்

ஒரு துளியாய் விழ்ந்த பொழுது
தெரியவில்லை
சேரப்போவது ஒரு சமுத்திரமென
அலைஅலையாய் அலைகிறேன்
அகண்டு கிடக்கிறது கடலென அறியாமல்
கரையிலே ஒதுக்கிப்போடும்
உன்கரங்களை
இறுகப்பற்றிக் கொள்கிறேன்
உன்னே இழுத்துச்செல்.

## தவம்

ஒற்றை விரலால்
கிணறு தோண்டும் முயற்சி
காலம் இருட்டி
வைகறையாயிற்று
தாரை தாரையாய்
தண்ணீர் வழிந்தது
எட்டிப்பார்க்கையில்
எதிரொலித்தது என்முகம்
உள்ளே விழுந்து
ஒன்றாகி விட்டேன்.

## ஓலம்

திக்கற்றவள் தேவதை
தெருவில் திரியும்
துண்டுக் காகிதமாய் அலைபவள்
பாக்கியசாலி
ஆனந்த நதியின் பயணம்
அலைகடல் சேரும்வரை
துயரத்தின் ஓலமோ
அலையும் காலதூரம்.


## துளிகள்

அலைகிறது ஒரு நதி
அலைகளற்ற கடல்தேடி
இதயத்தைத் தொலைக்காதவரை
தூண்டிலின் புழுவாய் இதயம்
பின்னும்.......
மழையின் ஓய்தலில்
முகம்பார்க்கத் தெளிந்துகிடக்கும்
குட்டைகள்.
நான் பயணிக்கும் பேருந்து
என்னைக் கடந்து செல்வது
நான் இறங்கிய பின்புதான்.

## ரேவதியின் கவிதைகள்

கவியும் இருளில்
தொலைந்த முகத்தைத்
தடவித் தேடுகிறேன்
தட்டுப்படுவது
முகம்தானா என்றறிய
தொலைக்கும்முன்
ஒரு முறையேனும்
தன் முகத்தை உணர்ந்திருக்கவேண்டும்.

ரேவதி






படிப்பகம்

www.padippakam.com

# இந்து வகுப்புவாத இயக்கத்தில் பெண்கள்

மைதிலி சிவராமன்

சங் பரிவாரத்தின் மகளிர் அணிகளைச் சார்ந்தவர்கள் மீது இவ்வமைப்புகள் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றன? இம்மகளிர் அமைப்புகள் இந்திய மாதர் இயக்கத்தின் முன் வைத்துள்ள சவால்கள் என்ன? இக்கேள்விகளை சுருக்கமாக பரிசீலிப்போம்.

ஆர். எஸ். எஸ்ஸின் மகளிர் அணியான ராஷ்ட்டிர சேவிகா சமிதியின் உறுப்பினர்கள் 'ஷாக்கா' க்களில் உடற்பயிற்சியும் இந்து மத போதனையும் பெற்றவர்கள். பெண்களுக்கு உடற்பயிற்சி என்பது சுமார் 60 ஆண்டுகளுக்கு முன் புதுமையான, பாரம்பரியத்திற்குப் புறம்பான கருத்தல்லவா என்றால் உண்மைதான். அதே சமயம் உடற்பயிற்சிக்குத் தூண்டுகோலாக என்ன அமைந்தது எனப் பார்க்க வேண்டும். உடல் வலிமை பெற்ற தாயால் தான் பலசாலிகளான குழந்தைகளைப் பெற்று பலம் பொருந்திய அகண்ட இந்து இந்தியாவை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கையே தூண்டுகோல். இருப்பினும் பெண்களுக்கு உடற்பயிற்சி கிடைத்தது மிகத் தேவையானதே. விஸ்வ இந்து பரிஷத்தின் பெண்கள் பிரிவு துர்கா வாஹினி. துர்கையைப்போல் ''அவர்களை'' (முஸ்லிம்களை) சம்ஹாரம் செய்வதற்கு ஏற்ற பெயர். பா.ஜ.க.வின் மாதர் அமைப்பு 'மஹிலா மோர்ச்சா.' இவர்களில் மிகப்பெரும்பான்மையினர் ராஷ்ட்டிர சேவிகா சமிதியில் உறுப்பினர்கள். இவை அனைத்தினூடேயும் இழையோடும் ஒரு பொதுவான அம்சம் மதம், தேசபக்தி என்ற முகமூடிகளின் அடியே உள்ள பாசிச தன்மை கொண்ட அரசியலே. இந்து ஆதிக்கத்தை நிலை நாட்டுவதே இதன் பிரதான நோக்கம்.

வீட்டுக்குள்ளேயே வேலையில் மூழ்கியிருந்த பெண்களை இந்துத்துவம் வீதிக்குக் கொண்டுவந்து பலவிதமான நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி வருகிறது என்பது எதார்த்தம். இவ்வியக்கத்தைச் சார்ந்தவர்கள் குறிப்பாக இளைஞர்கள் சில பெண்ணுரிமை கோரிக்கைகள் பற்றி பேசியும் எழுதியும் வருகிறார்கள். அப்படியானால் இந்துத்துவம் பெண்ணடிமைத்தனத்திற்கு எதிரான சக்தியா என்ற கேள்வி எழுகிறது. இதற்கு வரலாற்றாசிரியர் தானிகா சர்கார் அளிக்கும் பதில் ''இப்பெண்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள சமூக ஈடுபாடு ஒரு வரையறைக்குள் அடங்கும். ஆணாதிக்க சமுதாயத்தின் ஒரு புதிய வடிவத்திற்குள் பெண்கள் அடங்குவது இவ்வுரிமைகளைப் பெறுவதற்கான நிபந்தனையாகும்.'' ஆர்.எஸ்.எஸ்ஸின் சமிதி மற்ற மாதர் அமைப்புகளிலிருந்து எப்படி வேறுபடுகிறது என்ற கேள்விக்கு சமிதியின் சார்பில் சொல்லப்பட்டது ''திருமணப்பிரச்சினைகளுக்குக் கணவன்தான் காரணம் என்று நாங்கள் சொல்வதில்லை. தம்பதிகளிடையே ஏற்படும் பிரச்சினைகளில் நாங்கள் பெண்கள் பக்கம் சாயாமல் நடுநிலை வகிக்கிறோம். குடும்பத்தைப்பாதுகாக்க பெண் தேவையான அனைத்தையும் செய்ய வேண்டும். நாங்கள் குடும்பத்தை சீர்குலைப்பதில்லை.''



ஓவியம் : தனசேகர்

### ஆணாதிக்க அடித்தளம்

இதில் என்ன தவறு? இவர்கள் சொல்வது சரியாகத்தானே இருக்கிறது என்று நினைப்பவர்கள் ஒரு எதார்த்தத்தை நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும். பெண்ணுக்கு எதிரான பாரபட்சங்கள் கோலோச்சும் சமுதாயத்தில் நடுநிலைமை வகிப்பது ஆணாதிக்கத்திற்கு வால் பிடிப்பதற்குச் சமம். இன்றைய குடும்பம், சமூகம், ஆகியவை ஆணாதிக்க அடித்தளத்தில் எழுப்பப்பட்டவையே.

இந்துத்துவ இயக்கம் பெண்களின் சக்தி, ஆற்றல் ஆகியவற்றை மதவெறிக்குத் தூபமிடவே பயன்படுத்துகிறது. மனிதர்களை உணர்வுபூர்வமாக ஆட்கொள்ளக் கூடிய தேசபக்தி தெய்வ பக்தி ஆகிய இரு சக்திகளையும் வெறியாக மாற்றி ஒன்றிணைப்பதில் இந்துத்துவம்

(நன்றி : சமூகம் - ஒருமறுபார்வை). இப்பரிசீலனைக்கு ஆதாரமாக அமைந்தவை (Women and the Hindu Right) பெண்களும் இந்து வலது சாரி இயக்கமும் என்ற தானிகாசர்கார், ஊர்வசி புடாலியா ஆகிய இருவரை ஆசிரியர்களாக் கொண்ட கட்டுரை தொகுப்பு : (பதிப்பாளர் - காலி ஃபார் விமன், 1995)



படிப்பகம்

www.padippakam.com

வெற்றி பெற்று வருகிறது. இந்த வெறியால் உந்தப்பட்டு பாபர் மசூதியை உடைக்க வந்த 2 லட்சம் பேர்களில் 50,000 பேர்கள் பெண்கள். இவர்களின் அன்றாடத் தேவைகள் கூட நிறைவேறாத கோபாவேசம் திசை திருப்பப்படுகிறது.

**வன்முறையில் பெண்கள்**

குழந்தையைப் பெறுவதும் வளர்ப்பதும் எவ்வளவு கடினமானவை என்ற அனுபவமுடைய பெண்கள் மனித உயிரின் மதிப்பை ஆண்களைவிட நன்குணர்ந்தவர்கள். எப்போதும் அமைதி காப்பவர்கள் என்ற கருத்து பிரதானமாக மாதர் இயக்கத்தில் வலுவாக இருந்தது. மேற்கத்திய நாடுகளில் யுத்த எதிர்ப்பில் பெண்கள் பெருமளவு திரண்டது இக்கருத்தை மேலும் வலுப்படுத்தியது. ஆனால் சமீபகால இந்திய வகுப்புவாத வன்முறை அனுபவங்கள் இதற்கு முரணாக உள்ளது. இப்படி குறிப்பிடுவதால் இக்கலவரங்களில் தங்கள் உயிரைப் பற்றி கவலைப்படாமல் மாற்று மதப் பெண்களைப் பாதுகாத்தவர்கள் இல்லை என்று பொருளல்ல. ஆனால் அத்தகைய தன்னலமற்ற உணர்வுகளை மழுங்கடித்து இந்து பரிவாரம், சிவசேனை ஆகியவற்றின் பெண்கள் வன்முறையில் ஈடுபடுத்தப்படுவது அனைவரும் தலை குனிய வேண்டிய செயலாகும்.

கலவரத்தில் ஈடுபட்ட சிவசேனைத் தலைவர்களைப் போலீஸ் கைது செய்வதைத் தடுத்து நிறுத்துவது எரிந்து கொண்டிருக்கும் முஸ்லிம் குடியிருப்புகளுக்கு விரையும் தீயணைப்பு வண்டிகளைத் தடுத்து நிறுத்துவது, முஸ்லிம் பெண்களைக் கொள்ளையடிப்பது, அவர்களைத் தாக்குவது போன்ற வன்முறைகளில் சிவசேனையைச் சார்ந்த பெண்கள் பெருவாரியாகப் பங்கு கொண்டதை சிகாதா பேனர்ஜி (Hindu Nationalism and Construction of Women: The Shiv Sena Organises women in Bombay - Sikata Banerjee) தனது கட்டுரையில் சுட்டிக்காட்டி அதன் பின்னணியையும் விவரித்திருக்கிறார்.

சிவசேனையின் ஷாக்காக்களில் குழந்தை காப்பகங்கள் அமைத்து, ஊதியம் பெற சிறுதொழில்களை நடத்துவதோடு, சுமங்கலிகளின் பெருமையை வலியுறுத்தும் மஞ்சள் குங்கும விழாக்களும், சிவபிரானைப் போன்ற கணவனைப் பெற வழிபடும் சிவ ராத்திரிகளும் நடத்துகின்றனர். வகுப்புவாத அரசியல் தேவையை ஒட்டி பெண்களை வீதியில் இறக்கி, கரம் உயர்த்தி கோஷமிடச் செய்தாலும், குடும்பக் கூண்டே அவளுடைய நிரந்தரக் கடமை என்பதை மேற்கண்டவை புலப்படுத்துகின்றன. தேசபக்தி என்னும் திரைமறைவில் வளர்க்கப்படுவது சிறுபான்மையினர் எதிர்ப்பே.

இந்துப்பெண்களை முஸ்லிம்கள் பலாத்காரம் செய்து விட்டதனால் அப்பெண்களுக்கு நியாயம் செய்ய முஸ்லிம் பெண்களை இந்து ஆண்கள் பலாத்காரம் செய்ய வேண்டும் என்ற கொடும் அநீதியை எந்த ஒரு பெண்ணாலும் எப்படி ஏற்க முடியும் என்று வியப்பவர்கள் ஆர்.எஸ்.எஸ்ஸின் குரு சாவர்க்கர், சிவாஜியைப் பற்றி எழுதியதைப் படிக்க வேண்டும்.

முகமது கஜினி, கோரி முகம்மது, அலாவுதீன் கில்ஜி போன்றோர் ஏராளமான இந்துப் பெண்களைப் பலாத்காரம் செய்தனர். அதற்கு பதிலாக சிவாஜி என்ன செய்திருக்க வேண்டும்? முஸ்லிம் பெண்களைப் பழிவாங்கியிருக்க வேண்டும். ஆனால் அவர் என்ன செய்தார்? தன்னுடைய எதிரியான கல்யாண் பகுதியில் முஸ்லிம் ஆளுனரின் மனைவியைப் பலாத்காரம் செய்யாமல் கவுரவத்தோடு திருப்பி அனுப்பி வைத்தார். இதை கண்ணியமான நடத்தை என்ற கூறுபவர்களை சவர்கார் கடுமையாக சாடினார். இது 'மாபெரும் அநீதி' என்கிறார். பாரத கண்டம் முழுவதிலும் கதறி அழுத இந்துப் பெண்களின் அவலக்குரல் சிவாஜியின் காதில் விழவில்லையா என ஆக்ரோஷத்துடன் கேட்கிறார். ஒரு பலாத்காரத்திற்கு (அல்லது அதுபற்றிய வதந்திக்கு) தண்டனை குற்றவாளியின் சமூகத்துப் பெண்ணைப் பலாத்காரம் செய்வது என்பது ஆர்.எஸ்.எஸ் ஆசான்களின் தர்மபரிபாலனம், சங்கப்பரிவாரத்தின் அனைத்து சங்கங்களும் "இந்த ஒழுக்க நெறியை"த்தான் இன்றுவரை கடைப்பிடித்து வருகிறார்கள். பாபர் மசூதி இடிக்கப்பட்டபோது அக்கும்பலில் இருந்த ஒரு பெண் பத்திரிகையாளர் கரசேவகர்களால் மிகக் கேவலமாக நடத்தப்பட்ட போது அங்கிருந்த பெண் கரசேவகர்கள் யாரும் அதை எதிர்க்கவில்லை. எப்படி எதிர்ப்பார்கள்? அவர்களுடைய ஷாக்காக்களில் போதிக்கப்பட்டதும் இந்த அதர்மம்தானே?

இத்தகைய பெண்களின் அணிகள் வளர்ந்து வருவது இந்திய மாதர் இயக்கம் இன்று சந்தித்து வரும் மிகப்பெரிய சவாலாகும். இவ்வமைப்புகளும் அவ்வப்போது பலாத்காரம், வரதட்சணை சாவு, துன்புறுத்தல், விலைவாசி உயர்வு போன்ற கொடுமைகளை எதிர்த்துப் போராட்டம் செய்கிறார்கள். ஆனால் பாலின ரீதியாகப் பாரபட்சமாக நடத்தப்படுவதை அவர்கள் தங்களுடைய முதன்மையான அடையாளமாகப் பார்க்கவில்லை. அதனால் சாதி, மத, இனவேறுபாடுகளைக் கடந்து பெண்கள் இணைந்து போராட வேண்டிய அவசியத்தையும் உணரவில்லை. ஒரு விதத்தில், ஆன்மிக உணர்வுகள் கூட இவர்கள் அறியாதது எனக் கூறலாம். இந்துமத வெறி மட்டும் ஊட்டப்படுகிறது. நல்ல இந்து தாங்கள் என்பதே இவர்களின் பிரதான அடையாளமாக்கப்பட்டுள்ளது. நாட்டின் பல்வேறு பகுதிகளில் இவர்களின் உத்வேகத்தையும் செயல்பாட்டையும் ஸ்தூலமாகப் புரிந்துகொண்டு அவற்றை எதிர் கொள்வதற்கான வழிமுறைகளைத் தேடுவது முற்போக்கு ஜனநாயக மாதர் இயக்கத்தின் அவசரமான அவசியமான பணியாகிறது.



படிப்பகம்

www.padippakam.com



# சுவாசத்தின் நிறம்

ஜெயராணி

'போதும். விடு எனச் சொல்லி ஓடத்தான் நினைத்தேன். ஆனால் உயிரைத்தொட்டுப் பறிக்கும் அந்த முத்தத்தின் அழுத்தத்தில் நான் என்னை இழந்து நின்றேன். அவரை நான் எப்போதும் அவனென்று தான் சொல்வேன். அந்த அவனில், அந்த ஒருமையில் தான் என் உரிமை முழுமை பெறுவதாக இருவருமே நம்பி னோம்.

என்க்கு நீலநிறம் பிடிக்கும். அவனுக்கும் தான். அதற்காக எனக்கு எது வாங்கி வந்தாலும் அவன் நீல நிறத்தில் வாங்குவ தில்லை. எனக்கு நிறங்கள் உயிர். அவனுக்கு அது தெரிந்திருக்கிறது. மனதை மயக்கும் நிறங்களைத் தேர்வு செய்து - எந்த பொருளா னாலும் - வாங்கி வருவான். அவனை எனக்கு பிடித்திருக் கிறதுக்கு - ரொம்பவும் - காரணம் சொல்லத்தெரியவில்லை.

அவன் பேசுவதை கேட்டுக் கொண்டேயிருக்கலாம். பெரும்பாலான சமயங்களில் என்னை சிரிக்க வைப்பதிலேயே அவன் குறியாக இருப்பான். எனக்கும் அது நன்றாகத் தெரியும். ஆனாலும் அவன் பேசும்போது சிரிப்பை அடக்க முடியாது. அனுபவித்து சிரிக்கும் நேரங்களில் என் அடிவயிற்றில் வலி ஏற்படும். அந்த வலி சுகமானது. சிரிக்கும் போது நான் நிறம் மாறுவதாக அவன் சொல்வான். அவனை அடிமைப்படுத்தும் நிறம் அதுதான் என்றும் சொல்வான்.

ஒரு நாள் நல்ல மழை பெய்து கொண்டிருந்தது. தூறலாக ஆரம்பித்து, சாரலாக மாறி கொட்டத்தொடங்கியது. என் மனதைக் கட்டுப்படுத்த விடாத இன்னொன்று இந்த மழை. அவன் தூங்கிக்கொண்டிருந்தான். நான் மழைக்குள் இறங்கிவிட்டேன். இயற்கை எப்போதுமே ஆச்சர்யம் தருவது. தாரை தாரையாய் அவ்வளவு நீர் வழியும். ஆனால் வாயைத் திறந்தால் ஒரு சில துளிகள்தான் வாய்க்குள் விழும். அதன் ருசியைச் சொல்வதற்கு வார்த்தைகள் இல்லை. நிறைய விழுந்தால் அந்த ஆர்வப்பசி போய்விடுமென்று மழைக்கு யார் சொல்லித் தந்தது? நான் நனைந்து கொண்டே அப்படி நிற்கையில் அவன் வந்துவிட்டான். இவனே எனக்குப் பெரிய ஆச்சர்யம் தான். ஆழ்ந்து தூங்கிக் கொண்டிருப்பான். நான் இல்லையென்றால் அதை உடனே உணர்ந்து விடுவான்.

எப்படி உன்னால் முடிகிறது?

"அது நெருக்கத்தின் எல்லை. நீ அருகிலிருப்பது என் பிரக்ஞை யில் இருக்கும். நீ இல்லை யென்றால் உடனே ஒரு நெருடலை என்னால் தூக்கத்தில் கூட உணர முடிகிறது". கையைப் பிடித்து உள்ளே இழுத்துச் சென்றான். உயிர் பறிக்கும் அதே முத்தத்தைக் கொடுத்து என் ஈரத்தை அவனும் வாங்கிக்கொண்டான். ஒவ்வொரு முறை அவன் முத்தமிடும் பொழுதும் நான் புதுப்பிக்கப் படுவதாக உணர்கிறேன். நான் சிரிக்கும்போது நிறம் மாறுவேனே அதே போல் முத்தமிடும்பொழுது அவன் நிறம் மாறுவான். இதை நான் அவனிடம் சொல்லியதில்லை. காரணம் மறுமுறை அவன் முத்தமிடும் பொழுது, அதன் அழுத்தத்தையும் தீவிரத்தையும் என் வார்த்தைகள் சிதறச்செய்து விடலாமல்லவா?

அவன் இசை நேசன். நான் இல்லாவிட்டால் அவன் எவ்வளவு துன்பமடைவானோ, அந்த அளவிற்கு துன்பத்தை இசை யில்லை என்றாலும் அடைவான். சின்னச்சின்ன விஷயங்களில் கூட அவனுக்கு ரீங்காரம் இருக்க வேண்டும்.

சங்கில் கேட்குமே அந்த அலையோசை அதை காதில் வைத்துக் கேட்டுக் கொண்டி ருப்பான். சுவர் கடிகாரத்தை அதன் ஒலிக்காகவே பார்த்துப் பார்த்து வாங்கினான்.

சுவர்க்கடிகாரம் ஒலிக்கத் தொடங்கினால் இவன் அமைதி யாகி விடுவான். நானும்தான்.



படிப்பகம்

www.padippakam.com

எனக்கும் இசை இஷ்டம். நிறைய இதுபோல நானும் அவனும் ஒத்துப்போவோம். ஒத்துவராத விஷயங்களைப் பேசி ஒத்துவரச் செய்வோம். அவன் எந்தன் ரசிகன். நான் அவனின் ரசிகை. என் ரசனை அவனை கொடியதோர் ஈர்ப்பிற் குள்ளாக்குவதாகச் சொல்லுவான். எனக்கு எழுதுவது பிடிக்கும். எழுதுவதை விடவும் அவனுக்கு பேசுவதே பிடிக்கும். ஆனாலும் என் எழுத்துக்களை அவன் வரம்பு மீறிக் காதலித்துக் கொண்டிருக்கிறான். என் எழுத்துக்களை வாசிக்கும் போது என்னை வாசிப்பதாகவே உணர்கிறானாம். வாசித்தல் அவனது பணிகளில் ஒன்று. நேரத்தை ஒதுக்கி நல்ல புத்தகங் களை எனக்கு வாசித்துக் காட்டுவான். எழுதியிருப்பவரே அந்த அர்த்தத்தில் எழுதியிருப்பாரா என்பது சந்தேகம். அப்படி வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்துப் பேசுவான். நான் தான் முன்பே சொன்னேனே அவன் பேச்சு இனிமையானதென்று. கேட்க காது கிடைத்தால் எது வேணாலும் பேசும் வாய்களின் வரிசையில் அவன் இல்லையென்பதே எனக்கு பெரும் மகிழ்ச்சியைத் தந்தது. வார்த்தைக்கு ஒலி தான் இருக்கிறது உருவம் கிடையாதென்பான். இல்லை யில்லை வார்த்தையை எழுதினால் அதற்கு உருவம் கிடைத்துவிடும் என்று நான் வாதிட்டேன். அவன் சொன்னான். நான் எழுத்திற்கா உருவமில்லையென்றேன். வார்த்தைக்குத் தானே இல்லை யென்றேன். வார்த்தைக்கு உருவ மில்லாதது தான் என்னை பேச வைக்கிறது. உன்னை ரசிக்க வைக்கிறது. வார்த்தையிலுள்ள பொருளுக்கான உருவம் இருக்க லாமே தவிர வார்த்தைக்கென்று தனிப்பட்ட உருவம் கிடையாது. உனக்கும் கூட உருவமில்லை யென்றால் என் தேடல் இன்னும் தீவிரப்பட்டிருக்கும் என்றான். இந்த முறை நான் தான் அவனுக்கு முத்தமிட்டேன். என் நேசிப்பை உணர்த்திவிடும் முழுவெறியுடன் முத்தமிட்டேன். அவன் அமைதி யாகச் சொன்னான். நீ நிறம் மாறுகிறாய் என்று.

எனக்கு மலர் பிடிக்கும். அவனுக்கு மணம் பிடிக்கும். இந்த மலரைப் பாரேன் எவ்வளவு அழகாக இருக்கிறதென்றேன். அவன் அதை வேமாக வாங்கி முகர்ந்து பார்த்தான். இந்த முறை அவன் சொல்லாமல் நானே புரிந்து கொண்டேன். வாசனைக்கு உருவமில்லை. அந்த தேடல் தான் அவனை இந்த அளவிற்கு ரசிக்க வைக்கிறது. அந்த ரசனை தான் அவனை இந்த அளவிற்கு தேட வைக்கிறது. அவன் வாசனையை ரசித்துக் கொண்டிருந்தான். நான் அவனை ரசித்துக் கொண்டிருந்தேன் வாசனையுடன்.

கண்ணுக்குத் தெரியாதவை சுகமளிக்கும் என்கிறாய். தேடலை ஊக்கப்படுத்தும் என்கிறாய். நிறம் கண்ணுக்குத் தெரிகிறது. ஆனாலும் அது உன் - என் ரசனைக்குரியதாக இருக்கிறது. அதன் வித்தியாசங் களைத் தேட வைக்கிறது. இது எப்படி சாத்தியம் என்றேன். அவன் என் காதோரக் குறுமுடியைக் கோதிவிட்டபடி சொன்னான் உருவத்திற்குத்தான் நிறமிருக்கிறதே தவிர நிறத்திற்கு உருவமில்லை. அதனால் தான் அது உன் நேசிப்பைப் பெற்றிருக்கிறது. நன்றாக யோசித்துப்பார் உணர்வைத் தொடும் எதற்குமே உருவமில்லை. காற்று, நிறம், இசை, வார்த்தை, நேசம், வாசனை முத்தம் இப்படி உணர்வைத் தொடும் எதற்குமே உருவமில்லை. சிரிப்பு, அழுகை, கோபம் இவை யாவுமே உணர்வின் வெளிப்பாடு தான் என்றான். நான் எந்த அளவிற்கு அனுபவித்துச் சிரித்திருக்கிறேனோ அந்த அளவிற்கு அனுபவித்து அழுது மிருக்கிறான். நான் சிரிக்கும்போது என்னை எப்படி அவன் தடுக்க மாட்டானோ அதை போல் அழும்போதும் தடுக்க மாட்டான். பெரும்பாலான சமயங்களில் அழும்போது நான் தான் அவனைக் கட்டிக் கொள்வேன். அவன் என் நேசிப்பின் உச்சம். நான் கதறிக் கதறி அழுதாலும் அவன் ஒரு வார்த்தை பேச மாட்டான். அவன் அப்பொழுதும் கூட என் நிற மாற்றத்தை ரசித்துக் கொண்டி ருப்பான் என்றே நினைக்கிறேன். அவனுடன் சேர்ந்து நானும் அழுகையை ரசிக்கக் கற்றுக் கொண்டான்.

ஒருநாள், உனக்கு என்னிடத் தில் எது ரொம்பப் பிடிக்கு மென்றேன். அவன் ஏதோ எழுதிக் கொண்டிருந்தான். நான் மீண்டும் அதே கேள்வியைக் கேட்டேன். அவனிடமிருந்து எந்த பதிலும் வரவில்லை. நானே கேட்கத் தொடங்கினேன். என் கண்களா? என் மூக்கா? என் உதடா? என் கூந்தலா? என் சிரிப்பா? என் அழுகையா? நேசமா? இப்படி கேட்டுக் கொண்டே போனேன். அவன் பார்த்துக் கொண்டே யிருந்தானே தவிர பேசவில்லை. நானும் அமைதியானேன். அவன் பேனாவை மூடி வைத்துவிட்டு என்னருகில் வந்தான். முத்தமிடத் தான் போகிறான் என நினைத்தேன். ஆனால் அவன் என் முகத்தை நிமிர்த்தி, தூக்கி மூச்சை உள்ளிழுத்து விட்டுச் சொன்னான் - உன் சுவாசமென்று.

என்ன!

உன் சுவாசம் தான் எனக்கு உன்னில் அதிகம் பிடித்தது. உன் சுவாசச் சூட்டிலுள்ள சுகம் எத்தகையதென உனக்குத் தெரியாது. நான் உன் சுவாசத்தின காதலன். உன் மென்மையையும் வன்மை யையும் ஒரே நேரத்தில் உன் சுவாசம் வெளிப்படுத்துகிறது. உன் சுவாசத்தை நான் உணர்ந்திருக் கிறேன். இன்னும் பார்க்க வில்லை. புரிந்து கொள். உன் சுவாசமும் என் தேடலென்று. நான் முத்தமிடும் பொழுது உன் சுவாத்தையும் உள் வாங்கிக் கொள்கிறேன். அதனால் தான் நான் நிறம் மாறுகிறேன் போலும் என்றான். எனக்கு வார்த்தை வரவில்லை. அவன் என்னை முத்தமிட்டான். இப் பொழுது அவன் சுவாசத்தை நான் உள்வாங்கிக் கொள்வதை என்னால் முழுமையாக உணர முடிந்தது. ●



படிப்பகம்

www.padippakam.com

# மாடத்தெருக்கள் அழிந்த பின்னும்......

## நெல்லை மாநகரில் விபசாரம் பற்றி ஓர் ஆய்வு

**நா.கண்ணன்**

'அதோ மூலையில் சுவரின் அருகில் பார்த்தீர்களா? சிருஷ்டித் தொழில் நடக்கிறது. மனிதர்களா மிருகங்களா? நீங்கள் போட்டிருக்கிறீர்களே பாப்லின் ஷர்ட்டு உங்கள் ஷெல்பிரேம் கண்ணாடி! - எல்லாம் அவர்கள் வயிற்றில் இருக்க வேண்டியதை திருடியதுதான்.

ரொம்ப ஜம்பமாக நாசூக்காக கண்ணை மூட வேண்டாம்'

('கவந்தனும் காமனும்' சிறுகதையில் புதுமைப்பித்தன்)

நாலெழுத்து வாசிக்கும் பரிச்சயம் பெற்றுவிட்ட 'படித்தவர்களாகிய' நாம் ஜம்பமாகவும் நாசூக்காகவும் பாராதது போலவும் நமக்கு சம்பந்தமில்லாதது போலவும் கண்ணை மூடிக்கொண்டு போகும் சந்தர்ப்பங்கள் காரியங்கள் அநேகம் உண்டு. அதில் ஒன்று பரத்தமை. விபச்சாரம்.

பரத்தை, வேசி, தேவடியாள் என்ற பெயர்களில் அழைத்து வந்த இத்தொழில் சார்ந்த பெண்கள் இன்று பரவலாக உலகெங்கும் 'செக்ஸ் தொழிலாளர்கள்' என அங்கீகரிக்கப்பட்டுள்ளனர். பல நாடுகளில் இந்தியாவிலும் கூட பம்பாய் போன்ற பெருநகரங்களில் இவர்களுக்கென சில சட்ட உரிமைகளும் கூட வழங்கப்பட்டுள்ளன.



ஓவியம் : மருது

ஆனால் இதுபற்றிய பிரக்ஞையோ அறிதலோ இல்லாத சிறுநகரங்களில் இத்தொழில் சார் பெண்களின் நிலை என்ன? குறிப்பாக தமிழ்கூறு நல்லுலகில் - பழமை மிக்க தூய தமிழ் கலாச்சாரத்தின் எச்சமாகவும் பிரதிநிதியாகவும், சித்தரிக்கப்படுகிற திருநெல்வேலிச்சீமையின் கதை என்ன? சிலகாலம் முன்பு நடத்தப்பட்ட ஓர் ஆய்வின் அடிப்படையில் சில தகவல்கள்.

---

இக்கட்டுரையாளர் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தில் சமூகவியல் துறை பேராசிரியராகப் பணியாற்றுகிறார். பல்கலைக்கழக ஆய்வுகள் சமகால வாழ்வைப் புரிந்து கொள்ள உதவுபவையாக இருக்க வேண்டும் என்ற ஆழமான கருத்துடன் இயங்கி வருபவர்.



படிப்பகம்

www.padippakam.com

## I

சைவத்தையும் வைணவத்தையும் ஒரு சேர வளர்த்துப் பெருமைப்பட்ட தாமிரபரணி நதி தீரத்தில் - செழித்துக் கொழித்த நெல்லைச் சீமையில் - உண்டு கொழுத்த மைனர்களுக்காகவே அன்று சிருஷ்டித்துப் போற்றி வளர்க்கப்பட்டவை - மாடத்தெருக்கள்.

1911 ஜூன் 17 அன்று ஆஷ்துரையை மணியாச்சி ரயில் நிலையத்தில் வாஞ்சி அய்யர் சுட்டுக்கொன்றார். அதற்கு முந்தையநாள் சாயந்திரம் மாலை 4 மணிக்கு வாஞ்சி தன் வீட்டுக்கு முத்துச்சாமி அய்யர், சங்கர கிருஷ்ண அய்யருடன் சும்மா கூட வந்ததாக தாயம்மாள் என்ற தாசி கோர்ட்டில் சாட்சி சொல்லுகிறாள். அவள் வீடு ஒத்த மாடத்தெருவில் இருந்தது. திருநெல்வேலி மாடத்தெருக்களில தங்கள் சொத்தையெல்லாம் அழித்த மைனர்கள் அன்று இருந்தார்கள். சுதந்திரத்திற்குப் பின்னும் மிகச்சமீப காலம் வரையிலும் கூட இம்மாடத்தெருக்கள் பழைய பரத்தையர் வீதிகளின் எச்சங்களாக நெல்லையில் இருந்து வந்துள்ளதை அறிய முடிகிறது.

விபச்சாரம் தடைசெய்யப்பட்டு சட்டவிரோத மாக்கப்பட்டு மாடத்தெருக்கள் இல்லாமல் அழிக்கப் பட்ட பிறகு - இன்று 90களில் திருநெல்வேலி எப்படி இருக்கிறது? ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல நெல்லை நிலைமை என்பது தமிழக நிலையை பிரதிபலிப்பதாக நாம் நிச்சயமாகக் கொள்ள முடியும்.

திருநெல்வேலி, பாளையங்கோட்டை, மேலப் பாளையம், ஆகிய மூன்று நகராட்சிகளை உள்ளடக்கிய நெல்லை மாநகராட்சிப் பகுதியே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. 1991 மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி சுமார் 31/2லட்சம் மக்கள் வாழும் பகுதி இது.

இதுபற்றி பகிரங்கமாக ஆய்வு மேற்கொள்வது கடினம். எனினும் புரோக்கர்கள், சில அரசியல் கட்சி ஊழியர்கள், சமூக சேவகர்கள், பால்வினை நோய்களுக்குச் சிகிச்சை செய்யும் சில மருத்துவமனைகள், காவல்துறையினர், ஆட்டோ ஓட்டுநர்கள், ரிக்ஷா இழுப்பவர்கள், கஞ்சா விற்பவர்கள், கள்ளச்சாராயம் விற்கும் சில்லரை வியாபாரிகள், லாட்ஜ் பையன்கள், குப்பை - தாள் பொறுக்குபவர்கள் என பலதரப்பட்டவர்களுடன் நேர்காணல் மூலமாகவும் கிடைக்கின்ற நம்பத்தகுந்த ஆதாரங்களையும் வைத்தே இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

## II

*சுமார் 2000 பெண் செக்ஸ் தொழிலாளர்களும் 80 ஆண் செக்ஸ் தொழிலாளர்களும் இந்தப்பகுதியில் இருக்கிறீர்கள். இப்பெண் தொழிலாளர்களில்*

*45 சதவீதம் (சுமார் 800 பேர்) குடும்பங்களில் வாழ்பவர்கள்*

*40 சதம் (சுமார் 750 பேர்) தெருக்களில் தொழில் செய்வோர்.*

*மீதமுள்ளவர்கள் விபச்சார விடுதிகளில் இருப்போர்.*

*நன்கு அறியப்பட்ட 31 விபச்சார விடுதிகள் இப்பகுதியில் இயங்குகின்றன. 40-50 வயதுள்ள முன்னாள் பாலியல் தொழிலாளர்களான பெண்களே இந்த விடுதிகளை நடத்தி வருகின்றனர்.*

வளர்ந்து வரும் திருநெல்வேலி நகர்ப்பகுதிகளும் சுற்றுப்புறங்களில் உள்ள சுற்றுலா மற்றும் வழிபாட்டுத் தலங்களும் விபச்சாரத்தின் அளவை நாளும் அதிகப்படுத்தி வருகின்றன.

குறிப்பாக சாரல் சீசன் களைகட்டும் காலத்தில் குற்றாலத்திலும் பண்டிகை விசேஷ நாட்களில் திருச்செந்தூரிலும் வருடம் முழுவதும் கன்னியா குமரியிலும் கொடிகட்டிப்பறக்கும் இத்தொழிலுக்கு கொண்டு வரப்பட்டுக் குவிக்கப்படும் பெண்களை அனுப்பி வைக்கும் ஏற்றுமதிக் கேந்திரமாகவும் நெல்லை மாநகர் வளர்ந்துள்ளது.

இந்த ஆய்வுக்காக 38 பெண் விபச்சாரிகளும் 13 ஆண் விபச்சாரர்களும் 12 விபச்சார விடுதி நடத்துவோரும் பேட்டி காணப்பட்டனர். இவர்களில் எல்லா ஜாதி- மதத்தினரும் இருக்கின்றனர். பெரும்பாலும் எல்லோருமே வறுமை மிகுந்த குடும்பச் சூழலில் வாழ்பவர்களாகவும் கல்வி அறிவு பெறாதவர்களாகவும் அல்லது ரொம்ப குறைவாக ஆரம்பக்கல்வி பெற்றவராகவும் இருக்கின்றனர்.

வறுமை, கல்லாமை, அறியாமை போன்றவை இவர்களை விபச்சாரத்துக்குத் தள்ளிய முக்கிய காரணங்களாக இருந்த போதும் வேறு சில காரணங்களும் சிலரால் கூறப்பட்டன.

(1)சில அடிப்படை வசதிகளை பெருக்கிக் கொள்ள - (2) கணவனுடன் மகிழ்ச்சியற்ற மண வாழ்க்கை காரணமாக - (3) கணவனின் கெட்ட பழக்க வழக்கங்கள் காரணமாக (4) ஒரு புதிய அனுபவத்தைத் தேடி (செக்ஸ் அனுபவம் அல்லது சமூகத்தின் பல அடுக்குகளுடன் கலக்கும் அனுபவம்)என சில காரணங்கள்.

இவர்களில் பெரும்பாலோர்க்கு 'எய்ட்ஸ்' பற்றிய அறிவு உள்ளது.'ஆனா நான் ஏன் அதப்பத்தி கவலைப்படணும்.என் உடம்பு சுத்தமானது. எந்த நோய் நொடியும் இந்த உடம்புல கிடையாது' ஏதாவது உடலில் பிரச்சினை தெரிந்தால் இப்பெண்களில் பெரும்பாலானோர் பாளையங்கோட்டையிலுள்ள 'ஹைகிரவுண்டு ஆஸ்பத்திரிக்கு' (மருத்துவக் கல்லூரி



படிப்பகம்

www.padippakam.com

மருத்துவமனை) உடனே சென்று சிகிச்சை பெறுகின்றனர். வெகு சிலரே தனியார் மருத்துவ மனையை நாடுகின்றனர்.

## III

அமைப்பு ரீதியான ஏற்பாடுகள்

1. விடுதி சார் விபசாரம் :

அதிக லாபம் தரும் இடமாக விடுதி அமைகிறது. மூன்று பேர் இங்கு முக்கியமானவர்கள். (1) பெண்களைக் கண்டுபிடித்து ஏமாற்றி தொழிலுக்கு அழைத்து வருபவர். இவரே அப்பெண்களுக்கு நண்பராக - தத்துவ ஆசானாக - வழிகாட்டியாக அமைந்து விடுகிறார். (2) விடுதியை நடத்தும் 'அம்மா' ஓய்வு பெற்ற முன்னாள் செக்ஸ் தொழிலாளி. பொதுவாக பெருங்குரலெடுத்துப் பேசுகிற - ஓங்குதாங்கான திரேக அமைப்புடன் - இவர்களை பார்க்கிறோம். தொழிலுக்குத் தேவையான பொருட்கள் வாங்க பெண்களுக்கு கடன் வழங்குவது - தங்கும் இடம் தருவது. - உடம்புக்கு முடியாத சமயங்களில் டாக்டர் ஏற்பாடு செய்வது என நூறு நூறு உதவிகளை இவர்கள் செய்து தருகிறார்கள் (3) அன்றாடம் கிராக்கிகளை விடுதிக்கு அழைத்து வருகிற மாமா அல்லது அக்கா மார்கள்.

இம்மூவரைத் தவிர அடிக்கடி வந்து மாமூலை பெற்றுக்கொண்டு (சிலர் தங்கியும் போவதுண்டு) செல்கிற காவல்துறையினரும் ஆத்திர அவசரத்துக்கு ஒத்தாசை செய்கிற சில உள்ளூர் அரசியல் பிரமுகர்களும் இத்தொழிலின் பாதுகாவலர்களாக உள்ளனர்.

விடுதிகளுக்கும் இவர்களுக்கும் பரஸ்பரம் உதவிகள் உண்டு. மாதந்தோறும் சில பெண்களை போலீசுடன் அனுப்பி ஒழுக்க மீறல் தடைச் சட்டத்தின் கீழ் சார்ஜ் செய்யப்பட்டு (Under Prevention of Immoral Traffic Act) பணம் கட்டி விடுகின்றனர். 'அவுக டார்கெட் (Target) முடிக்கணுமில்ல' இதே போல கட்சி ஊர்வலங்களுக்கும் பிரச்சாரத்துக்கும் கூட இப்பெண்கள் அனுப்பப்படுகின்றனர்.

2. குடும்பம் சார்ந்த பெண்கள் :

இவர்களைப் பற்றித் தகவல் திரட்டுவதே மிகவும் கடினமான காரியமாகும். தங்களைப் பற்றி ரகசியமாக வைத்திருக்கும் இப்பெண்கள் பலவிதமாக இயங்குகிறார்கள். வேலைக்குப் போகிற பெண்கள் போல, மாணவிகள் போல, பஸ்சுக்கு ரயிலுக்கு காத்திருக்கும் பயணி போல, கடைக்கு காய்கறி வாங்கப்போகும் குடும்பப்பெண் போல, சினிமாவுக்குப் போவது போல, கோவிலுக்குப் போவது போல என அவரவர் நிலைமைக்கு ஏற்ற செட் அப்புடனும் மேக்-அப்புடனும் வெளிஉலகுக்கு தம்மை காட்டிக்கொண்டு தொழில் செய்கின்றனர். ஏற்கனவே அறிமுகமான நண்பர் வட்டத்தின் மூலம் மட்டுமே தொழிலில் ஈடுபடும் இப்பெண்களை அடையாளம் கண்டாலும் அறிமுகமில்லாதவர் அணுகுவது சிரமம்.

தன்வீடு ஒரு தெருவில் இருக்க, தன் மகளை பள்ளியில் கொண்டு விடப்போவது போல மகளுக்கு குறிப்பிட்ட ஒரு பள்ளியின் சீருடையை கவனமாக அணிவித்து புத்தகப்பை, டிப்ன் பாக்ஸ், வாட்டர் பாட்டிலுடன் வீட்டாரும் அக்கம்பக்கத்தார் யாரும் சந்தேகப்படாதபடி மகள் கையைப் பிடித்துக்கொண்டு காலையில் கிளம்பி போய் மாலையில் ஸ்கூல் விட்டு மகளை அழைத்து வருவது போல வந்து பகலில் மட்டும் (வேறு தெருவில் ஒரு வீட்டுக்குச் சென்று) தொழிலில் ஈடுபடும் பெண்களும் உண்டு.

பொதுவாக பகலில் மட்டும் தொழிலில் ஈடுபடும் இவர்கள் பெரும்பாலும் வாடிக்கையாளர்களால் குற்றாலம், திருச்செந்தூர், தூத்துக்குடி என முகம் தெரியாத வெளியூர்களுக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள். அதையே இப்பெண்களும் விரும்புகிறார்கள். முகம் தெரியாத ஊரில் எப்போதும் சுதந்திரம் அதிகம் அல்லவா?

பொதுவாக நாள் ஒன்றுக்கு 150 முதல் 200 ரூபாய் வரை இவர்களுக்கு கிடைக்கிறது. மாதத்தில் 10 அல்லது 15 தினங்கள் வரை இவர்களுக்கு வாடிக்கையாளர் அமைந்து விடுகின்றனர்.

3. நடைபாதைப்பெண்கள் :

செக்ஸ் தொழிலாளர்களிலேயே மிகவும் கேடுகெட்ட - கற்பனை செய்து பார்க்க முடியாத - வாழ்க்கை நிலைமை இவர்களுடையதுதான். போலீசின் கைகளிலும் ரவுடிகளின் கைகளிலும் அவ்வப்போது சிக்கிச் சித்திரவதைப்படும் இவர்கள் எளிதில் அடையாளம் காணத்தக்கவர்களாக இருக்கிறார்கள். வாடிக்கையாளர்களிடமும் அடித்துப் பேரம் பேசும் வலுவற்றவர்களாகவும் எந்த பாதுகாப்பும் இல்லாதவர்களாகவும் இருக்கும் இவர்களுக்கு மிக மிக குறைந்தகாசுதான் கிடைக்கிறது. அதோடு கூட கேவலமாகவும் நடத்தப்படுகின்றனர்.

இப்பெண்களின் நேர்காணல்கள் நெஞ்சைப் பதறவைக்கும் தகவல்களைத் தந்தன. வாடிக்கை யாளர்களாக வரும் ஆண்களின் அத்துணை குரூரமான பாலியல் வக்கிரங்களும் அரங்கேறும் மைதானமாக இவர்களின் உடல்கள் மாற வேண்டியுள்ளது. இப்பெண்களின் வாய், குதம், பெண்ணுறுப்பு, இன்னும் பிற உறுப்புகளும் வெறித்தனமான (தாக்குதலுக்கு) பயன்பாட்டுக்கு ஆளாகின்றன. அவற்றை விவரித்து எழுதக்கூட கைகூசுகிறது. மனம் அழிந்து போகிறது. ஆனால் நம்மைச் சுற்றிலும் இது சர்வசகஜமாக நடந்து கொண்டிருக்கிறது.

விபச்சாரத்தில் ஈடுபடும் இப்பெண்களில் குடும்பம் சார்ந்த பெண்களே அதிகம் சம்பாதிக்க முடிகிறது. திரும்பத்திரும்ப ஏற்கனவே பழகிய வாடிக்கையாளரே வருகின்றனர். விடுதி சார் விபச்சாரத்தில் ஈடுபட்டுள்ள பெண்கள் கிராக்கி தேடி தெருவில் நிற்க வேண்டியதில்லை. ஆனால் ஒரே இரவில் பலதரப்பட்ட வாடிக்கையாளரை அவள்



படிப்பகம்

www.padippakam.com

இரவில் பலதரப்பட்ட வாடிக்கையாளரை அவள் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. வருமானத்தை விடுதி நடத்துநருடன் பகிர்ந்து கொள்ள வேண்டியதும் உள்ளது. நடைபாதை விபச்சாரிகளோ அன்றாட பைசா வருமானமில்லாமலேயே கூட ரௌடிகள் அல்லது சில போலீசாரின் கைகளில் சிக்கி சீரழிந்து பட்டினியோடு காலைப்பொழுதை சந்திக்க நேரிடுகிறது. இப்படி மூன்று அடுக்குகளாய் (மரியாதையிலும் வருமானத்திலும்) வாழும் இப்பெண்கள் ஒருவருக்கொருவர் சந்திப்பதில்லை. கூடிப்பேசும் வாய்ப்பில்லை.

**ஆண் விபசாரர்கள்:**

முதலில் கேள்விப்பட்டபோது புரியவில்லை. இது என்ன ஆண் விபச்சாரம்? அறிந்துகொண்ட பிறகு அதிர்ச்சியடைகிறோம். ஓரினப்புணர்ச்சிக்கு என தொழில் ரீதியாக உள்ள ஆண்களை இங்கு குறிப்பிடுகிறோம். நெல்லைப் பகுதியில் இந்த ஆய்வு மேற்கொண்ட சமயத்தில் 68 பேர் இருந்தனர். வாய்வழிப்புணர்ச்சிக்கும் குதவழிப்புணர்ச்சிக்கும் இந்த ஆண்கள் பயன்படுத்தப்படுகிறார்கள்.

மிகவும் அனுபவப்பட்ட ஒரு ஆண் செக்ஸ் தொழிலாளி நேர்காணலின் போது தன்னுடைய குதவாய் செயற்கையாக பெரிதாக்கப்பட்டதை விவரித்தார். இப்படி பெரிதாக்கப்பட்ட குதவாயும் ஏறிய மார்புப் பகுதியும் உடைய ஆண் விபச்சாரர்களையே வாடிக்கையாளர்கள் மிகவும் விரும்புவதாக அவர் குறிப்பிட்டார்.

நகராட்சி கக்கூஸ்களே பிரதானமாக இப்படி வாய்வழி - குதவழிப் புணர்ச்சி நடக்கும் இடங்களாக அமைகின்றன. சினிமா தியேட்டர்களும் வாய்வழிப் புணர்ச்சிக்கும் முஷ்டிமைதுனம் செய்விக்கப்படவுமான இடங்களாக பயன்படுகின்றன என்று ஆண் செக்ஸ் தொழிலாளி விவரித்தார். ஓரினப்புணர்ச்சி நடவடிக்கைகளுக்கு பிரபலமான இடமாக தாமிரபரணி நதிக்கரை விளங்குகிறது என்பது முதல் தடவை கேள்விப்படும் போது அதிர்ச்சியாகத்தான் இருந்தது.

நேர்காணப்பட்ட 13 ஆண் செக்ஸ் தொழிலாளிகளில் பத்துப்பேர் மேகவெட்டை நோய் தாக்கப்பட்டவராயிருந்தனர். பெண் செக்ஸ் தொழிலாளர்கள் தங்கள் பெண் உறுப்பில் பெறுகிற எல்லா தொற்று வியாதிகளையும் இந்த ஆண் தொழிலாளிகள் தங்கள் குதவாயில் பெறுகிறார்கள். வித்தியாசமான நடை உடை பாவனை கொண்ட இந்த ஆண் தொழிலாளிகளை அடையாளம் காண்பது எளிது. நாள் ஒன்று 50 ரூபாய் முதல் 75ரூபாய் வீதம் மாதம் முழுவதுமே இவர்களுக்கு தொழில் நடக்கிறது.

பொதுவாக இளம்பெண்களாக இருக்கும் தொழிலாளர்கள் இயற்கையான புணர்ச்சிக்கு மட்டுமே சம்மதிக்கிறார்கள். நடுத்தர வயது கடந்த பெண்களே வாய்வழி மற்றும் குதவழிப்புணர்ச்சிக்கும் ஆளாக்கப்பட்டு கொடிய நோய்களுக்கும் விரைவில் இரையாகிறார்கள். இவர்களின் அழகு என்பது மிக முக்கியமாக எந்த வகையான புணர்ச்சி என்பதை முடிவு செய்வதில் பங்காற்றுகிறது. ஆணுறை அணிந்து புணர்வதை தங்களது பெண்மைக்கு இழிவாகவும் இழுக்காகவும் இவர்களில் பெரும்பாலான பெண்கள் கருதுகின்றனர். எங்களுக்கு என்ன சீக்கு உடம்பா என்று கேட்கிறார்கள். தவிரவும் கஸ்டமர்கள் ஆணுறை அணியாமல் கிடைக்கிற முழு திருப்திக்காக கூடுதல் ரேட்டும் டிப்ஸூம் தருகிறார்கள். பாலின நோய்களை தடுக்க உதவும் மற்றும் பிற சாதனங்கள் பற்றி தெரிந்திருந்தாலும் பொருளாதாரம் சார்ந்த மற்றும் சாராத காரணிகளால் இத்தொழிலாளிகள் அவற்றை பயன்படுத்தாமல் விரைவில் நோய்களுக்கு ஆளாவதையும் ஆய்வில் காண முடிந்தது.

குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய இன்னொரு விஷயம் போதைப்பழக்கம். குடும்பம் சார் விபச்சாரத்தொழிலாளிகள் தவிர ஏனைய எல்லா பெண்களுமே குடிப்பழக்கம் அல்லது ஏதாவது ஒரு போதைப்பழக்கத்துக்கு அடிமையாக இருக்கிறார்கள். விதவிதமான வீச்சங்களுடன் வருகிற சைஸ் சைஸான ஆண்களுடன் சகித்துக்கொண்டு படுக்க முடியாதெனவும் எனவே புத்தியை மழுங்கச்செய்ய போதைப் பொருள் அவசியமெனவும் இவர்கள் கூறுகிறார்கள்.

ஆண்களை எதிர்பார்த்துக் காத்திருக்கும்போதும் ஆண்களுடன் இருக்கும்போதும் பிறகு ஆண்கள் போனபிறகு உடல்வலிக்காகவும் என எந்நேரமும் இவர்கள் போதையிலேயே இருக்க நேரிடுகிறது. 'தொழிலுக்காக குடிப்பழக்கம்' என்ற துவங்கி இன்று 'குடிக்காக தொழில்' என்று கூட பலர் மாறியுள்ளனர். சுயநினைவோடு இருக்கும்போது செய்யக் கூசுகிற அசிங்கமான அருவருப்பான நாற்றமெடுக்கும் செயல்களை கஸ்டமராகிய ஆண்களின் திருப்திக்காக முழு போதையில் இருந்தால் தான் தம்மால் செய்ய முடிகிறது என்கிறார்கள்.

இன்றைக்கும் விபச்சாரம் என்பது செக்ஸ் குற்றமாக - பெண்களை மட்டுமே குற்றவாளியாக்குகிறது. கைது செய்கிறது. விபச்சாரத்துக்கு மூலகாரணமாகவும் பாதுகாப்பாகவும் விளங்குகிற அமைப்புகள், தனிநபர்கள், ஆணாதிக்க சமூக ஏற்பாடுகள் பற்றி எவரும் கவலை கொள்ளத் தயாராயில்லை.

ஆண்களின் மூளைகளின் மனசுகளின் இருண்ட பகுதிகளில் புளித்து நுரைபொங்கி நிற்கும் செப்டிக்டேங்க் கழிவுகள் எல்லாம் இந்தப் பாவப்பட்ட ஏழைப் பாலியல் தொழிலாளர்களின் உடம்பின் மேல் - நோய்களாய் கறைகளாய் தடிப்புகளாய் திட்டுத்திட்டாய் படிந்து கிடக்கின்றன.

இன்னும் எத்தனை காலம்தான் நாம் ஜம்பமாய் நாசூக்காய் பாராதது போல கண்ணுக்குப் பட்டை கட்டிய குதிரைகளாய் நகர்ந்து தப்பித்துப்போய் கொண்டிருக்கப் போகிறோம்.



படிப்பகம்

www.padippakam.com

# ரோகிகளின் சூதாட்டப்பாடல்

ச.முருகபூபதி

கழிவறைக்குள் ஒளிந்துகொள்ளும் நான் உடைந்த கழிவறை மரக்கதவில் ரகசியமாய் படரும் பூசணிக்கொடியோடு உரையாடிக்கொண்டிருக்கிறேன். நான் யார் என்பதை அந்தக்கொடியே சொல்லிக்கொண்டிருந்தது. கொடியைத் தொட என் விரல்கள் நீண்டபொழுது அது அசைந்தசைந்து வேண்டாம்.... வேண்டாமென்றது. நான் யாரைத்தொட? ஏன் விலகி விலகி காற்றைத் தழுவுகிறாய் என்றேன். கொடி மௌனமானது. அறுந்த சிலந்தி வலைகள் படரும் பழுப்பேறிய ஜன்னல் கண்ணாடி வழியே நிச்சயமின்றி யாரையோ அழைத்தது என் கரம். ஒரு வேளை அழைத்தது பெரிய கோவில் வாசலில் பூ விற்கும் என் அம்மா வைத்தான். அப்படியும் சொல்ல முடியவில்லை. என் அம்மாதானா? நான் மகன்தானா? என்பதும் தெரியவில்லை. திரும்பவும் பூசணிக்கொடியிடம் கேட்டபோது அதை கரு நிழல் தழுவிக் கொண்டது. அம்மாவின் குரலுக்காய் கோவில் வீதிகளெல்லாம் அலைந்தேன். பூக்கூடைகள் சூழ பிய்ந்த பனைஓலை நிழலுக்குள் படுத்து இருமும் அம்மாவின் விரல்கள். நிரந்தர நோயாளியா? எப்பவும் வாடாத பூக்களோடு நோயின் தன்மையை பகிர்ந்துகொள்கிறாள். குனிந்து அம்மா முகம் பார்த்தபோது அழுக்குத் துணி விரிந்திருந்தது. ஒருவேளை தூங்கியிருக்கலாம். அம்மாவிடம் பூக்களை வாங்க வருவோரே இல்லையா? அவளிடம் ஏனா பூக்களே குறைவ தில்லை. இவள்தான் என் அம்மா வாக இருக்கக்கூடும் என்று என் கறுத்த விரல் முடியும் அம்மாவின் அழுக்கேறிய மெலிந்த விரல் முட்டியும் ஒன்றாய்ச் சொல்லியது. என்னை நானே சந்தேகித்து பூங்கொத்து உதிர்ந்து ஈரமாகிக் கிடக்கும் வீதிகளிளெல்லாம் அலைகிறேன். எதுவும் புலப்பட வில்லை. பனைநார்த்தாடி கொண்ட நகரத்து யாசகர்களிடம் கேட்டேன். தாடி விலகி மறைந்து போய்க் கொண்டிருந்தார்கள். இரவிடம் அல்லாமல் வேறெதனிடம் என்ன பேசுவது! இரவின் தூரம் வந்தும் என்னோடு பேசுவோரே இல்லை. பூக்காரத் தெருவின் முடுக்கில் நின்று அழைக்கிறேன். அம்மா!... உன் குரல்கள் உலவும் காற்றின் சுவாசத்தை முத்தமிடக் காத்திருக்கிறேன். எங்கே இருக்கிறாய் அம்மா.... துயரத்துளிகள் முகத்தில் மறைகிறதா! உன் கருங்கூந்தல் ஞாபகவாசனையில் அலைபாயுதே.!

தஞ்சாவூர் கல்மண்டப சூதாட்டக்காரர்களிடம் முணுமுணுத்தேன். ஆட்டத்தின் சுழற்சியில் சிக்கிய மயக்கம் பற்றி ஆறுபேரும் தொலைந்தனர். ஒருவேளை சூதாட்டக்காரர்களுக்கு மட்டுமே அம்மாவின் இருப்பிடம் தெரிந்திருக்கக் கூடும் என்ற ஞாபகப் பேதலிப்பில் தொலைந்துபோன சூதாட்டக்காரர்களை ரயில்வே பிளாட்பாரங்களிலும், நகரத்துப் பாலங்களிலும், மதுக்கூடங்களிலும் தேடித்தேடி அலைகிறேன். கடைசியாய் தூரதேசத்து பில்லிசூன்யக் காரனிடம் கேட்டபோது அவன் தன் மரப்பாச்சி பொம்மையிடம் கேட்டுச் சொல்வதாகக்கூறி மரப் பெட்டிக்குள் இருக்கும் மரப்பாவையை வெளியே வருமாறு உடுக்கடித்துப் பாட நெடுநேரமாகியும் பொம்மை வெளியேறாத உறக்கம் கொண்டிருந்தது.

தொலைந்த ஆறு சூதாட்டக்காரர்களின் வழித்தடங்களையாவது சொல்வாய் என் மரப்பாச்சியே எனக்கூற மரப்பெட்டி அசைந்துகொண்டது. கரும்போர்வைக்குள் மரப்பெட்டியை அணைத்து சுருண்டு கொண்ட சூன்யக்காரன் நெடுநேரமாய் போர்வைக்குள் முணுமுணுத்துக்கொண்டான். சுருங்கிய போர்வையை நீண்ட மௌனத்தில் விலக்கியபோது சூதாட்டக்காரன் மறைந்து மரப் பெட்டி மட்டுமே இருந்தது. அனேகமாய் அவன் மரப்பாச்சியின் கையிடுக்கில் ஒளிந்திருக்கக்கூடும். 'மரப்பெட்டியே என்ன சொல்லி உன்னை திறக்க வைப்பேன்?' என்றபடி என் மார்பில் அணைத்து நகரின் முக அடுக்குகளினூடே கால்போன திசைக்குள் பெட்டியுடன் ஊர்ந்து நடந்தேன். இருட்டியபிறகு மரப்பெட்டியுடன் கல்மண்டபத்திற்குள் நுழைந்தேன். மண்டபமெங்கும் வௌவால்களின் வாடையும் சப்தமுமாய் கசிந்து கொண்டிருக்க மண்டப உச்சியில் சாகுருவி மறைந்த சூதாட்டக் காரனின் பாடலை பாடிக் கொண்டிருந்தது.

ஆந்தையின் உறைந்த பார்வை வழியே

நீண்ட இருள்பாதையைக் கடந்து போ....


குளத்தங்கரை புங்கமர நிழலிடம் கேள்.... புங்கமர நிழலிடம் கேள்.... கேள்....

எனப் பாடி மிதந்தது. கல்மண்டபத்தூண்களை ஒவ்வொன்றாய் அணைத்தபடி ஆந்தையின் விழிகளைத் தேடுகிறது என் பதறும் கண்கள். மண்டப அதிர்வில் வௌவால்கள் பறக்க



படிப்பகம்

www.padippakam.com



ஓவியம் : தனசேகர்

நொடிநேரத்தில் தன் சுழலும் விழிகளை உறையவிட்டு மறைந்து பறந்தது இருள் சிறகுள்ள ஆந்தை. ஆந்தையின் விழி சொன்ன தடத்தில் மரப்பெட்டியோடு தவழ்கிறேன். நீண்டு செல்லும் அக்கற்பாதையின் இடையிடையே பல உடைந்த கல் ரேகைகள் நீரென மாறியும் நகர்கிறது என் பாதங்கள். குறைந்த இருளில் சுருளும் காற்றை குடித்தபடி என் உரு காற்றுக்குள் முனகிச் சுழலும் வ்யோதிகக் குரல்களை கேட்டபடி யார் இவர், யாருடையவரோ? மறைந்திருப்பவரும் மறைந்தவரும் யார் யார் என்னுடையவரோ? எனப்பிதற்றி விரைகிறேன். குரல் விரையும் திசையெல்லாம் சுழல் கொண்டு திமிறியது காற்று. அது தொலைந்துபோன வயோதிகர்களின் துக்கப்பாடல்களாக இருக்கலாம். முடிவற்று நீளும் கற்பாதைக்குள் ஊடுருவும் என் உரு கரைந்து விடுமோ? சதுரங்கப்பலகையின் தனித்தனியான கட்டங்கள் போல கடந்து செல்லும் படிக்கட்டுகள் ஏற்ற இறக்கமாய் விம்முகிறது. பழைய ஸ்திரீகள் உலவிய படிக்கட்டுகளாக கௌபிகர்கள், முனிகள்,சூன்யக்காரர்கள், வேசிகள், நடனக்காரிகள், சூதாட்டக்காரர்கள் உலவிய பாசிபடிந்த கற்பரப்பாக மாறிமாறி விரைந்தோடுகிற காட்சிகளில் சிதறிப்போகிறேன். வெகு தொலைவில் சந்ததியர் களைப் பறிகொடுத்த முதுதாதி குரல் குழலாய் காற்றில் கரைகிறது. சாகுருவியின் உதிர்ந்த இறகுகள் பரவும் இவ்விரவில் தன்னந்தனி யான தனிமையில் நிசப்தம் அலைபாய விடும் பெருமூச்சில் காணாமல் போனவர்களின் ஞாபக சுவாசத்தை ஸ்பரிசிக்கின்ற ஆலமர விழுதுகள் வீசின காற்று என்னை யும் தொட்டு சிலிர்த்தது.

ஆலமர விழுதாய் தொங்கும் உன் உடல் குளத்தங்கரையின் பிளந்த படிக்கட்டில் வேர்பாய்ந்து கிடக்க இரவின் நிழல் யாருக்கும் தெரியாமல் வியாபித்திருந்தது. நிழலில் பிதற்றி முனகும் என் குரலைக் கேட்க ஆவலாய் ஊர்ந்து வருகின்றன கருமை அசையும் புங்க மரக்கிளைகள். தனியே கிடக்கும் மரப்பெட்டியை என் இமை நிழல் சூழ்ந்ததும் மரப்பெட்டி திறக்க உள்ளே இரு மரப்பாச்சிகள் அசைந்து மரத்தின் பின்னே 'தொலைந்து போன ஆறு சூதாட்டக்காரர்களும் கல் மண்டபத்து.க்கு திரும்பிவிட்டார்கள். அவர்களோடு நீயும் விளையாட வேண்டும்' என தூரத்து நாய்க்குரைப்பின் சப்தத் தினூடே மௌனமாய்க் கேட்டது வசீகரக்குரல். அதன் சொற்படியே பெட்டியை நாயிடம் விட்டு இரவின் கடைசி எல்லையில் கல்மண்டபத்துக்கு திரும்ப உள்ளே பெருந்தூணைச் சுற்றி தூணை அணைத்தபடி உறங்கும் ஆறு பேர். அத்துவான வெளியில் அதிர்ந்து நகரும் ரயில் சப்தத்தில் சூதாட்டக் காரர்களின்றி ஆறு குஷ்டரோகிகள் கல்தூணை அணைத்தபடி விழித்துக் கொண்டனர். மறைந்த சூதாட்டக் காரர்களின் வேற்று உருவில் திரும்ப வந்தவர்களாக அவர்கள் இருக்க லாம். அவர்களிடம் நான் நெருங்க குஷ்டரோகிகளின் கரங்கள் இணைந்து என் முகத்தில் கரம்பதித்து விசும்பியபடி 'வெவ்வேறு தேசத்தவர்களாகிய நாங்கள் இந்த இரவிலேயே சேர்ந்து கொண்டோம். எங்களின் இருப் பிடம் தெரியாது அலைகிறோம். நாங்கள் யார் என்பதைச் சொல் வாயா? சொல்லிவிடேன்' என்றபடி தம் கண்களில் வழியும் உப்பு நீரை உருகும் தம் விரல்களாலேயே துடைத்துக்கொண்டனர். அவர்களின் விரல்கள் கரைய அசைந்தசைந்து வண்ணத்துப் பூச்சிகளாய் மிதந்து பறந்தது.

நகரத்து நீண்ட மதிற்சுவர்களில் காரை உதிரும் செங்கற்களில் உடல்பதித்து அழுது சொற்கள் பிடிபடாத சோகத்தில் பிதற்று கிறார்கள் குடிகாரர்கள். அவர்கள் உடல் பதிந்த மதில்களில் நானும் கண் பதித்துக் கேட்கிறேன். மேலும் மேலும் காரைகளே உதிர்ந்தன. துவாரங்கள் நிறைந்த சுவரினூடாகப் பார்க்கிறேன்.தூரத்தில் தெருவோரப் பாடகர்களை பின் தொடர்கிறார்கள் குருடர்கள்.முன் செல்பவரையும் பின்வருவோரையும் அறியாத குருட்டுப் பாதங்களின் அதிர்வுகளில்



படிப்பகம்

www.padippakam.com

யாருமற்ற வனாந்திரம் அழைக்கிறது. தெருவோரப் பாடகனின் குரல்பரப்பில் சிக்கிய குருடர்கள் பாடகனைத் தேடி திசையறியா வெளியில் தோள்களில் கைபதித்து தேடுகிறார்கள். அவர்கள் மறைந்த பின்பும் குரல்கள் மோதி சுவர்களில் உதிர்ந்து கொண்டிருந்தது. நானும் தேடுகிறேன் என்னையும் நானற்ற வெளியையும்.

சாலையோர ஓவியன் இடி மழை தழுவிய தன் ஓவியத்தில் விரல் பரவ பேசுகிறான். நீர் தீண்டிய சித்திர உருவைக் கேட்கிறான். வானம் பார்த்துக் கூவி நடுங்கிய நான் ரயில்வே பிளாட் பாரங்களில் வளரும் அனாதைச்சிறுமிகளிடம் கேட்டேன். இணையவே இணையாத தண்டவாளங்கள் இடையிலான அனாதை வெளியில் வந்து சேராத ரயில்களின் ஞாபகம் வரும்போதெல்லாம் அழுகை வந்து முட்டும் பிளாட்பாரச் சிறுமிகள் அன்று வரும் ரயிலை எதிர்பார்க்கும் ஏக்கத்தோடு என்னை ஒரு கணம் பார்த்தார்கள். மறுகணம் வந்துவிட்ட ரயிலின் சிரிப்போடு பெட்டிக்குள் பயணிகளின் பாதங்கள் படிந்த தடங்களை துடைத்தபடி சில்லறைக்காசுகள் பெற்று மறைந்து அடுத்து வரும் ரயிலை எதிர்பார்த்து சிரித்து ஓடுகிறார்கள். சிறுவர் சிறுமிகளை சுமக்கும் அனாதைப் பிளாட்பாரமே!.... என்னையும் ஏற்றுக்கொள்வாயா என முணுமுணுக்கிறது காய்ந்து மடியும் என் உதடுகள். நகரத்துக் கடைசியில் நீளும் தண்டவாளங்களில் உலவும் பைத்தியக்காரர்கள் தங்களுக்கு எல்லோரும் இருப்பதாகவும் தாங்கள் யாரையும் தேடவில்லையெனவும் எங்களைத்தேடியே எல்லோரும் வருகிறார்கள் என தனித்தனியே பேசிக்கொண்ட அவர்கள் குகைக்குள் மறையும் தண்டவாளத்தைத் தேடி மறைந்தலைகிறார்கள் மீண்டும்.

சப்வே படிக்கட்டுகளில் உலவும் குருட்டு நாய் நான் வருவதை முன்னுணர்ந்து குரைத்து என் அருகில் வந்து ஏங்கும் அதன் கால்கள். வழிந்திறங்கும் அதன் கால்களை உயர்த்தி நாவால் நக்கி என்னை அதற்குள் அடக்க எழும் ஆவேசம் நடுங்கச் செய்தது. அதன் வாலில் அசையும் அன்பை வாரி அணைத்துக்கொள்ள முடியாதபடி அதன் நகங்கள் என்னைக் கிழித்தன. வலியின் குரல்கள் மிதக்கும் சப்வேயின் இருட்டு சுவர்களில் இரவு நேர ஒப்பனைக்காரி தொலைந்த கால் சலங்கைகளை தேடியபடி முனகுகிறாள். சுவர்களில் பதிந்து பதிந்து அழுது கொண்டிருக்கும் என்னை இருளிலிருந்து பார்த்தபடி தோன்றி மறைகிறாள். சப்வேயின் பதட்ட இருளில் ஒருவரையொருவர் பார்த்தும் பார்த்துக்கொள்ளாமல் கண்மூடி நிசப்தமாகிறோம். சுவரெங்கும் ஒளிரும் கண்கள் என்னை பயமுறுத்த ஊளை அதிகரிக்க ஒப்பனைக்காரி ஒப்பனை வாடை கமழும் தன் வெளிர்மஞ்சள் ஆடையை என்மேல் போர்த்தித் திரும்புகிறாள். அவள் கரையும் காற்று உடலின் மார்பில் முகம் பதித்தபோது சலங்கையொலி அதிர்ந்துகொண்டே இருந்தது. தரையில் விரிந்திருக்கும் அவள் கூந்தலுக்குள் என் முகம் ஒளிந்தபோது காக்கைகள் திசைகளெங்கும் பறந்துவிட்டன. தேடியலையும் என் பாதைகள்.


## வீர சுதந்திரம் வேண்டி....

இந்திய சுதந்திரப் போராட்டத்தின் சுவடுகள்...

பிரிட்டிஷ்காரர்கள் இந்தியாவில் காலடி
எடுத்து வைத்ததில் தொடங்கி
அவர்களை எதிர்த்தது, அது எப்படி நாடு
தழுவிய போராட்டமாக உருவெடுத்தது
என இந்திய சுதந்திர வரலாற்றை
மிக சுவராஸ்யமாக
தொகுத்திருக்கிறார்கள்.
நூற்றுக்கணக்கான புகைப்படங்கள்,
அந்தந்த காலத்தில்
வெளியான கவிதைகள்,
நாட்டுப்புற பாடல் வரிகள்
நம்மை போராட்டக் காலத்திற்கு
அப்படியே அழைத்துச் செல்கின்றன.

விலை : ரூ.40 மட்டும்

தேவைக்கு அணுகவும் :
இலட்சுமிகாந்தன்,
தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம்,
451, புறவழிச்சாலை, சாத்தூர் - 626 203.




படிப்பகம்

www.padippakam.com

# புழுதி படிந்த சாலை

## சுநீதி நாம்ஜோஷி

தமிழில் : சா.தேவதாஸ்

நீலநிறக்கழுதை சொல்லும் கதைகளுள் ஒன்று - அதனை உண்மையென்பதா, கற்பிதம் என்பதா என்பதில் பெரும் சர்ச்சை நிலவுகின்றது. தன் அதிருஷ்டத்தைத் தேடும் பொருட்டு முதல்முறையாக புழுதி படிந்த நீண்ட சாலையில் மேற்கொண்ட பயணத்தைப் பற்றியதாகும். சீக்கிரத்திலேயே தனக்கு கேரட்டினையும், தங்குவதற்கு ஓர் இடத்தினையும், தொழிலையும் அளித்த யுவதியைச் சந்தித்தது.

'இனி வேண்டாம்.. நன்றி. நானொரு கவிதாயினி. நான் போக வேண்டியது பெருந்தொலைவு'. என்றது.'கவிதாயினி என்றால் என்ன?' என வினவினாள் யுவதி. இதனால் நிலைகுலைந்து போன நீலநிறக் கழுதை எதையோ முணுமுணுத்து, விடைபெற்றுக் கொண்டு மேலே பயணித்தது. அதன் காரணமாய் வழிப்போக்கன் ஒருவன் மீது மோதிவிட்டது.

மிகவும் மன்னிப்புக் கேட்டுக் கொண்ட நீல நிறக் கழுதை, தான் உண்மையிலேயே வருத்தப்பட்டதையும் அக்கறை கொண்டிருந்ததையும் உணர்த்தும் விதத்திலே, அவன் யார் என்ன செய்து கொண்டிருந்தான் அவனது குறிக்கோள் என்ன என்றெல்லாம் வினவியது.'ஓ வனவைச் சந்திக்கப் போய்க் கொண்டிருக்கிறேன், அவளைக் கண்டதும்அவளது தொண்டையைப் பற்றி நெரிப்பேன்' என்றான். 'அப்புறம்...' என்று தன்னை மீறிய ஆர்வத்துடன் வினவியது நீலநிறக் கழுதை. 'அப்புறம் அவளது கால், கைகளைக் கட்டி வீட்டுக்குக் கொண்டு போவேன்' என்றான். 'அப்புறம்' என்று கிசுகிசுத்தது நீலநிறக் கழுதை. அவன் கம்பீரமாகப் பதிலளித்தான். 'அவளைத் துண்டு துண்டாக்கி அரைத்து கறித்துண்டுகளுடன் கலந்துவிட டஜன் நான்கு பென்ஸ்களென்று சந்தைக்கு விற்க வரும்'. பற்கள் பளிச்சிட அதன் பக்கமாய் திரும்பியவன் 'நீ யார்?' என திடீரெனக் கேட்டான். அடக்கம் என்றுதான் கருதிய பதிலை, 'ஓ நானொரு கவிதாயினிதான்' என நீலநிறக்கழுதை முணுமுணுத்தது. ஆனால் அதன் சக பயணிக்கோ ஆத்திரம் பொங்கிற்று. அவன் கூச்சலிட்டான். முட்டாள்தனம். நானொரு கவிஞன். நீ வாழ்வினொரு அம்சமே? இதனை அவன் சொல்லும்போது அவன் விழிகள் யூகத்தில் சுழன்றன. நீலநிறக் கழுதை இனியும் காத்திருக்கவில்லை. தன் வாசகர்கள் விரும்பினால் தன்னைக் கோழை என்றழைக்கட்டும் என்கிறது. அவனை புழுதி படிந்த நீண்ட சாலையில் விட்டு விட்டு துரித கதியில் பாய்ந்தது.

போகப்போக கிராமப்புறம் பசுமையாயிற்று. நிலவியல் காட்சி போன்ற தோட்டங்களும் மாசு மறுவற்ற காடுகளும் இருந்தன. அக்காடுகளில் ஒன்றில் ஓர் அடிமரத்தின் மீது அழகிய பெண்ணொருத்தி ஒய்யாரமாய் சாய்ந்திருந்தாள். அவள் ஒரு புத்தகத்தை வாசித்துக் கொண்டிருந்தாள். நெருங்கிவரும் நீலநிறக் கழுதையைக் கண்டதும் புன்னகைத்தாள். 'ஹலோ என்ன படித்துக் கொண்டிருக்கிறாய்?' என்றது நீலநிறக் கழுதை. 'கவிதை. கவிதை அழகியதென்றெண்ணுகிறேன். காற்றினாலும் கவிதையினாலும் எப்பொழுதும் உயிர்த்துவிடலாம் என்று உணர்கின்றேன்?' என்று பெருமூச்செறிந்தாள் அவள். நல்லது.'நானொரு கவிதாயினி. என் கவிதைகள் சிலவற்றை நான் வாசிப்பதை விரும்புவாய் என்று எண்ணுகிறேன்' என்று துணிந்து கூறியது நீலநிறக்கழுதை. அப்பெண் சட்டென்று பதிலளித் தாள். ஓ.. வேண்டாம். வேண்டாம். நான் பலமொழிகளைக் கற்றிருந்தாலும் ஃப்ரெஞ்சும் ஜெர்மனியும் நன்கு தெரிந்திருந்தாலும் நீலநிறக் கழுதையின் மொழி தெரியாது. உன் கவிதைகள் அற்புதமாயிருக்கும் என்பதில் சந்தேகமேயில்லை. ஆனால் அவை பழக்கமற்ற செவிகளில் விழுந்துவிடுமே என்று பயப்படுகிறேன். நான் பேசுவது ஆங்கிலம்.. தொடர்ந்து அப்பெண் மன்றாடியதைக் கேட்டது.

'உனக்குத் தோன்றும் விதத்திலே நீ உலகை விவரிப்பாய். அதுதான் சரி. ஆனால் கழுதைக்கும் பெண்ணுக்குமிடையே பொதுவாய் இருக்கக்கூடியது என்ன என்பதை எண்ணிப்பார்.'

'ஒன்றுமில்லை'. என்று வருத்தத்துடன்கூறிய நீலநிறக் கழுதை திரும்பி பின்னோக்கிச் சென்றது. கடைசியில் தான் முதலில் கண்ட பெண்ணின் வீட்டு வாசலுக்கு வந்து சேர்ந்தது. 'பாதிகேரட்டுக்காக பகுதி நேர வேலை செய்தால் போதாதா?' என்று பணிவுடன் வினவியது.

The Inner Courtyard / Ed. by Lakshmi Holmstorm / Rupa & Co, 1991 - தொகுப்பிலிருந்து இக்கதை தமிழ் வடிவம் பெறுகின்றது.



படிப்பகம்

www.padippakam.com

# திருக்குர்ஆன் பெண்ணிய வாசிப்பின் தருணங்கள்

ஹெச்.ஜி.ரசூல்

இஸ்லாம் பற்றிய அணுகுமுறையில் திருக்குர்ஆனும், நபி மொழி தொகுப்பான ஹதீசுகளின் விளக்கங்களும் இதுவரைக்கும், ஆண்சார்ந்த நலன்களின் அடிப்படையிலேயே பெரும்பாலும் அர்த்தப்படுத்தப்பட்டு வந்துள்ளது. தமிழக சிந்தனை மரபில் மௌல்விகள், ஆலிம்கள், மார்க்க மேதைகள், கல்லூரிப் பேராசிரியர்கள், எழுத்தாளர்கள் என இவர்களை வரிசைப்படுத்தலாம். ஓரிரு இஸ்லாமிய பெண் சிந்தனையாளர்கள் கூட மேற்கண்ட ஆண் சார்ந்த நலன்களின் மரபை பின்பற்றியே செயல்பட்டுள்ளனர். இதுவே ஆண்கள் தங்களது நியாயமற்ற செயல்பாடுகளுக்கான கொள்கை அடிப்படையையும், மனோ தைரியத்தையும் வழங்கியது. இந்த தவறான கருத்தியல்களில் ஒருவித புனிதம் ஏற்றப்பட்டு இஸ்லாமியப் பெண்ணை தலாக்-முத்தலாக் மூலமாக நடைமுறை ரீதியில் சிதைக்கவும் ஆண் தாராளமாக மறு திருமணம் புரியவும் வழிவகை செய்கிறது. இதன் காரணமாக ஒவ்வொரு ஊர்களிலும், ஜமாத்துகளிலும் கைவிடப்பட்ட அபலைகளாக்கப்பட்ட பெண்களின் சோகக்கதைகள் மூடிய திரைகளுக்குப் பின்னால் விசும்பி நிற்பதை நாம் அறிவோம்.

இந் நிலையில் திருக்குர்ஆனிலும், ஹதீசுகளிலும் பெண் சார்ந்த நலன்களை பிரதானப்படுத்தும் பெண்ணிய வாசிப்பு மிகத் தேவையாக உள்ளது. இத்தகைய வாசிப்பின் அணுகுமுறையை இஸ்லாமியப் பெண்ணியச் சிந்தனை யாளர்கள் அதிகஅளவில் மேற்கொள்ளும்போதுதான் ஏற்கெனவே நிறுவப்பட்ட பெண் ஒடுக்குமுறை சார்ந்த கருத்தியல்கள் நொறுக்கப்படும்.

1) இஸ்லாம் பலதார மணத்தை அங்கீகரிக்கிறது. ஆண் நினைத்த நேரத்தில் தலாக் சொல்லி பெண்ணை விவாகரத்து செய்து விடலாம். தந்தியில் கூட தலாக்சொல்லலாம். விவகாரத்து ஆன பெண்ணுக்கு ஜீவனாம்சம் கொடுக்க வேண்டியதில்லை, ஒரு ஆணின் சாட்சிக்கு இடாக இரண்டு பெண்களின் சாட்சி தேவை. பெண்கள் எப்போதுமே தங்கள் பார்வைகளை தாழ்த்திக் கொண்டு நடக்க வேண்டும், பர்தா முறை இல்லையெனில் பெண் ஒழுக்கக்கேட்டுக்கு ஆளாவாள் என்பதாக இக்கருத்துக்கள் மனம் மற்றும் உடல் சார்ந்து முன் வைக்கப்படுகின்றன. திருமறை வசனத்தில் தங்களுக்கு தேவையான ஒரு பகுதியை மட்டும் பிரித்தெடுத்து ஆண்கள் தங்கள் ஆதிக்க கருத்தியலுக்கு ஏற்ப இவற்றை வடிவமைத்து நடைமுறைப்படுத்தி விடுகிறார்கள். திருக்குர்ஆனின் சொல்லாடல்களை அர்த்தப்படுத்தும்போது இரு அம்சங்களை மிக முக்கியமாக கருத்தில் கொள்ளலாம்.

அ) ஒவ்வொரு திருமறை வசனமும் உருவாகும்போது நிலவிய சமூக. கலாச்சாரச் சூழலையும், வரலாற்றுப் பின்னணியையும் பரிசீலிப்பது.

ஆ) ஒவ்வொரு நாட்டிற்கும், கலாச்சாரச் சூழலுக்கும் சார்புநிலைக்கும் ஏற்ப, (முதலாளி - தொழிலாளி, வசதி படைத்தோர் - ஏழைகள் ஒடுக்குவோர் - அடக்கப்படுவோர் ஆண் - பெண்) சூழலுக்கேற்றார் போலவும், பாதிக்கப்பட்டோரை முன்னேடுத்துச் செல்ல பயன்படுத்தும் பொருட்டும் திருமறை வசனங்களை அர்த்தப்படுத்துவது.



படிப்பகம்

www.padippakam.com

இவ்விரு நிலைகளையும் முன்னெடுத்துச் செல்லும்போது தான் இஸ்லாமியப் பெண்ணியத்தின் அர்த்தங்கள் விரிவடையும்.

....அநாதைப் பெண்களைத் திருமணம் செய்து கொண்டு அவர்கள் விஷயத்தில் நீதமாக நடக்க இயலாது என நீங்கள் அஞ்சினால் மற்ற பெண்களில் உங்களுக்கு விருப்பமானவர்களை இரண்டிரண்டாகவோ, மும்மூன்றாக, நான்கு நான்காகவோ நீங்கள் திருமணம் புரிந்து கொள்ளலாம். (அவ்வாறு பலரைத் திருமணம் புரிந்தால்) அப்போதும் அவர்களுக்கிடையில் நீங்கள் நீதமாக நடந்து கொள்ள வேண்டும். அவ்வாறு நீங்கள் நீதமாக நடக்க முடியாதெனப் பயந்தால் ஒரு பெண்ணையே அல்லது உங்கள் ஆதிக்கத்தின் கீழ் இருக்கும் (அடிமைப்) பெண்ணையே (திருமணம் செய்து) கொள்ள வேண்டியது. நீங்கள் பேதம் பாராட்டாமலிருப்பதற்கு இதுவே சுலபமான வழியாகும்.*(4:3-91)*

இவ்வசனத்தில் அநாதைப் பெண்கள் அடிமைப் பெண்கள் பிற பெண்கள் என மூன்று நிலைகளில் பெண்கள் குறிப்பிடப்பட்டுள்ளதைப் பார்க்கலாம். இது அன்றைய அரேபிய கலாச்சாரச் சூழலின் வெளிப்பாடு. இதில் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களை மணந்தால் அப்பெண்களுக்கிடையே நீதமாக நடக்க வேண்டும். இல்லையெனில் ஒரு பெண்ணை மட்டுமே மணக்க அனுமதி என்பதை கவனமாக பரிசீலிக்க வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகளிடம் நீதமாக நடத்தல் என்பது குடும்ப ரீதியாக, சமூக ரீதியாக, பொருளாதார ரீதியாக நீதமாக நடத்தல் என்பதாக விரிவடைகிறது. இது நடைமுறை சாத்தியமில்லாத ஒன்று. எனவே இவ்வசனம் மறைமுகமாக ஒருதாரமணம் என்பதையே மையப்படுத்துவதை உணரலாம். இது பெண்ணுக்கு சாதகமான நிலையையே தோற்றுவிக்கும்.

முதல் மனைவி உயிரோடிருக்க, இரண்டாம் திருமணம் செய்து கொள்வதற்காகவே இஸ்லாத்திற்கு மாறுகிற ஒரு சில ஆண்கள், மற்றும் மிக சுலபமாக தலாக் சொல்லிவிட்டோ அல்லது தலாக் சொல்லாமலோ ஒரு மனைவிக்கு மேல் திருமணம் செய்ய முனைகிற ஆண்களின் பாலாதிக்க மேலாண்மைக்கும் இதன் மூலம் ஒரு முடிவு கட்டலாம்.

தலாக் என்கிற ஒற்றைவார்த்தை மூலமாக நினைத்தநேரத்தில் கணவனின் விருப்பத்திற்கும் அதிகாரத்திற்கும் ஏற்ப மனைவியை விவாகரத்து செய்கிற நிகழ்வு ஒரே நேரத்தில் மூன்று முறை தலாக் சொல்லுதல், கால இடைவெளிவிட்டு இத்தலாக்கை மூன்றுதடவை சொல்லுதல் என்பதாக நடைமுறைப் படுத்தப்படுகிறது தலாக் பேசப்படும் அளவுக்கு மனைவி தன் கணவனை விவாகரத்து செய்வதற்கு வகுப்பட்ட குலாஅ என்னும் மணஒப்பந்தமுறிவு பேசப்படாததையும் நடைமுறைப்படுத்துவதற்கு இடைஞ்சல்கள் உள்ளதையும் குறிப்பிட்டாக வேண்டும்.

இது போன்றே ஒழுக்க விதிகளை பெண்கள் மீது மட்டும் சுமத்திவிட்டு ஆண்கள் சுலபமாக தப்பித்துக் கொள்வதும் நிகழ்கிறது. பெண்கள் தங்கள் பார்வைகளை தாழ்த்தியே இருக்கவேண்டும் என்கிற திருமறை வசனக் குறிப்பை அதிகமாக வலியுறுத்துபவர்கள் அதற்கு முந்தைய வசனத்தை எளிதாக மறந்துவிடுகிறார்கள். அவ்வசனம் ஆண்களை நோக்கி இவ்வாறு பேசுகிறது.

(நபியே) விசுவாசிகளான ஆண்களுக்கு நீர் கூறும். அவர்கள் தங்கள் பார்வைகளை கீழ்நோக்கியே வைக்கவும் தங்கள் கற்பையும் இரட்சித்துக் கொள்ளவும். இது அவர்களை பரிசுத்தமாக்கி வைக்கும். ( 24 : 30 - 422)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் மக்கா மாநகரில் பதூயீன்கள், குறைஷிகள், ஹுதைல், ஸிமிட்டிக் என அரபு பழங்குடி இனங்கள் பல இருந்தன. இவை வணிகரீதியாக முன்னேறிய, புதிய ஒழுங்குகளை கலாச்சார வாழ்வில் மேற்கொண்ட மதினாவாசிகளின் வாழ்வுநிலையோடு ஒப்பிட்டு பார்க்கும் போது மிகவும் பின்தங்கியே இருந்தன. அன்றைய காலச்சூழலில் அடிமைப் பெண்களுக்கு முட்டுக்கு மேலும் தொப்புளுக்கு கீழும் மட்டுமே ஆடை உடுத்த அனுமதி இருந்தது. மேலும் அன்றைய அரபு பழங்குடி இன மக்கள் திறந்த மார்போடும், மேலாடை அணியும் வழக்கமற்றவர்களாகவும் இருந்துள்ளனர் என்பதும் தெரியவருகிறது. இந்நிலையில்தான் இஸ்லாமியப் பெண்களுக்கு ஆடையின் மூலமாக உடல் முழுக்க மறைத்தல் என்பது கற்பை பாதுகாக்க ஏற்படுத்தப்பட்ட ஒரு ஒழுக்க விதியாகவும், உரிமை சம்பந்தப்பட்ட பிரச்சினையாகவும் உருவானது.

(நபியே) விசுவாசமுள்ள பெண்களுக்கும் நீர் கூறும் அவர்களுக்கும் தங்கள் பார்வையைக் கீழ்நோக்கியே வைத்து தங்கள் கற்பையும், இரட்சித்துக் கொள்ளவும், (அன்றி தங்கள் தேகத்தில் பெரும்பாலும்) வெளியே தெரியக் கூடியவைகளைத்தவிர, தங்கள் அழகையும், (ஆடை, ஆபரணம் போன்ற) அலங்காரத்தையும் வெளிக்காட்டாது மறைத்துக் கொள்ளவும் தங்கள் முந்தானைகளால் மார்பையும் மறைத்துக் கொள்ளவும் *(24:31 - 423)*

இன்று இஸ்லாமிய ஆடை என்பது ஒரு அடையாளம் சார்ந்த விஷயமாகவும் நிலை பெற்றுள்ளது.

பர்தா ஆடை முறை மட்டுமே திருக்குர்ஆன் கூறிய கற்பைப் பாதுகாத்தல் என்பதற்கான முழுவகை கேடயமாக இருந்திட வாய்ப்பில்லை. நவீன வாழ்வில் மக்கள் தொடர்பு சாதனங்களான பத்திரிகைகள், தொலைக்காட்சிகள், வீடியோக்கள், கேபிள்கள், டிவி சேனல்கள் தீவிரமாக உருவாக்குகிற பாலியல் ரீதியான



படிப்பகம்

www.padippakam.com

மனச்சிதைவுகளை, பிறழ்வுகளை இதனால் தடுக்க முடிவதில்லை. மேலும் பர்தா என்பது சம்பிரதாயமாக மட்டும் ஒரே வகைப்பட்ட ஆடைச்சிறையாகவும் மாறிவிடக்கூடாது. பர்தா ஆடை முறையைப் பின்பற்றாதவர்கள் ( தென்தமிழக குமரி மாவட்டத்தில் கேரள கலாச்சாரபாதிப்பின் வடிவமாக கவுணிமூலம் முட்டாக்கு போடுதல் பழக்கமாக உள்ளது. இது கிராமப்பகுதி,நகர்ப்பகுதி மற்றும் பிற மாவட்டங்களின் கலாச்சாரத்திற்கு ஏற்ப மாறுபடலாம்) ஒழுக்கக் கேடானவர்கள் என்பதாகவெல்லாம் குற்றம் சாட்டுவது அராஜகமாகும். பர்தா ஆடைகளுக்கு மாற்றாக சுடிதார் உள்ளிட்ட புதுவித ஆடைமுறைகளை இன்றைய பெண்கள் சமுதாயம் பயன்படுத்துவதை யாராலும் தடுக்க முடியவில்லை என்பதே யார்த்தமாகும்.

ஆண் - பெண் என்கிற வித்தியாசத்தின் அடிப் படையான உயிரியல் அடையாளங்களை மட்டும் வைத்துக்கொண்டு பெண்ணின் உடலை போகத்துக் குரிய பொருளாக மட்டுமே கருதும் மனோபாவமும் மாற்றப்பட்டவேண்டியதாகும். இஸ்லாம் பெண்மையின் எல்லா பரிமாணங்கள் சார்ந்த ஆளுமைக்கு இடமளிக்கும் பகுதிகளை இன்னும் கண்டுபிடிக்க முடியும்.

இஸ்லாமியப் பெண்கள் ஆண்களை விட தாழ்ந்தவர்கள் தான் என்பதை நிறுவிட சாட்சி தொடர்பான திருமறை வசனத்தை இஸ்லாமிய அறிஞர்களில் சிலர் முன்வைப்பதை கவனிக்கலாம். ஆனால் இதுவும் அவ்வசனத்தின் சொல்லப்படாத அர்த்தங்களின் பின்னணியை புரிந்து கொள்ளாமல் முன் வைப்பதாகவும் உள்ளது. திருமறை வசனங்களில் நேரடியாகச் சொல்லப்பட்டதும் அதே நேரம் சொல்லப்படாமல் மௌனப்படுத்தப்பட்டதும், அர்த்தங்களில் இடைவெளிகளுக்கு இடமளிப்பதுமான பகுதிகளை பெண்ணிய வாசிப்பில் கண்டுபிடிக்க வேண்டியுள்ளது. இது தொடர்பாக, சாட்சி சம்பந்தமாக திருமறை வசனத்தின் இரு பகுதிகளை இங்கே குறிப்பிடலாம்.

*விசுவாசிகளே நீங்கள் ஒரு குறித்த தவணையின் மீது (உங்களுக்குள்) கடன் கொடுத்துக் கொண்டால் அதை எழுதிக் கொள்ளுங்கள் ............மேலும் நீங்கள் சாட்சியாக (அங்கீகரிக்க)க் கூடிய உங்கள் ஆண்களில் (யோக்கியமான) இருவரை அக்கடனுக்குச் சாட்சியாக்குங்கள். அவ்வாறு (சாட்சியாக்க வேண்டிய) இருவரும் ஆண்பாலராகக் கிடைக்காவிட்டால் ஓர் ஆணுடன் நீங்கள் சாட்சியாக அங்கீகரிக்கக்கூடிய இரு பெண்களை (சாட்சியாக்க வேண்டும். ஏனென்றால் பெண்கள் பெரும்பாலும் கொடுக்கல் வாங்கலை அறியாதவராக இருப்பதனால்) அவ்விருவரில் ஒருத்தி தவறிவிட்டால் மற்ற பெண் அவளுக்கு (அதனை) ஞாபகமூட்டிக் கொடுக்கும் பொருட்டு (இவ்வாறு செய்யவும்) - (2:282-55,56)*

கடன் கொடுக்கல் வாங்கல் நிகழ்வில் பின்பற்றப்படவேண்டிய ஒப்பந்தம் தொடர்பாக விதிகளை மேற்கண்ட திருமறை வசனம் விளக்கிக் கூறுகிறது.

*1)* கடன் கொடுக்கல் வாங்கல் நிகழ்வில் தேவைப்படும் சாட்சிகளைப் பற்றி குறிப்பிடும்போது மட்டுமே ஒரு ஆணுக்கு இணையாக இரண்டு பெண் சாட்சிகள் என்பது குறிப்பிடப்படுகிறது. இதனடிப்படையில் அணுகும் போது பிற நிகழ்வுகளுக்கு இதனை யாந்திரிகமாக பொருத்துவது சரியானதாக இருக்காது. ஏனெனில் இதற்கான காரணம் கீழ்க்கண்டவாறு சொல்லப்படுகிறது.

*2)* கொடுக்கல் வாங்கல் நிகழ்வில் ஒரு ஆணுக்கு இரு பெண் சாட்சிகள் ஏன் என்பதை மேற்கண்ட திருமறை வசனம் தெளிவுபடச் சொல்லிக் காட்டுகிறது.

*அ)* பெண்கள் பெரும்பாலும் கொடுக்கல் வாங்கலை அறியாதவர்களாக இருக்கிறார்கள்.

*ஆ)* ஒரு பெண் தவறிவிட்டாலும் மற்ற பெண் அவளுக்கு ஞாபகமூட்டிக் கொடுப்பாள்.

இங்கே சுட்டிக் காட்டப்பட்டவற்றில் வணிக அறிவு இல்லாத பெண்கள், மற்றும் ஞாபக மறதி உள்ள பெண்களுமாக இருந்தால் மட்டும்தான் இரு பெண்சாட்சிகள் தேவையாக உள்ளது. மற்றபடி வணிக அறிவு, ஞாபக சக்தி உடைய பெண்களுக்கு இதில் விதிவிலக்கு உள்ளது என்பது சொல்லப்படாத அர்த்தமாக உள்ளது. அன்னை கதிஜா நாயகி வணிக அறிவில் தேர்ச்சி மிக பெற்றவர்களாகவும் அன்னை ஆயிஷாநாயகி பிற ஸஹாபாக்களை விட அதிக அளவில் ஹதீசுகளை ஞாபகசக்தியில் வைத்திருந்த தாகவுமுள்ள வரலாற்று நிகழ்வுகளை இதற்கு துணைக்கழைக்கலாம்.

இஸ்லாமியப் பெண்ணியத்திற்கான தேடல்களை ஆண்-பெண் உறவுகளையும், உரிமைகளையும் சரிசமமாகக் கருதுகிற புள்ளிகளிலிருந்து நிகழ்த்த முடியும். கணவன் மனைவியைப் பார்த்து அவர்கள் உங்களுக்கு ஆடையாகவும் நீங்கள் அவர்களுக்கு ஆடையாகவும் இருக்கின்றீர்கள் *(2.187 - 33)* என திருமறை சுட்டிக் காட்டும் வசனமும் இங்கே முக்கியமானதாகும்.இது இஸ்லாமியப் பெண்களை திரும்பவும் புதுவகை சங்கிலியில் கட்டிப் போடுகிறது. பெண்ணியம் என்றாலே அரைகுறை ஆடையோடு நடக்க பெண்கள் உரிமை கேட்கிறார்கள் என தவறாக வியாக்கியானம் செய்கிற ஆணாதிக்க வாதிகளுக்கு இது சாதகமாகி விடுகிறது.

ஆனால் இதற்கு மாற்றாக பெண்ணியம் என்பதே ஆணாதிகாரம் சார்ந்த எல்லா வகை சிந்தனைகளையும் கேள்விக்குள்ளாகுவதும், கல்வி, வேலைவாய்ப்பு உள்ளிட்ட கலாச்சார பொருளாதார உரிமைகளை பெண்ணினம் பெறுவதுமாகும். இத்தகு சமத்துவத்தை நோக்கிய இஸ்லாமியப் பெண்ணின் நகர்தலே இன்றைய முதல் தேவையாகும்.

●



படிப்பகம்

www.padippakam.com

# வளையமிட்டபோது..

நாறும்பூநாதன்

வசந்த மண்டபத்தின் தெற்கு மூலையில் தனது சகாக்களோடு ஆடுபுலியாட்டம் ஆடிக்கொண்டிருந்தார் பெரியண்ணத்தேவர். மறுநாள் சஷ்டித் திருவிழா ஆரம்பிக்க இருக்கும் வேளையில் தேவர் இப்படி சாவதானமாய் விளையாடிக் கொண்டிருப்பது ஆச்சரியமாயிருந்தது. கோவில் வாசலில் ஜனநடமாட்டம் அதிகரித்திருந்தது. கோவில் தெப்பத்தில் தண்ணீர் எடுத்துச்செல்லும் பெண்கள், கொலு மண்டபத்தில் சாய்த்து வைத்திருந்த சூரன்களை வேடிக்கைப் பார்த்தபடி சென்றனர். சிறுவர் பட்டாளம் ஒவ்வொரு சூரனையும் பயத்துடன் தொட்டுப்பார்த்துச் சென்றது. தேவர் மட்டும் பார்த்திருந்தால் கையை ஒடித்திருப்பார். சூரன்களில் மூத்தது மகாப்பெரியவர். மஞ்சள் முகத்தோடு இருப்பது பல்லிளிச்சான். அடுத்தது பச்சை முகத்தான். குழந்தைகளை கவர்வது யானை முகத்தான். துதிக்கை கொண்டவன். கடைசிச்சூரன் கடைக்குட்டி. மகாப்பெரிய சூரனின் மனைவி வல்லவத்தாள். தலையை விரித்தபடி கைகளை இடுப்பில் வைத்தவாறு இருக்கும் வல்லவத்தாள் தான் இருப்பதில் எடை குறைந்தது. சூரன்களை வடிவமைப்பதில் கைதேர்ந்தவன் குருவிகுளம் கோட்டியப்பன். மூங்கில் கம்புகளை இணைத்து தலைப்பகுதியைத் துணிகளாலும், உடல்பகுதியைக் காகிதத்தாலும் மறைத்து, களி மண்ணில் வார்ப்பு எடுத்த முகத்தினை இரண்டு நாட்கள் வெயிலில் நன்றாக காயவைத்து விதவிதமான வர்ணங்களைப்பூசி சூரன்களை உருவாக்கும் கோட்டியப்பன், சஷ்டிக்கு ஒருவார காலம் முன்னதாகவே கழுகுமலைக்கு வந்து விடுவான். கோட்டியப்பனுக்கு ஒத்தாசையாய் இருந்து சூரன்களை அழகுபடுத்துவது பெரியண்ணத்தேவர்தான். ஜடமாய் கிடக்கும் சூரனை உயிர்ப்பித்து மயில்மேல் பவனிவரும் கழுகாசலமூர்த்தியின் முன்பு ருத்ர தாண்டவம் ஆடி, சூரனின் ஆக்ரோஷத்தை, ரௌத்திரத்தை வெளிப்படுத்தப்போவது அவர்தானே.

மற்ற நாட்களில் வெற்றுடம்பில் தோளில் துண்டுடன் அலையும் தேவர், திருவிழா நேரங்களில் கதர் ஜிப்பாவும் சரிகைத்துண்டுமாய் மிடுக்காய் நடப்பார். சூரன் ஆடப்போகும் நேரத்தில்தான் ஜிப்பாவைக்கழற்றி உடன்வரும் காளி கையில் கொடுப்பார். சூரனைச் சாய்த்து அடிப்பகுதி வழியே உள்ளே நுழைந்து சூரனைத் தூக்குவது லேசான காரியமல்ல. பல இளவட்டங்கள் இப்படித்தான் சுளுவாய் இருக்கும் என்று நினைத்து உள்ளே நுழைந்து பலகையை உச்சந்தலையில் தூக்கும்முன்பே கழுத்து சுளுக்கி உட்கார்ந்திருக்கிறார்கள். அப்படியே சிரமப்பட்டு சூரனை ஒரு வேளை தூக்கினாலும், சூரனைத்தூக்கிக் கொண்டு நாலு அடி நடப்பதற்குள் கண்ணுமுழி பிதுங்கிவிடும். உச்சந்தலையே மரத்துப்போய் கண்ணைக் கட்டிக்கொண்டுவிடும்.

'ஏலேய் தீவட்டித் தடியங்களா..... சூரன் என்ன உங்களுக்கு பருத்திமாருக்கட்டா'

கிண்டல் செய்யும் பெரியண்ணத்தேவரை அப்புறம் நிமிர்நது பார்க்க யோசிப்பார்கள்.


சூரன் ஆடுவதில் பெரியண்ணத் தேவரைத் தவிர அரண்மனைத்தெருவில் சைக்கிள் கடைவைத்திருக்கும் பேச்சிமுத்து, அவரது மருமகன் மாடசாமி, மேலத்தெரு சுப்பையா, அவன் தம்பி சுடலை இப்படி எண்ணி நாலைந்து பேர்தான் உண்டு. தெற்குத்தெரு ஆறுமுகக் கோனார் சில சமயத்தில் ஆடுவார். மனுசனுக்கு 'மூடு' இருக்க வேண்டும். ரொம்ப காலமாய் ஆடிக்கொண்டிருந்த வெள்ளைச்சாமி இப்போது பொழைப்புக்காக கோவில்பட்டியில் ரெடிமேட் வியாபாரம் பார்க்கப் போய்விட்டார். நாலைஞ்சு வருசமாய் அவர் ஊர்ப்பக்கமே தலைகாட்டவில்லை.

சஷ்டித்திருவிழா நாட்களில் சாமி வரும் வீதிகளில் சப்பரத்திற்கு முன் சூரன் ஆடுவார்கள். ஒரே சமயத்தில் ஆறு சூரன்களும். முதல்நாளும் கடைசி நாளும் மட்டுமே ஆடிவரும். மற்ற நாட்களில் இரண்டு அல்லது மூன்று சூரன் மட்டும்தான். சமயத்தில் சொல்லி வைத்தாற் போல தேவரோடு,பேச்சிமுத்து, மாடசாமி, சுப்பையா, சுடலை என்று 'செட்டு' சேர்ந்து விட்டால் அன்றைய ஆட்டம் தூள் பறக்கும்.தேவர்குளம் கணபதி பார்ட்டியாரின் டிரம்ஸ் வாத்தியமும் சேர்ந்து விட்டால் கேட்கவே வேண்டியதில்லை. 'மகாப்பெரியவரை தூக்கிக்கொண்டு கால்களை லாவகமாய் சுழற்றியபடி ஆடத்துவங்கும் தேவர், கொட்டுச் சத்தம் ஏற ஏற பம்பரமாய் சுழன்று சுழன்று ஆடி கூடியிருக்கும் ஜனங்களைக் கதிகலங்கச் செய்வார் .வலது காலால் நொண்டியடித்தபடியே முன்னும் பின்னும்



படிப்பகம்

www.padippakam.com



ஓவியம் : தனசேகர்

ஆடுபவர், சப்பரம் அருகே வேகமாகச் சென்று அதேவேகத்தில் பின்னோக்கித் திரும்புவார். சிறுவர்கள் உற்சாகத்தில் அலறியடித்து ஓடுவார்கள். இளைஞர்களின் விசில்சப்தம் தெருவெங்கும் எதிரொலிக்கும். சப்பரத்தில் உட்கார்ந்திருக்கும் முத்துப்பட்டர், 'என்ன தேவரே! இன்னைக்கு சரக்கு அதிகமா ?' என்று சிரித்தபடியே கேட்பது யாருக்கும் கேட்காது. 'டண்டண்ணு......டண்ணு.... டண்டண்ணு.....டண்ணு..' கணபதி பார்ட்டியாரின் டிரம்ஸ் சத்தம் அதிகரிக்க அதிகரிக்க சூரனின் வெறியாட்டமும் உச்சத்திற்குச் சென்றுதான் திரும்பும். சூரபத்மனே உயிர்த்தெழுந்து வந்து முருகக் கடவுளோடு சண்ட மாருதம் செய்வதைப்போலத்தான் உணர்வார்கள் ஜனங்கள். ஏழாந்திருநாளில் ஆடுவதைப்போல ஆடுவார் தேவர். நடுத்தெருவில் ஆடிமுடித்த தேவர் சூரனை விட்டு வெளியே வந்து பத்து நிமிஷங்களுக்கு யாருடனும் பேசமாட்டார். வியர்வை ஆறாய் பெருக்கெடுத்து ஓடும். மூச்சிறைக்க நாக்கைத் தொங்கப்போட்டபடியே அடிபம்புச்சுவற்றில் தலைகவிழ்ந்து உட்கார்ந்திருப்பார். காளியும், சுடலையும் அருகே அமர்ந்து அவரை ஆசுவாசப்படுத்துவார்கள். அடிபம்புத்தண்ணீரை வாய்நிறையக்குடித்த தேவர், பானை போல உப்பியிருக்கும் வயிற்றைத் தடவி விட்டுக் கொள்வார். சப்பரம் அதற்குள்முன்னகர்ந்து போயிருக்கும்.

சஷ்டித்திருவிழா என்றாலே அஞ்சாம் திருநாளும் ஏழாந் திருநாளும்தான் விசேஷம். பகலிலே நடக்கும் அஞ்சாம் திருநாள் அன்றைக்கு பள்ளிக் கூடமெல்லாம் லீவு தான். பக்கத்து ஊர்ச்சனங்கள் திரண்டு வருவார்கள். அன்றைக்குத் தான் குட்டிச்சூரனை முருகப் பெருமான் வேலால் குத்தி வெற்றி கொள்வார். முத்துப்பட்டர் வேலால் குத்திய அடுத்த கணமே குட்டிச் சூரனுக்குள் இருக்கும் பெரியண்ணத் தேவரை நாலைந்து பேர் குண்டு கட்டாகத் தூக்கிச் சென்று, கோவில் தெப்பக்குளத்தில் வீசினார்கள். குளத்தில் தெப்பம் போல கைகால்கள் விரைத்தபடியே அவர் மிதிப்பதை, குளத்தின் சுற்றுச்சுவர்களில் நெருக்கியபடி உட்கார்ந்திருக்கும் சனங்கள் அதிசயித்துப்பார்த்தார்கள். மிதந்து கொண்டிருந்த தேவர் திடீரெனக் காணாமல் போய் விட்டார். வேடிக்கை பார்த்த கூட்டம் பரபரப் படைந்தது. மூங்கு நீச்சல் போட்டுச் சென்ற தேவர் தெப்பக்குளத்தின் நடுவே இருந்த மண்டபத்தில் ஏறி அமர்ந்து வாழைப்பழத்தை உரித்துச் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்.

கூட்டம் இப்போது கோவிலுக்குள் படையெடுத்துச் சென்றது. திருவிழாவில் ரங்கராட்டினம், குடை ராட்டினம் ஏறும் சனங்களின் வாயில் ஊதுகுழல்கள்... விசில் சப்தங்கள்.... கோவில் வாசலை அடைத்துக் கடை போட்டிருந்தார்கள். நன்னாரி சர்பத்கள், பாயாசம் எனக் கூவி கூவி விற்கும் சிறுவர்கள்... பலூன் விற்பவர்கள் ஒரு பக்கம் குழந்தைகளின் கவனத்தை ஈர்த்துக் கொண்டிருந்தார்கள்.உள்ளூர் சனங்கள் சாமான்கள் வாங்குகிறார்களோ இல்லையோ.. ஒவ்வொரு கடையாய் வேடிக்கை பார்த்துச் சென்று கொண்டிருந்தார்கள். இந்த மாதிரி நேரங்களில் வழக்கமாய் பாலசுப்பிரமணியன் டாக்கீஸில் 'நாடோடிமன்னன்' 'படம் தான் போடுவார்கள். அங்கேயும் ஒருபாடு கூட்டம் அலைமோதும்.

அஞ்சாம் திருநாளுக்கு வந்த வெளியூர் சனங்கள் இருந்து ஏழாந் திருநாள் பார்த்துவிட்டுத்தான் போவார்கள். அதுவரை ஊருக்கு மேற்கே இருக்கும் குளத்தில் சென்று குளித்து வெட்டுவான் கோவில் பக்கம் சென்று கொண்டு வந்த புளியோதரையைக் காலி செய்து விட்டுப் பொழுதைக் கழிப்பார்கள். கடைசிநாள் சூரசம்ஹாரத்தில் பெரியண்ணத் தேவரின் ஆட்டத்தைப் பார்த்து ரசிக்க வருபவர்கள் அநேகம். சூரங்குத்து நடக்கையிலேயே அப்படியொரு மழை வெளுத்து வாங்கும். சனங்கள் நனைந்து கொண்டுதான் வீடு திரும்புவார்கள்.

ஏழாம் திருநாள் -திருவிழாக் கூட்டத்தைக் கடந்து, கோவிலின் முகப்பு வாசலை பெரியண்ணத் தேவர் நெருங்கும்போது இருபுறமும் இருப்புச்சட்டி போலீஸ்காரர்கள்கையில் லத்திக் கம்புகளுடன் வழிநெடுக நின்று கொண்டிருந்தார்கள். வழக்கமாய்



படிப்பகம்

www.padippakam.com

உள்ளூர் போலீஸ்கள் நாலைந்து பேர் பேருக்கு வருவார்கள். இன்னைக்கு என்னென்னு தெரியலையே... யோசித்தபடியே வந்த தேவரைப் பார்த்ததும் காளியும் இசக்கி முத்துவும் அருகில் வந்தார்கள்.

'மாப்பிளே..என்ன விசயம் போலீசெல்லாம் எக்கச்சக்கமா நிக்காகளே.... எதுக்காம்?'

ஆச்சரியமாய் கேட்டார் தேவர்.

'எங்களுக்கும் அதுதான் புரியலை... காவலுக்கு வந்துருக்காகளாம்...'

காளிதான் சொன்னான்.

'யாரைக்காவல் காக்கப்போறாகளாம். நம்மளையா... சாமியையா... இந்த ஊருலே நம்மளை மீறி எவம்லே என்ன செஞ்சிருவான்....'

பெரியண்ணத்தேவருக்கு ஆங்காரமாய் வந்தது.

சப்பரம் முன்பு நின்று கொண்டிருந்த முத்துப்பட்டரிடம் சென்ற தேவர் 'என்ன சாமி! என்னிக்குமில்லாத புதுக்கூத்தா இருக்கு?' என்றார்.

முத்துப்பட்டர் ஏதோ கூற வாயெடுத்தவர் நிர்வாக அதிகாரி புடைசூழ வருவதைப் பார்த்து நிறுத்திக்கொண்டார். அவருடன் பட்டு வேட்டி சரசரக்க வந்தவர்களில் நடுவில் இருப்பவர் டாக்டரய்யாவின் மருமகன். ஊருக்கு வந்து நாலைந்து மாதங்களாகின்றன. கோவில் திருவிழாக்களில், பஜனைகளில், கச்சேரிகளில் அவரது தலை முன்னால் தட்டுப்படும். வடநாட்டுப் பாணியில் நீளமாக காவிப்பொட்டு வைத்திருக்கும் அவர். போலீஸ்காரர்களோடு தீவிரமாகப்பேசிக்கொண்டு இருந்தார்.

தேவரைப் பார்த்த நிர்வாக அதிகாரி 'என்ன தேவரே லேட்டா வாறீகளே?' சிரித்தபடியே கேட்டார்.

'அதெல்லாம் இல்லேங்க. வீட்டிலே எல்லாரையும் கிளப்பிக் கூட்டியாரணும்ல... அதான் நேரமாயிருச்சு 'என்றவர் 'ஐயா போலீஸெல்லாம் பலமா இருக்கே. சும்மாதாங்களா... ' என்று பவ்யமாகக் கேட்டார்.

'எல்லாம் நமக்காகத்தான் தேவரே! ஊரு முன்ன மாதிரியில்லே... கூட்டமும் நிறைய்ய வருது... ஒண்ணு கிடக்க ஒண்ணு ஆயிரக்கூடாதுல்ல.... அதான்.......' என்ற அவர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே ரெண்டு போலீஸ்காரர்கள் எல்லாச் சூரன்களையும் கவிழ்த்துப் போட்டு கையில் வைத்திருந்த 'மெட்டல்டிடெக்டரால்' சோதனையிட்டார்கள்.

ஒரு போலீஸ்காரர் கோவில் நிர்வாக அதிகாரியிடம், 'சார்! இந்தப்பொம்மைகளை யாரெல்லாம் தூக்குவாங்க. அவங்களையும் ஒரு தடவ செக் பண்ணிறனும்' என்றார்.

தேவர் ஒரு கணம் ஆடிப் போய் விட்டார்.

'என்னய்யா நீங்க.. இருபத் தைந்து வருஷமா ஆடுறவங்க நாங்க எங்களையுமா....'

'இதெல்லாம் வெறும் சம்பிரதாயத்துக்குத்தான். நீங்க தப்பா நினைச்சுரப்படாது...'

டாக்டர் மருமகன் சிரித்துக் கொண்டே கூறினான்.

பெரியண்ணத்தேவர் கண்ஜாடை காட்டியவுடன் மாடசாமி, பேச்சிமுத்து, சுடலை, காளி, சுப்பையா வரிசையாய் வந்து நின்றார்கள். ஒரு போலீஸ் கணபதி பார்ட்டியாரின் டிரெம்ஸ் வாத்தியக்காரர்களையும் இவர்களோடு நிற்க வைத்தார்.

போலீஸார் சோதனை யிட்டார் கள்.

பெரியண்ணத்தேவர் கூனிக்குறுகி நின்றார்.

சோதனை முடிந்தவுடன் டாக்டரின் மருமகன் சப்பரம் செல்லும் வழிகளை வரைபடம் மூலம் விளக்கிக் கொண்டிருந்தான். போலீஸார் கவனமாய்க் குறித்துக் கொண்டார்கள். போலீஸ் அதிகாரி ஒருவர் இப்போது பேச ஆரம்பித் தார். எந்தெந்த தெருக்கள்.... யார் யார் சூரனைத் தூக்குகிறார்கள்.... எதுவரை தூக்க வேண்டும் ... சப்பரத்திற்கு முன்பாகச் செல்லும் நூற்றுக் கணக்கான போலீஸின் பாதுகாப்பு வளையத்திற்கு ள்ளாகவே சூரன் ஆட வேண்டும். வளையத்தின் விட்டம் உத்தேசமாக எத்தனை அடி.... வளையத்தை மீறி வெளியே சென்று விட்டால் என்ன விபரீதம் ஏற்படலாம்.... என்று கூறிக்கொண்டே சென்றார். தேவர் காதில் எதுவும் விழவில்லை. ஜடமாய் நின்று கொண்டிருந்தார்.

'ம்.... கௌம்பலாமா?'

முத்துப்பட்டரின் கனீரென்ற வெண்கலக்குரல் ஒலித்தவுடன் 'முருகனுக்கு அரோகரா.....' என்றபடியே சப்பரத்தைத் தூக்கினார் கள். வாங்காய் ஒலிக்கத் தொடங்கி யது. சரவெடிச்சத்தம் விண்ணில் ஒலித்தது. வரிசையாய் தடதட வென்று ஓடிய போலீஸ்காரர்களின் பூட்ஸ் சத்தங்கள், கணபதி பார்ட்டி யாரின் டிரம்ஸ் சத்தத்தை மீறி எழும்பின.

'காளி போய்க்கிட்டிரு... சரக்கைப் போட்டுட்டு வந்துரு தேன்....'என்ற பெரியண்ணத் தேவர் சப்பரத்தின் பின் தங்கினார். சப்பரம் கோவில் வாசலைத் தாண்டும் பொழுது தெப்பக்குளத்தின் மேற்குப் பக்கமிருந்த வசந்த மண்டபத்தின் தூண்களில் இருந்த யாளி மீது சோகமாய் சாய்ந்து நின்றார் பெரியண்ணத்தேவர்.

★★★

சஷ்டிக்கு மறுநாள் தேவரைப் பார்த்தவர்கள் 'என்ன தேவரே....! நேத்து எங்கே போனீங்க.... என்ன ஆட்டம்.... செத்த பய ஆட்டம்....' என்று விசாரித்தவர்களிடம் 'வயிறு சரியில்லை' என்று கூறிக் கொண்டிருந்தார் பெரியண்ணத் தேவர்.



படிப்பகம்

www.padippakam.com

# சுகிர்தராணி கவிதைகள்

❑

மொழியற்ற அவஸ்தையில்
கிளர்ந்தடங்கும் எனை மீட்க
யாரேனும் உண்டா?
உண்டெனில்
என் கழிந்த இளமையும் கூடிய வயதும்
நினையாதிரு
மரந்துளிர்ந்த சாலையோரம்
கைபற்றி என் கனவு கேள்
மனமொடிந்த பொழுதெல்லாம்
திகட்டும் வரை
உன் தோள் கொடு
விளக்கணைந்த பின்னிரவில்
இமைமீறும் கண்ணீரை
சுட்டுவிரலால் துடைத்துவிடு
மறுதலித்த வாழ்க்கைக்கு
என் பிரதியென
உன் முகம் காட்டு.
இத்தனைக்கும் சம்மதமெனில்
தயவுசெய்து
தப்பர்த்தம் கொள்ளாதே
புணர்ச்சிக்கு அழைக்கிறேனென்று.

❑

ஏதோவொன்று
எச்சமிட்டுப் போனதில்
என்னுள்
விழுந்திருக்க வேண்டும் நீ.
நெருப்பின் தகிப்பை விழுங்கிவிட்டு
ஈரமாய் உன்னை அணைத்ததில்
முளைத்தெழுந்தாய்.
உன் வேர்கள் எனக்குள்ளும்
என் சுவாசம் எனக்குள்ளும்
நித்தமும்
இளைப்பாறிக் கொண்டன.
நீ அரும்பிய போது
முன்னிலும் பலமாய்
உன்னைப் பற்றிக் கொண்டேன்.
உன் பூக்கள் அபூர்வமாயிருக்கிறதென்றும்
பெயர்த்தெடுத்து செல்வதென்றும்
தீர்மானமெழுந்தபோது
தளர்த்திக் கொண்டேன் என்னை
உன் வேர்களின் காயத்தை
தவிர்க்க வேண்டி.
ஆயினும் என்ன
பறவைகள் எப்போதும்
எச்சமிடத் தவறுவதில்லை.

❑

எதுவரை உன்னை பின்தொடர...?

துயரம் தேய்த்த பாதை முழுதும்
நெருப்புக் கங்காய்
உன் சிறகுகள்.
ஊதி அணைத்து நடந்தால்
பூக்களைப் பதுக்கிவிட்டு
நெருஞ்சிமுட்களை வீசுகின்றன
உன் சுவடுகள்.
இரத்தம் திரண்டு
அமிழ அமிழ நிற்கையில்
காயமற்ற கவிதை ஒன்றை
விலையாக கேட்கிறாய்.
உனக்கான கவிதையோ
தூக்கிலிட்ட வார்த்தைகளையே
துவக்கமாய் கொண்டிருக்கிறது.
இனி சொல்வதற்கொன்றுமில்லை.
வேறு யாரேனும் தேடு
உன் நிபந்தனைக்கு.



ஓவியம்: மருது



படிப்பகம்

www.padippakam.com

# வயோதிகப் பாம்பின் இற்ற படம்

தமயந்தி

புகை முட்டிக் கொண்டு நெஞ்சுக்கூட்டில் மூச்சு திணறியது. தொடர்ந்த இருமல், தண்ணீரில்லாமல் நிற்கவில்லை. தண்ணீர் தம்ளர் மாலை நேரத் தேயிலை வாடையை கறைகளின் மூலம் தக்க வைத்திருந்தது. அது கழுவப்படாமல் கூட இருந்திருக்கக் கூடும். வரலட்சுமி இன்னும் வரவில்லை. அங்கணத்தில் பாத்திரங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாய் புளித்த வாடையோடு, நேர்த்தியில்லாமல் கிடந்தன. வரலட்சுமி வந்து விளக்குகிற வரை அது அப்படித்தான் இருக்கும். அதுவரை யாரும் சந்திக்க வராது இருத்தல் நலம்.

வீடு, தெற்கு பஜாரில் அமைந்து போனதன் காரணம், பஜாருக்கு வந்து போகும் நண்பர்கள், தெரிந்தவர்கள் யதேச்சையாய் வந்து போகிறார்கள். தண்ணீர் குடிக்க என்று சைக்கிள் நிறுத்த என்று குசலம் விசாரித்துப் போகிறேன் என்று, யாராவது, எப்போதாவது வந்தால் நன்றாகத் தானிருக்கிறது. வீடு சீராக இருக்கும் தருணத்தில் அல்லாது யாருமற்ற தன்மை, அணில் கொய்யாவைக் கொய்த வண்ணம் அரிக்கும் சமயம் அல்லது யாரை யாவது வரவேற்கும் மனசுள்ள சமயங்களில் என்று விருந்தாளிகளை எதிர்பார்க்கிறது மனம். வாசுதேவன் வந்தது கூட அப்படியொரு சூழலில் தான். ஜோசப் பேக்கரி அருகே தள்ளு வண்டியில் பஜ்ஜி சாப்பிட்டவன் மேல், போய்க் கொண்டிருந்த ஆட்டோ சேறுவாரி இறைத்து விட்டது. அது அப்படித்தானிருக்க முடியும். படுத்தால் அடைத்து விடுகிற தெருவில் வேறெதை எதிர்பார்க்க முடியும்? புகை கக்கி வாகனங்கள் அதிகரித்து விட்டன. ஆட்டோக்களில், மண்ணெண்ணெய் புகை, மூச்சு முட்ட வைக்கிறது. புகை, சகல திசைகளிலும், பொழுதுகளிலும் படர்ந்து கொண்டு தானிருக்கிறது. யார் மீதாவது, எப்போதும்.

வாசுதேவன் உலகின் சகல ஆட்டோக்காரர்களையும் திட்டிக்கொண்டும், சலித்தும் கொண்டும் இவர் வீட்டு பாத்ரூமில் சேற்றைக் கழுவ வந்தான். அவன் பாத்ரூமுக்குள் நுழைவதில், இவருக்கு அத்தனை சம்மதமில்லை. கண் இருட்டினபிறகு மூத்திரம் பெய்வதும், மலம் கழிப்பதும் குறிப்பிட்ட திசையில் நிகழ்வதாயில்லை. இரவு உபயோகத்திற்கென்று பெரியவள் கம்மோட் பாட் வாங்கிக்கொடுத்திருந்தாள். எவ்வளவுதான் விளக்கைப் போட்டு நேர்த்தியாய் இருக்க முற்பட்டாலும் 'பாட்'டை விட்டு வெளியே தான் நிறைய நேரங்களில் இருக்க முடிகிறது. காலையில் வரலட்சுமி மூக்கைச் சுருக்கிக்கொண்டே 'என்ன தாத்தா?' என்றுசற்று தள்ளினாற் போல் பெருக்கிக்கொண்டு போகிறாள். பாத்ரூமை, சங்கரன் வாரம் ஒரு நாள் வந்து சுத்தம் செய்கிறான். இப்படிக் கறையாக்குகிறீர்களே என்று சத்தம் வராமல் முணுமுணுத்துக்கொண்டு தான் அவனும் செய்கிறான். சமயத்தில் இவருக்கே, பொதுக் கழிப்பிடத்தின் அடர்ந்த நெடி ஒவ்வொரு காற்றின் வீச்சிலும் புலப்படுகிற போது அவனது நியாயங்களை மறுக்க இவரால் முடிவதில்லை.

வாசுதேவன், அதனாலோ என்னமோ பாத்ரூமிலிருந்து ஒரு பக்கெட் நீரை வெளியே, மூன்றாவது படியில் வைத்துக் கொண்டு கழுவினான். ஈர உடையை வாயால் ஊதி ஊதி காயவைக்கிற போதே 'சச்சி மக கல்யாணத்துக்கு எப்ப வர்றீங்க?' என்றான். இவருக்கு தூக்கி வாரிப் போட்டது. சச்சியின் மகளுக்குக் கல்யாணம் என்பதே இப்போதுதான் தெரிகிறது. இவர் ஒன்றுமே பேசாமல் இருந்தார். வாசுதேவன், இப்போது, முகத்தை வெகுவாக, கிட்டத்தட்ட முதுகுப்பக்கம் திருப்பி, புஸ்ஸென்று ஊதிக் கொண்டிருந்தான்.

சச்சிதானந்தன் அவருக்கு அறிமுகமான போது அவனுக்கு அதிகபட்சம் பத்து வயதிருந்திருக்கலாம். களக்காட்டு ஸ்கூலின் கடைசி பெஞ்சில் எண்ணெய் வழியும் முகத்துடன் இருந்தவனிடம், இவளுக்குக் கவர்ந்தது அந்த மணிமணியான கையெழுத்தும், உடனடியாக கிரகித்துக்கொள்ளும் அறிவும். அவை தவிர அவனிடம் நைந்த இரண்டு ட்ரவுசர்கள் இருந்தன. போன வகுப்புப் பையன்களிடம் இருபத்தைந்து பைசாவுக்கு மட்டுமே வாங்கின அதற்கும் முந்தின வருஷத்துப் பையன்கள் அவர்களுக்குக் கொடுத்த, கசங்கின மக்கின வாடை வீசின பாடப்புத்தகங்கள் இருந்தன.


இவர் ஒரு சுருட்டைப் பற்ற வைத்துக் கொண்டார். சுருட்டின் உக்கிரமான ஒளி, சாம்பல் நிறைந்த முன் இரவின் நிறத்தில் மங்கி மங்கி மின்னியது. புகையின் சூடு, தொண்டையில் காய்ப்பைக் கொடுத்தது. ஒரு மிடறு எச்சிலை விழுங்கினார். சச்சிதானந்தன் என்ற



படிப்பகம்

www.padippakam.com

ஓவியம் : தனசேகர்



சச்சிக்கு ஒரு சித்தி இருந்தாள். அவன் அப்பாவின் இரண்டாவது மனைவி. அவளுக்குச் சச்சியின் பால் எந்தவொரு கணத்திலும் அன்பு தோன்றினதில்லை. அது சரித்திரசரித்திரமாக அப்படித்தான் இருந்து வந்திருக்கிறது. மூத்தாளின் குழந்தைகள் சித்திக்காரியின் விரோதிகள் என்கிற உலகியல் விதிக்கு,சச்சியின் சித்தி உடன்படாத வளில்லை.அவன் படிப்பதைக் காட்டிலும்,ஏதேனும் ஒரு கடையில் எடுபிடியாக இருந்தால், வீட்டின் பொருளாதாரநிலை சற்று மேம் படலாம் என்கிற நம்பிக்கை அவளிடம் நிறையவே இருந்ததன் விளைவு, சச்சி ஸ்கூலுக்கு வருவது நிறுத்தப்பட்டது. உள்ளூர்க் கடையென்றால் மாதம் குறைந்த ரூபாயும், திருநெல்வேலி என்றால் அதிகசம்பளம்,சாப்பாடு, தங்கு மிடம் என்று யாரோ உறவு சார்ந்த மாமா சொல்ல, சச்சியின் இடம்பெயர்தல் முடிவான ஒரு மழைநாளின் ஈரம் நிறைந்த சாயங் காலம், வேறு வழியின்றி இவர் வீட்டுக்கு சச்சி வந்தான். தத்துவ ரீதியான ஒரு புத்தகத்தை வாசித்துக்கொண்டும், மழைத் தூறல்களின் வாசத்தை உள்வாங்கிக் கொண்டுமிருந்ததில், தத்துவம் மெல்ல நழுவும் கிறக்க நிலையில் இவரிருந்தார். ஏற்கனவே முளைத்து பரவிக் கிடக்கும் பூச்செடிகள் நடுவே திடீரென்று முளைவிடும் சின்னப் புல்லின் இருப்பைப் போலவே இவன் வருகையை அவராக உணர்ந்தும் கொண்டார்.

'என்ன சச்சி ஸ்கூலுக்கு வரலே?'

அவன் கண்கள் கலங்கின. கண்ணீர் வெளியே சிந்திவிடக் கூடாது என்பதில் அவன் அதிகக் கவனமாயிருந்தான். உடையில் தூறலின் அடையாளம் இருந்தது. 'என்ன விஷயமுடா?' என்றார் இவர் திரும்பவும். அவன் அதிக நம்பிக்கையில்லாத குரலில், ஊருக்குப்போக இருப்பதையும் கண்ணம்மன் கோவில் தெருவில் மொத்த பலசரக்குக் கடையில் அவனது அறிவு மற்றும் அவனும் ஒடுங்கப்படப்போவதையும் சொன்னான். என்ன தோன்றிற்றோ, இவர் அவன் அப்பாவைக் கூப்பிட்டனுப்பினார். அவ தீர்மானிச்சிட்டா என்று திரும்ப திரும்ப அவன் அப்பா சொல்லிக் கொண்டிருந்தார்.

'என்னவே தீர்மானம்? சொள்ளத் தீர்மானம். நான் படிக்க வக்கறேன். எம்பொறுப்பு. ஒத்துப்பியா?'

'அவ...'

'இது உம்புள்ள தானே?'

அவன் அப்பா வெறுமனே தலையசைத்து ஏற்றுக்கொண்டாலும் அது குறித்த பிரச்னைகளை, அவர் அவன் சித்தியின் மூலம் தொடர்ந்து சந்திக்க வேண்டியிருந்தது என்று பின்னால் இவரிடம் சச்சி சொல்லி இருக்கிறான். ஒப்புக் கொண்டதன் படி, சச்சியின் படிப்புச் செலவை ஏற்றுக்கொள்ளும் நிலையில், பல சூழல்களில் இவரின் பொருளாதார நிலை இல்லை. துவையலுக்கான சமாசாரங்கள் அரைக்கப்படும் அம்மிக் குழவியின் சப்தங் களிடையே சமயங்களில் இவரும் நசுக்கப்பட்டார். என்றாலும் எந்த சமயத்திலும் ஒப்புக்கொண்டதை அவர் நிறை வேற்றாமல் இல்லை. வாழ்வின் கோரம், பற்கள் நீண்டு குடையும் சமயங்களிலும் மூச்சு விடமுடியா சூழல்களிலும் கூட, சச்சி படித்துக் கொண்டிருந்தான்.அவர் பிள்ளை களைப் போலவே அவனும் வளர்ந்தான். அவர்பிள்ளைகளைப் போலவே வேலை கிடைக்கப் பெற்றான். சம்பளம் வாங்கி முதல்மாதம், ஒரு அயல்நாட்டு கடிகாரம், மயில்கரை போட்ட பட்டுவேஷ்டி, ப்ரான்சில் செய்யப்பட்ட சுருட்டுகள் வைக்கிற பெட்டி, பிரிட்டிஷ் பைப், உயர்ரக புகையிலை வாங்கி வந்தான். இவர் மனைவிக்கு ஒரு பட்டுப்புடவையும் குக்கரும் வாங்கியிருந்தான். முதல்முறையாக, அவளும் சச்சியைப் பார்த்து நிஜமாகச் சிரித்தாள். 'எதுக்கு இதெல்லாம்? மொத்தசம்பளத்தையும் எங்களுக்கே செலவழிச்சாப்ல இல்லே தெரியுது?'



படிப்பகம்

www.padippakam.com

என்றாள்.

அந்தப் பைப் வந்த புதிதில், இவர் புகையிலை நிரப்பி பற்ற வைத்துக்கொண்டும், பைப்பை ஆங்கிலப்பட ஸ்டைலில் வலது கையிலேந்தி, வாயை அகலத் திறக்காமலும் புகைவிட்டுக் கொண்டிருந்தார். அது இப்போது எங்கே என்று தெரியவில்லை. வீடு மாறினதில் தொலைந்து போனது. எந்த வீடு மாறும்போது என்று நினைவில்லை. வீடில்லாதவனுக்கு ஊரெல்லாம் வீடு தானே? சுருட்டுகள் வைக்கிற பெட்டி இருக்கிறது. ஆனால் நிறம் மங்கி விட்டது. இருந்தாலும் அதிலிருந்தால்தான் சுருட்டுகள் பாதுகாப்பாய் இருக்கிறது போலத் தோன்றுகிறது. எப்போது ஊருக்கு வந்தாலும் சச்சி வந்து ரொம்ப நாளைக்குப் பார்த்துக் கொண்டுதானிருந்தான். சமீப காலங்களில் அவன் வந்துபோனதை யாரின் மூலமாகவோ தான் அறிந்து கொள்ள முடிந்தது. வேகமான வாழ்க்கை உறவுகளின் மீதும் புகை மண்டச் செய்வது இயல்பு தானே என்று எடுத்துக் கொண்டார்.

அடிவயிறு கனக்கிறாற் போலிருந்தது. வரலெட்சுமி வருவதற்குள் பாத்ரூம் போய்விட வேண்டும். வெளிக்கதவை சாத்திவிட்டு பாத்ரூமைக் 'கொண்டி' போடாமல் சிறுநீர் இருந்தார். பாத்ரூமை இப்போதெல்லாம் 'கொண்டி' போடுவதில் தயக்கங்கள் இருந்தன. இறப்பதற்கு முன் ஏதாவது ஒருவகையில் நீர்பிரியும் என்று சகநண்பர்களின் சாவுச் செய்திகள் நிர்ணயம் செய்திருந்தன. கொண்டி போட்டு உள்ளேயே இறந்துவிட்டால் என்கிற நினைப்பே தாழ்போடாமல் வைக்கிறது. இருக்கிறதில் இருக்கிற சிரமங்களை இறப்பிலும் ஏன் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்பதன் நினைப்பாகக் கூட இருக்கலாம். இப்போதும் எப்போதும் போலவே, திசைகளின்றி சிதறுகிறது சிறுநீர். பழையவீடு வரை போய் வருவதற்கு முன்பாக இருந்தது. லேசான சூட்டோடு, மஞ்சள் நிறத்தில் பிரிந்தது.

பழைய வீட்டு முகவரிக்கு ஒருவேளை சச்சி அழைப்பு அனுப்பியிருக்கக்கூடும் என்கிற நப்பாசைதான் சமாதானபுரம் முக்கு வரை நடக்க வைத்தது. அந்த வீட்டுக்காரர்களிடம் தான் யார் என்று விளக்கும்போதே அந்தஆள், 'களக்காட்ல அஞ்சாப்பு படிச்சேன் சார்... எம்பேர் கந்தசாமி. உள்ள வாங்க' என்றார். உள்ளே போனதும் எலுமிச்சம்பழச்சாறு, முக்குக்கடை மிக்சர் எல்லாம் வந்தது. 'எம் பேருக்கு ஏதாச்சும் கடிதம் அல்லனா இன்விடேஷன் வந்துச்சா' என்றார் தயங்கி.

'இல்லையே' என்ற கந்தசாமி உள்ளே திரும்பி அப்படி ஏதும் சார் பேருக்கு வந்துச்சா? என்றார்.

'இல்லையே நமக்குத் தவிர வேற யாருக்கும் இங்க வராதே' என்றாள் அவர் மனைவி. உள்ளே கிரைண்டர் ஓடும் கிட்டத்தட்ட ரயிலின் ஓசை கேட்டது. அதுகூட ஒருவிதத்தில் சௌகரியமாகத் தானிருந்தது.

'அங்கப் போய் முணுவருஷமாயிட்டுன்னாலும் சிலருக்கு இந்த முகவரி தான் தெரியும். அதான்....'

'முக்கியமான தபால் ஏதும் வரணுமா?' என்றார் கந்தசாமி.

'ஆமா... இல்ல... வந்து...' ஒண்ணு எதிர்பார்க்கிறேன்...

ஏதும் வந்தா நானே வந்து கொடுத்திடுறேன் சார். அட்ரஸ் தாங்க என்று மேஜை மீதிருந்த டைரியில் முகவரி எழுதி வாங்கிக் கொண்டார். வயசுக்காலக் கிறுக்கு என்று அந்தக் கந்தசாமி மனைவி இப்போது முனங்கிக் கொண்டு மாவு வழித்துக் கொண்டிருக்கலாம்.

ஏதோ ஒரு மெல்லிதான ஆயாசம் மனசுள் எழும்பிற்று. வெளி விளக்கையும் கூடத்து விளக்கையும் போட்டார். வரலெட்சுமி இன்னும் வரவில்லை. ஸ்விட்சிலிருந்த நூலாம்படை கையில் ஒட்டிக்கொண்டது. கைகளைத் தட்டி விட்டுக் கொண்டும், அது முற்றாகப் போகாமல் பிசுபிசுக்க ஆரம்பித்தது. எதிரே, அவர் மனைவியின் படம். அதில் கூட, புகைப்படத்தை மழுங்கச் செய்யும் தூசுப்படலம் இருந்தது. போனமுறை விடுமுறைக்கு வந்திருந்த போது அவர் மகள் வீட்டை ஒட்டடை அடித்து, கழுவிவிட்டு, அலுத்துக் கொண்டாள். சட்டை நுனியால் புகைப்படத்தைத் துடைத்தார். ஒருநிமிஷம் அவர் மனைவி அவரை உற்றுப் பார்ப்பது போலிருந்தது. சச்சி, தன் மகள் திருமணத்திற்கு அழைப்பு கொடுக்கவில்லை என்று அவள் கூட, உயிரோடிருந்தால் நம்பியிருக்க மாட்டாள்.

வாசல் கதவு தட்டப்பட்டது. இவருள் நம்பிக்கைகள் இற்றுப்போன தருணத்தில் மலரும் எதிர்பார்ப்பு போல வெளிச்சம் தெரிந்தது. வீடு ஒழுங்கின்றி கிடந்தது. சேரை சரியான திசையில் தள்ளினார். சமையலறை அங்கணம் வெளியே தெரியாதவண்ணம் பாதிக்கதவைச் சாத்தினார். ஒருமுறை அரைகுறை திருப்தியில் பார்வையை சுழலவிட்டு கதவைத் திறந்தார்.

வரலட்சுமி நின்றிருந்தாள். முகத்தில் பளபளப்பும், தலையில் பூவும், கவரிங் கம்மலும், வளையலுமாய் உள்ளே வந்தாள்.

'ஒரு கல்யாணத்துக்குப் போ வேண்டியதாப் போச்சு தாத்தா. வரமாட்டேன்னு நெனச்சிங்களோ? காலைல வரலாந்தான் இருந்தேன். பாத்திரம் நாறிருமேனு வந்தேன். இப்பவே நெடி அடிக்கில்லா ' என்றபடி பாவாடையை இடுப்பில் சொருகிக் கொண்டாள்.

'ஆமா' என்றார் இவர்.

எதற்கு என்று புரியவில்லை.



படிப்பகம்


www.padippakam.com

# குழிப்பாலில் தீராது வெப்பம்

## நெல்லைப் படுகொலைகள் பற்றிய தொகுப்பு

### ஜாலியன் வாலாபாக் படுகொலைக்குப் பிறகு...
### 1919, ஆகஸ்ட் 25 அன்று ஜெனரல் டயர் சமர்ப்பித்த வாக்குமூலம் :

'' நான் சுட்டேன். கூட்டம் சிதறிப் போகும்வரை சுட்டுக் கொண்டே இருந்தேன். மக்களின் நெஞ்சிலே எவ்வளவு பெரும் தாக்கம் ஏற்படுத்த வேண்டுமென்று எண்ணம் கொண்டேனோ அதன்படிக்கு அத்தனை அதிகம் சுடவில்லை என்றுதான் நினைக்கிறேன். என்னிடம் மட்டும் இன்னும் கூடுதலாகப் படையாட்கள் இருந்திருந்தால் அடிபட்டோர் மற்றும் செத்தோரின் எண்ணிக்கை இன்னும் கூடுதலாகவே இருந்திருக்கும். நான் அங்கு போனது வெறுமே கூட்டத்தை கலைக்க மாத்திரமல்ல. மக்களின் நெஞ்சிலே ஒரு குலை நடுக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்றுதான் போனேன். அங்கு கூடினவர்கள் நெஞ்சில் மட்டுமல்ல, பஞ்சாப் முழுதுமான எல்லோருக்குமே குலைநடுக்கம் தோன்ற வேண்டும் என்றுதான் சுட்டுக் கொண்டே இருந்தேன். அவசியத்திற்கு மேல் கடுமை காட்டி விட்டேனோ என்ற கேள்விக்கே இடமில்லை.''



அஞ்சி ஓடிய மக்களை துரத்திக் கொன்ற போலீஸ்

நன்றி : ஜூனியர் விகடன்



படிப்பகம்

www.padippakam.com



***சம்பவ சமயத்தில் காவல் படைப்பிரிவினர் மீதான கட்டுப்பாடு மேலதிகாரிகளுக்கு இல்லையா?***

அது கட்டுப்பாடு இழக்கும் பிரச்சினை அல்ல. அங்கிருந்தவர்கள் பல்வேறு வகையான காவல்படைப் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள். அதுதான் பிரச்னையே. எல்லோரும் எனக்குக் கட்டுப்படத் தேவையில்லை. விசுவாசம் என்பது அவர்கள் சார்ந்திருக்கும் பிரிவினரிடமே ஏற்படும். எல்லாப் பிரிவினரும் ஒருவரது ஆணையை ஏற்க மாட்டார்கள் என்பது இயல்புதான். என்னால் இயன்ற வரை நான் சில காவலர்களைத் தடுத்தேன். ஆனாலும் நிலைமை மோசமாகி என்னையே நான் தற்காத்துக்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டேன்.

***இச்சம்பவம் பற்றி என்ன அபிப்பிராயப்படுகிறீர்கள்?***

மக்கள் ஆற்றில் மூழ்கி இறந்ததுதான் பிரச்னை. அவர்கள் மூழ்காவிட்டால் ஒன்றுமே இல்லை. இந்தநதி இங்கு இல்லை எனக் கற்பனை செய்யுங்கள். அன்று இந்த அசம்பாவிதமே நடந்திருக்காது.

வந்திருந்த ஊர்வலத்தினரில் மக்கள் பலவிதமானவர்களாக இருந்தார்கள். ஒரு கூட்டம் சும்மா ஜாலி பண்ணுகிறவர்களாகவும் சீழ்க்கை அடிப்பவர்களாகவும் இருந்தனர். இந்த ஆற்றைப்பற்றி அறியாத மக்களும் இருந்தார்கள். ஆற்றைப் பற்றி தெரிந்தவர்கள் ஆழம் குறைவான இடதுபக்கத்தைத் தேர்ந்தெடுத்துச் சென்று நீந்தித் தப்பினார்கள். அறியாதவர்கள்தான் நீர்ச்சுழலில் சிக்கி மாண்டு போனார்கள்.

பாருங்கள். அன்று ஆருண் எம்.எல்.ஏ.கூட்டத்தைக் கட்டுப்படுத்த முயற்சித்தார். ஆனால் பரிதாபம். அவருக்கு ஆட்கள் குறைவு. இதை டாக்டர் கிருஷ்ணசாமி செய்திருக்க வேண்டும். ஒழுங்கு கெட்ட அந்த கூட்டத்தை கட்டுப்படுத்த அவர் எதுவும் செய்யவில்லை. அவரிடம் மைக் இருந்தது. என்னிடமோ மைக் இல்லை. எங்கள் மைக் வண்டியில் தான் இருக்கும். வண்டி அலுவலக வளாகத்தினுள் நின்றிருந்தது.

முன்பெல்லாம் தமிழ்நாட்டைப் பற்றி எனக்கு பெரிய மரியாதை இருந்தது. ஆனால் இங்குள்ள மக்களது குரூர மனோபாவம் இப்போதுதான் தெரிய வருகிறது. ஒருவரைச் சுட்டுக் கொல்லுகிற விஷயம் அவ்வளவு கொடூரமானதல்ல. ஆனால் ஒருவரை அரிவாளால் கண்டதுண்டமாக வெட்டுகிற மனோபாவம் மிகக் குரூரமானது. இது இங்கே தொடர்ந்து நடக்கிறது.

இங்குள்ளவர்கள் குடித்துவிட்டு புரோட்டா, சிக்கன் சாப்பிடுகிறார்கள். இரவு 11 மணிக்கும் 3 மணிக்கும் இடையே சாப்பிடுவதற்கு என்ன தேவை இருக்கிறது. அது மிகவும் மோசமானது.

***பெண் போலீசாரிடம் தவறாக நடந்து கொண்டதாக சொல்லப்படுகிறதே அதுபற்றி?***

உண்மைதான். அதற்கான வீடியோ ஆதாரம் எங்களிடம் இருக்கிறது. பெண்களை மதிக்கத் தெரியாத சமூகம் இது. பெண்களுக்கு 33 சதவீதம் இட ஒதுக்கீடு கேட்டுப் போராடுவதில் பிரயோஜனமில்லை. முதலில் பெண்களை மதிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

***வீடியோ ஆதாரத்தை எங்களிடம் காட்ட முடியுமா?***

கமிஷன்போடப்பட்டிருக்கிறது. அவர்களிடம் காட்டுவோம். உங்களிடம் காட்ட இயலாது.

***தடியடி கல்வீச்சு நடத்தப்பட்டது சம்பந்தமாக....***

அப்படியெல்லாம் பெரிதாக ஒன்றும் நடந்துவிடவில்லை. அவர்கள் நான் சொன்னபடி மூழ்கித்தான் செத்தார்கள்.



*16.8.1999 அன்று காலை11.30 மணியளவில் சமூக ஒற்றுமைக்கான சிந்தனையாளர்கள் மற்றும் எழுத்தாளர் குழுவிடம் திருநெல்வேலி உதவி காவல்துறை ஆணையாளர் திரு. சைலேஷ்குமார் யாதவ் I.P.S. பேசியதன் தொகுப்பு.*



படிப்பகம்

www.padippakam.com

மேலும் இந்த மக்கள் கலாச்சார ரீதியாகப் பின்தங்கியிருக்கிறார்கள். ஒருத்தி அன்று தனது குழந்தையோடு ஆற்றில் குதித்தாள். மனிதாபிமானம் இருந்தால் அவள் தனது குழந்தையை விட்டு விட்டு குதித்திருக்க வேண்டும்.

***தேவி மருத்துவமனையில் போலீஸ் தாக்குதல் நடந்தது பற்றி...***

(ஆவேசமடைகிறார்) நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள். உங்களுக்கு என்ன பின்னணி? என்ன மதம்?

குழுவினர் :
எல்லா மதத்திலிருந்தும் வந்துள்ளோம்.

(குழுவினர் : 1. அ. மார்க்ஸ் பேராசிரியர், தஞ்சை. 2. ரஜனி வழக்கறிஞர், மதுரை 3. சீனிவாசன், காஞ்சனை சினிமா இயக்கம், நெல்லை 4. சுந்தர்காளி, பேராசிரியர், மதுரை 5. பீர் முகமது, பத்திரிகையாளர், சென்னை 6. விஜயலஷ்மி பேராசிரியை, கும்பகோணம் 7. ஓவியர் பாபு, மதுரை 8. பரதன், மனித உரிமைக் கல்வி மற்றும் காப்புக்களம், நெல்லை 9. கு. பழனிச்சாமி,சமூக ஊழியர், கோவை)

***பின்குறிப்பு :***

பெண் போலீசாரை மானபங்கம் செய்தது பற்றி ஜூலை 23ல் பதிவு செய்யப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கையில் எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை. ஒருவாரம் கழித்துத்தான் இப்படி ஒரு விஷயத்தை 'கண்டுபிடித்து' அமைச்சர் ஆலடி அருணா மற்றும் போலீஸ் உயர் அதிகாரிகள் அறிக்கை விட்டனர்.

ஊர்வலத்தை எதிர்கொண்டு காத்திருக்கும்போது பெண் போலீசார் முன்வரிசையில் நிற்பதையும் கூட்டமும் போலீசும் நெருக்கமாக வந்தபோது பெண் போலீசார் பின்னால் போய்விட்டதையும் புகைப்படங்களில் காணலாம்.







படிப்பகம்

www.padippakam.com

# நெல்லைப் படுகொலைகள் முன் வைக்கும் சில கலாச்சாரக் கேள்விகள்

ச.தமிழ்ச்செல்வன்



திருநெல்வேலி மாநகரம் எப்போதும் போல சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருக்கிறது. அல்வா வியாபாரம் அமோகமாக நடந்து கொண்டிருக்கிறது. அம்பது அல்வா வாங்கி அங்கன வச்சே தின்னுட்டு ஓசியில் காரம் கேட்டு கையேந்தினால் கொஞ்சம் மிக்சர் கிடைக்கும். அதையும் வாயிலே போட்டுவிட்டு வேட்டியில் கையைத் துடைப்பவரிடம் ஜூலை 23-ஆம் தேதி போலீசாரால் தாக்கிக் கொல்லப்பட்ட 17 உயிர்களைப் பற்றிக் கேட்டால்

'பெறகென்ன சார்.... எத்தனை நாளைக்குத்தான் பொறுமையா இருப்பான் போலீஸ்காரன்..... தாயளி அப்படித்தான் கொல்லணும்.... என்னா ஆட்டம் போட்டானுவ....'என்றோ

அல்லது

'இதோட கிருஷ்ணசாமி ஒழிஞ்சான்..' என்றோ

அல்லது

'பொம்பளை போலீஸ் மேல கைய வச்சா பொறவு கொல்லாமயா விடுவாம்?'

என்றோ பதில் கிடைக்கும்.

ஒருவர் இன்னும் விளக்கமாக நேரில் கூட இருந்து பார்த்தவர் போல விளக்க ஆரம்பித்தார்.

'ஊர்வலத்துக்காரன் முன்னே தள்ள பெண் போலீசார் லத்திக்கம்பை குறுக்கே பிடிச்சி அவனுவளை பின்னே தள்ள இந்த தள்ளு முள்ளு கொஞ்சநேரம் அப்படியே நடந்துக்கிட்டிருக்க இதான் சான்ஸ்ன்னுட்டு சில பயலுவ லத்திக்கம்புக்குக் கீழே கூடி கையவிட்டு பொம்பளை போலீஸ் சட்டைக்குள்ள கையவிட்டு....'

17 பேர் கொல்லப்பட்ட ஜூலை 23ம் தேதி பதிவு செய்யப்பட்டுள்ள போலீஸ் முதல் தகவல் அறிக்கையில் (F.I.R) எந்த இடத்திலும் பெண் போலீசாரிடம் தவறாக நடந்து கொண்டதாக ஒரு குறிப்பும் இல்லை. சம்பவம் நடந்து எட்டு தினங்களுக்குப் பிறகு பெண் போலீசிடம் சிலர் தவறாக நடந்து கொண்டதால் ஆத்திரமடைந்துதான் போலீஸ் தடியடி நடத்தியது என்று போலீஸ் அதிகாரிகளும் ஆலடி அருணா என்ற ஒரு அமைச்சரும் பத்திரிகைக்கு அறிக்கை தந்தனர். ஜூலை 24ம் தேதி தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் வெளியிட்ட அறிக்கையிலும் பெண் போலீசாரிடம் தவறாக நடந்து கொண்டதாக எந்த வாசகமும் இல்லை.

ஒருவாரம் கழித்து கண்டுபிடிக்கப்பட்ட 'இந்த உண்மை'யை உடனே திருநெல்வேலி மக்களில் பலர் ஏற்றுக்கொண்டு விட்டார்கள். அரசின் பிரச்சாரத்தினால்தான் மக்கள் இதை நம்புகிறார்கள் என்பது அல்ல உண்மை. அதை நம்புவதற்கு ஏற்கனவே தயாரான மனநிலையில் மக்கள் இருந்தார்கள் என்பதே உண்மை.

உயர்ஜாதி மேலாதிக்க மனோபாவம் இங்கே காற்றாய் தெருக்களில் அலுவலக வளாகங்களில் மத்தியதர வர்க்க மதியச் சாப்பாட்டு வேளை அரட்டைகளில் உலவிக்கொண்டிருக்கிறது.

ஒரு மாதம் கழித்து தேனியைச் சேர்ந்த படைப்பிரிவில் இருந்து வந்த பாண்டியம்மாள் என்கிற பெண் போலீஸ் தன்னை சிலர் மானபங்கம் செய்ய முயன்றதாக புகார் கொடுத்திருக்கிறாராம். அந்த சிலருடைய பெயர், தகப்பனார் பெயர், கதவு இலக்கம், தெருப்பெயர், ஊர்ப்பெயர், தாலுகா எல்லாம் அவருடைய புகாரில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. தேனியைச் சேர்ந்த ஒரு பெண் போலீசாருக்கு இவ்வளவு தெளிவான விலாசம் எப்படி தெரிந்தது என்கிற தர்க்கம் எல்லாம் ஒருபுறம் இருக்க - இந்த ஜோடனைக்கு போலீஸ் தரப்பு தேர்வு செய்துள்ள பெண் போலீசின் பெயரைப் பாருங்கள். தேனி - உசிலம்பட்டி பக்கமிருந்து ஒரு *பாண்டியம்மாள்*. எவ்வளவு கிரிமினலான மூளை இதை திட்டமிட்டிருக்க வேண்டும்.

'பெண் போலீசின் சட்டைக்குள் கைவிட்டு... ' என்று ஒரு நண்பர் விளக்கினாரே அதில் ஒரு ஆணின் பாலியல் வக்கிரமல்லவா வெளிப்படுகிறது. இன்னொரு விஷயம் குறித்தும் நாம் எச்சரிக்கையடைய வேண்டியதிருக்கிறது. இனி நடக்கப்போகிற ஆயிரமாயிரம் போராட்டங்களில் எதை வேண்டுமானாலும் போலீசார் நினைத்தால் கொச்சைப்படுத்திட



படிப்பகம்

www.padippakam.com



ஒரு புதிய கண்டுபிடிப்பாக 'பெண் போலீஸ் மான பங்கம்' என்கிற உத்தி உருவாக்கப்பட்டு விட்டது.

இதையெல்லாம் பார்த்துச் சகிக்க முடியாமல் ஒரு நண்பர் கொதிப்படைந்து பேசினார். 'சாதி அடுக்கில் உயரத்தில் இருக்கும் பிரிவினர் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டி தொடர்ந்து கொண்டு செலுத்த அன்றைக்கு கீழ்ச்சாதிகளில் ஒன்றை அடியாட்களாக - கம்பும் அருவாளும் தூக்குகிற மேஸ்திரி வர்க்கமாக உருவாக்கினர். இன்றைக்கு அதே முறைகளும் வடிவங்களும் செல்லுபடியாகாது என்பதால் மேல்சாதியினர் சார்பாக - அவர் ஏவிய திசையில் பாய்ந்து குதற பெரிய போலீஸ் பட்டாளமே உருவாக்கப்பட்டுள்ளது. அதனால மேல் சாதிக்காரனெல்லாம் அருவா தூக்க வேண்டிய அவசியம் எப்பவுமே வரலை. அவனெல்லாம் அப்படியே சர்வ யோக்கியனா ஆயிட்டாம். நாம மட்டும் ரௌடிப்பயகன்னு பட்டம் வாங்கிட்டு நாய் கணக்கா அடிச்சிகிட்டு கிடக்கம்'

ஒட்டுமொத்த சமூகத்தையும் வெறும் சாதிகளாக மட்டுமே பார்க்கும் இந்த நண்பரின் கருத்தை நம்மால் ஏற்க முடியாவிட்டாலும் இந்த வாதத்தில் ஒரு உண்மை இருப்பதை நாம் மறுக்க முடியாது.

நெல்லையில் நடந்த ஊர்வலம் மாஞ்சோலை தோட்டத் தொழிலாளரின் கூலி உயர்வுக்காக - சிறையிலடைபட்டுக் கிடக்கும் 198 பெண்கள் உள்ளிட்ட 500க்கு மேற்பட்ட தொழிலாளர்களை விடுதலை செய்யக் கோரி - நடைபெற்ற ஒரு வர்க்கப் போராட்டம். ஆனால் இது அரசு+போலீசுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் இடையில் நடந்த போராட்டம் போலவே ஆகிவிட்டது. பேசப்படுகிறது.

தாக்குண்ட மக்களில் தேவர் சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் உண்டு. இஸ்லாமியர் உண்டு. திராவிடர் கழகத்தவர் உண்டு. த.மா.கா.வினர் உண்டு. மார்க்சிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் பழனி உண்டு.

என்றாலும் பிரதானமாக புதிய தமிழகம் முன்கை எடுத்த பிரச்னை இது என்பதால் இது எழுச்சி பெற முயலும் தாழ்த்தப்பட்ட மக்களை அரசு ஒடுக்கிய போராட்டமாகவே கருத வேண்டியுள்ளது.

அடுத்து அந்த 'ஆட்டம்' போடுவது பற்றி...

பொதுவாக இன்று எந்த ஜாதி சங்க ஊர்வலமானாலும், கட்சி ஊர்வலமானாலும் ஆட்டம் போடுவது நடக்கத்தான் செய்கிறது. இது திராவிட கலாச்சாரமாகவே ஆகிவிட்டது. ஆனால் புதியதமிழகம் போன்ற தலித் அமைப்புகள் ஊர்வலம் நடத்தும்போது மட்டும் தொண்டர்கள் ஆடிப்பாடி வந்தாலோ கூட்ட உற்சாகத்தில் வழியில் வரும் வாகனங்களை மறித்து சத்தம் போட்டாலோ 'என்னா ஆட்டம் போடுறானுக' என்கிறது மேல்ஜாதி மனோபாவம். இவர்களின் ஆட்டமெல்லாம் ஊர்வலம்





படிப்பகம்

www.padippakam.com


நடக்கும் ஒருநாள்தானே!. காலம் காலமாய் ஆட்டம் போட்டுவருவது ஆதிக்க சாதிகளின் ஒடுக்குமுறை அல்லவா?. கடந்த ஆண்டு ராமநாதபுரத்தில் லாரிகளில் போய் தாழ்த்தப்பட்ட கிராமங்களை வரிசையாக சூறையாடினார்கள். அது 'ஆட்டம்' என்று மேல்ஜாதி மனோபாவம் கூறவில்லையே.

எவ்வித சரித்திர உணர்வும் சரித்திர ஞானமும் சமூகப்பார்வையும் அற்ற பெரும்பகுதி மத்தியதர வர்க்கம் தொடர்ந்து நடைபெறும் சாதிக்கலவரங்களால் (பஸ்கள் ஓடாத ஒரே காரணத்தால்) சலிப்படைந்து போயிருக்கிறது. புதியதமிழகம்தான் தென் தமிழ்நாட்டில் உள்ள ஒரே வன்முறைக்கட்சி என்று தொடர்ந்து செய்யப்பட்டு வரும் திட்டமிட்ட பிரச்சாரம் மத்தியதர வர்க்க மூளையில் படிந்து போயிருக்கிறது. சொந்தமாக யோசிக்கத்தான் நமக்குத் துப்பில்லையே. தென் மாவட்டங் களில் நடைபெற்ற ஒவ்வொரு சாதிக் கலவரம் குறித்தும் விரிவாக அதன் துவக்கம், காரணங்கள், பரவிய விதம், காவல்துறையின் சார்பு என ஆய்வு செய்து பார்க்காமல் எவரையும் வன்முறையாளர் என குற்றம் சாட்டுவது ஒருதலைபட்சமாகவே இருக்க முடியும். சமூக அக்கறை யுள்ள எல்லோரும் கவலைப்பட வேண்டிய ஒரு விஷயமாகும். ஏனெனில் கருத்துக்களை பரப்பும் (Opinion makers) முக்கியமான பகுதியாக இந்த மத்தியதர வர்க்கம் இருந்து வருகிறது. குறிப்பாக இடதுசாரிகளும் புதியதமிழகம் உள்ளிட்ட தலித் அமைப்புகளும் இதர கலாச்சார அமைப்புகளும் இதர சாதியினர் குறித்து எதிர் மன நிலைக்குச் செல்லாமல் அவர்கள் மனங்களில் படிந்துள்ள கருத்துப் பிரச்சாரத்தையும் மேல் சாதி உணர்வையும் மாற்றுவதற்கு அறிவியல்பூர்வமான கூட்டுமுயற்சிகள் எடுத்தாக வேண்டும்.

***தேவசகாயம்(ஆரோக்கியநாதபுரம்)***

என்பவர் போலீஸ் ஆற்றில் இறங்கி அஞ்சி ஓடிய மக்களின் மீது கல்லெறியத் துவங்கியபோது தப்பி பாதி ஆற்றுக்கு நீந்திவிட்டார். அப்போது கரை ஓரம் நீந்தத் தெரியாமல் தத்தளித்த ஒரு பெண்மணியைக் கண்டு மீண்டும் கரைக்கு வந்து அந்தப் பெண்ணையும் தலைமுடியைப் பிடித்து இழுத்துக்கொண்டு கல்லெறிகளுக்கு சாமர்த்தியமாகத் தப்பி மறுகரையில் அந்தப் பெண்ணை ஏற்றி விட்டு தப்பி ஓடியிருக்கிறார். போலீசார் அதற்குள் எதிர்கரைக்கும் வந்து அடிக்க ஆரம்பித்து விட்டனர். ஈரமான உடையை வைத்து அடையாளம் கண்டு அடித்தனர். தேவசகாயம் கரை ஓரத்தெருவில் இருந்த ஒரு வீட்டின் காம்பவுண்ட் சுவர் மீது ஏறிக் குதித்து உள்ளே இருந்த கக்கூசில் போய் ஒளிந்து கொண்டார்.

'அங்கயும் வந்துட்டானுவளே பாவிய. என்னப்பிடிச்சு இழுத்து வெளிய போட்டு ஆளுயர கம்பு, இரும்புக்கம்பி, ராடு வச்சு அடிக்கான். நான் கீழ கெடக்கேன். என்னைச் சுத்தி மூணு போலீஸ்காரன் நின்னுக்கிட்டு வெளுக்கான். நான் அடிக்காதீகன்னு கையெடுத்துக் கும்பிடுதேன். கும்பிட்ட கை மேலேயே மாறி மாறி அடி விழுகுது (காயம்பட்டு கட்டுப்போட்ட முன்கையைக் காட்டுகிறார்) எனக்கு சார்.... அவன் அடிச்சது கூட உடம்பில வலி தெரியல சார் அந்நேரம்... அவன் அடிச்சிக்கிட்டிருக்கும் போதே என் மனசில ஒரு எண்ணம் ஓடுது சார். இன்னா கீழே கிடந்து உருளுதே இது என்னது? நான் என்னது? மனுசனா இல்ல ஏதோ ஒரு நாயோ மிருகமோன்னு - அவன் என்னை என்னதுன்னு வகை வச்சி இப்படி அடிக்கான்னு தோணிச்சு சார். நீங்க சொல்லுங்க சார். நீங்க படிச்ச ஆளுக தானே. தாழ்த்தப்பட்டவனா பிறந்தா இந்த



நாட்டுல அவன் என்னது சார்? மனுசனா? அகதியா? இல்ல நாயா?'

***என் பிள்ளைக எல்லாம் அடிபட்டிருச்சே..***

தலைவர்கள் வந்த ஜீப் டயரை போலீசார் சுட்டதால் வண்டி தடுமாறியது. திடீரென பெண்களையும் லத்தியால் அடிக்க ஆரம்பித்தனர். மார்க்சிஸ்ட் கட்சியினர் நெல்லை மாவட்டச் செயலர் பழனி தலையில் போலீஸ் எறிந்த ஒரு கல் விழுந்தது. ரத்தம் கொட்டியது. அரை மயக்க நிலையில் ஜீப்பை விட்டு இறங்கிய பழனி 'பெண்களை ஏன் அடிக்கிறீங்க. அவுங்க என்ன தப்பு செஞ்சாங்க' என்று போலீசைப் பார்த்துக் கேட்டார். அப்படியே சரிந்து கீழே விழுந்தார். சுற்றி நின்ற பெண்கள் அவரைத் தூக்க முயன்றனர். அதற்குள் போலீஸ் அடிக்க ஆரம்பிக்கவே 'என்னைப்பத்தி கவலப்படாதீங்க. நீங்க தப்பிச்சு ஓடிருங்க' என்று பழனி சொல்லவும் பெண்கள் ஆற்றைப் பார்க்க இறங்கி ஓடினர். எல்லோரும் ஓடினாலும் அடிக்குப் பயப்படாமல் போலீசுடன் தொடர்ந்து வாக்குவாதம் செய்து கொண்டிருந்தார் ஒரு வயதான



படிப்பகம்

www.padippakam.com



*நாங்கள் என்னது?.. அகதிகளா? அல்லது அடிபடும் நாய்களா?*



பெண்மணி - எலிசபெத்.

அடிபட்டுக் கீழே கிடந்த பழனியை அவரும் இன்னும் இரண்டு பெண்களும் சேர்ந்து தூக்கிச்சென்று அங்கே தூரத்தில் நின்று கொண்டிருந்த ஒரு ஆட்டோவில் படுக்க வைத்தனர். ஆட்டோ டிரைவர் வண்டி எடுக்க பயந்து மறுத்தார். நீ வண்டி எடுக்க வேண்டாம். நாங்க ஆட்டோவைத் தள்ளிக்கிட்டே போறோம் என்று தள்ளவும் பிறகு ஒரு வழியாக ஆட்டோ கிளம்பியது.

மீண்டும் எலிசபெத் தாக்குதல் நடந்த சாலை வழியே இறைந்து கிடந்த செருப்புகளுக்கு மேல் நடந்து வேறு யாராவது அடிபட்டுக் கிடக்கிறார்களா என்று பார்க்கப் போனார். 'ஏ பொம்பள சொன்னா உனக்கு அறிவில்லே. போறியா' என்று போலீசார் அடிக்க ஓடிவரவும் சற்றே பின்வாங்கி பிறகு மறுபடியும் போனார்.

ஊர்வலத்துக்கு ஆள் திரட்ட ஊர் ஊராகப் போனவர் எலிசபெத். ஊர்வலம் துவங்கும்போது பல ஊர் இளைஞர்கள் இவரைப் பார்த்து சிரித்து 'அம்மா நாங்க வந்துட்டோம்' என்று ஆஜர் கொடுத்தனர்.அந்தப்பிள்ளை களெல்லாம் அடி வாங்கும்படி ஆயிப்போச்சே என்று மனம் பதறியபடி அடிபட்ட மக்களைத் தேடினார். கலெக்டர் அலுவலக காம்பவுண்டுக்குள் போலீஸ் பட்டாளம் குவிந்திருந்தது. கொக்கிரகுளம் வரை நடந்தார்.

அங்கே ஒளிந்து நின்ற இளைஞர்கள் இருவரை உடனடியாக வேறு வழியாகப் போய் பஸ் ஏறி ஊருக்குப் போய்விடுங்கள் என்ற அனுப்பி வைத்தார். போலீசாரிடம் யாரும் பிடிபட்டு விட்டார்களோ என்று பார்க்க மறுபடி செருப்புகளைத் தாண்டி கலெக்டர் அலுவலகத் துக்குள் எட்டிப்பார்த்தார். அங்கே யாரும் இல்லை. 'இந்தக் கிழவி அப்ப இருந்து இங்கேயே சுத்திச் சுத்தி வந்துக்கிட்டிருக்கா பாரு' என்று ஒரு போலீஸ்காரன் சொன்னதும் எலிசபெத் உடனே திரும்பினார். கொக்கிரகுளம் பக்கம் உள்ள ஒரு வீட்டார் இவரை இழுத்து உள்ளே ஒளிந்து கொள்ளச் சொன்னார்கள். இவர் 'எம்பிள்ளைக எல்லாம் இப்படி அடிபட்டிருச்சே' என்று ஒளிய மறுத்து அவர்கள் கொடுத்த காப்பியையும் குடிக்க மறுத்து மறுபடி அதே சாலைக்குத் திரும்பியிருக்கிறார். அந்த வீட்டார்



படிப்பகம்

www.padippakam.com

மீண்டும் மீண்டும் வற்புறுத்திய தால் (அடையாளம் தெரியாமல் இருக்க) வேறு சேலை மாற்றிக் கொண்டுஇறைந்து கிடந்த செருப்புகளின் மீது நடந்து மறுபடியும் பிள்ளைகளைத் தேடிச் சென்றார். அன்று இரவு வரை தனியாக அந்த ரோட்டிலேயே அலைந்து கொண்டிருந்தார் இங்கும் அங்குமாக.

### *இனிமே கொடி பிடிப்பியா?*

தாழ்த்தப்பட்டவன் கோஷம் போடுவதே தப்பு. அதுவும் தாழ்த்தப்பட்ட பெண்கள் கோஷம் போட வேண்டுமானால் எவ்வளவு திமிர் இருக்க வேண்டும். போலீசுக்குப் பிறகு கோபம் வரத்தானே செய்யும். இந்த பொட்டை நாய்களை இன்னிக்கு அடிக்கிற அடியோட திருத்தியாகணும் என்கிற கடமை உணர்வு அன்று போலீசுக்குப் பொங்கி வந்தது. போலீஸ் ட்ரெயினிங்கில் கற்ற சகல வித்தைகளையும் கொடி பிடித்த பெண்களின் மீது பிரயோகம் செய்தனர்.

ஆஸ்பத்திரியில் படுத்துக் கிடந்த சீதாலட்சுமி தன் அனுபவத்தைக் கூறுகிறார்:

'மேலப்பூவாணியிலிருந்து நான் என் வீட்டுக்காரர்கிட்ட கூட சொல்லாம ஊர்வலத்துக்கு வந்தேன். ஊர்வலந்தான் அஞ்சு மணிக்குள்ள முடிஞ்சிருமில்ல. அவரு வேலை விட்டு வரமுந்தி திரும்பிப் போயிறலாம்னு நினைச்சேன். ஊர்வலமும் அமைதியான முறையில் முடிஞ்சது. திடீர்னு போலீஸ்காரன் அடிக்க ஆரம்பிச்சான். கூட்டமா ரோட்டுக்கு வலப்புறம் ஆத்துக்கு இறங்கிற பக்கம் சனங்க நின்னுக்கிட்டு இருந்தாங்க. திடீர்னு அங்கிட்டு போலீஸ் அடிக்கவும் சனங்க ஓட நெரிசல் அதிகமாகி சுவர் இடிஞ்சு சரியிற மாதிரி ரோட்டில இருந்து எட்டடி பள்ளத்திலே மக்க உருண்டு விழுந்தாங்க. ஒரு வெள்ளச்சட்டை போட்ட பெரியவரு உருண்டு விழுந்து எந்திக்க மாட்டாம கிடக்காரு. நான் அவரைத் தூக்கப்போனேன். போலீஸ் கல் விட ஆரம்பிச்சிட்டான். போட்டுட்டு நானும் ஆத்துப்பக்கம் ஓடினேன். ஆத்துக்கிட்ட போயி திரும்பி நின்னு ரோட்டைப் பாத்தேன். ரோட்டு மேல ஒரு சுடுகுஞ்சி இல்லே. அவ்வளவுதான். சரி. முடிஞ்சதுன்னு நினைச்சேன். ஓடிவந்த சனங்க எல்லோருமே சரி இதோட முடிஞ்சதுன்னு ஊருக்குப் போவோம் என்று ஆத்தில கால் கை முகம் கழுவ ஆரம்பிச்சாங்க.

அப்பத்தான் மறுபடி போலீஸ் பாய்ஞ்சு ஓடி வாறதைப் பாத்தோம். வேற வழியில்லாம ஆத்துக்குள்ள குதிச்சா - தண்ணிக்குள்ள கல் விட்டு எரியிறான். தடியால அடிக்கான். என்னால நீந்த முடியல. சேலை கால்ல சிக்கிக்கிட்டு.ஆத்தோடவே போயி பாலத்துக்கு அங்கிட்டு அரவிந்து கண் ஆஸ்பத்திரி பக்கம் போயி கரை ஏறினேன். அங்கே ஒரு போலீஸ் நிக்கான். தேவடியாம்வளே கொடியா பிடிக்கேன்னு சொல்லி அடிச்சான். கீழே விழுந்ததும் என் வயித்திலேயே மிதிச்சான் எனக்கு பிளீடிங் (ரத்தப்போக்கு) ஆயிட்டுது. அதே பிளீடிங்கோட பாலம் ஸ்டேஷனுக்கு கொண்டு போனான். அங்க இருந்த என்ன மாதிரி அஞ்சாறு பொம்பளைகளையும் டிரெஸ் எல்லாம் கழட்டச் சொன்னா. பெண் போலீஸ்தான். ஏ அம்மா பொம்பள போலீஸ் அடிச்ச அடி இருக்கே. ஆம்பள போலீஸ் தேவலை. அம்மணமா நில்லுங்கடி அப்பத்தான் உங்களுக்கு அறிவு வரும்னா. அப்படியே நின்னோம்.

டிஎஸ்பி வந்ததும் இந்தமாதிரி ரத்தப்போக்குன்னு பார்த்து என்னை மட்டும் டிரெஸ் போட்டுட்டு ஓடுடின்னு விரட்டி விட்டாங்க. ராத்திரி பதினோரு மணி. நான் எங்கே போவேன்? ரத்தம் போய்கிட்டே இருக்கு. நடக்க முடியல. மேம்பாலத்தில நடந்து நடுப்பாலத்தில ஓரமா படுத்திட்டேன். விடிய விடிய கஷ்டம். விடிஞ்சதும் ஊருக்குப் போனேன். வீட்டுக்காரு எங்கிட்ட பேச மாட்டேன்னுட்டாரு. ரெண்டு நாள் கழிச்சு கட்சி ஆளுக தேடி வந்து இங்க ஆஸ்பத்திரியில சேத்துருக்காங்க.

பத்தாயிரம் பேர் நடுவுல நிப்பாட்டுனாலும் என்னை அடிச்ச போலீஸ்காரனை கரெக்டா





படிப்பகம்

www.padippakam.com

சொல்லிருவேன். அவன் முகத்தை என் வாழ்நாள் பூராவும் மறக்க மாட்டேன்.

மேலப்பூவாணியைச் சேர்ந்த சீதாலட்சுமி, ஆரோக்கியநாதபுரத்தைச் சேர்ந்த அந்தோணியம்மா, பனிமாதா, பாரூராள், முருகம்மாள் ஆகிய பெண்கள் திருநெல்வேலி பாலம் போலீஸ் ஸ்டேஷனில் வைத்து நிர்வாணப்படுத்தப்பட்டு நீண்ட நேரம் அப்படியே நிற்க வைக்கப்பட்டுள்ளனர். இதை செய்தவர்கள் பெண் போலீசார். போலீசில் என்ன ஆண் போலீஸ் பெண் போலீஸ்? எல்லாம் ஏவிய திசையில் பாய்ந்து குதறுவதற்கான கடும் பயிற்சியளிக்கப்பட்ட மனித குணங்கள் நீக்கி சுத்தம் செய்யப்பட்ட கருவிகள் தானே. தாழ்த்தப்பட்டவர் - பெண்கள் - தொழிலாளிகள் இவர்களை மட்டும் கண்டால் கூடுதலாக தாக்க வேண்டும் என்கிற மேல்தட்டு மனித குணம் மட்டும் அவர்களிடம் எஞ்சி நிற்கிறது.

ஒரு தாயின் பரிவும் துயரமும் அவர்களுக்கு இனி புரியுமா? இந்த கான்மியா பள்ளிவாசல் தெருவில் தன் சிறிய வீட்டில் கிழிந்த பாயில் படுத்துக் கிடக்கும் மும்தாஜ் பேகம் என்ற தாயின்நிலையை எப்படி வார்த்தைகளில் எடுத்துச்சொல்ல முடியும்?

இதே பாயில்தான் போன நாட்களில் தன் செல்ல மகன்கள் இருவருடனும் அன்பும் வாஞ்சையும் மிக்க வார்த்தைகளைப் பேசிய படி படுத்துக்கிடப்பார்கள். பத்து ஆண்டுகளுக்கு முன் தன் கணவரை இழந்த மும்தாஜ் பேகம் தன் மூத்த மகன் ஷா நவாசை படிப்பை நிறுத்தி 12 வயதில் அவனை வேலைக்கு அனுப்பும் துர்ப்பாக்கியமான நிலைக்குத் தள்ளப்பட்டார். ஜூலை - 23 ஆம்



சீதாலட்சுமி

தேதியன்று போலீசாரால் அடித்துக்கொல்லப்பட்டான் - 21 வயது ஷாநவாஸ். 'அல்லா மேல ஆணையாச் சொல்லுதேன் அவன் ஆத்துல மூழ்கிச்சாகலை. அவன் தூத்துக்குடி கடல்ல மூணு கிலோ மீட்டர் நீந்தி கலெக்டர்கிட்டயே பரிசெல்லாம் வாங்கியிருக்கான். அடிச்சுத்தான் கொன்னுட்டானுவ பிள்ளையை' என்று குமுறுகிறாள் கல்யாணமாகிப்போய்விட்ட ஷாநவாசின் சகோதரி. ஜூலை 23 ஆம் தேதிக்கு பிறகு எவருடனும் பேசும் சக்தியற்று பாயில்விழுந்துகிடக்கும் மும்தாஜ் பேகம் கூரையை வெறித்தபடி அப்படியே கிடக்கிறார் கண்ணீர் வற்றிப்போய். ஷாநவாசின் பத்து வயதுத்தம்பி இனி வேலைக்குப் போக தயாராக வேண்டும்.

தேயிலைத் தோட்ட வேலைக்கு போன மாரியப்பன் கூலி உயர்வு கேட்டுப் போராடியதால் திருச்சி மத்திய சிறையில் அடைபட்டார். மாரியப்பனுக்கு ரத்தினமேரி என்கிற அன்பான மனைவியும் விக்னேஷ் என்ற $1^{1}/_{2}$ வயது செல்லப்புதல்வனும் ஜெயிலுக்குப் போன கணவரை விடுதலை செய்ய ஊர்வலம் போனார் ரத்தினமேரி. இடுப்பில் விக்னேஷ். விக்னேஷின் பாட்டி மேரியும் துணைக்குப் போனார். மேரியின் கண் முன்னாலேயே ரத்தினமேரி பயனட்டால் குத்தி ஆற்றுக்குள் எறியப்பட்டாள். தன் செல்லப் பேரனும் தண்ணீருக்குள் தூக்கி எறியப்பட்டதை தன் ரெண்டு கண்ணாலும் பார்த்துக் கொண்டிருந்தார் மேரி. 'என் ரெண்டு கண்ணாலும் பாத்தனே.... பாத்தனே' என்று நெஞ்சில் அறைந்து அறைந்து கதறும் அவரது குரல் காக்கிச் சட்டைகளையும் கவிதை எழுதும் கலெக்டரையும் டிஐஜியையும் அடுக்குமொழி முதலமைச்சரையும் சிறிதும் அசைக்கவில்லையே.

எப்படி அசைக்கும்? 'கிருஷ்ணசாமி சிகப்பா இருக்கான்னு அவங்கூட படுக்காவாடி வந்திய





படிப்பகம்

www.padippakam.com

''இனிமே கொடி பிடிப்பியா' 'கொடி பிடிப்பியா' என்று சொல்லி சொல்லி அடித்த கூட்டமாயிற்றே. பந்து எத்துனாப்பில எத்தி ஆத்துக்குள்ள போலீஸ்காரன் தான் தள்ளிட்டான். அங்கிருந்து தப்பி காயங்களுக்கு மருந்து போட அரசு ஆஸ்பத்திரிக்கு ஓடிய பெண்களுக்கு ஆஸ்பத்திரியிலும் நல்ல வரவேற்பு காத்திருந்தது. 'கொடி பிடிச்சு வந்திகள்ள அப்ப அனுபவிக்க வேண்டியதுதானே என்ன மயித்துக்கு இப்ப இங்க வந்திக' டூட்டியில் இருந்த டாக்டரும் நர்ஸ்களும் அரைகுறையாகவும் வேண்டா வெறுப்பாகவும் சிலருக்கு மருந்து தடவியும் பலரையும் சும்மா விரட்டியும் அனுப்பிவிட்டனர்.

ஆனால் இதையெல்லாம் கூட மன்னிக்கலாம். 30 வயதில் இரண்டு பையன்களுக்கு தாயான ஜோஸபின் கொல்லப்பட்ட கதை எந்த மொழி வார்த்தைகளாலும் சொல்லப்பட முடியாதது.

கணவரால் கைவிடப்பட்ட ஜோஸபின் தன் இரு பையன்களுடன் தனித்துப் போராடி வாழ்க்கை நடத்திவந்தார். தாழையூத்து பூந்தோட்டத் தெருவில் தன் அன்புத்தங்கை ஹெலன் பொறுப்பில் தன் பிள்ளைகளை விட்டு விட்டு சாயங்காலம் வந்திரலாம் என்று ஊர்வலத்துக்கு போனார்.

ஜூலை24 (படுகொலைக்கு மறுநாள்) பிணத்தை அடையாளம் காட்டத்தான் ஜோஸபினின் தங்கை ஹெலன் அழைத்துச்செல்லப்பட்டார். அங்கே போஸ்ட்மார்ட்டம் பகுதியில் கொல்லப்பட்ட ஆண்கள் பெண்கள் 17பேரின் பிணங்களும் ஒன்றின் மீது மற்றொன்றாக குவித்துப்போடப்பட்டிருந்தது எல்லாமே நிர்வாணமாக. மனம் அழிந்து கதறுகிறார் ஹெலன். இப்போதும் அதை நினைக்'..கயில் தன் செல்லமான அக்காவை 'இந்தக் கண்ணாலதான அந்தக் கோலத்தில் பார்த்தேன்' என்று மாறி மாறி முகத்திலறையும் அவர் கைகளை என்ன ஆறுதல் சொல்லி தடுத்து நிறுத்த?



மார்க்ஸிஸ்ட் கட்சியின் நெல்லை மாவட்டச் செயலாளர் திரு. வீ.பழனியை சந்திக்கும் தலைவர்கள்

நடக்கும் இவை பற்றிய எந்த புரிதலும் இல்லாமல் மலங்க மலங்கப் பார்த்துக் கொண்டிருக்கும் அநாதைகளாகிவிட்ட அந்தச் சிறுவர்களுக்கு நாளை என்ன வார்த்தைகளில் நாம் நடந்து முடிந்த கொடுமைகளை சொல்லிப் புரிய வைக்கப் போகிறோம்?

நாஜிகளின் - ஜெர்மனியில் வதை முகாம்களில் செத்துவிழும் யூதப்பிணங்களை நிர்வாணமாக ஆண் பெண் பேதமின்றி குவித்துப்போட்டு புல்டோசரால் குழிக்குள் தள்ளும் காட்சிகளை (Night and Fog) டாகுமெண்டரி படங்களில் பார்த்தே அதிர்ந்து போன நம் உள்ளங்கள் நேரில் நடந்துள்ள இந்தக் கொடுமைகளை உள்வாங்கும் சக்தியற்று இற்று வீழ்கின்றன. ஜோஸ்பின் அடக்கம் செய்யப்பட்ட சில நாளில் அவரது கணவர் மறுமணம் செய்து கொண்டதாக கேள்விப்படுகிறோம்

**ஏன் தேசம் கொதித்து எழவில்லை?**

இத்தனை கொடுமைகள் நடந்திருந்தாலும் 17 உயிர்கள் படுகொலை செய்யப்பட்ட பிறகும் தமிழகம் கொந்தளிக்க வில்லை. திருநெல்வேலி நகரம் கூட கிளர்ச்சியடையவில்லை. மாறாக இறந்தவர்களை வன்முறை யாளர்கள் என்று அரசு கூறும் போது மௌனம் சாதித்து ஆமோதிக்கிறது. இதற்கு இங்கு நிலவுகிற இறுகிப்போன சாதிய அடுக்குமுறைதான் முக்கிய காரணம்.

இதுதவிர முந்தைய தலித் தலைவர்கள் மேல்ஜாதி ஆண்களை வெட்டுவோம் அவர்களின் மனைவிமார்களை கட்டுவோம் என்று தவறான கோஷம் எழுப்பி ஊர்வலம் நடத்தினார்கள். ஒடுக்கப்பட்டு அச்சத்தில் அமிழ்ந்து கிடந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு முரட்டு தைரியம்



படிப்பகம்

www.padippakam.com



ஜோஸபின்

ஊட்டி தட்டி எழுப்பிய சரித்திரக் கடமையை இத்தலைவர்கள் செய்து முடித்தார்கள் என்று நாம் புரிந்துகொள்ள முடிகிறது என்றாலும் எல்லா ஜாதிகளிலும் இருக்கும் உழைப்பாளி மக்கள் ஒடுக்கப்படும் பிரிவினரும் கூட இன்று தாழ்த்தப்பட்ட மக்களின் பால் பரிவு காட்டாது இருப்பதற்கு சரியான கோஷங் களை வைத்து தலித் மக்களை அணி திரட்டாமல் முந்தைய தலித் தலைவர்கள் வைத்த தவறான கோஷங்களும் எடுத்த முரட்டு நடவடிக்கைகளும் கூட ஒரு காரணமாக இருக்குமோ என்று தோன்றுகிறது. பஞ்சைபராரியான வாழ்க்கைதான் என்றாலும் தம் மேல் சாதி உணர்வை மக்கள் துறக்கவில்லை என்பதுதான் பிரதான காரணம்.

அதை மாற்றுவதற்கான நீண்ட நெடிய கலாச்சார இயக்கத்தை மனசாட்சியுள்ள நாம் அனைவரும் (தத்தம் சார்பு நிலைகளை மறந்து) ஒன்றிணைந்து இப்போதாவது துவக்கியாக வேண்டும்.

### தொடர்புசாதனங்களும் அதன் ஊழியர்களும்

திருநெல்வேலிப் படுகொலைகள் பற்றிய உண்மைகளை வெளி உலகுக்கு கொண்டு வந்ததில் பத்திரிகையாளர்கள் புகைப்படக்காரர்களுக்கு மிகப்பெரிய பங்கு உண்டு. தினமணி (மதுரை) ஜூலை 26 இதழில் நா. குருசாமி எழுதிய 'நெல்லையில் நடந்தது என்ன?' என்ற செய்தித் தொகுப்பு 'அஞ்சி ஓடிய மக்களை துரத்திக் கொன்ற போலீஸ்' எனும் ஜூனியர் விகடன் ரிப்போர்ட், நக்கீரனின் ரிப்போர்ட், Frontline எழுதிய Tirunelveli Massacre தவிர தீக்கதிரும் விரிவான செய்தியை வெளியிட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. தினமணி, தினமலர், தினபூமி, கதிரவன் போன்ற தினசரிகளின் புகைப்படக்காரர்கள் பல முக்கிய புகைப்படங்களை எடுத்து வெளியிட்டனர். சன் டிவி, நிலா டிவி நிருபர்களும் வீடியோபடம் எடுத்துள்ளனர். அதில் ஒரு சிறு பகுதி மட்டுமே ஒளிபரப்பப்பட்டுள்ளது.

இன்று நீதிபதி மோகன் கமிஷனின் முன்னிலையில் சாட்சிகளாக இந்த நிருபர்கள் வர பல தடைகள் உள்ளன. பத்திரிகைகளின் நிர்வாகங்களும் போலீசும் முக்கியமான தடைகள். ஆனால் விசாரணைக் கமிஷனே இந்த நிருபர்களை அழைத்து விசாரிக்கலாம். சன் டிவியில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள படச்சுருள் வெளியிடப் படவேண்டும். ஜெயலலிதாவின் செருப்புகளை படம் எடுத்து மக்களுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டிய சன் டிவி நெல்லைப்படுகொலைகள் பற்றிய படத்தொகுப்பையும் எடிட் செய்யாமல் முழுமையாக வெளியிட வேண்டும் (தேர்தல்தான் முடிந்து விட்டதே).

பல பத்திரிகைகள் தங்கள் நிருபர்கள் அனுப்பிய செய்திகளை அப்படியே வெளியிடாமல் போலீஸ் தரப்பை நியாயப் படுத்தும் செய்திகளையே வெளியிட்டன. 'புதியதமிழகம் ஊர்வலத்தில் திடீரென கலவரம் வெடித்தது' என்கிற பாணியில் தான் எல்லாரும் எழுதினார்கள். கலவரம் என்ற வார்த்தையே உண்மை நிகழ்வுகளை திசை திருப்புவதாக உள்ளது.

கலவரம் என்றால் எத்தனை போலீசாருக்கு மண்டை உடைந்தது? எத்தனை அரசுச் சொத்துக்கள் நாசமாகியுள்ளன? ஒரு சிறு கண்ணாடி கூட உடையவில்லையே. அப்படி ஒரு புகைப்படம் கூட வரவில்லையே.

### இயங்கும் வேறு சில அமைப்புகள்

தொடர்பு சாதனங்கள் தவிர உண்மைகளை வெளியே கொண்டு வர காஞ்சனை சினிமா இயக்கம் ('ஒரு நதியின் மரணம்' என்ற டாகுமெண்டரி படம் வெளியிட்டுள்ளது) 'விளிம்பு' பண்பாட்டு இயக்கம், நெல்லை மனித உரிமைக்கல்வி மற்றும் காப்புக்களம், மதுரை பீப்பிள்ஸ் வாட்ச், அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கம், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் இன்னும் சில மனசாட்சியுள்ள பல்கலைக்கழக பேராசிரியர்கள், டாக்டர்கள், இடதுசாரிகட்சிகள் மற்றும் மதுரை சமூக ஒற்றுமைக்கான எழுத்தாளர்கள் மற்றும் சிந்தனையாளர்கள் குழு



படிப்பகம்

www.padippakam.com

தொடர்ந்து முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றனர். என்றாலும் இவர்களின் ஒட்டு மொத்த சக்தியே அளவில் சிறியதுதானே என்கிற ஏக்கம் நமக்கு வருகிறது.

***'எஜமான விசுவாசம்'***

மாஞ்சோலை எஸ்டேட் நிர்வாகம் மனத்திருப்தியுடன் மௌனமாக இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிறது. ஒரு தனியார் முதலாளியை எதிர்த்துப் போராடிய தொழிலாளிகளை சிறையிலடைத்து 17 பேரை கொன்று புதைத்து தானே அவர்கள் பிணங்களுக்கு குழிப்பாலும் ஊற்றி தனது முதலாளி விசுவாசத்தை அப்பட்டமாக காட்டி வாலை ஆட்டிக்கொண்டு நிற்கிறது தி.மு.க. அரசு. இத்தனை சாவுகளுக்குப் பிறகும் இன்றுவரை ஒரு வார்த்தை கூட வருத்தம் தெரிவிக்காத தமிழினத்தலைவர் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போல செத்தவர்களை வன்முறையாளர்கள் என்றும் கலெக்டர் தனவேலை மாற்றினால் பிற்படுத்தப்பட்ட சாதியினர் போராடுவார்கள் என்றும் அப்பட்டமாக சாதிவெறியைத் தூண்டும் விதமாக அறிக்கை விட்டார்.

நெல்லை படுகொலைகளை இடதுசாரிகளையும் புதியதமிழகத்தையும் தவிர வேறு எவரும் தேர்தல் மேடைகளில் பேசவில்லை. பிற்பட்ட வகுப்பாரின் ஓட்டு தமக்கு கிடைக்காமல் போய்விடக் கூடாது என்ற எச்சரிக்கை உணர்வுடன் எல்லா கட்சிகளும் ஜாக்கிரதையான வார்த்தைகளில் அறிக்கைகள் விட்டன.

தாழ்த்தப்பட்ட மக்களை தாக்கினால் பிற்பட்ட வகுப்பார் சந்தோஷமடைவார்கள் என்கிற நிலைமை இருப்பது எவ்வளவு மோசமான ஒரு கலாச்சார சீரழிவு. மூன்று வெவ்வேறு இடங்களில் இறந்தவர்களை புதைக்கச் சென்ற போலீசாரை அந்தப் பகுதி மக்கள் தடுத்தனர். இங்கே புதைத்தால், பிணங்களைத் தோண்டி எறிந்து விடுவோம் என தகராறு செய்த னர். கலவரத்துக்கு வித்தாகுமென அவர்கள் பயந்தனர். இறந்த பிறகும் இம்மக்களுக்கு புதைக்குமிடமும் மறுக்கப்பட்டது.

***மயான காண்டம்***

கூரையை வெறித்துப் பார்த்தபடி பேச்சிழந்து கிடக்கும் அந்தத் தாய் மும்தாஜ்பேகம் - தன் தாயின் மரணம் பற்றி எதுவுமே அறியாத அந்தச் சிறுவன் பிரதீஷ்குமார் - தன் தகப்பனை இழந்து தவிக்கும் அந்தக் குழந்தைகள் - உக்கிரன் கோட்டையில் தலையில் அடிபட்டதால் மூளை கலங்கி பைத்தியமாகி கடந்த இரண்டு மாதகாலமாக இடைவிடாது சிரித்துக்கொண்டிருக்கும் அந்த இளைஞன் - மனைவியையும் மகனையும் இழந்து நிற்கும் மாரியப்பன் - இரவெல்லாம் தூக்கமின்றி அழுது கொண்டிருக்கும் முதுகில் லத்தி அடி வாங்கிய ஒரு வயது வைஜயந்தி - என எல்லாம் ஒருபுறம் இருக்க...

வெவ்வேறு இடங்களில் புதைக்கப்பட்ட 17 பேரின் பிணங்களுக்கும் போர்த்திய கம்பளிகளுடனும் கையில் மூணுகட்டை பேட்டரிகளுடனும் லத்திக்கம்புடனும் போலீசார் டூட்டி போட்டு சுடுகாட்டுக்கு காவல் இருக்கிறார்கள். பிணங்கள் அழுகி காயப்பட்ட தடயங்கள் முற்றிலும் மறைந்து போகட்டும் என்பதற்காகவோ.

எந்தப்பாவமும் செய்யாத குற்றத்துக்காக கொல்லப்பட்ட உயிர்கள் தம் குடும்பத்தாரால் ஈமச்சடங்குகள் கூட நடத்தப்படாமல் புதைக்கப் பட்டனர்.

ஏன் புதைக்கப்பட்டோம் என்ற கேள்விகளோடு எந்த நேரமும் பூமியிலிருந்து வெடித்து எழக்கூடும் என்ற அச்சத்தினால் புதைக்கப்பட்ட மயானக்கரை எங்கும் பூமி அதிர்கிறது. அதைப் பார்த்து பயமும் பீதியும் படர தங்களுக்கே உரிய போலி வீரத்தோடு எட்டடி நீளக் கம்புகளைக் கொண்டு ஏய்...ஏய்.. என்று கத்தியபடி ராவெல்லாம் போலீசார் வெறும் தரை மீது இன்னும் லத்திசார்ஜ் செய்து கொண்டே இருக்கிறார்கள்.






படிப்பகம்

www.padippakam.com

# எட்டடி நீளக் கம்புகளும் பதினேழு உயிர்களும்

சாது



வனாந்திரங்களின் மௌனத்தையும், பறவைக் கூட்டங்களின் உரையாடல்களையும், பாறைகளின்மேல் படர்ந்திருக்கும் பச்சைப்பாசியின் மிருதுவையும், கூழாங்கற்களின் பலவித வர்ணங்களையும் உங்களுக்குச் சொல்வதற்காக ஓட்டமும் நடையுமாக வந்துகொண்டிருந்த தாமிரபரணி ஜூலை மாதம் 23ம் தேதி அந்த உஷ்ணமான மதியவேளையில் கொக்கிரகுளத்தில் - இந்தத் தேசத்தில் பல நூறு வருஷங்களாக நிகழ்வதும், இனிப்பல வருஷங்கள் நிகழவிருப்பதுமான - அந்த துன்பியல் நாடகக் காட்சியைப் பார்த்துச் சகிக்க மாட்டாதவளாய் மாரில் அறைந்துகொண்டு கடலை நோக்கி ஓடினாள்.

'ரோட்டில ஏது சார் கல்லு? காம்பவுண்டுச் சுவருக்குப் பின்னால இருந்து அவனுவதான் எறிஞ்சானுவ. மொலு மொலுன்னு வந்ததுபாரு கல்லு... வெள்ளச்சட்ட பெரியவரு தரையில கெடக்காரு. தூக்கப் போனேன் பாருங்க... என் முதுகிலயும் மண்டையிலயும் கல்லு விழுந்தது... கல்லுன்னா சின்னக் கல்லு இல்ல.... செங்காம்பட்டி - அரைக்கல்லு... முக்காக் கல்லு.... அப்புறம் நானும் அவரைப் போட்டுட்டு ஆத்துக்கு ஓடிட்டேன்.'

'ரெத்தினமேரியோட வயித்தப்பாருங்க.வாழையில சுருண்டாப்பல... இவளாய்யா தண்ணியில முங்கிச்செத்தா... மூக்கிலயும் கண்ணிலயும் காயத்தைப் பாருங்க... அடிச்சே கொன்னு ஆத்துல விசியிருக்காங்க...'



படிப்பகம்

www.padippakam.com

'கொடியாட்டி பிடிக்க டாக்டரு ஒனக்கு என்னத்தைக் குடுக்கான்? தேவிடியாச் சிறுக்கி... இனிமே வருவியா? வேன்ல ஏறும்போதும் அடி. ஸ்டேஷன்ல எறங்கும்போதும் அடி. கொடிவேணுமா? அடிக்காளுவ... அடிக்காளுவ.... சொல்லிச் சொல்லி அடிக்காளுவ.... ஆம்பள போலீசு கூட பரவால்ல போல....'

'இந்தப் பச்ச மண்ணப் பாருங்கய்யா... இது என்னய்யா செஞ்சது? அவன் தூக்கித் தண்ணியில போட்டதை நானே பாத்தம்யா....'

'எம்புருசன் மிலிட்டரி காரரு தான். ஆனா வாக்கப்பட்டு இத்தனநாள் என்ன கைநீட்னதில்ல... இந்த அம்பது வயசுல பேதில போவான் அடியாத அடியாதன்னு சொல்லச் சொல்ல அடிச்சிட்டான்யா.... துப்பாக்கிய மாத்திப் புடிச்சிக்கிட்டு நெஞ்சில குத்துனாம்யா.. இன்னா இங்கன...'

'பொணத்தை அடையாளம் காட்டணும்னு எங்கள ஜீப்புல ஏத்திக் கூட்டிட்டுப் போனாங்க.... அடப்பாவியளா.... செத்த பொணத்துக்கு ஒரு துணியப்போட்டு மூடக்கூடாதா? எங்க அக்கா நெற அம்மணமாக் கெடந்தாளே... கெடந்தாளே...'

'ஊர்வலத்துக்கு வரும்போது மூணு எடத்துல செக் பண்ணினாங்க. சாவிக்கொத்துல இருந்த பேனாக்கத்தியக்கூட பிடுங்கிட்டுதான் அனுப்புனான். இப்படித் திட்டம் போட்டிருக்கான்னு தெரிஞ்சிருந்தா சுதாரிச்சிருப்போமே சார்....'

'கம்புன்னா கம்பு...... அப்புடிக் கம்பை போலீஸ்காரன் கையில இது நாள் வரைக்கும் நான் பார்த்ததில்ல...'

'எங்க ஜான் கராத்தே படிச்சவன்.... நீஞ்சத் தெரிஞ்சவன்.... அவன ஒத்த ஆளா எவனும் அடிச்சிக்கிட முடியாது.'

'பள்ளி வாசலுக்குப் பக்கத்துல நீச்சல்குளம்... எங்க தெருப் பயலுக அத்தன பேரும் நீச்சல் படிச்சது அங்கதான். நவாசும் அப்துலும் நல்லா நீந்துவாங்க.... முங்கு நீச்சல் கூடத் தெரியும்.....'

'ஆஸ்பத்திரியில ரெண்டு நாள் கழிச்சு பிளட் (பிளீடிங்) நின்னுருச்சு. ஆனா ஒண்ணு. என் வயித்துல மிதிச்சவன் மொகத்தை என் ஆயுசுக்கும் மறக்க மாட்டேன். லெச்சம் பேரிலயும் அவனத் தனிச்சுக் காட்டத் தெரியும் எனக்கு....'

ஆஸ்பத்திரித் தாழ்வாரங்களிலும், ஓலைக் குடிசைகளின் சாணி மெழுகிய திண்ணைகளிலும் பதிவாகியிருக்கும் இந்தக் குரல்கள் சிந்திக்கும் திறனுள்ள எல்லோரையும் செவிட்டில் அறைகின்றன.

சாந்திநகர் மணிக்கூண்டுக்குக் கிழக்கே பாலத்தையொட்டிய அந்தச் சின்னஞ்சிறு வீட்டில் அப்பா வருவார் என்று காத்திருக்கும் அஞ்சு வயது ரெபக்காளுக்கும், மூணு வயது ரெனிட்டாளுக்கும் சொல்ல உங்களிடம் என்ன செய்தி இருக்கிறது?

புகைப்பட வரிசையில் அம்மாவின் உடல் கிடக்கும் அலங்கோலத்தைக் கையில் ஐஸ்குச்சியுடன் பார்த்துக்கொண்டே நிற்கும் தாழையூத்து பூந்தோட்டத்தெருச் சிறுவனை இனி எது சிரிக்க வைக்கும்?

டவுண் நகைக்கடை பஜாரில் போகிற வருகிறவர்களை எல்லாம் தங்கள் கடைக்கு வருமாறு கூவி அழைத்துச் சம்பாதித்து, வீட்டுக்கு மிச்சர் பொட்டலம் வாங்கி வந்த கான்மியா பள்ளிவாசல் தெருவின் 14 வயது 'பெரிய மனிதனை' இழந்துவிட்ட தாய்க்கு ஆறுதலாக என்ன பேசுவது?

'திருநெல்வேலியில் ஊர்வலம் எம்எல்ஏ போறார்....நானும் போயிட்டு ரெண்டு நாளில் வந்திர்றேன் என்று சொல்லிவிட்டு வந்த இஸ்லாமியச் செல்வந்தரின் இளம்மனைவிக்கும் குழந்தைகளுக்கும் யார் தேறுதல் சொல்வது?

நிகழ்ந்ததெல்லாம் எதிர்பாராத விபத்தல்ல.... தற்செயலான தடுப்பு நடவடிக்கையும் அல்ல.... எதிர்ப்புக் குரல்களைச் சகிக்க இயலாத அதிகாரச் சிந்தனையின் சிறு அமிலக் கசிவு...

சீருடைகளில் மறைந்து கிடக்கும் குரூரம் லேசாகத்தான் வெளிப்பட்டிருக்கிறது. இன்னொரு வாய்ப்புக் கிடைத்தால் அது இன்னம்அதிவேகமாக பாயும். பதினேழின் மடங்குகளாக உடல்கள் சரியும்... தலித்களுக்கு எதிராக மட்டுமல்ல.... போராடுபவர்கள் யாரானாலும் சுட்டுத்தள்ள, கோஷமிடுபவர்கள் எவராயினும் குரல்வளையை நெரிக்கத் தேவையான மூர்க்கத்துடன் அது நின்று கொண்டிருக்கிறது. கடைவாயில் வழியும் ரத்தத்தை நக்கியபடி. மீண்டும் ஒருமுறை அது பாயும் முன் நமது சிவில் சமூகச் சிந்தனையை விழித்தெழச் செய்வது நம் ஒவ்வொருவருக்கும் அவசியமாகியிருக்கிறது.



ஓவியம் : கதிர்



படிப்பகம்

www.padippakam.com

**23.07.99 அன்று திருநெல்வேலியில்போலீஸ் அத்துமீறல் - 17 பேர் இறப்பிற்கு காரணமாக கருதப்படும் சம்பவம் குறித்து 19.08.99 அன்று மனித உரிமை அமைப்புகள் மற்றும்தொண்டு நிறுவனங்கள் ஏற்பாடு செய்த பொது விசாரணையின் இடைக்கால அறிக்கையிலிருந்து...**

........

ஊர்வலத்தின் பாதை, ஊர்வலம் தடுத்து நிறுத்தப்பட்ட இடம், காவல்துறை நடவடிக்கைகள் நடந்த இடம் ஆகியவற்றை நேரில் பார்வையிட்டோம். நேரடியாகப் பார்த்ததும், புரிந்து கொண்டதும் பாதிக்கப்பட்டோரின் சாட்சியங்களுக்கு கூடுதல் வலு சேர்த்துள்ளது. மாவட்ட ஆட்சியர் அலுவலகம் நோக்கிய சாலையில் ஊர்வலம் சென்றுள்ளது. கிழக்குப் புறத்தில் காவலர்கள் நிறுத்தப்பட்டிருந்தனர். இதல்லாது மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பும், எம்.ஜி.ஆர் சிலை முனையிலும் காவல் தடுப்புகள் இருந்துள்ளன. அனைத்து மூன்று பக்கங்களிலும் ஊர்வல கூட்டத்தினர் சுற்றி வளைக்கப்பட்டதால், சாலையின் மேற்குப் புறத்திலிருந்து வந்த காவல்துறை தாக்குதலால் மக்கள் சிதறி ஓடியுள்ளனர். சாலை மேற்குப் புறத்தில் உயரமான பகுதியில் உள்ளது. சாலைக்கு மேற்குப்பக்கம் 20 அடி உயரத்திற்கு சரிவாகச் செல்கிறது. கீழே சாலைக்கும் ஆற்றுக்கும் இடையே 150 மீட்டர் தூரத்திற்கு திறந்த வெளி உள்ளது. எல்லா சாட்சியங்களிலிருந்தும் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில், முதல் சுற்றுத் துப்பாக்கிச்சூடு, தடியடிப் பிரயோகம், கண்ணீர் புகைக்குப்பின் கூட்டம் ஆற்றை நோக்கி ஓடியதென்றால் காவல்துறை சாலையிலிருந்து கீழே குதித்து ஆற்றுக்கும், சாலைக்கும் இடைப்பட்ட பகுதியில் மக்களை விரட்டி தடியடி செய்து ஆற்றுக்குள் தள்ளியிருக்கத் தேவையில்லை என்று தோன்றுகிறது. புகைப்படங்களிலிருந்தோ, சாட்சியம் அளித்தவர்களிடமிருந்தோ யாரும் போலீஸை எந்த விதத்திலும் தாக்கியதற்கான ஆதாரமில்லை. எல்லாப் புகைப்படங்களிலுமே மக்களின் பின்புறம் தான் தெரிகிறது. மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் கூடியிருந்த கூட்டத்தைக் கலைப்பது தான் நோக்கம் என்றால் கலைந்து ஓடிய மக்களை விரட்டியடிப்பதோ, ஆற்றுக்குள் விழுகிற வரையில் அடித்து விரட்டுவதோ, ஆற்றுக்குள் விழுந்த பின்பும் தொடர்ந்து அடிப்பதோ தேவையற்ற ஒன்றே.

....சாட்சியங்களின் முதல் நிலையிலேயே போலீஸ் மிருகத்தனமாகவும், கொடூரமாகவும் கூட்டத்தைக் கலைத்திருக்கின்றனர். நிராதரவற்ற நிலையில் நின்று கொண்டிருந்த பெண்களையும், குழந்தைகளையும் அடித்து விரட்டியிருக்கிறார்கள். திட்டமிட்டு அவர்களை ஆற்றுக்குள் விரட்டி தள்ளியிருப்பதற்கான ஆதாரங்கள் இருக்கிறது. ஒரு சில சாட்சிகளின்படி தண்ணீரிலிருந்து வெளிவந்து தப்பியோட முயன்ற பெண்களையும், ஆண்களையும் தடுத்த நிறுத்தி அடித்திருக்கிறார்கள். ஆற்றோரமாக நின்று கொண்டிருந்த போலீஸ் 5 அல்லது 6 அடி கம்புகளை கையில் வைத்திருந்திருக்கிறார்கள். தண்ணீரில் நீந்தித் தத்தளித்து மறுகரையில் ஏறிவந்த மக்களையும் கொடூரமாக அடித்துள்ளதாகத் தெரிகிறது. இறந்தவர்களில் பலர் நன்கு நீந்தத் தெரிந்தவர்கள் என்பது வியப்பான உண்மை. இறந்தவர்கள் நீச்சல் தெரியாமல் மூழ்கியவர்களல்லர். மாறாக போலீஸின் அத்துமீறலால் தான் இறந்திருக்கிறார்கள் என்று முதல் நோக்கிலேயே எங்களுக்குத் தெரிய வருகிறது. எல்லாச் சாவுகளுமே போலீஸ் நடத்திய திட்டமிட்ட தடியடியில் தான் நிகழ்ந்திருக்கின்றன என்றே நாங்கள் கருதுகிறோம். ஏனெனில் கரையின் மறுபுறம் தப்பிக்க முயன்ற பலரின் தலையிலும், நெஞ்சிலும் கடுமையான காயங்கள் இருந்துள்ளன.

எங்களுக்கு முன் பார்வைக்காக வைக்கப்பட்ட சடலக்கூராய்விற்கு முன்பே எடுக்கப்பட்ட புகைப்படங்கள், இறந்தவர்களின் தலை மற்றும் நெஞ்சில் ஏற்பட்ட காயங்கள் இரத்தம் வழிந்தோடுவதைக் காட்டுகிறது. இறந்தவர்களின் உடலின் பிறபாகங்களில் கொடுங்காயங்கள் இருப்பதைப் புகைப்படங்கள் வெளிப்படுத்துகின்றன.

சடலக்கூராய்விற்கு முன்பு எடுக்கப்பட்ட புகைப்படங்களில் சடலங்களில் உள்ள காயங்கள சடலக்கூராய்வு அறிக்கைகளில் காணப்படாதது குறித்து அதிர்ச்சியடைகிறோம். இது சடலக்கூராய்வு அறிக்கையின் நம்பகத்தன்மையினையே கேள்விக் குறியாக்கியுள்ளது.

...போலீஸின் வாக்குமூலத்தையும், தமிழக அரசின் அறிக்கையையும் ஏற்றுக்கொள்ள இயலாத நிலையில் உள்ளோம்.

...அநேக சாவுகளுக்குக் காரணம் தாக்குதலே, மூழ்கியதால் நேர்ந்ததன்று என்பதை சாட்சியங்கள் தெளிவாக்குகின்றது. போலீஸ் அத்துமீறல், மனித உரிமை மீறலுக்கு இட்டுச் சென்றது என்பதற்கு போதுமான முதல்நிலை சாட்சியங்கள் இருப்பதை அறிகிறோம்.

...நீதிபதி மோகன் தலைமையிலான ஆணையத்திற்கு நாங்கள் சேகரித்த ஆவணங்களும், எமது முயற்சிகளும் உதவியாக அமையும் என்று நம்புகின்றோம்.

நீதிபதி H. சுரேஷ்
திரு.V.R. லட்சுமி நாராயணன்
டாக்டர் வசந்திதேவி
திரு. V. கருப்பன்
(தமிழாக்கம்)



படிப்பகம்

www.padippakam.com


ஓவியம் : தனசேகர்

# வஞ்சிக்கப்படும் தலித் மக்கள்

**பேரா.கா.அ.மணிக்குமார்**
ம.சு. பல்கலைக்கழகம், நெல்லை.

*1999 - ஜூலை 23-ம் நாள் திருநெல்வேலியில் மாஞ்சோலைத் தொழிலாளர்களுக்காக நடத்தப்பட்ட பேரணியின்போது காவல்துறையினரால் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறை பற்றிக் கூற தமிழில் போதிய அடைமொழிகள் இல்லை. இந்நூற்றாண்டின் ஆரம்பத்தில் (1908) ஆங்கிலேயர் ஆட்சியின்போது நடைபெற்ற 'திருநெல்வேலி எழுச்சி' ஐ ஒடுக்குவதற்கு காவலர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் கூட 4 நபர்கள் தான் உயிரிழந்திருந்தனர். ஆனால் தற்பொழுது நடந்து முடிந்துள்ள காவலர்கள் வெறியாட்டத்தால் 17 அப்பாவி மக்களின் உயிர்கள் பறி போயுள்ளன. அன்று வ.உ. சிதம்பரம்பிள்ளை, சுப்ரமணிய சிவா, பத்மநாப அய்யங்கார் ஆகியோர் பிபின் சந்திரபால் விடுதலையை கொண்டாடுவதற்கு நடத்த இருந்த கூட்டங்களுக்கு அனுமதி வழங்கியிருந்தால் அசம்பாவிதம் ஏதும் நடந்திருக்காது. ஆனால் அன்றைய மாவட்ட கலெக்டர் வின்ச் பொதுக் கூட்டங்களுக்கு அனுமதி மறுத்தது மட்டுமின்றி மூன்று தலைவர்களையும் கைது செய்து சிறையிலடைத்ததன் மூலம் வன்முறைக்கு வழிவகுத்தார். கலெக்டர் வின்ச் செய்த குளறுபடியை தற்போதைய நெல்லை மாவட்ட ஆட்சியர் கி.தனவேல் செய்தார். அரசியல் தலைவர்கள் அனைவரையும் சந்தித்து மனுவைப் பெற்றிருந்தால் பிரச்சினை முற்றியிருக்காது. மாறாக அனைத்து அரசியல் கட்சித்தலைவர்களையும் ஆட்சியர் அலுவலக வளாகத்தினுள் சென்று மனு வழங்க அனுமதி மறுத்ததின் மூலம் அதன் பின் நடந்த காவல் துறையினரின் வன்முறைக்கு பொறுப்பாகி விட்டார்.*

*1908 மார்ச் 13 அன்று தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்டதைக் கேள்வியுற்று ஆத்திரமுற்ற மக்கள் முனிசிபல் மற்றும் தபால் அலுவலகங்களுக்கு தீ வைத்தது மட்டுமின்றி, மாவட்ட நீதிமன்ற கட்டிடத்தையும் காவல் நிலையத்தையும் கல்லெறிந்து தாக்கினர். பொதுமக்கள் கலைந்து செல்ல பலமுறை வேண்டப்பட்டனர். நிலைமை கட்டுக்கடங்காமல் போனபோது கூட காவலர்கள் வானத்தை நோக்கி சுட்டு எச்சரிக்கை செய்ததாக அன்றைய நாளிதழ்கள் நமக்குத் தெரிவிக்கின்றன. ஆனால் இன்று நடந்துள்ள கொடுமையைப் பார்க்கும்பொழுது நாம் சுதந்திர ஜனநாயக நாட்டில்தான் வாழ்கிறோமா என்ற ஐயப்பாடு எழுகிறது. ஏனெனில் எவ்வித முகாந்திர மு்மின்றி காவலர்கள் தடியடி நடத்தி அப்பாவிமக்கள் 17 பேரை தாமிரபரணி ஆற்றுக்குள் மூழ்கடித்து படுகொலை செய்தது மட்டுமின்றி ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்களைக் காயப்படுத்தியுள்ளனர். கிடைக்கப்பட்ட நிழற்படங்களை உற்றுப் பார்க்கும் போது காவலர்கள் கண்ணீர் புகைக் குண்டு வீசி தடியடி நடத்தி கூட்டத்தைக் கலைத்த பிறகு தமக்கு வர இருக்கும் ஆபத்தை உணராத அப்பாவி மக்கள் ஆற்றங்கரையில் நின்று கொண்டு ஆட்சியர் அலுவலக வளாகத்தினுள் நடைபெறும் நிகழ்வுகளை கவனிப்பதை நாம் அறிகிறோம். எவ்வித பதட்ட சூழ்நிலையும் இல்லாத இத்தருணத்தில் டி.ஐ.ஜி இராஜேந்திரன் (ஜெனரல் டயர் போன்ற) வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த மக்கள் மீது காவலர்களை ஏவி ஓர் 'ஜாலியன்வாலாபாக்கை' அரங்கேற்றியிருக்கிறார்.*

மாஞ்சோலையில் உள்ள தோட்டத் தொழிலாளர்கள் பெரும்பாலும் தலித்துகள். பிற சாதியினரும் ஒரு பகுதி உண்டு. ஒரு நவீன தொழிலாளி (Modern worker) போல தாங்கள் நடத்தப்பட வேண்டும்



படிப்பகம்

www.padippakam.com

ன நியாயமாக அவர்கள் கருதுகின்றனர். ஆனால் அரசியல் ரீதியாக அவர்களில் பெரும் பாலானோர் புதிய தமிழகம் கட்சியில் இருப்பதால், அரசு மாஞ்சோலை தொழிலாளர்கள் பிரச்சினையை சுமுகமாக தீர்க்க முன்வரவில்லை. சுமார் 600க்கும் மேற்பட்ட (பெண்கள் உட்பட) தொழிலாளர்கள் திருச்சி சிறையில் அடைக்கப்பட்டும், அவர்களது குடும்பத்தினர் திருநெல்வேலியை அடுத்த ஆரோக்கியநாதபுரத்தில் அகதிகள் போன்று பொதுமக்கள் மற்றும் மனிதநேயம் படைத்தோர் வழங்கிய உதவிகள், உணவுப் பொருட்கள் மூலமே வாழ்ந்து வந்தனர். இதுபற்றி மாவட்ட உயர் அதிகாரி ஒருவரிடம் விசாரித்தபோது 'மாஞ்சோலை தொழிலாளர் பிரச்சினை இலகுவாக தீர்க்கக்கூடிய பிரச்சினைதான். ஆனால் அரசு சட்ட ரீதியாகவே எங்களை அணுகும்படி அறிவுறுத்துவதால் இப்பிரச்சினை இழுபட்டுக் கொண்டிருக்கிறது' என்றார். சென்ற ஆண்டு தி.மு.க. பொன்விழா கொண்டாடிய போது தாழ்த்தப்பட்ட மக்களின் மேம் பாட்டிற்காக தன்னை அர்ப் பணித்துக் கொள்வதாக பறைசாற்றியது. தி.மு.க. பிரமுகர் முரசொலிமாறன் தலித்துகளுக்காக பதவியையும் துறக்கத் தயாராக உள்ளோம் என்றார். மேடை முழக்கங்களுக்கும், தங்களுடைய செயல்பாடுகளுக்கும் உள்ள முரண்பாடு பற்றி சிறிதும் கவலைப் படாத அரசியல்வாதிகளின் பேச்சுக் களாகவே பொன்விழா உரைகள் அமைந்துவிட்டதை தி.மு.க. அரசின் நடைமுறைகள் நமக்கு உணர்த்து கின்றன. இல்லையெனில் 'தாமிரபரணி படுகொலை'க்காக திமுக தலைவர் என்ற முறையில் முதல்வர் மன்னிப்பு கேட்டிருக்க வேண்டும். வேதனைக்குரிய அம்சம் என்னவெனில் அவர் தாக்கப்பட்ட மக்களை வன்முறையாளர் என குற்றம்சாட்டினார். பல பத்திரிக்கைகள் காவல்துறை யின் நடவடிக்கையை கண்டிக்கவில்லை. காலனி ஆட்சியில் கூட பத்திரிக்கைகள் திருநெல்வேலி எழுச்சியின்போது நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் 4 உயிர்கள் பலியானதற்கு கலெக்டர் வின்ச்-ஐ குறை கூறி அவரை உடனடியாக மலபாருக்கோ அல்லது கஞ்சம் மாவட்டத்திற்கோ பணிமாற்றம் செய்யவேண்டும் என வற்புறுத்தின. இன்று, பாதிக்கப்பட்ட மக்களில் பெரும்பான்மையோர் தலித்துகளும், முஸ்லீம்களும் என்பதாலோ என்னவோ பெரும் பாலான பத்திரிக்கைகள் மாவட்ட நிர்வாகத்தை கண்டிக்க வில்லை.

இந்நூற்றாண்டில் பல ஜாலியன்வாலாபாக்குகள் தலித்துக்கள் மீது நடத்தப் பட்டிருக்கின்றன. அவற்றில் சிலவற்றை இங்கு விவாதிப்பதன் மூலம் இதுவரை ஆட்சியில் இருந்த அரசியல் கட்சிகளின் அணுகு முறையை நாம் உணரமுடியும். 1921 மே மாதம் பக்கிங்காம் - கர்னாட்டிக் மில் தொழிலாளர் போராட்டம் வெடித்தது. ஒத்துழையாமை இயக்க வாதிகளால் (Non - Co-operators) அப்போராட்டம் நடத்தப்பட்டதால் ஆங்கிலேயருக்கு விசுவாசிகளான நீதிக்கட்சியினரின் ஆதரவு கிடைக்கும் என்ற எண்ணத்தில் தலித்துக்களை போராட்டத்தில் கலந்து கொள்ள வேண்டாம் என தலித் தலைவர் எம்.சி. ராஜா அறிவுறுத்தினார். பணிக்குச் சென்ற தலித்துக்கள் கருங்காலிகளாகக் கருதப்பட்டு போராட்டக் காரர்களால் தாக்கப்பட்டனர். ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் இம்மோதல்கள் சாதிய மோதல்களாக மாறின. அரசியல் ரீதியாக நீதிக்கட்சி தலித்துகளுக்கு ஆதரவாக இருந்திருக்க வேண்டும். ஆனால் பிராமணரல்லாத வகுப்பினருள் மேல் சாதி மக்களின் கட்சியாகவே செயல்பட்ட நீதிக் கட்சி சாதி இந்துக்களுக்கு எதிராக தலித்துகளுக்கு ஆதரவு தர முன் வரவில்லை. இதனால் பல தலித்து களின் வீடுகளும் குடிசைகளும் தீக்கிரையாக்கப்பட்டன. காவல் துறையும் அரசு அதிகாரிகளும் தலித்துகளுக்கு சாதகமாக செயல் படுவதாக குற்றம் சாட்டி நீதிக் கட்சியின் தலைவர் பி. தியாக ராஜசெட்டியார் ஆங்கிலேய அரசுக்கு கடிதம் எழுதினார். இதை அடுத்து ஏற்பட்ட பல முரண் பாடுகளில் விளைவாக 1923ல் எம்.சி. ராஜா நீதிக்கட்சியுடன் ஆன உறவை முழுமையாக துண்டித்துக் கொண்டார்.



கலெக்டர் கி.தனவேல்

அடுத்ததாக 'முதுகுளத்தூர் பயங்கரம்' என்று டி.எஸ். சொக்கலிங்கம் வருணித்த இராம நாதபுர மாவட்ட சாதிய மோதல்களின் போது நடந்த நிகழ்வுகள். 1957 செப்டம்பர் 11ம் நாள் தலித் இனத் தலைவர் இம்மானுவேல் சேகர் படுகொலை செய்யப்பட்டார். குற்றவாளியைக் கைது செய்ய கீழத்தூவல் கிராமத் திற்கு சென்ற காவல் துறையினரைத் தாக்கியதற்காக நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஐந்து மறவர்கள் இறந்தனர். இதைத் தொடர்ந்து மறவர்கள் தலித் குடியிருப்புகளை சூறையாடினர். வீராம்பல் கிராமத் தை சார்ந்த தலித்துகள் அஞ்சி உயிர் பாதுகாப்பிற்காக அங்கிருந்த மாதா கோவிலினுள் தஞ்சம் புகுந் திருந்தபோது இரத்தவெறி கொண்ட கலவரக்காரர்கள் மாதாக்கோவில் கதவை உடைத்து உள்ளே புகுந்து



படிப்பகம்

www.padippakam.com

நடத்திய துப்பாக்கிச் சூட்டிலும் தாக்குதலிலும் இரண்டு தலித்துக்கள் உயிர் இழந்தனர். தலித் வகுப்பைச் சார்ந்த 35 ஆண்கள், 10 பெண்கள் மற்றும் மூன்று குழந்தைகள் படுகாயமடைந்தனர். வெளி மாநிலங்களில் இருந்து வந்து பார்த்த அரசியல் தலைவர்கள் அதை 'ஜாலியன்வாலா படுகொலை' என வர்ணித்தனர்.

முத்துராமலிங்கத்தேவர் காங்கிரசுக்கு எதிரானவர் என்பதால் காங்கிரஸ் அப்போது இராமநாத புரம் மாவட்ட தலித்துகளுக்காக நீலிக்கண்ணீர் வடித்தது. அதே நேரத்தில் தஞ்சாவூர் மாவட்ட தலித்துகள் கம்யூனிஸ்டுகளின் தலைமையில் கடுமையாகப் போராடி பெரும் பொருள் சேதம் மற்றும் உயிர் இழப்புகள் மூலமே தங்களது கூலி உயர்வு மற்றும் ஜனநாயக கோரிக்கைகளை வென்றெடுக்க முடிந்தது. முதுகுளத்தூர் கலவரங்களை ஒட்டி எதிர் கட்சியினர் கொண்டு வந்த நம்பிக்கை இல்லாத தீர்மானத் தின்போது நடந்த வாக்கெடுப்பில் தி.மு.க. கலந்து கொள்ளவில்லை. இதை அவர்கள் முத்துராமலிங்கத் தேவருக்கும் அவரது மறவர் ஆதரவாளர்களுக்கும் எதிரான தலித்துகளுக்கான ஆதரவு நிலை என்று கூறினார். ஆனால் பின்னால் முத்துராமலிங்கத்தேவர் இறந்ததும் மூக்கையாத்தேவர் மூலம் தேவரின் அரசியல் கட்சியான பார்வர்டு பிளாக்குடன் கூட்டுச் சேர்ந்தது குறுகிய அரசியல் ஆதாயக் கண்ணோட்டத்திலேயே ஆகும்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் கூலி உயர்வு மற்றும் சில ஜனநாயகக் கோரிக்கைகளுக்காக சுமார் கால் நூற்றாண்டிற்கு மேல் நடைபெற்ற போராட்டத்தில் பல தலித்துக்களும் கம்யூனிஸ்டு தலைவர்களும் படுகொலை செய்யப்பட்டனர். இதன் எதிரொலியாக நெல் உற்பத்தியாளர் சங்கத் தலைவரின் ஏஜெண்ட் பக்கிரிசாமி 1968- டிசம்பர் 24 அன்று கொல்லப்பட்டார்.



'ஓடுறவுங்கள ரவுண்ட்அப் பண்ணு' டி.ஐ.ஜி. ராஜேந்திரன்

பக்கிரிசாமி கொலையில் கீழ் வெண்மணி தலித்துக்கள் சம்பந்தப் பட்டிருப்பதாக சந்தேகித்த நிலப் பிரபுத்துவ வகுப்பைச் சார்ந்த ஆதிக்க சாதியினர் திரண்டு சென்று தலித்துக்களின் வீடுகளை சூறையாடினர்.வயது வந்த ஆண்கள் அனைவரும் தப்பித்து தலைமறை வாகினர். பெண்கள், முதியோர், குழந்தைகள் ஒரு குடிசைக்குள் ஒளிந்திருந்தனர். இதை அறிந்து கொண்ட கலவரக்கும்பல் குடிசைக்குத் தீ வைத்தது. இதில் 44 பேர் உடல் கருகி இறந்தனர். அப்போது ஆட்சியில் இருந்த திமுகவின் தலித்துக்கள் மீதான அக்கறையற்ற தன்மையால், போதிய சாட்சி இல்லை எனக் கூறி கொலையாளிகளை உயர்நீதிமன்றம் விடுதலை செய்ய முடிந்தது.

கடந்த 10 ஆண்டுகளில் தலித்துகள் நாலுமூலைக்கிணறு (1992) கொடியன்குளம்(1995) கிராமங்களிலும், இறுதியாக தற்பொழுது திருநெல்வேலியிலும் 'ஜாலியன்வாலாபாக்கை' சந்தித்துள்ளனர். ஆனால் இந்த ஜாலியன்வாலாபாக்குகளை தலித் துகள் மீது நடத்தியது காவல் துறையினர். இது நிலைமை யை மோசமடையச் செய்துள்ளது. ஜனநாயக அமைப்பின் மீது தலித்துகளின் நம்பிக்கை இழக்கச் செய்துள்ளது. ஆட்சி செய்தது நீதிக்கட்சியா, காங்கிரஸ் கட்சியா திமுகவா அல்லது அ.தி.மு.கவா என்ற பாகுபாடின்றி தலித்துக்கள் தொடர்ந்து வஞ்சிக்கப்பட்டு வந்துள்ளதால் அவர்கள் எந்த அரசியல் கட்சியையும் நம்ப மறுக்கின்றனர். 'தாமிரபரணி படுகொலை'யில் உயிர் இழந்தோர் மற்றும் மாஞ்சோலை தொழிலாளர் களுக்கு ஆதரவாக பேரணியில் கலந்துகொண்ட தலித்துகள் அனைவருமே விவசாயத் தொழிலாளர்களும் அன்றாடக் கூலிகளுமே ஆவர். பொருளாதார இழிநிலையில் உள்ள இத்தலித்துக் களின் உரிமைகளுக்காக குரல் கொடுக்கவும் போராடவும் அனைத்து ஜனநாயக சக்திகளும் முன்வரவேண்டும். கடந்தகால சரித்திரத்தை வைத்துப் பார்க்கும் போது பிறக்க இருக்கும் புதிய நூற்றாண்டு ஓர் புதிய விடியலை தலித்துகளுக்குத் தர வேண்டு மானால் இடதுசாரி இயக்கங்களும் தலித் இயக்கங்களும் இணைந்து செயல்படுவது காலத்தின் கட்டாயம் என்றே தோன்றுகிறது.

●



படிப்பகம்

www.padippakam.com




" என்னை, என் குழந்தை ரிவேராவை , மெக்ஸிகோவை, இப்புவியை அன்புடன் தழுவும் பிரபஞ்சம்'.

ஃபிரைடா காலோ ஓவியம் (1949)

This Space is Sponsored by a Puthu Visai Wellwisher from Hosur

படிப்பகம்

www.padippakam.com


படிப்பகம்